THE

# THEORY AND PRACTICE

OF

# MIDWIFERY.

ADAPTED TO INDIA

AND

TRANSLATED INTO TAMIL

BY

SAMUEL F. GREEN, M. D.

FOR THE

AMERICAN CEYLON MISSION.

JAFFNA:
RIPLEY & STRONG, PRINTERS.
1857.

Digitized by Google

# மருத்துவவைத்தியம்.

இஃது

வைத்தியத் தேர்ச்சியிற்றலைமை பொலிந்த

மான்சேல்பண்டிதர்

இயற்றிய மருத்துவ வைத்தியநூற்கு

நூயார்க்குப் பட்டினத்தில்

வைத்திய மாட்சிமைபெற்று விளங்காநின்ற

**கில்மன்பண்டிதர்**

தாற்பரியங்களும் நூதனவிஷயங்களும் அமைத்துக்கூறிய

இங்கிலிஷ் பனுவலை

யாழ்ப்பாணத்து அமெரிக்கன் மிஷனர்களின் அனுமதிப்படி

வைத்தியனாகிய ச. பி. கிறீன்

ஆராய்ந்து திருத்தி தமிழ் நாட்டாசாரங்களுக்கிசைய

வில்லியம் நேவின்ஸ்

முதலிய சில ஆசிரியருடைய உதவியைக்கொண்டு

தமிழிற் செய்தது.

---

யாழ்ப்பாணம்:

இறிப்பிலி, ஸ்ரேங்கு என்பவர்களுடைய இயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

௧௮௬௭.

GOOD 5FEB'32

Digitized by Google

முதற்பதிப்பு. ௨௫0 பிரதிகள்.

Digitized by Google

# PREFACE.

MIDWIFERY is an art with which every one pretending to act as a Physician, should be well acquainted; and the practice of which should be conducted solely by those who have thoroughly studied it.

This work, which is chiefly a translation of "the Dublin Practice of Midwifery" by Henry Maunsel, M. D. with notes and additions by Chandler R. Gilman, M. D. of New York, endeavors briefly and simply to show what rules and principles have been adopted by intelligent obstetricians as the result of long investigation and much practical experience. In a work of this kind, the use of many technical terms is unavoidable—but each term being fully explained in a Glossary, it is hoped all who will really study the book, may clearly understand it.

This volume is commended to Physicians, to Midwives, and to Heads of families, with the hope, that it may elucidate a subject in which are all interested, may lessen the sum of human suffering and may ensure to Accoucheurs confidence and increased success in the discharge of their duties.

Special thanks are due to Stephen Tracy, M. D. for his kindness in furnishing cuts illustrative of many points, which without them might not be fully comprehended.

May God graciously make this book, a blessing to the Tamil people.

S. F. G.

Digitized by Google

# முகவுரை.

சற்றேனும் வைத்திய பரீட்சையில் முயற்சிகொண்ட சகலரும் மருத்துவ வைத்தியத்தையுந் தேர்ந்து பழகியிருக்க வேண்டியதவசியம். இற்றை வரைக்கும் நடந்தது போல் அறிவற்றவர்கள் மருத்துவ வைத்தியஞ் செய்வதை நிறுத்தி, அதன் விதிகளை நன்குணர்ந்தவர்களே மருத்துவ பரிட்சையிலேற்படக் காலமாயிற்று. ஆதலாற் பேர்பெற்ற மருத்துவ வைத்தியர் தாஞ் செய்த தீர்க்க சோதவனைகளினாலும் நெடுங்காலப் பயிற்சியினாலும் கண்டமைத்த பிரமாணங்களும் முறைகளுமே இந்நூலிற் சுருக்கித் தெளிவாய்க் கூறப்படும்.

இவ்வகை நூல்கள் அரும்பதங்களின்றி முற்றுப்பெறல் கூடாது. ஆகிலும் அப்பதங்களை இந்நூலந்தத்தில் அகராதிமுறையாகச்சேர்த்து அவற்றின் பொருள் தெளிய விளக்கியிருக்கிறதினால், இந்நூலைக் கருத்தாய் வாசிப்பவர்கள் சகலரும் விளங்கிக் கொள்வார்களென்று காத்திருக்கிறோம்.

மருத்துவவைத்தியம் யாவருக்குந் தேவையானதாதலால் அத்தைக் கற்றறிந்தகாலத்திற் பிரசவ ஸ்திரிகளுக்கு விக்கினங்குறைந்து, மருத்துவர் மனத்தெளிவுடனே தமது தொழில்களை அனுகூலமாகவும் நிர்விக்கினமாகவும் நிறைவேற்றுவார்கள். ஆனதன்மையினால் வைத்தியர் மருத்துவர் குடும்பத்தலைவர் முதலிய இவர்களுக்கே இந்நூல் பிரதானமாய் வேண்டியது.

திரேசியென்னும் பண்டிதர் இப்புத்தகத்தினுள்ள படங்களின் அச்சுகளைத் தயவாய் நமக்குத் தந்துதவினர்.

இப்புத்தகம் தமிழ்ச் சனங்களுக்கு நன்மையாக முடியும்படி யெகோவா அனுக்கிரகஞ் செய்வாராக.

ச. பி. கி,

Digitized by Google

# பொருள் அடக்கம்.

அதிகாரம். பொருள்.
க. கூபகம்.
உ. சிசு.
௩. பிரசவமுறை.
௪. ஸ்திரியின் சனன உறுப்புகள்.
௫. ஸ்திரி சனன உறுப்புகளின் தொழில்.
௬. குற்கருப்பை.
௭. சூலுடைமைக்கு அறிகுறி.
௮. கர்ப்பிணியின் வியாதிகள்.
௯. கிரமப்பிரசவம்.
௧௦. மருத்துவர் கடன்கள்.
௧௧. கிரமப்பிரசவ விகற்பங்கள்.
௧௨. கஷ்டபிரசவம்.
௧௩. பிரசவகருவிப்பிரயோகம்.
௧௪. கிரமாதீதபிரசவம்.
௧௫. விபரீதபிரசவம், க ம். வர்க்கம்.
௧௬. விபரீதபிரசவம், உ ம். வர்க்கம்.
௧௭. விபரீதபிரசவம், ௩ ம். வர்க்கம்.
௧௮. விபரீதபிரசவம், ௪ ம். வர்க்கம்.
௧௯. விபரீதபிரசவம், ௫ ம். வர்க்கம்.
௨௦. பிரசவஸ்திரிகளின் பரிகரிப்பு.
௨௧. காயாசுவாதம் அல்லது பிரசவசுரம்.
௨௨. பிரசவ ஸ்திரிகளின் வாடிக்கைச்சுரம்.
௨௩. பிரசவசிலீபதம் அல்லது காலதைப்பு.
௨௪. பிரசவபைத்தியம்.
அவிழ்தங்கள்.
அகராதி.
அட்டவணை.

Digitized by Google

# மருத்துவவைத்தியம்.


## ௧ம். அதிகாரம்.

### கூபகம்.

மருத்துவவைத்தியங் கற்கப்புகும் மாணாக்கர் சனனமுண்டாகும் விதத்தைத் தெளிவாய் அறியவேண்டில், கூபகலட்சணங்களை முதன்முதல் ஆராய்வது வாடிக்கை.

கூபகம் என்பது வலஅணுமிகை, இடஅணுமிகை, பீடிகை, புச்சம் என்னும் இந்நாலு எலும்புகளினாலுஞ் சூழப்பட்டு வயிற்றின் அடியிற்கிடக்கும் ஓர்குளியாம்.

௧ம். படம்.*



அணுமிகைள், பீடிகை, புச்சம் என்று மேற்சொல்லிய நாலு எலும்புகளும் ஒன்றுடன் ஒன்று பொருந்திய, சந்திகள் நாலு. பீடிகையை அணுமிகைகளுடன் பொருத்துஞ் சந்திகள் இரண்டுக்கும் பீடிகைச்சந்தனுசந்திகள் என்று பெயர். இவைகளிலே அடுத்த புடைப்புகள் இசைந்த பள்ளங்களிற் பூண்டிருக்கும் விதத்தினாலும், பின்னோரங்களிலும் மேல் ஓரங்களிலுங் குறுக்காய் ஓடியிருக்

*கூபகம். இதில் வலம்இடமாய் சக்தென்பு, மேற்பக்கமாய் பீடிகையென்பு, நடுவாக சிறுநுனியாய் புச்சவென்பு தெரியுது. இப்படத்தில் கூபகத்தின் மேல்வளமும், அதினூடாகச்செல்லும் விசாலித்த துவாரமும் தெரியத்தக்கதாய் கூபகம் முன்சரிந்து நிற்கிறபாவனையாகக் காட்டியிருக்குது.

Digitized by Google

கும் பலத்த விசிக்கட்டுகளினாலும் இச்சந்திகள் அதிகம் உரப்புக்கொண்டிருக்கின்றன. மேலும், இச்சந்திகளின் முற்பக்கத்திலும் விசிச்சவ்வுகள் இருப்பதினால் அதிகம் உறுதியாகின்றன. இவ்விசிச்சவ்வுகள் மெல்லியவாயிருக்கிற முகாந்தரத்தினாற் கூபகத்திலுள்விசாலங் குறைவுபடாமலிருக்கின்றது.

மேலும், பக்கத்துக்கு இரண்டு விசிகள் நின்று பீடிகையையும் அனுமிகைகளையுந் தொடுத்து, கூபகத்தின் கீழ்ப்பக்ஷைக்கு எல்லையாயிருக்கின்றன. இவை முற்பீடிகாசனவிசியும் பிற்பீடிகாசனவிசியும் என்னப்படும். இவை பீடிகை, புச்சங்களிலிருந்து கிளம்பி முன்விசியானது ஆசனமுள்ளையும், பின் விசியானது ஆசனக்கணுவையும் தொடுகின்றன.

மூன்றாஞ்சந்தி அனுமிகை இரண்டுங் கூடும்பொருத்து. இதற்கு மேகனானுசந்தியென்றுபெயர். இது பீடிகைச் சந்தானுசந்திபோலிருப்பதுமன்றி, இடையே அந்தர்ச்சந்திக்குருத்தையும் உடையது. மேகனத்துவாரின் உச்சியிலே அனுசந்திக்கு அடுக்க, அதமேகனபந்தனம் என்னும் ஒரு முக்கோண விசியுண்டு.

நாலாஞ்சந்தி பீடிகையென்பும், புச்சவென்பும் கூடும் பொருத்து. இதிலே அதிகம் இசிவான முருந்து இருக்கும். இதற்கு உறுதியாய் முன்விசிகளும் பின்விசிகளும் உண்டு. நாலுசந்திகளுள் இதுவே அசையத்தக்கது. பசு முதலிய சிலமிருகங்கள் ஈனும் பக்குவகாலத்திலே மற்றுஞ் சந்திகளும் நுகைந்துகொடுப்பதுபோல ஸ்திரிகளிலேயும் சம்பவிக்கிறது என்று சில பண்டிதர் உத்தேசம்பண்ணியும், இதற்குப் பூரணமான திட்டாந்தம் இல்லை.

கூபகக்குழியானது மேகனசந்துரேகையினால் மேற்கூபகம், கீழ்க்கூபகம் என்று இரண்டாகப்பிரியும். மேற்கூபகத்தை வலமிடமாய்ச் சங்கென்புகளும், பிற்பக்கத்தில் நாரிமுள்ளென்புகளும் சூழ்ந்திருக்கின்றன. இதின் அளவுகள் வெகுதூரம் வித்தியாசமாயிருக்கும். அதிகம் விசாலித்த இடமாகிய ஒருசங்கென்பின் முடி தொடங்கி மற்றச் சங்கென்பின் முடி வரைக்கும் உள்ளதூரம் நடுராசியான கூபகத்திலே பத்துப்பதினொரு அங்குலம் அளவு இருக்கும். முன்மேற்சந்துமுளைகள் இரண்டுக்கும்

Digitized by Google

இடையிலுள்ள தூரம் ஒன்பது அங்குலத்துக்கு அதிகம் போலேயிருக்கும்.

இனிக் கருமுதிர்ந்த சிசுவானது வெளிக்குவருகிற வழிக்கு இசியாத எல்லையாயிருக்குங் கீழ்க்கூபகத்தைப் பற்றியே வைத்தியர் நுட்பமாய் ஆராயவேண்டியது. இதின் விவரமும் அளவும்விளங்க, இதை மேற்பந்தை, கீழ்ப்பந்தை, அறை என்னும் மூன்று பகுதிகளாய்ப் பிரித்துப்பார்ப்போம்.

க. மேற்பந்தை. மேகனசந்துரேகைகளாலும், பீடிகைக்கும் நாரிமுள்ளெலும்புகளுக்கும் இடையிலுள்ள பொருத்து முனையினாலும், எல்லைப்பட்ட மேற்பந்தையின் பின்பக்கத்திலே பீடிகையின் அடிமுனைப்பினால் வட்டிப்புச் சற்றுப் பிசகியிருந்தும், பொதுப்பேச்சாக, மேற்பந்தையினுள்ளாகாரம் வட்டவடிவமென்றே சொல்லவேண்டும். இதின் அளவைப் பின்சொல்லும் நாலுவிட்டங்களினாற் குறிக்கலாம். இடம்வலமாய்ச்செல்லும் வரியின் நீளம் ஐந்தேகாலங்குலம். இதுவே நீளவிட்டம். பீடிகை அடியினின்று மேகனானுசங்கிக்குச் செல்லும் வரியின்நீளம் நாலேகாலங்குலம். இதுவே குறுவிட்டம். சாய்விட்டங்களாகிய மற்றவரிகள் இரண்டும் ஒவ்வொருபக்கத்தின் பீடிகைச்சந்துப் பொருத்தினின்று மறுபக்கத்தின் வஞ்சணைக்குழியின் முதுகுப்பக்கத்துக்கு ஓடியிருக்கின்றன. இவை ஒவ்வொன்றினதும் நீளம் ஐந்து அங்குலம்போலே உண்டு. இவ்விட்டங்கள் மேற்சொல்லிய பெருவிட்டத்திலும்பார்க்க நீளமானவை என்று சில பண்டிதர் சொல்வது தப்பு. கூபக எலும்புகளைத் தசை மூடியிருக்கையிலே பரிசோதிக்கிற் பேசிகளிரத்தக் குழல்களாலாகிய புடைப்பினாற் பெருவிட்டநீளங் குறைந்துதோன்றும்.

உ. கீழ்ப்பந்தை. கங்காளத்திலே பார்த்தால் கீழ்ப்பந்தையானது முக்கோணமாகிய மூன்று குடாக்களையுடையதாய்ப் பல வளைவுகொண்ட பெருந்தொளையாகத் தோன்றும். இவற்றுட் பீடிகாசனக்குடாக்கள் இரண்டும் பீடிகாசனவிசிகளாற் கீழ்ப்பந்தையினின்று பிரிவுபட்டிருப்பதினாற் கீழ்ப்பந்தை சதுரவடிவமும் உடையதென்னலாம். இதின் அளவை இரண்டு விட்டங்களால் நிதானிக்கலாம். ஆசனக் கணுக்களுக்கிடையே வலமிடமாய்ச்

Digitized by Google

செல்லும் ஒரு விட்டம் நாலங்குல நீளம்போலே இருக்கும். மேகனுசங்கிக்கும் பீடிகைநுனிக்கும் இடையே செல்லும் மற்ற விட்டம் ஐந்தங்குலநீளமுள்ளது. மேகனுசங்கிக்கும் புச்சநுனிக்கும் இடையேயுள்ள தூரம் நாலங்குலத்துக்கு மேற்படாதாயினும் புச்சமானது பின்னுக்கு வசையக்கூடியதாதலால் மேலே ஐந்தங்குல நீளமென்று சொன்னது பிசகல்ல.

மேற்பந்தையிற் பெருவிட்டத்துக்குக் குறுக்காய்க் கீழ்ப்பந்தையிற் பெருவிட்டம் இருப்பதாய் விளங்குகின்றது. இதின் சூட்சம் சிசுவின் அளவுப்பிரமாணங்களை இனி ஆராய்ந்து பார்க்கும்போது பூரணமாய் விளங்கும்.

கீழ்ப்பந்தையைப் பற்றிச் சிந்திக்கையில், மேகனத்தவரைப்பற்றியும் வசதியாய்ப் பார்க்கலாம். ஆணிலும் பார்க்கப் பெண்ணிலே இத்தவர் அதிகம் அகன்று வில்வடிவமாயும் கீழ்க்கூபகத்தின் அறைவழியாய் இறங்கும் எப்பொருளையும் முன்னோக்கிச் செல்லுவிக்கத்தக்கதாய், மேகனவென்பின் சாகைகள் அகத்துக்குத் திரண்டவைகளாயும் இருக்கின்றன. மேகனத்தவரின் நாண் அளவு மூன்று அங்குலமட்டுண்டு.

௩. அறை. கீழ்க்கூபகத்திலுள்ள அறை, மேற்பந்தை கீழ்ப்பந்தை எதினும் பார்க்க விசாலமாயிருப்பதால் அதின் அளவுப்பிரமாணங்களை நுட்பமாய் ஆராயவேண்டியதில்லை. அதை அளந்துகொள்வதும் சற்றுப்பிரயாசம். ஆணிலும்பார்க்கப் பெண்ணிலே அதிகம் கவிந்திருக்கும் பீடிகைக்கவிகையானது, பிறவிநோக்கி வருஞ் சிசுவின் முகந் தங்குவதற்கும், பீடிகைநுனியும் ஆசனமுட்களும், ஒன்றையொன்று அணுகியிருப்பது மேற்சொல்லிய மேகனச்சாகைகளின் திரணையினது நோக்கத்துக்கு அனுசாராவதற்கும், எவ்வளவு ஆச்சரியமாய் இசைக்கப்பட்டிருக்கின்றன.

கீழ்க்கூபகத்தின் ஆழம் பக்கத்துக்குப் பக்கமாக விகற்பமாய், மேகனுசங்கியிலே ஒன்றரை அங்குலம்போலவும், மேற்பந்தையினின்று ஆசனக்கணுவுக்கு மூன்றரை அங்குலம் அளவும், பின்னே பீடிகையடியினின்று அதின் நுனிக்கு நாலரை அல்லது ஐந்து அங்குலம் மட்டுமிருக்கும். இப்படி ஆழம் விகற்பமாயிருப்பதினால், ஒரு பொருள் முற்பக்கத்திலே கீழ்ப்பந்தைக்கு அண்ணிதாக

Digitized by Google

இறங்கியிருந்தும், வலமிடங்களிலும் பிற்பக்கத்திலும் அதிக தூரம் கடக்கவேண்டியிருக்கும்.

கூபகம் உடம்பிலே இருக்கும் சாய்வைப்பற்றிச் சற்றேயார்ப்போம். நிறுதிட்டமாயிருக்கும் உடம்புமேருவிலே தொடுத்தே கூபகமேருவும் நிறுதிட்டமாயிருந்தால் கூபகத்திலுள்ள குடல்கள் சரிந்து கீழே வெளிக்கிட ஏதுவாம். ஆனதாற் கத்தரிகைக்கால்போற் கூபகமேரு உடம்புமேருவுக்கு முப்பத்தைந்துபாகை அளவில் விலகியிருக்கின்றது. ஆகையால் உடம்புமேரு கூபகஅறையின் மையத்துக்கு முன்னேக்கி விலகி மேகனனுசந்தியைத் தொடும்.

## புருடகூபகத்துக்கும் ஸ்திரிகூபகத்துக்கும் உள்ள வித்தியாசம்.

புருடகூபகம் ஆழமுள்ளதும், விசாலங்குறைந்ததும், மேல்வளத்திற் பார்க்கக் கீழ்வளம் ஒடுங்கியதுமாயிருக்கும். அதின் பீடிகையென்பு நீண்டு ஒடுங்கி வளைவு குறைந்திருக்கும். மேகனசந்துரேகையானது பீடிகைச்சந்துனுசந்தியினின்று முன்னேக்கிச் சற்றே நேராய்ச்செல்லும், பீடிகைமுனையோ முன்னுக்கு அதிகம் துன்னியிருக்கும். ஆசனமுள்ளும் கணுவும் பருத்துக் கரடாய், அகத்தில் துன்னியிருக்கும். மேகனத்தவர் ஒடுங்கி அதின் அடியிற் கணுக்கள் ஒன்றுக்கொன்று கிட்டியிருக்கும். ஸ்திரிகூபகமோ ஆழங்குறைந்ததாய் அகன்று கீழ்வளம் விசாலித்திருக்கும். அதின் பீடிகையென்பு குறுத்து அதிகம் வளைந்து கவிந்திருக்கும். ஆணிலே மேற்பக்கத்தை வட்டமாயும், பெண்ணிலே சற்றுவட்டிப்பாயும், ஆணிலே கீழ்ப்பக்கத்தை ஒடுங்கி முக்கோணமாயும், பெண்ணிலே அகன்று சுற்றுச் சதுரித்ததாயுமிருக்கும். குந்தகத்துளை ஆணிலே வட்டிப்பாயும், பெண்ணிலே முக்கோணமாயுமிருக்கும்.

கூபகமேருவைப்பற்றி மேலே நாம் பேசியபோது, அம்மேரு கூபகமையத்தை உருவிச்செல்லும் ஒரு நேர்வரியென்ற பொதுக்கருத்துப்படச் சொன்னோம். கூபகமானது வளைவுகொண்டதாயும் மேற்பக்கத்தை கீழ்ப்பக்கத்தை இரண்டும் உடம்பின் முற்பக்கத்தை நோக்கியனவாயும், மேற்பக்கத்தையின் மையத்தை உருவிச்செல்லும் மேருவைக்

Digitized by Google

கீழே இறக்கினுல் அது புச்சநுனியைத் தொடுவதுமாய் இருப்பதால், கூபகமேருவென்பது ஒரு நேர்வரியல்லவென்றும், மேற்பந்தை கீழ்ப்பந்தைகளின் மையங்களை உருவிப் பீடிகைக்கவிகைக்கு இசைவாகச்செல்லும் ஒருவளைவரியேயென்றுங் காணலாம். ஆதலால் ஒரு பொருள் மேற்பந்தையாலே இறங்குகையில், கீழாய்ப் பிற்பக்கஞ் சருவியும், கீழ்ப்பந்தையாலே வெளிக்கிடுகையிற் கீழாய் முற்பக்கஞ் சருவியும் வருமென்று மேற்சொல்லிய குறிப்புகளாற் சாதித்து அறிந்துகொள்ளலாம்.

இப்படி நாம் சொல்லியவைகளே ஸ்திரிகூபகத்தைப் பற்றி மருத்துவவைத்தியர்அறியவேண்டிய பிரதான கருத்துகள். இயற்கைவடிவம் பொருந்தாமல் அந்தங்கெட்டும், அளவுப்பிரமாணஞ் சுருங்கியும் அதனப்பட்டும், இருப்பனவாகிய சில கூபகங்களும் உள்ளனவாதலால், மேலே நாம் சொல்லிய இலட்சணங்களுக்கு அமையாத விலக்குகளும் உண்டு.

கூபகத்தை அந்தங்கெடுக்கும் பிரதான காரணங்கள். சிறுபிராயத்திலேகுடிலாஸ்தி என்னும்வியாதி உண்டுபடுவதிஞற் கூபகஎலும்புகள் உரப்புக்கெட்டு, அதக்காயம் இளகி ஈந்துகொடாமற் கீழே உறுத்த, உடம்பின் பாரம் மேலே அமர்த்த, இடையே கிடந்து நசிந்து வளைந்துபோகின்றன. மராளாஸ்தி என்னும் வியாதி உண்டுபடுவதிஞலும் இப்படி ஆகும். கூபகஎலும்புகள் முறிவதிஞலும், அத்திசோபம் உண்டுபடுவதிஞலும், அந்தங் கெடுவதுமுண்டு. குடிலாஸ்தியிஞல், மேற்பந்தை சுருங்கி, வலமிடமாய் ஒடுங்குவதிலும் பார்க்கப் பெரும்பாலும் முன்பின்ஞய் ஒடுங்கிப்போகின்றது. வேறும் பலவிகற்பங்கள் உண்டு. சிறிதிடங்களிலே பந்தைகள் நெருங்கி ஒடுங்கி, உழைவாரம் அல்லது புற்செதுக்கி சாடையாய் வந்துவிடும். மேற்பந்தையின் அளவு ஒருபக்கத்தில்அதிகங் குறைந்து மற்றப்பக்கத்திலே விகற்பம் உண்டோ இல்லையோவென்ருற்போலக் காணும். அனேக ஸ்திரிகளிலே பிரசவத்துக்குப் பிரசவம் அந்தக்கேடும் அதிகப்படுமென்றும், அதன்முறைகளிலே வேதனையோடு நடந்த பிரசவம் பிற்காலங்களிற் கருவிச் சகாயத்திஞலன்றி முற்றுதென்றும், மருத்துவர் சொல்வார்கள்.

கூபகம் மட்டுக்கு மிஞ்சச் சிறுத்தும், அதிலிருக்கும் சிசு



Digitized by Google

அச்சிறுமைக்கு இசைவின்றி அதனமாய்ப் பருத்தும்வந்தால், வியாதியினுற் கூபகம் அந்தக்கேடாய் அளவு சிறுத்தாற்போலப் பிரசவம் வில்லங்கமாய் முடியும். கூபகத்தின் அளவுப்பிரமாணம் இயற்கைக்கு அதனப்பட்டும் இருப்பதுமுண்டென்று சொனனேம்; இதினுல் விளையக்கூடியமோசங்கள், கருப்பை பின்னுக்குப் புரள்வதும் கீழே இறங்குவதும் எண்ணுதிருக்கச் சடிதியிலே பிரசவிப்பதுமேயாம்.* மேற்சொல்லிவந்த அளவுகளையும் இலட்சணங்களையுங் கங்காளத்திலே நன்ருக நிதானம்பண்ணலாமாயினும், உயிரோடியங்கும் உடம்பிலே பரிசோதிக்கில், ஏதோ வேறொருகருமமாய்த் தோன்றும். இப்பரிசோதனைக்கு அனுசாராகச் சில கருவிகள் உண்டாக்கியிருக்கிருர்கள். அவற்றுள் கூபகமானியுங், கர்க்கடமும் முக்கியமானவைகள். சிற்பகாரன் அளவு நிதானஞ் செய்வதுபோலவே, கூபகத்தின் பருமத்தையும் கர்க்கடத்திறுற் புறத்தியில் அளந்து நிதானஞ்செய்வது. கூபகமானியின் ஒருகாலை யோனியுட்செலுத்திப் பீடிகைமுனையில் நிறுத்திக்கொண்டு, மற்றக்காலை மேகனுசங்கியிலே இசைத்துப், புராபரவிட்டத்தின் அங்குல அளவு குறிக்கலாம். இவ்வகை அளவைக்கருவிகள் மிக உபயோகமானவையல்லவென்று தள்ளப்பட்டிருக்கின்றன.

விரல்களினுல் வேண்டிய பிரயோசனமான பரிசோதனைபண்ணிக்கொள்ளலாமாதலால் இதைப் பற்றிச் சில குறிப்புகள் சொல்வோம். தர்ச்சனியென்ற விரலை யோனியுட் செலுத்தி மேலாய்ப் பின்சருவக்கொண்டுபோகில்,

* அமெரிக்காவில் நூயார்க் ஊரிலுள்ள வைத்தியசாத்திர பண்டிதர்களின் பிரசவவினேதசாலையிலே ஒரு கூபகம் இருக்கின்றது. அதின் அளவுப்பிரமாணம் மிகப்பெரிதாய், மேற்பந்தையின் புராபரவிட்டம் ஐந்தங்குலமும், வலமிடவிட்டம் ஐந்தேமுக்காலங்குலமும், சாய்விட்டம் ஐந்தரையேஅரைக்கால் அங்குலமும், கீழ்ப்பந்தையின் புராபரவிட்டம் ஐந்தரை அங்குலமும், வலமிடவிட்டம் ஐந்தேமுக்கால் அங்குலமும், பீடிகை முடிக்கும் நுனிக்குமுள்ள தூரம் மூன்றேகாலேஅரைக்காலங்குலமும், பக்கங்களிலே கூபகஆழம் மூன்றேகால்அங்குலமுமாய் இருக்கின்றனவென்றும், அதுமிகவும் அந்தசந்தங் கெட்டதென்றும், மட்டுமிஞ்சிப் பெருத்திருக்கும் கூபகத்திலே நேரிடும் இடையூறுகளுக்கெல்லாம் அது இடமாகுமென்றும், கில்மன் என்ற பண்டிதர் சொல்லுகிருர்.

Digitized by Google

பெரும்பாலும் பீடிகைப்புடைப்புத் தட்டும். அப்போது இவ்வளவு உட்சென்றது என்று நிதானிக்கலாம். அல்லது மேகனத்தவரிலே தொட்டுக்கொண்டு கையோரம் இன்னமட்டு நிற்கிறதென்று நிதானித்து, மேகனுசங்கியின் கனத்துக்கும் விரலின் சரிவுக்கும் சற்றே கணக்குத்தள்ளிக்கொண்டு, குறுவிட்டத்தின் நீளம் அறியலாம். சிலவேளை, இவ்விட்டம் வேண்டிய அளவு நீளமாயிருக்க, அதின் அயல்கள் ஒடுக்கமாயிருக்கும். இது தெரியும்படி இரண்டுவிரலையோனியுட்செலுத்தி, அவ்வயல்களிற்றட்டும்போது விரல்கள் ஒன்றினருகிலொன்று சமனுயிருந்தால், மேகனுசங்கியின் முதுகிலே குறுங்கோணம் விழாது. ஆதலால் அவ்வயல்களின் அளவுங் குறுகியிராதென்று அறியலாம். கூபகத்தின் அளவைக் குறுக்குவதற்கு ஏதுவான எலும்புநெளிவுப்புருவங்களை அல்லது திரட்சிகளை இப்படியே விரல்களாலே தேர்ந்து தெளியலாம்.

# உம். அதிகாரம்.

## சிசு.

கூபகஅறைவழியாய்ச் சிசு இறங்குவதைப் பற்றியவைகளாகவே இருக்குஞ் சிசு இலட்சணங்களை இனிச்சிந்திப்போம். கருப்பையில் இருக்கையிலே, சிசுவின் பலஉறுப்புக்களுஞ் சிற்றிடங்கொள்ளும்படிக்காய் ஒன்றுபடச் செறிந்து, சற்றே வட்டித்த சாடைகொண்ட திரளையாகவிருக்கும். பிள்ளையின் மோவாய் நெஞ்சிலேபடத் தலைவளைந்து, பிரகண்டம் என்னும் பின்கைகள் பாரிசங்களில் அணைந்து, முன்கைகளும் அஸ்தங்களும் முடங்கிப் பெரும்பாலும் கத்தரிகைக்கால்கள்போலாய் மார்புடன் அணையக், கால்கள் முடங்கிக் தொடைகளிலுந், தொடைகள்முடங்கிக் கீழ்வயிற்றிலும் அணைந்து, பாதங்கள் பெரும்பாலும் அஸ்தங்கள்போற் கத்தரிகையை ஒத்திருக்கும். இப்படியாய், தலை மேற்சொல்லிய திரளையின் ஒருஅந்தமாகவும், பாதங்களும் குண்டியும் மற்றந்தமாகவும் இருக்கும்.


பிள்ளையானது பாரிசபக்கங்களுக்குச் சற்றே வசையக்கூடியது. இதிலும் முன்பக்கத்துக்குச் சற்றுவசைவு இருக்கும், பின்பக்கத்துக்கோ ஏலாது. பிள்ளையிலே அளந்துபார்க்கவேண்டிய விசேஷமான பகுதிகள் தலையுந் தோள்களுங் குண்டியுமாம். தலையே மற்றும் உறுப்புகள் எல்லாவற்றிலும் பருத்ததும் இசிவிலே குறைந்ததும், கூபகவழியாய்ப் பிறவிநோக்குவதில் வாடிக்கையாய் முந்தினதுமாதலால், அதுவே முதற் சிந்திக்கப்படத்தக்கது.

முகத்தை நீக்கிப் பிள்ளையின் தலையை மாத்திரம் பிரித்துப்பார்த்தால் அதுவட்டிப்பாய் அதின் பெரிய அந்தம் பின் சருவியிருக்கும். அது இன்னதுபோலிருக்குமென்று சொல்வதினால் பிரயோசனமில்லை. இந்தக்காரியத்தைத் தீர்க்கமாய் விளங்கவிரும்பும் மாணுக்கன், நடுராசியான அளவும் வடிவமுமுடைய சிசுகபாலத்தை எடுத்து, அதிலே நாம் சொல்லப்போகிற இலட்சணங்களை அவதானமாய் ஆராய்ந்துபார்க்கவேண்டியது.

கபாலவெலும்புகள் வளர்ந்து ஒன்றோடொன்று பொருந்தாமல், அவைகளுக்கிடையிலே முருந்துத்தொடர்பு இருப்பதினால், அவை ஒன்றிலொன்று அசைந்துகொண்டிருப்

Digitized by Google

௨ம். படம்.*



பதாக நாம் காணலாம். கபாலவெலும்புகளின் இடைப் பிரிவுகளுக்குக் கரேகை என்றுபெயர். முற்பக்கத்தினின்று பிற்பக்கமாய்ப் பித்திகையென்புகளுக்கு இடையிலுள்ள பிரிவுக்குப் பித்திகைக்கரேகை என்றும், பித்திகையென்புகளை நெற்றியினின்று பிரிப்பதற்கு லலாடகரேகை என்றும் பித்திகையென்புகளுக்கும் பிடரென்புக்கும் இடையிலுள்ள பிரிவுக்குக் காடகரேகை என்றுஞ் சொல்வார்கள்.

நெற்றியென்பை இரண்டுபகுதிகளாகப் பிரிக்கும்படி அதின் மையத்துக்கு ஊடாய்ப் பித்திகைக்கரேகை நீடிப் பதினாலுங் கபாலவெலும்புகள் அலைவாகின்றன. தலையினது பருமையின் ஒருவிட்டங் குறுக, மற்றவிட்டம் இதற்கிசைவாய் நெடுகத் தக்கதாய்த் தலையெலும்புகள் இசிந்துகொடுக்கும். கரேகைகளின் நிலையத்தையும் அவற்றின் இசிவுத்தன்மையையும் பற்றிச்சற்றே பார்க்கவேண்டியது. கரைகைகள் பொதுப்பட வளர்ந்தவர்களிலிருக்கும் பிரகாரமாகவே பிள்ளைகளிலும் இருந்தும் முன்னே நாம் சொல்லிய வண்ணமாய் பித்திகைக்கரேகை பாலகரில் அடிமூக்களவுக்கு நெடுகியிருக்கின்றது. சிலவேளை, சற்றே அரிதாய், பின்னுகப் பிடரென்பிலும் செல்லுகின்றது. காடகரேகையும் பித்திகைக்கரேகையும் பொருந்தும் இடத்திலே பிடரென்பும் பித்திகையென்பும் வளர்ந்து மேவாததினாலே, முருந்துமூடி முக்கோணமாய் மெதுவாயிருக்கும் இடமொன்றுண்டு. இதற்குப் பின்னுச்சியென்றுபெயர். இதுபோல, பித்திகையென்புகளுக்கும் நெற்றியென்புக்கும் இடையே, லலாடகரேகையும் பித்திகைக்கரேகையும் பொருந்துஞ் சந்திப்பிலேயும் ஒரு மெதுவான இடமுண்டு. இதற்கு முன்னுச்சியென்று பெயர். இது சற்றே சதுரித்ததாய், நாலுகரேகைகள் பொருந்தும்

*இத்தலையோட்டின் நெற்றிப்பக்கம் மேசையிற்பொருக்கும் பாவனையாகத் தெரியுது. பிடரி மேலாகவும் சிசுவின் நெற்றி கீழாகவும் கிடக்கும்பாவனை. இதில் முன்னுச்சியும் பின்னுச்சியும், கரேகைகள் மூன்றும் தெரிகின்றன. அந்தந்த எலும்பு அதனதன் நடுவிலிருந்து கிரணமிட்டு வளருகிறதைக்காண்.

Digitized by Google

இடமாயிருக்கும். பின்னுச்சியிலோ மூன்று கரேகைகள் கூடும். பிரசவகாலத்திலே பிள்ளையினது தலை தாய்உயிற்று ள் இன்னவளமாயிருக்கிறதென்பதை இவ்வுச்சி வித்தியா சங்களினலே நிச்சயம் பண்ணலாம்.

இப்பொழுது நடுரோசியான சிசுகபாலத்தின் அளவுகள் இன்னின்னவென்று பார்ப்போம். இவைகள் சிற்சில வரி களால் நிதானமாகின்றன. இருபக்கத்துப் பித்திகையெ ன்புகளின் புடைப்புகளுக்கு இடையேகிடக்குங் குறு வரி மூன்றரை அல்லது மூன்றேகாலங்குலநீளம். கூப கவிட்டங்களுக்குட் குறுகியவிட்டம் நாலங்குலத்திற்கு றையவில்லையாதலால் சிசுகபாலத்தின் அக்குறுவரிப்பக் கம் கூபகவழியாய் இறங்குவதிலே வில்லங்கம்வராது.

இனி சிசுகபாலத்தின் நெடுவிட்டப்பக்கமாய் ஓடும் அளவைவரிகள் மூன்றுண்டு. இவைகளுள் ஏதேனும் ஒன் றும், மேற்சொல்லிய குறு வரியுங்கூடி, சிரசு உதயத்திலே முதலிறங்கும் அவயவத்தின் அளவை நிதானம்பண்ணும்.

இவைகளுக்குள் குறிதும் ஸ்திரி கூபகத்தின் நெடுவி ட்டங்களுக்கு வாடிக்கையாய் எதிருமானவரி, நெற்றி யின் மேற்பகுதியினின்று பிடரென்பினது கீழ்ப்பகுதிக்கு ஓடி, நாலங்குலமளவு நீளங்கொண்டதாய் இருக்கின்றது. உச்சி உதயத்திலே, மோவாயானது, வாடிக்கைபோல நெ ஞ்சிலே அதிகம் அழுந்தத் தலை முன்னுக்கு வளைந்திருந் தால், மேற்சொல்லிய அவ்வரிப்பக்கந் தான்முதல் இறங் கும். அவ்வரி கூபகத்தின் குறுவிட்டத்திலும் பெரிதும ல்லாததினலும், சுபாவத்திலே கூபக நெடுவிட்டங்களுக் கு எதிருமாய் வருகிறதினலும், இறங்க இடம்போதாதெ ன்ற வில்லங்கம் இல்லை. இவையே, நல்ல வாய்ப்பான கருமங்களிலே, சிசுகபாலத்துக்கும் ஸ்திரிகூபகத்துக்கும் உள்ள அளவைச்சம்பந்தங்கள்.

மற்ற இரண்டாம்வரி, நெற்றியின் கீழ்ப்பகுதியினின்று பிடரென்பின் மேற்பகுதிக்கு ஓடி, நாலரை அங்குல நீள மாயிருக்கின்றது. சிசுவின்தலை, பிடரிப்பக்கமாய் மட ங்கி, நெற்றி தாயின் மேகனத்திலேதாவி, இறங்கும்பொ ழுது சிரசுதயவிகற்பங்களில் ஒன்றாகிய முன்னுச்சி உத யமாகும். இப்படியாகில் மேற்சொல்லிய வரிப்பக்கம் எ திர்விட்டமாயிருக்கும்.

மூன்றும்வரி மோவாய்நுனியினின்று உச்சிக்கு ஓடி,

Digitized by Google

மற்றெல்லாவற்றிலும் நீண்டதாய் ஐந்தங்குல நீளமாய், சிரமப்பிரசவத்திலுள்ள உதயத்துளொன்ருகிய முகவுதயத்திலே, சிசு கூபகவழியாக இறங்குவதில் எதிர்விட்டமாயிருக்கும். இப்படியான உதயத்திலே சிரசு இறங்குவது பெரிய வில்லங்கம்.

உச்சி துவங்கி மண்டையின் அடியீருக, நிதார்த்தமாய்ப் பேசுகில், பித்திகைக்கரேகையினின்று பிடரென்புத்துளை வரைக்கும் உள்ளளம் மூன்றேகாலங்குலம் போலிருக்கும். கபாலஅளவைகள் சிசுவுக்குச் சிசுவிகற்பப்படும். நாம் சொன்னதோ நடுராசியான அளவை. ஆண்சிசுக்களின் தலைகளிலும் பெண்சிசுக்களின் தலைகளே வாடிக்கையாய் சுற்றளவில் முப்பதில் ஒருபங்கு சிறியன.

இனி, தலையின் அசைவுகள் இன்னின்னவென்று பார்ப்போம். இவை, முன்வணக்கு, பின்மடக்கு, பக்கச்சாய்வுகள், உருட்சி என்பவைகளே. பின்மடக்கினும் பார்க்க, முன்வணக்கே அதிகம் வளையத்தக்கது. நேரே பக்கச்சாய்வு அற்பமாயன்றி அதிகம்போகாது. உருட்சியும் மோவாய் தோழிலே தொடத்தக்களவுவரும். இதற்கு அதனமானல், பிள்ளைக்கு மோசமாய் முடியும்.

கூபகஅறையின் இயற்கைவடிவத்துக்கும் பருமத்துக்கும் வேறுபாடுகளும் உண்டென்று சொன்னேமே. அப்படியே நடுராசியான சிசு கபாலத்துக்கு வேறுபாடுகளுமுண்டு. சிசுவின் தலை அதிக சிறிதாயிருக்கும். அப்படியாகில் கூபகவழியாய் லேசிலே இறங்கிவிடும். சிலவேளை அதிக பெரிதுமாயிருக்கும். அப்படியாகில் கூபக அளவுக்கு இசையாதாகையாற் பிரசவம் வில்லங்கமாய் முடியும். ஒருவேளை கருவிகள் பிரயோகிக்க வேண்டியும்வரும். ஆகிலும், கூபகத்தால் இறங்கும்போது சிசுவின் தலை நசிந்து ஒடுங்கிவருமாதலால் அளவுகளிலே இசைவின்றியிருந்துஞ் சரிப்பட்டுக்கொள்ளும் என்பதை அவதானித்துக்கொள்ளவேண்டியது.

சிலவேளை, கருப்பையில் இருக்கையிலே சலசீடம்என்னும் கோயினலும், சிசு இறந்தழுகிப்போவதினலுண்டாகும் வாயுவினலும் சிசுவின்தலை பருத்திருப்பதும் உண்டு. தலையின் உச்சிப்பக்கம் அந்தசந்தமில்லாததாய், மூளைக்குப்பதிலாய் ஒருவிதமான தசைபொதிந்து கிடப்பதுமுண்டு. இப்படியிருக்கும் பிள்ளைகளை அசீடசிசுக்கள்

Digitized by Google

என்று சொல்லுவார்கள். காரியம் இப்படியிருக்க, பரிசோதிக்கையில், சுபாபமான தலைக்குள்ள உறுதி விரலுக்குத் தோன்றாது. ஆதலால் எந்தவளமென்று தெரியாமல் மயங்க வரும். ஆகிலும் இவைமுகாந்திரமாய் பிரசவத்திலே அதிக வில்லங்கம் வராது.

பிள்ளையின் தோள்கள் பெரும்பாலும் ஐந்தங்குல அகலமாயிருந்தும், கூபகத்தில் இறங்குகையில், ஒருதோள் முன்னும் மற்றது பின்னுமாய்ச் சரிந்து இறங்கத்தக்கதாயிருப்பதினால் இவைகளைப்பற்றியும் வில்லங்கம்வராது.

தலையின் நெடுவிட்டம் தோள்களின் நெடுவிட்டத்துக்குச் சரிகுறுக்காய் இருக்கிறதென்று நாம் மேலே சொன்னவைகளினால் விளங்கும். கூபகத்தின் மேற்பந்தை கீழ்ப்பந்தைகளின் நெடுவிட்டங்களை, நாம் முன்சொல்லியபடி, இந்தவண்ணமாகவே வைத்திருக்கிறதினாலுண்டாகும் நயத்தையுங் கண்டுகொள்ளலாம். தலையானது கீழ்ப்பந்தைவழியாய் வருகையில், தோள்கள் மேற்பந்தையின் நெடுவிட்டத்தில் அணைந்திசையத்தக்கதாய் வருகின்றன.

முன்சொல்லிய பிரகாரங் கருப்பையிற்கிடக்கும் பிள்ளையின் குண்டிவளமும் சிலவேளை கூபகவழியாய் முதல் இறங்கி உதயமாகிறபடியால், அதைப்பற்றியும், இரண்டொரு காரியஞ் சொல்லுவோம். சிலவேளை குண்டிமாத்திரமே உதயமாகும். சிலவேளை பாதங்களுங் கூடி உதயமாகும். மேலும், பாதங்கள் அல்லது முழங்கால்கள் முதல் வெளிக்கிடுவதுமுண்டு. இப்படி உதயங்கள் வித்தியாசப்படுவதினால் பிள்ளையின் குண்டிவளத்துப் புராபரவிட்டத்தின் அளவும் வித்தியாசப்பட்டுவரும். ஆகிலும் எப்பொழுதும் வல இட விட்டத்தின் அளவுக்குக் குறைந்தே இருக்கும். வல இடவிட்டம் நாலங்குலந் தெளியும்.

உதயமென்பது, கூபகமேருவின் நேராய் முதல் இறங்கும் சிசுப்பகுதி, அல்லது பரிசோதிக்கும் விரலுக்கு முதல் தட்டும் பகுதி. நிலையமென்பது சிசு பிறவிநோக்கும்போது கூபகத்தில் அடங்கியிருக்கும் விதம். உதாரணமாய், உச்சி முதல் வருகிறதென்றால், உதயங் குறிப்பது : பிள்ளையின் பிடரி கூபகமேகனத்தைச் சருவி, அல்லது பீடிகையைச் சருவிக்கிடக்கிறதென்றால், நிலையங் குறிப்பது.

Digitized by Google

## ௩ம். அதிகாரம்.

### பிரசவமுறை.

கருமுதிர்ந்து சிசுவாகிக் கூபகவழியாய் இறங்கிப் பிரசவம் முற்றுகிறவிதங்கள் இன்னின்னவென்று இப்பொழுது சிந்திப்போம். அது மூன்றுவிதமாய் முற்றுப்பெறும். க வது. சிரசுதயம். உ வது. குண்டி அல்லது அதக்காய உதயம். ௩ வது. உற்காய அல்லது பாரிச உதயம்.

முதல் இருவிதங்களிலும் சிசுவுடைய உடம்பின் நீண்ட மேருவின் தலைப்பொன்று உதயமாகுமாதலால் முந்தின அதிகாரத்திலே சொல்லிய அளவைகளையும் இலட்சணங்களையும் சற்று நினைந்தால் இவ்விருவித பிரசவங்களிலும் வெகுவாய் யாதொரு பாரதூரமான விக்கினம் நேரிடாதென்று பூரணமாய் விளங்கும். மூன்றாம்விதத்திலே, சிசுவின் பாரிசம் உதயமாவதால், சிசுவின் நீண்டமேரு கூபகத்துக்குக் குறுக்கேகிடக்கும். இப்பிரசவம் தானாய் முற்றுவது அரிது. இனிமேல் நாம் விளக்கும் சிலசில விசேஷங்களளவிலே பிரசவம் முற்றுப்பெறவுங்கூடும்.

க வது. பெரும்பாலும் சிரசே உதயமாதலால், சிரசுஇறங்கும் விதத்தைப்பற்றி முதற்பார்ப்போம். சிசுத்தலையானது மேற்பந்தையுள் இறங்கும் நிலையத்தைப்பற்றிய சில விகற்பங்கள் உண்டு. காரியத்துக்கு உதவியான கருத்துக்களைத் தெரிவிக்கும்பொருட்டு, மூன்று விகற்பங்களைப் பற்றிப் பேசுவோம். க வது. பிள்ளையின் தலை கூபகமேற்பந்தையில் இறங்கும்போது, பித்திகைக்கரேகை கூபகச்சாய்விட்டங்களுக்குள் ஒரு விட்டத்துக்கு நேரிசைந்த தாய்ச் சருவிப் பின்னுச்சியானது வஞ்சணைக்குழிகளுள் ஒன்றின் முதுகில் அணைந்துவரும். உ வது. பித்திகைக்கரேகை மேற்சொல்லிய விதமாயிருக்க, பின்னுச்சியோ பீடிகைச்சந்தனுசங்கியுள் ஒன்றை அணைந்துவரும். பிள்ளையின் முகம் மேகனத்தை நோக்கிவருவதும் அரிதாக உண்டு. ௩ வது. முகம் உதயமாய்வரும் விதம்.

தலையின் முதலாம் நிலையம். முதலாம் நிலையத்திலே தலையானது கூபகமேற்பந்தையில் இறங்குகையில், பின்

னுச்சி வஞ்சணக்குழிகளில் ஒன்றை, பெரும்பாலும் இட துகுழியைச் சருவி, நெற்றி பீடிகைச்சந்தனுசங்கியுள் ஒ ன்றைப் பெரும்பாலும் வலதனுசங்கியைத் தாவிக் கிடக் கும். இதில் உதயமாகும் பக்கம் பித்திகையென்பின் புடைப்புக்கு அயலான மேற்பகுதி. ஆதலால் தலையின் உச்சியாகிலும் பித்திகைக் கரேகையாகிலும் முதல் இறங் காமல், இவைக்கு அயலான பித்திகையென்புகளுள், இ டது வஞ்சணக்குழியைச்சருவிப் பின்னுச்சி கிடக்கில், வலப்பித்திகையென்பும்; அதற்கு மாறாய்க்கிடக்கில், இ டப்பித்திகையென்புமே முதல் உதயமாம். இப்படித் தலை சரிவாய் வருவதினால், உச்சியுதயத்திலே பந்தைகளில் இற ங்கும்போது தலைக்குள்ள குறுக்களவிலும்பார்க்க, பந்தை யில்வரும் எதிர்விட்டத்தின் அளவு சற்றேகுறைந்துவிடும்.

இப்படித் தலை சரிவாக இறங்குகையில், பிள்ளையின் மோவாய் அதின் நெஞ்சில் அழுந்தி, பிடரியின் கீழ்ப்பகு திக்கும் நெற்றியின் மேற்பகுதிக்கும் இடையிலுள்ள விட் டஅளவானது கூபகத்தின் சாய்விட்டமாகிய நெடுவிட் டநேருக்குவரும். அப்பொழுது பின்னுச்சியினும் முன்னு ச்சியே கீழ்நோக்கி வருவதினாலும், கூபகத்தின் ஆழங் கு றைந்ததான முன்பக்கத்தைச் சருவி அவ்வுச்சி கிடப்பதி னாலும், அதுவே பிறவிவாசலுக்கு மிகக் கிட்டினதென்று விரலால் பரிசோதிக்கில் விளங்கும்.

தலை இறங்க இறங்க, பிள்ளையின் முகம் பீடிகைக்கவி கையுள் திரும்பி, பின்னுச்சியோ மேகனுசங்கியைத்தா வுகின்றது. முதல் வெளிக்கிடுவது தலையின் பித்திகைப் பக்கம். உச்சியோ தலை புறப்படுகையிலேதான் கீழ்ப்பந் தையின் மையத்துக்கு நேரே வரும். இப்படி பிள்ளை திரு ம்பிப் பெயர்ந்து பிறக்குஞ் சூட்சம் இன்னதென்று சற்றே சிந்திப்போம். முன்சொல்லியபடி, பீடிகைக்கவிகை பிள் ளையின் முகந்தங்குகிறதற்கு இசைந்ததாய், பீடிகைநுனிய ம் ஆசனமுள்ளுகளும் ஒன்றையொன்று அணுகி, மேகன வென்பின்சாகைகள் திரண்டவைகளாய், சிசுத்தலைமேகன வரின் கீழ், முன்னோக்கியிறங்குவதற்கு ஏதுவாகின்றது. முன்னே காட்டியவிதமாய்த் தலைவெளிக்கிடப், பிள்ளையி னது தோள்களின் நெடுவிட்டம் மேற்பந்தையின் சாய்வி ட்டத்தைச் சருவிவரும். தலைவெளிக்கிட்டபின், தாயின் தொடையுள் ஒன்றை நோக்கி முகந் திரும்ப, பிள்ளையின

Digitized by Google

து தோள்களின் நீண்ட விட்டம் கீழ்ப்பந்தையின் நெடு விட்டநேருக்குத் திரும்பும். பிள்ளையின் மற்றும் உறுப்புகள் விலங்கமில்லாமல் வெளிப்படும்.

௯ம். படம்.*



தலையின் இரண்டாம் நிலையம். முதலாம் நிலையம் போல இது மிகுதியாயுள்ளதல்ல. இதிலே பின்னுச்சி பீடிகைச்சந்தனுசங்கியுள், பெரும்பாலும் வலதனுசங்கியைத் தாவிநிற்க, நெற்றியோ வஞ்சணைக் குழியுள், பெரும்பாலும் இடது குழியைச் சருவிநிற்கும். முதலாம் நிலையத்திற் போலத் தலையானது கூபகத்திற் சரிவாயிறங்க, பித்திகையின் முன்மேற்பக்கமே உதயமாகும். கருப்பை சுருங்கிப் பிள்ளையைப் பிதுக்க, வட்டித்துப்பருத்த உச்சியும் பித்திகையென்பின் ஒரு புடைப்பும், ஆசனமுட்களுள் ஒன்றின் சாய்தளத்துக்கு நேரேவந்து, அயலிலுள்ள வஞ்சணைக் குழியைச் சருவிச்செல்ல, நெற்றியோ இப்பேர்ச்சியினால் தன் பக்கத்திலிருக்கும் பீடிகைச்சந்தனுசங்கியைச் சருவிப்பின்னோக்கிச் செல்லும். இப்படி வந்தபின் இதுவும் முதலாம் நிலையத்துள் ஒன்றுபோலாகித் தலைவெளிப்படும். இதே வாடிக்கையான ஒழுங்கு. தொண்ணூற்றாறு பிரசவங்களிலே தொண்ணூற்று மூன்றும் இப்படிச் சம்பவிக்கக் கண்டோமென்று நாகீல் என்னும் பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

ஆகிலும், சிற்சிலவேளைகளில் முற்பக்கந்தாவிவருமென்று மேற்சொல்லிய பிரகாரம் உச்சிவராமல், பீடிகைப் பக்கத்துக்குத் திரும்பி, பித்திகையென்பொன்றின் முன்மேற்பக்கம் மேகனத்தவரின் கீழ் முதற்சென்று, முகம் மேகனத்தை அணைந்த உதயமாய்வரும். இதிலே தலைவளையத் தக்கதாய் கழுத்து லகுவாய் வசையாமலிருப்பதினால், இறங்குகையில் தலை இப்படித் திரும்புகிறது முன்குறித்தவித

*பிள்ளையின் முகம் பீடிகையென்பின் கவிகையை நோக்கியும், பிடரி மேகனவென்பை நோக்கியும் பிள்ளை பிறக்கிறபாவனை. அதின் நெற்றி தாய்விடபத்தில் அழுந்திவருகிறது.

Digitized by Google

ம்போல் வாய்ப்பல்ல. ஆகையால் நெற்றியின் கீழ்ப்பக்கத்துக்கும் பிடரின் மேற்பக்கத்துக்குமுள்ள தூரமே பந்தைகளில் இறங்கும் எதிர்விட்டமாயிருக்கும். சிலவேளை நெற்றி மேகனுனுசங்கியைத் தாவியதாகத் தலையானது மேற்பந்தையிலிறங்க, உச்சியானது பீடிகை மையத்துக்கு நேராய் இறங்கும் என்றும் சிலர் சொல்லுவார்கள். தலை சிறுத்தாலன்றி மற்றும்படி இது நடவாது.

சம். படம்.*



தலையின் மூன்றும் நிலையம், முக உதயம். நெற்றி பீடிகைச்சந்தனுசங்கியுட், பெரும்பாலும் இட தனு சங்கியைத் தாவ, மோவாய் பெரும்பாலும் வலது வஞ்சணக்குழியைச் சருவ, முகம் கூபகமேற்பந்தையில் இறங்கும். அப்பொழுது சதுப்பின் மேற்பகுதி உதயமாகும். நோக்காடு கூடக் கூட மோவாய் மேகனத்தவரின் கீழ்த்தாவி முதல் வெளிப்படும். சிலவேளை அரிதாய் பிரசவ முகனையிலே நெற்றி வஞ்சணக்குழியுள் ஒன்றுக்கு நேரே முன் தாவிச்செல்ல, மோவாய் பீடிகைக்கவிகைக்கு நேரே திரும்பும். முகனையிலே இப்படியிருந்து வர வர மோவாய் இரண்டாம் நிலையத்திற் சொல்லிய வண்ணமாய், முன்பக்கத்துக்குத் திரும்பி மேகனத்தின் கீழ் முதல் வெளிக்கிட்ட ஒரு கருமம் நான் அறிவேன். முகவுதயங்களிலே, மோவாய்க்கும் உச்சிக்குமுள்ள தூரமே பந்தையிலிறங்கும் பெருவிட்டமான எதிர்விட்டம்.

உ வது. குண்டியுதயம். அதக்காய உதயம். சிசு கூபக வழியாய்க் குண்டியல்லது அதக்காய உதயமாய் இறங்கும் போது, அதின் நிலையம் இருவகையாயிருக்கும். ஒன்று, பிள்ளையின் முதுகு தாயின் வயிற்றுப்பக்கத்துக்குச் சரிந்துகிடப்பது. இது மிகுதியாய்வருவது. மற்றது பிள்ளையின் முதுகு கூபகத்தின் பீடிகைக்கு நேரே சரிந்துகிடப்

*பிள்ளையின் முகம் மேகனத்தையும், அதின் பிடர் பீடிகைக்கவிகையையும் நோக்கிப் பிறப்பது. இப்படி வெளிப்படுவது வில்லங்கம் என்று விளங்குகிறது.

Digitized by Google

பது, இவ்விருவகையுள் ஒன்றிலாகுதல், பிள்ளையின் முது
கு நேர்முன்னாய் அல்லதுநேர்பின்னாய் நோக்காமல்,சிசுவு
டம்பின் அகலங் கூபகமேற்பந்தையின் சாய்விட்டத்துள்
ஒன்றோடிணைய உதயமாம். குண்டி உதயமாகும்போ
து, தாயின் மேகனத்தைக் கிட்டிவரும் ஆசனம் மற்றதி
லும்பார்க்கப் பெரும்பாலும் கீழேயிறங்கி, பரிசோதிக்கும்
விரலுக்கு முதல் எட்டும்.

குண்டி கீழ்ப்பந்தையால் இறங்குகையில்,ஒருசந்துமேக
னப்பக்கத்துக்குச் சாய்வாய்ச்சருவியும், மற்றது பீடிகைப்
பக்கத்தைத் தாவியும் வெளிக்கிடும். தோள்கள் மேற்பந்
தையில் இறங்குகையில் அவற்றின் அகலம் அதின் சாய்
விட்டத்தை அணையகிற்கும். கீழ்ப்பந்தையால் வெளிக்
கிடுகையிலே, தோள்களின் நிலையம்மாறி ஒருதோள் மேக
னப்பக்கத்துக்குச் சரிந்தும் மற்றது பீடிகைப்பக்கத்துக்கு
ச் சரிந்தும் போம். இச்சரிவினால், தலை மேற்பந்தையால்இ
றங்குகையில், நெற்றி பீடிகைச்சந்தனுசங்கிப்பக்கத்துக்
கும், பிடர் இதற்கெதிர்த்த வஞ்சணக்குழிப்பகக்துக்குங்
கிடக்கும். தோள்கள் வெளிக்கிட, முகம் பீடிகைக்கவி
கைக்குள்திரும்பி, மோவாய் நெஞ்சில் அழுந்திப் பிறபக்க
மாய்ப் புறப்படக்,கடைசியாய் உச்சி மேகனத்தின் கீழ்க்
கிடந்து வெளிக்கிடும். இதுவே முதல்வகை.

குண்டியுதயத்தின் இரண்டாம் வகையிலே,பிள்ளையின்
முகம் முதல் முன்பக்கத்துக்குச் சரிவாய் இருந்தும், அதி
ன் பின்பு முதலாம் வகையிற்போல, முகமானது பீடிகை
க்கவிகையுள் வரும்படி பெரும்பாலும் முற்றுந் திரும்புகி
ன்றது. சிலவேளை அப்படித் திரும்பாமல் உச்சியானது
பீடிகைக்கவிகையுள் திரும்பித் தலை முன்வணங்குவதற்கு
மாறாய்ப் பின்மடங்கிப், பிடரென்பு கழுத்துப்பிடரியி
லே அழுந்தி, மோவாய் மேகனத்திலேதங்கி, பிடரென்
பே பின்பக்கமாய் முதல்வெளிக்கிடும். மேற்சொல்லிய
குறிப்புகள் குண்டி உதயப்பிரசவங்களுக்குப் பொருந்
தா. காலும் முழந்தாளும் புறப்பட்டு உதயமாவதற்கோ
சரியாய் அமையும்.

௯வது. உற்காயஉதயம். பாரிசஉதயம். இவைகளிலே,
பிள்ளையானது தன்தலை ஒருசந்துக்கும், குண்டி மற்றச்ச
ந்துக்குமாய் கூபகமேற்பந்தைக்குக் குறுக்கே இடம் வல
மாய்க் கிடக்கும். இப்படியான நிலையத்திலே, பிள்ளை


Digitized by Google

இறங்கிப் பிறந்துகொள்ளுகிறது மகா அபூருவமாயிருக்கு மென்று, சற்றே ஆராய்துபார்த்தால் விளங்கும்.

சிசு அதிகசிறிதாய், அல்லது சிசு இறந்து உட்கிமிகவும் வசைவதாய்வருஞ் சிலவேளைகளிலோ, கருப்பைசுருங்கி அதைப் பிதுக்கித் தள்ளும். இப்படிப் பிறக்கும்போது பிள்ளையின் உடம்பு மடிந்து வெளிப்படும். இப்படிப் பிறவி நடக்கையில், பிள்ளையின் தலை கூபகத்தின் சந்துப்பள்ளம் ஒன்றிலேதங்க, தோள் கூபகத்தாலேமுன்னேக்கிப், பிதுங்குண்டிறங்கி, மேகனத்துக்கு முன்னுயேறிப், பிள்ளையின் விலா அல்குலுட்பிதுங்கி இறங்கும். இது வெளிக்குவர, பிள்ளையின் வயிற்றின் ஒருபக்கம் அதின் பின்புறப்பட,உடம்பு தன்னிலே அதிகம்மடிந்து கடைசியாய் முக்கமுக்க குண்டி பீடிகைமேல்வந்து தள்ளிக் கடைசியிலே தலை கூபகத்தால் வெளிக்கிடும்.

மாணுக்கன் ஒரு பிரசவகருமத்தில் ஏற்படும்பொழுது, பிள்ளையின் தலை இன்னவளமாய்க் கிடக்கிறதென்று சரியாய்க் குறித்துக்கொள்வது கூடாதாலும், மனமுட்டுப் படவேண்டியதில்லை. இப்படிக் குறிப்பது, காரியத்தளவிலே மிகுந்த பிரயாசம். இதைக் குறிக்கவென்று தொடங்கி, தாய்க்கு அதிகவேதனை வருத்துவதும் அடாது. சிரசே உதயமென்று நிதானமானல், தலைவளம் மாற்றிவைப்பது மிகுந்த அவசியமுமல்ல, உபயோகமுமல்ல என்று நாகீல் என்னும் பண்டிதர் சொல்லுகிறார்.

Digitized by Google

# ச ம். அதிகாரம்.

## ஸ்திரீ சனனஉறுப்புகள்.

பிரசவ நடைகளையும், நேரிடும் இடையூறுகளையுந் தெளிவாக விளங்கும்படி, சனனேந்திரங்களைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவோம். சனனத்துக்கு உபயோகமாயிருக்கும் இந்திரங்கள் வெளியிந்திரங்கள், உள்ளிந்திரங்கள் என்னும் இருவகுப்பாம்.

வெளியிந்திரங்கள். இவை அகல், பேரிதழ், சிற்றிதழ், சுமரி, சலவாசல், பிறை, பிறைசேடம், நவ்வுபரிகை, அல்குற்கவை, விடபம் என்பவைகள்.

அகல் என்பது மேகனத்தின் முற்பரப்பில் முன்னரைப்பக்கத்திலே தோன்றுந் தசைமேடு.

பேரிதழ்கள் அம்மேட்டினின்று இருபக்கமும் இறங்கி, அபானத்தைநாடிச் செல்லச்செல்லப் பருமைகுறைந்து, அபானத்துக்கு ஒருஅங்குலம் முன்னாய் ஒன்றாகி இணைந்துவிடுகின்றன. இவை நீண்டு விரிந்துகொடுக்கும் நிணம்பொருந்திய ஆனுயோதி என்னுந் தசையினாலும், கருப்பைலதையின் சிலஇழைகளாலுமுண்டாய், உட்பக்கத்துக்குச் சிங்காணசில்லியென்னுஞ் சவ்வினாலும், வெளிப்பக்கத்துக்கு அகலைப்போல உரோமங்களும் நிணக்கோளங்களுமுள்ள தோலினாலும் மூடப்பட்டிருக்கின்றன. பேரிதழ்களுக்கு இடையிலுள்ள பிளப்புக்கு அல்குலென்றுபெயர்.

சிற்றிதழ்கள் பேரிதழ்களுக்கு அடுக்க உள்ளேகிடக்குஞ் சிங்காணசில்லி மடிப்புகள் இரண்டுமாம். இவை மேலாய் சுமரிமுன்னுக்கு ஒடுங்கி அதற்கு ஒருமுட்டாக்கு ஆகின்றன. இவை யோனிவாசலுக்கருகே அதின் அரைவாசிஅளவுக்குப் பின்னுக்குச்செல்லச் சிறுத்துச்சிறுத்து முடிகின்றன. இவையுஞ் சுமரியுமே காமவிருப்புக்கு இடம். பிரசவத்திலே பிறவிவாசல் விரிந்துகொடுக்கும்படி இவற்றின் சுருக்கு அற்று நெகிழ்கின்றது.

சுமரி சிற்றிதழ்கள் பொருந்தும் இடத்தின் கீழேயிருக்கும். இது உற்கங்கொள்ளக்கூடிய ஒரு சிறுமுளை.

சலவாசல் சுமரிக்கு முக்காலங்குலங் கீழே யோனிக்கு மேல்அடுக்கயிருந்து, விரலாற் பரிசித்துப்பார்க்கும்போது

Digitized by Google

குழிபோல விளங்கும் ஒருசிறுத்துவாரம். இக்குழியின் கீழோரத்தில் ஒரு சவ்வு மடங்கியிருப்பதினால், துவாரஞ் சற்றே மேல்நோக்கிக் கிடக்கும்.

யோனிவாசல் சலவாசலுக்கு அடுக்கக் கீழே பின்சருவியிருக்கும். கன்னிமை கழியாதவர்களிலே பிறையென்னும் பேர்கொண்ட ஒரு சவ்வினாற் பெரும்பாலும் மூடப்பட்டிருக்கும். பிறைச்சவ்வுக்கு முன்னாய் அதின் விளிம்புக்கு அடுக்க, நீட்டுவெளிக்கிட ஒரு துவாரம் உண்டு. சிலவேளை இத்துவாரம் இல்லாமல் பிறைச்சவ்வு சல்லடைக்கண்கள்போலப் பல சிறுத்துவாரமுள்ளதாயிருக்கும். துவாரஞ் சற்றுமின்றி யோனிஅடைபட்டிருப்பதும்உண்டு.

பிறைசேடம் என்பது யோனிவிளிம்பிலே உண்ணிபோற் கிடக்கும் நாலுமூன்று தசைச்சின்னங்கள். சிலர் இவை பிறைச்சவ்வில் எஞ்சிய சேடங்கள் என்றுஞ், சிலர் பிறைச்சவ்வு கூடயிருக்கும் வேறுபொருள்கள் என்றுஞ் சொல்வார்கள்.

அல்குற்கவையென்பது பேரிதழ்கள் பின்னுக்குப்பொருந்தும் இடம். நவ்வுபரிகை என்பது அல்குற்கவைக்கு அடுக்க முன்னாகச் சவ்வுக்குள்ளே இருக்கும்பதிவு.

விடபம் என்பது அல்குற்கவைக்கும் அபானத்துக்கும் இடையே ஏறக்குறைய ஒன்றரைஅங்குலமளவிற் பரவி இருக்குமிடம். அதின் உட்பக்கஞ் சிங்காணசில்வியாலும், வெளிப்பக்கந் தோலாலும் மூடப்பட்டிருக்கின்றது. இவ்விருபக்கங்களுக்கும் இடையிலே ஆணுயோதியுஞ் சிலபேசி இழைகளுமுண்டு.

உள்ளிந்திரங்கள். இவை, யோனி, கருப்பை அல்லது சராயு, சினைப்பாதை, சினைப்பை என்பவைகளே.

யோனியென்பது அல்குலினின்று கருப்பைவரைக்குஞ்செல்லும் ஒரு சவ்வுக்குழல். இக்குழல் முன்னுக்குக் கவிந்த வளைவுள்ளதாய் கூபகமேருவாகிய வளைவரியோடு இசைந்து ஒன்றுபடுகின்றது. இது உரத்த ஆணுயோதிச் சவ்வினால் உண்டாய், பலநரம்புகளாலும் இரத்தக்குழல்களாலும் நெடுகச் சூழப்பட்டு, கீழ்ப்பகுதியிலே பேசிஇழைகள் சூழ்ந்தசுருக்கு உடையதாயிருக்கின்றது. யோனியாகிய குழலில் ஒடுங்கிய பகுதி அதின் வெளிவாசல்தான். இதற்கு ஒரு அங்குலம் மேலேதள்ளி, யோனியின் நாடிநாளங்கள் திரண்டு, தசிரபின்னல் என்னும் யோனி

Digitized by Google

யுற்கோதிஆகின்றது. சிங்காணசில்லி இதற்கு உள்ளுறை யாகி, கன்னிமைகழியாதவர்களிலே குறுக்கே சுருக்குந் திரைவுமாய்க் கிடக்கும். சிங்காணகுதுவத்துவாரங்களும் அனேகம் அதில் உண்டு. யோனியின் மேலந்தம் கருப்பைவாய்க்கு ஒருஅங்குலம் மேலே ஏறி, யோனியுள்ளுறையாகிய சிங்காணசில்லி மடிந்து யோனியுள் இறங்கிய கருப்பைக்கழுந்திலே செறியும். யோனியின் மேலந்தத்திலேயுள்ள இம்மடிப்பு, கருப்பைக்கழுந்திலே முற்பக்கத்திலும்பார்க்க அதிகமாய்ப் பிற்பக்கத்துக்கு மேலேஏறியிருக்கும். ஆதலால் கருப்பைக்கழுந்தின் பிற்பக்கமே, முற்பக்கத்திலும், யோனிக்குழலில் அதிகமாய் இறங்கியிருக்கும். யோனியின் முற்பக்கத்தின் கீழ்ப்பகுதி சலவாகியுடன் இறுக்கமாயும் மேற்பகுதி சலப்பையுடன் நுகைவாயும் அணைக்கப்பட்டிருக்கும். இயல்பிலே யோனியின் முற்பக்க நீழம் மூன்றங்குலம்போலிருக்கும். பிற்பக்க நீளமோ இதற்குச் சற்றதனமாயிருக்கும். யோனியின் பிற்பக்கத்தின் கீழ்ப்பகுதி மலவாகியுடன் அணைக்கப்பட்டு, மேற்பகுதி மலவாகிக்கும் யோனிக்கும் இடையிலே இறங்கும் பரியந்திரம் என்ற சவ்வின் ஒரு மடிப்புடன் அணைந்திருக்கிறது.


யோனி வழியாய்க் கருவிகள் பிரயோகிக்கும்போதெல்லாம் யோனியின் மேல்வளத்தின் பிற்பக்கமானது பரியந்திரத்தில் அணைந்திருக்கிறதென்ற இக்காரியத்தைத் தீர்க்கமாய் மனதிலே அவதானம் பண்ணிக்கொள்ளவேண்டியது. அப்பக்கமோ மிகவும் பெலவீறுதியான நொய்த இடம். இதிலே யாதொரு மோசஞ் சம்பவித்தால், பரியந்திரதபம் என்ற நோய்க்கு ஏதுவாம். இந்த இடம் அதிகம் கிழிய ஏதுவான இடம். கிழிந்தாலோ மரணம் நிச்சயம். ஆனதால் வைத்தியன் இந்த இடத்தைப்பற்றி அதிக அவதானமாயிருக்கவேண்டியது.

கருப்பையானது சப்பையாய் அத்திப் பழ வடிவமாயிருக்கும். இதின் நீளம் இரண்டரை, மூன்றங்குலமட்டுக்கும், தடிப்பு முன்னிருந்து பின்னுக்கு ஒரு அங்குலம் போலவும், அகலம் அகன்றிருக்கும் மேலந்தத்திலே ஒன்றரை அங்குலமட்டுக்கும், உண்டு. இதை நாலு பகுதிகளாகப் பிரித்து, அகன்றிருக்கும் மேற்பகுதியை அடியென்றும், கீழந்தத்தைக் கழுந்தென்றும், கழுந்துக்கும் அடிக்கும் இ

Digitized by Google

டையேயுள்ள பகுதியைக் காண்டம் என்றும், யோனியினின்று கருப்பைக்குச் செல்வதாய்க் கழுந்து முடிவிலுள்ள துவாரத்தை வாய் என்றுஞ் சொல்வது. கருப்பையானது திண்மையும் நரை நிறமுமான இழைகளினால் உண்டாய், பித்தித் தடிப்பு அரை அங்குலம் முக்காலங்குலமளவாகி நரம்புகளுந் தசிரங்களுஞ் செறிந்திருக்கும். இதை வெட்டிப் பார்த்தால், மிகுதியான இரத்தத் துவாரங்கள் காணலாம். சூற்கொள்ளாத கருப்பையின் இழைகள் ஒழுங்கு நிரைபற்றியவைகளாகத் தோன்றா. சிலர் இவ்விழைகளைப் பேசியிழைகளல்லவென்று மறுத்தாலும், அவை பேசியின் சாங்கமுந் தொழிலுமுடையன.

*௫ம். படம்.




கருப்பையினுள்ளே ஒரு அறையுண்டு. கருப்பையினது அடியில் அடங்கிய பகுதியிலே இது முக்கோண வடிவமாய், இதின் கீழ்க்கோணம் காண்டத்திற்குங் கழுந்திற்கும் ஊடே கருப்பைவாய்க்குச் செல்லும் ஓர் ஒடுங்கியகுழலாக நீண்டிருக்கும். இதின் மேற் கோணங்களிலே இடம் வலமாய் இரு பக்கத்திலும் சினைப்பாதைகளின் வாசல்கள் தொடுத்திருக்கும். யோனியின் உள்ளுறையாகிய சிங்காணசில்லியே நெடுகிக் கருப்பையெங்கும் சென்று அதின் உள்ளுறையாகியிருக்கும். இவ்வுறை கன்னிமை கழியாதவர்களிலே திரைவாயிருக்கும். இதிலே, பிர

*கருப்பை, சினைப்பை, சினைப்பாதை, முதலியன இயல்பிலே ஒன்றுடனொன்று தொடுத்திருக்கும் விதம். A. A. கருப்பைக்கு வலம் இடமாய்க் கிடக்கும் இரண்டு சினைப்பைகள். B. B சினைப்பாதைகளின் இரண்டு தலைப்புகள். இவைகளில் ஒன்று வளைந்து ஒரு சினையைக் கவ்வுகிறதைக் காட்டுகின்றது. C. C. சினைப்பாதை. D. கருப்பை. அதின் மேற் பாக்ததாய் பரியந்திரம் என்னுஞ் சவ்வில் ஒரு பகுதி தெரியுது. E. E. கருப்பையின் கொடிவிசிகள். கீழ்ப்பகுதியிலே பிளந்த யோனியின் மேற்தலைப்புக்குள் கருப்பைவாய் தெரியுது.

Digitized by Google


* ௬ம். படம்.



தானமாய்க் கழுந்துப்பகுதியிலே அனேக சிங்காணசேயங்கள் உண்டு.

கருப்பைவாய் கன்னிகளிலே வட்டமாயிருக்கும். பிள்ளைப் பெற்றவர்களிலோ குறுக்கே பிளவுகொண்டு கால் அங்குலம், முக்கால் அங்குலமட்டுக்கு விரிந்திருக்கும். இதற்கு இரண்டு விளிம்புகளுண்டு. இவை கன்னிகைகளிலே ஒப்ப செப்பமாயும், பிள்ளைப் பெற்றவர்களிலோ, சுருங்கித் திரைவுகொண்டதாயும் இருக்கும். நுங்குபோன்ற தடித்த சளி ஊறும் சில கோளேசங்கள் கருப்பைவாய்க்கு மேலே கழுந்தினுள்ளே இருக்கும். இவையே கழுந்திலே சிலவேளை பற்றுங் கவிதட்சதம் என்னும் உக்கிர புண்ணுக்கு உறைவிடம். கருப்பை கூபகத்தின்இடை நடுவிலே, சலப்பைக்குப்பின்னும், மலவாகிக்கு முன்னும், மேற்பந்தையின் மேருவுந் தன் மேருவும் ஒன்றுபட்டதாயிருக்கும். இது பரியந்திரம் என்னுஞ்சவ்விஞல் மூடப்பட்டு பின் சொல்லப்போகிற அணைகளாலே தாங்கப்படுகின்றது.

†௭ம். படம்.




இவ்வணைகளுள் முக்கியமானவை கருப்பைச் சிறைகள். இவை கருப்பையை மூடும் பரியந்திரச் சவ்வு வலமிடமாய்ப் பெயரும் இரண்டுமடிப்புகள். இம்மடிப்புகளுள் ஒவ்வொன்றிலும் முன்பட்டும் பின்பட்டுமாய் இரண்டுபட்டுச் சவ்வுண்டு. இப்பட்டுகளுக்கு இடையிலே மேலோரத்திலே சினைப்பாதைகளுஞ், சினைப்பைகளுங், கீழ்ப்பகுதியிலே கருப்பையின் தசிரங்களும் நரம்புகளுங்கிடக்கும். இனிக்கருப்பையை மூடும்பரியந்திரம் முன்பக்கமாய்ப் பெ

* கருப்பையின் பேசி இழைகள் அடுத்திருக்கும் விதம். மேற்பகுதியிலுள்ள இழைகள் கீழே நோக்கியும், கீழ்ப்பகுதியிலுள்ள இழைகள் துவாரத்தை திறக்கத்தக்கதாயும் கருங்குவதிலுல் கருப்பையின் உள்ளுடன் பிதுங்குண்டு வெளிக்கிடும்.

†காலமாசத்தின் முடிவிலே குற்கருப்பையிற் கழுத்தும் கருப்பை அறையின் கீழ்ப்பகுதியுந் தோன்றும்பாவனை.

Digitized by Google

*அம். படம்.



யர்ந்து சலப்பையுடனே யும், பின்பக்கமாய்ப்பெ யர்ந்து மலவாசியுடனே யும், கருப்பையையணை க்கின்றது. இன்னும் கரு ப்பைலதைகள் என்னு ம் இரண்டணைகள், சினை ப் பாதைகளுக்கு அடுக் கக் கிழே கருப்பை அடி யிலிருந்து ஒன்று வலமா யும் ஒன்றுஇடமாயும்பெ யர்ந்துகீழ் வயிற்றின் மு ன் பக்கத்திலுள்ள வஞ்ச ணீய வளயங்களுக்கூ டேசென்று அகலையும் பேரிதழ்களையும் மூடுந் தோலினுள்முடிகின்றன. இவைஇரத்தக்குழல்களு ம், நரம்புகளும் ஆணுயோதியுந்திரண்டு உண்டாகியபருத்த திரண்ட கொடிகள். இவற்றின் உபயோகங்களைப் பற்றிச் சில பேதமான கருத்துக்கள் உண்டு. கருப்பையின் அடி யிலே வலமாயும் இடமாயுங் கிடக்கும் வட்டித்த பேசிக ளிரண்டுக்கும் கருப்பைலதைகள் வன்னசையாம் என்ப து பெல் என்னும் பண்டிதருடைய கருத்து. கலவி கால த்திலே சனனேந்திரங்களெல்லாம் அத்தொழிற்கு ஒற்று மைப்படும்படி, கருப்பைலதைகள் சிற்றிதழ்சுமரிகளிலிரு ந்து சினைப்பாதை சினைப்பைகளுக்கு உணர்ச்சி ஊட்டு வன என்பது யோர்க் என்னும் பண்டிதருடைய சம்மதம்.

சினைப்பாதைகள் உரப்பான நெளிந்த இரண்டு கொடி கள். இவை ஒவ்வொன்று நாலங்குல நீளமாய், இரத்தக் குழல்களும நரம்புகளும் பேசியிழைகளும் சேர்ந்ததாயிரு க்கின்றது. இவற்றின் குழலின் ஒரு அந்தம் கருப்பையி ன் அடியிலே இருபக்கத்திலும் ஒரு தும்பு செல்லுந் துவா ரம் அளவாய்த் தொடங்கி, மற்றந்தம் போகப் போகப் பரு

* முன்பாதி பின்பாதியாகப் பிளந்த கருப்பை. C. கருப்பைவாய் E. கருப்பையின் முக்கோணவான அறை. G. கருப்பைக் கழுத்தின் அறை F. சினைப்பாதை இரண்டும். கருப்பை மத்தியின் கனமும், யை யோனியுடன் தொடுத்திருக்குமதிரியும் தெரியுது.

Digitized by Google

த்து, அஞ்சலம் என்னுங் குஞ்சம்போன்ற விளிம்பு உடையதாக முடிந்து, அந்தரத்திலே தூங்கும்.

*௩௯ம். படம்.




சினைப்பைகள் சினைப்பாதைகளுக்குக் கீழே கருப்பைச்சிறையின் பின்பட்டுகளுள் கிடக்கின்றன. இவை உருவத்திலும் பரிசத்திலும் புருட பீசத்துக்குச் சமானமாய், ஒரு அங்குலம் ஒன்றரைஅங்குலமளவு நீளமாய், நரை நிறங்கொண்டு சப்பையாயிருக்கின்றன. இளஞ் சிசுக்களிலே, கீழே அடிவயிற்றிற் கிடக்கும் சினைப்பையையும் பீசத்தையும் விகற்பித்துத் தெளிந்துகொள்ள ஏலாதபடி, இவை ஒன்றுக்கொன்றுஅதிகம்சமானமாய்இருக்கும். சினைப்பைகள் ஆணுயோதியினால் உண்டாயிருக்கின்றன. ஒவ்வொரு சினைப்பை பதினைந்து இருபது கிலோமேசங்களென்னும் வட்டித்த சிறுபைகளை உடையன. கிலோமேசங்கள்ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வொரு துளிதடித்த நீர்உண்டு. இக்கிலோமேசங்களுக்குப் பரிநாதம் என்று பெயர். கிலோமேசம் ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வொரு சினையுண்டு. கருத்தரிக்குங் காலத்திலே சினைபெயர்ந்து சினைப்பையின் பரியந்திரகவ

†௪௦ம். படம்.




* வலமிடமாய் நடுவாகப் பிளக்கப்பட்ட உடலின் கூபகத்தின் இடப்பாதி. 1 கருப்பை, 2 சலப்பை, 3 மலப்பை. மலப்பைக்கு அடுக்கப் பின்பக்கத்தில் பீடிகையென்பு கிடக்கிறதைக்காண. சலப்பைக்கு அடுக்க முன்பக்கமாய் மேகனவென்பும் அதற்கு முன் அகலும் கிடக்கும் பாவனை இதில் தெரியுது.

† கருப்பையிலுள்ள ஒரு சிறத்துண்டுடன் தொடுத்துக் காணப்படும் ஓர் சினைப்பாதை. A. A. சினைப்பாதையென்ற குழலுக்கு ஊடாய் ஓட்டியிருக்கும் ஒரு தும்பு. B. கருப்பையின் உள்வளம். C. சினைப்பாதையின் தலைப்பு. இது பிளந்த வண்ணமாகத்தெரியுது. இது குஞ்சம்போன்றதாய் இருப்பதினால் இதைக் குஞ்சாந்தமென்பார்கள். கருப்பைப்பித்தியின் கனமும், அத்தோடே தொடுக்கப்பட்டிருக்கும்கருப்பைச்சிறையென்றசவ்வும் இப்படத்திற் காணப்படுகின்றன.

Digitized by Google

சத்தையும், பிளந்துகொண்டுபோய்விடச்,சிறுத்தழும்பு மாத்திரம் அதிலிருக்கும். இத்தழும்பிலே வட்டித்துமஞ்சள்நிறமுள்ளதாகக் காலேஅரைக்கால் அங்குலம் விசாலமுடையதாய், முருந்துப்பதமான ஒரு பொருள் உண்டாகும். இதற்குப் பீதகமென்று பெயர். இது கருத்தரிக்குங் காலந் தொடங்கி, பிரசவத்தின் பின், மூன்று நாலு மாதம் வரைக்குமிருக்கும். இதின் உபயோகம் இன்னதென்று நமக்கு விளங்காது. இது கன்னிகைகளிலும் இருக்குமென்று கோம் என்ற பண்டிதர் உத்தேசித்தும் இதற்குத் தகுந்த சாட்சியில்லை.

கருப்பையோடே ஒற்றுமைப்பட்டுச் சனனத்துக்கு அநுசாராயிருக்கும் எலும்பு, தசைமுதலிய உறுப்புகளைப்பற்றி மேலே கூறினோம். இப்பாற் சூல்பற்றி முதிர முதிர உண்டாகும் பேதங்களினாற் கூபகத்துள் அடங்கிய மறு உறுப்புகளிலே நிகழும் வேற்றுமைகளைச் சற்றே பார்ப்போமாக. கருப்பை சலப்பைக்கும், மலவாகிக்கும் இடையே கிடக்கிறதென்று கண்டோமே. அப்படியிருப்பதினால் கருப்பை விரிந்து பருக்கில், அதின் பாரம் அவ்விரு உறுப்புகளிலே தாக்க வேண்டி வரும். சலப்பையிலே தாக்கி உறுத்துவதினாற் சலப்பையில் அழற்சிகொண்டு சலம் அடிக்கடி கடுத்து இறங்கும். சலவாகியில், அல்லது சலப்பைக் கழுந்திலே தாக்கினால் நீரடைப்புண்டாம். மலவாகியிலே தாக்கினால், அடிக்கடி மலங் கழிய வேண்டியது போல் வரும் அல்லது மலவடைப்பு உண்டாம். மேலும் இரத்தம் இயல்புபோலச் செல்லாதபடி தடைப்படுவதினால் அரிசம் என்ற வியாதி அபானத்தில் உண்டாகும் அல்லது அது கடினமாகும். அதக்காயத்துக்குப் போவனவும் வருவனவுமாய், கூபகத்துக்கூடாய் உலாவும் பெரிய இரத்தக்குழல்களும் அனேகமாசயனிகளும், கருப்பை பருத்துத் தாக்கியுறுத்துவதினால் தங்கள் தங்கள் தொழிலில் தடைப்பட்டு, கர்ப்பிணிகளிலே நாம் காண்பதாகிய நாளவிவாரம் என்னும் வீக்கமும் காலதைப்பும் உண்டாம். மேலும், கூபத்துக்கு ஊடாய் அதக்காயத்துக்குச்செல்லும் பெருநரம்புகளிலே தாக்கி உறுத்துவதினாற், பிரசவ காலத்திலும், இதற்குச் சில காலம் முன்னும், காலவிறைப்பு கால்குறண்டல் முதலிய குணங்கள் உண்டாகின்றன என்று பூரணமாய் அறியலாம்.

Digitized by Google

## ௫ம். அதிகாரம்.

### ஸ்திரி சனனேந்திரங்களின் தொழில்கள்.

இவை தீட்டு, கருத்தரித்தல், பிரசவம் என்று மூன்று வகைப்படும்.

௧௰௯. தீட்டு. புத்தியறியுங் காலத்திலே சவுக்கியமான ஸ்திரியின் கருப்பையிலிருந்து, இரத்தம்போன்ற ஒரு நீர் கண்டு, அதின் பின் ஒழுங்காய் இருபத்தெட்டு நாளுக்கு ஒருமுறை தோற்றப்படும். ஸ்திரி கர்ப்பிணியாய் அல்லது முலைகொடுக்கிறவளாய் இருந்தால், அப்படிக்காணுது. அப்படி ஒழுங்காய்க்கண்டு வருவதால், அதற்குமாதவிடையென்றும், மாதப்பூப்பு என்றும் பெயர். வழக்கத்திலே இதைத் தீட்டு என்பார்கள். இது பன்னிரண்டு பதினைந்து வயதிலே தொடங்கி, நாற்பத்தைந்து ஐம்பது வயதளவுக்குங் கண்டு வரும்.

தீட்டு இரத்தம் போலத்தோன்றினுலும், அது தனி இரத்தமல்ல, கருப்பையின் உட்பக்கத்திலிருந்துபாயும் ஒருவிதமான நீர். இது இரத்தம் உறைவது போல உறையமாட்டாது. இதிலே பேசிசம் என்னும் பதார்த்தம் மிகவுஞ் சொற்பமாக உண்டு. பிறைச்சவ்வுத்துவாரம் அடைபட்ட ஸ்திரிகளில் தீட்டானது பலமாதக்கணக்காய்த்தடைபட்டுத் தங்கி நின்றுலும், உறைவதாய் அல்லது கட்டி, தண்ணீர் என்னும் இருபங்காய்ப் பிரிவதாய்த் தோன்றினதில்லை. கருப்பையின் உட்பக்கம் அழற்சிகொண்டால், இரத்தம் தீட்டுடனே காணப்படுவதும் உண்டு. அப்படியாஞல் தீட்டுடனே உறைந்த இரத்தக்கட்டிகளுங் காணப்படும். கருப்பையிற் குத்துள்ளவர்களில் தீட்டுடனேமிஞ்சிய பேசிசம் கள்ளச்சவ்வாய்க் காணப்படுவதுமுண்டு. சிலவேளை தீட்டுச் சிவத்த நிறமில்லாமலும் இருக்கும்.

தீட்டானது கொஞ்சங் கொஞ்சமாய்ப்படுவதினுல் அதின் அளவு இம்மட்டென்று நிதானிப்பதேலாது. அளவு ஆளுக்காள் மிகவும் வித்தியாசப்படும். ஏகசகட்டுக்கு தீட்டுநீர் அரைக்கால் நாழி மட்டுக்கிருக்கும். கருப்பைவாயாலே தீட்டானது பனித்துக்கொண்டு மூன்று ஐந்து நாள் மட்டுக்கு நிற்கும். இது கருப்பை வெளியே இறங்கினவர்களிலே கண்டறிந்தது.

Digitized by Google

சாமர்த்தியப்படும் பருவத்திலே ஸ்திரியின் சரீரத்தில் எவரும் விளங்கக் கூடியதான பேதங்கள் உண்டுபடும். சனனஉறுப்புகளெல்லாம் பூர்த்திகொண்டு,கருப்பையும் யோனியும் பருத்து,வெளியிந்திரங்கள் விரிந்து உரோமித்து, தனங்கள் கிளம்பிப் பூரணமாகி, சரீரம் முற்றும் பெண்மைக்குரிய சாயல்கொண்டு, மனம் சிறுபராயத்துக்கடுத்த விநோதங்களிற் செல்லாமல், மங்கையருக்குரிய சிந்தனைகளிலே எடுபடும்.

தீட்டுக்கண்டு வரும் பருவத்திலேயே கருத்தரிப்பது இயல்பாதலால், இவ்விரண்டு தொழில்களும் ஒன்றுக்கொன்று அதிக சம்பந்தமுடையன. இருதுவாகிறதற்குமுன்னே கருத்தரிப்பதும் அரிதாயுண்டு. கருப்பையின் உட்பக்கமானது சினையைப் போஷித்து வளர்ப்பதற்கு ஏற்றதான பக்குவங் கொள்ளவேண்டியிருப்பதினால், தீட்டு அப்பக்குவத்துக்கு அனுசாராகுமென்றே எண்ணவேண்டியது. தவணை முறையாய்த் தீட்டுவருவதற்கும், அதினால் கருப்பை கிளர்ச்சி அடைவதற்குமான காரணங்களைப் பண்டிதர் பலபேதப்படுத்திச் சொன்னாலும், திருத்தியான விளக்கமோ இன்னுமில்லை.

௨௯து. கருத்தரித்தல். சினையுண்டாகியே சனனம் முற்றுப்பெறும். பிராணிகளிலும்,தாவர வருக்கங்களிலும் தனித்தனியான இருவகைச் சனனேந்திரங்கள் இருக்கவேண்டியது. நத்தை,அட்டை முதலிய கீழ்வகுப்பான பிராணிகளிலும்; வேம்பு,மல்லிகை முதலிய அனேகதாவரங்களிலும், அவ்விருவகை இந்திரங்களும் ஒவ்வொன்றிலுமுண்டு. அவைகளை ஸ்திரிபுஞ்சகமென்பார்கள். ஆடு, யானை முதலிய மேல்வகுப்பான பிராணிகளிலும், பனை முதலிய சில தாவரங்களிலுமோ, சாதிவிகற்பமுண்டாய், ஆண் இந்திரங்கள் ஒன்றிலும் பெண்ணிந்திரங்கள் வேறொன்றிலும் தோன்றும். இவைகளின் பெண்ணிலே வரப்போகிற புதுச் சிருட்டியின் சமட்டிரூபந் தோன்றிப் பட்சி, தவளை, மீன்களிற்போலே சற்றே பூர்த்திபெற்றிருந்தும், இவை பூரண பூர்த்திபெறும்படி ஆணின் விந்தே வேண்டியது. மனுடப் பெண்ணிலே, இப்படிச் சமட்டிரூபமான சினைகள் சினைப்பைகளிலுள்ள கிலோமேசங்களில்இருக்கின்றனவென்பதும்சினைப்பைகளிலிருந்துசினைப்பாதையால் கருப்பையிற் செல்லுகின்றனவென்பதும்;

Digitized by Google

ளாம் பின்னுகச் சொல்லுங் காரியங்களால் அறியலாம். கருவுறுத்திச் சற்றுநேரத்திற் பின் பரிசோதனைபண்ணிய போதெல்லாம், அக்கிலோமேசம் ஒன்றிலே அல்லது பல விலே உள்ளுடனுய் இருந்த துளிநீர் பறிந்ததாகவும், இதுப றிவதற்காய்ச் சினைப்பையை மூடிய சவ்வு வெடித்து ஒரு துளி இரத்தங்கண்டு, உறைந்து, பின் அது அற்றுப்போன தாகவும், சினைப்பையினின்று அவைபெயர்ந்துபோனவெ டிப்பைக் குறிப்பதான தழும்பு அங்கே இருந்ததென்றுந் தோன்றினது. அந்தச் சமையத்திலேயே, முன் சொல்லி யபடி, தழும்புக்கு அயலிலே பீதகந் தோற்றுவதினுல், யாதோ ஒரு விசேஷித்தசெய்கை நடந்ததாக விளங்குகின் றது. அன்றியும் வியாதிகொண்டதான, சிற்சில ஸ்திரிக ளிலே சிசுவானது கருப்பையிலே இல்லாமற் சினைப்பை யிலே உண்டாய் வளர்வதினுலும், சினைப்பையிலிருந்தே கருப்பைக்குச் சினைசெல்வது என்று தோன்றும். மேலு ம், சினையானது சினைப்பாதையிற் செல்லுகையிலே தடை ப்பட்டு அங்கேயே ஒருமட்டுக்குச் சிசுவாகி வளர்வதா ன சில உதாரணங்களும் உள்ளனவாதலால், சினைப்பா தைகளாலேயே கருப்பைக்குச் சினைகள் செல்லுகின்றன என்று நிச்சயம் பண்ணலாம். ஒரு முசல் கலவியில் ஏற் பட்டபின்பு எழுபத்தைந்து நாழிகைக்குள் அயிற்றன் என்னும் பண்டிதர் அதின் சினைப்பாதைகளை நறுக்கினதி ஞலே கருத்தரியாதபடி தடுத்தார். கலவிசெய்து நூற்றி ருபது நாழிகைசென்றபின்பு சினைப்பாதைகளை நறுக்கிய போதிலும் கருத்தரியாமற்போகவில்லை. இச்சோதனைக ளாலும், காரியம் இப்படி என்று விளங்கும்.

சினைப்பையிலிருந்து சினைகள் பெயர்ந்து கருப்பைக் குள் செல்லும் மாதிரி இன்னதென்று நமக்குத் தெரியாது. சினைக்கிலோமேசம் வெடிக்க அதின் உள்ளுடனுன நீ ரைச் சினைப்பாதைக்குழல் உறிஞ்சிக் கருப்பையினுள் உ மிழ்ந்துவிடுகிறது என்று சிலர் எண்ணுகிருர்கள். வேறு சிலர் சினைக்கிலோமேசமானது வெடியாமல் முழுமை யே கருப்பையிற் செல்லுமென்கிருர்கள். பட்சிகளிலே அண்டவாகி வழியாய்ச் சினையானது செல்லும் நேரத்தி லே அச்சினையில் ஓடு உண்டாகிறபடியால், ஸ்திரிகளிலு ம் சினைகள் நீர்மயமாகச் சினைப்பாதைகளில் செல்லுகை



Digitized by Google

யிலே ஒரு வகை மெல்லிய சவ்வினாற் சூழுண்ணுமென்று எண்ண இடமுண்டு.

கலவிநடந்தபின் இரண்டு மூன்று கிழமையளவுக்குச் சினையைக் கருப்பையிற் சோதித்துங் காணாதபடியால், கலவிக்குங்கருப்பையில் சினைவருவதற்கும் இடையே செல்லுங்காலங் கிட்டமுட்டப்பதினைந்து நாள் மட்டாய் இருக்கவேண்டும்.

முறைக்கொரு சிசுவுக்கு மேற்பட ஈனுகின்ற பெட்டைமிருகங்களுடையவும் ஸ்திரிகளுடையவும் சினைப்பைகளிற் காணப்படுந் தழும்புகளும் பீதங்களும், அந்தமுறை அவையீன்ற சிசுக்களின் தொகையுஞ் சரியாயிருக்கக் காணலாம்.

இம்மட்டும் பெண்ணின் தொழில்களிற் சார்ந்ததாகவே கருத்தரித்தலைப்பற்றிச் சொன்னோம். இதிற்சார்ந்ததாய், விந்து சினையை அருட்டுவதாகிய ஆணின் தொழிலைப்பற்றியோ இன்னும் ஒன்றுந் தீர்ப்பாய் அறியவில்லை. சினையானது சிலமிருகங்களின் பெண்ணிலே விந்தின் அருட்சிபெறமுன், ஒருமட்டுக்கு முற்றுப்பெறுமென்று முன் சொன்னோமே. விந்தானது சினையிலே பட்டுக் கலக்கிறது அவசியமோவென்றும், விந்தின் மணப்புமாத்திரம் சினையிலே வீசுகிறது போதுமோவென்றும், நிதானமாய் ஒன்றும் அறியோம். விந்து சினையிலே கலக்கும் என்பதற்குச் சார்பாய் வியசாரத்தருணத்திலே கொலையுண்ட ஒரு மனுஷியின் சினைப்பாதைகளை வெட்டி ஆராய்ந்தபோது, அவைகளிலே விந்துகிடந்ததைக் கண்டோமென்று, லூவிசென்ற பண்டிதர் சொல்லுகிறார். சினைப்பாதையின்முடிவிலே விந்துக்கிருமிகள் கிடந்ததைச் சிலபரிசோதனைகாரர் கண்டிருக்கிறார்கள். சினைப்பையுளிருக்கையிலே சினையானது விந்தின் அருட்சி பெறுமென்று அனுதரிசனியாற் பார்த்திருக்கிறவர்களுடைய கருத்து. தாவரங்களின் பெண்பூச் சினையிலே, ஆண்பூந்தாதுபட்டும், சில மிருகங்களின் பெண்சினையிலே சினையிட்டபின், ஆண்விந்து பட்டுமே, கருவுண்டாவதென்று நிச்சயமாய்க் கண்டதினாலும், பிளந்தல் என்னும் பண்டிதருடைய பல பரிசோதனைகளினாலும், விந்து சினையிலே கலக்கவேண்டியதென்று முடியும். விந்து சினையிற் கலப்பது எப்படியென்று விளங்காமையாலும், பிறைச்சவ்வுவெடியாமல் யோனியை மூடி

Digitized by Google

க்கொண்டிருக்கிறதினால் சிசினம் உட் செல்லாமலிருக்கையிலும் கருத்தரித்தல் சிலவேளை ஆகின்றமையாலும், விந்து சினையிற் கலப்பது அவசியமல்லவென்று, மற்றப் பக்கத்துக்கு நியாயம் முடியும். இருபக்கத்தையும் திரட்டிப்பார்க்கில், விந்து சினையிற் கலக்குமென்பதற்கே அதிக திட்டாந்த முண்டு. இது எங்கே, எப்படி முற்றுமென்பதோ நமக்குப் பூரணமாக விளங்காது.

## ௩ம். அதிகாரம்.


### சூற்கருப்பை.

கருத்தரிக்குங்காலத்தில், கருப்பையிலும் அதிலுண்டா குஞ் சூல் முதலியவைகளிலும், அநேக வேறுபாடுகள் தோன்றும். கருப்பை சூற்கொள்ளமுன் இருந்ததன்மைகளை நாம் முன்னே சொன்னோமே. அவைக்கும் சூற்கொண்டு முதிருங்காலத்தில் இருக்கும் தன்மைக்கும் உள்ளவேறுபாடுகளை, முதற் சிந்திப்போம்.

சூல் முதிர்ந்திருக்குங் காலத்திலே, கருப்பையானது சற்றே சப்பையாய், கீழ்நோக்கிய அந்தம் ஒடுங்கி, முட்டைவடிவமாயிருக்கும். அது ஏகசகட்டுக்குப் பன்னிரண்டங்குல நீளமும், ஒன்பதங்குல அகலமும், முன்னிருந்து பின்னுக்கு ஆறு ஏழு அங்குலந் தடிப்புமாயிருக்கும். ஆகிலும் சிசுவுக்கும், அதைச்சுற்றிய அணைகளுக்கும், பன்னீரளவுக்குந் தக்கதாய், கருப்பையின் அளவு விகற்பப்படும்.

கருப்பை படிப்படியாக வளர்ந்தே இப்பொழுது சொல்லிய பருமையில்வரும். மூன்று மாதம்வரைக்கும் அது கூபகத்தினுள்ளிருந்து, நாலாம் மாதத்திலே கூபகமேற்பந்தையிலே மிதக்கத் தொடங்கும். அப்போது, அதின் அடியினின்று கழுத்தின் முதல் வரைக்கும் ஐந்தங்குல நீளமுண்டு. இப்பருவத்திலே அடியுங் காண்டமுமே பருத்து வரும். ஐந்தாம் மாதத்திலோ கழுந்து நெகிழ்ந்து விரியத் தொடங்கி, மெதுமெதுப்புக்கொள்ளும்.

*௧௧ம். படம்.



ஐந்தாம் மாதம் வரைக்கும் கருப்பை பாரங்கொண்டு, யோனிக்குள்ளே அமரும். அப்பொழுது சூற்கொள்ளாதபோதிலும்பார்க்கஅதிகலகுவாய்க் கருப்பைவாய் விரலுக்கு விளங்கும். ஆனாலும், கழுந்து நெகிழ்ந்து கருப்பை பருத்து வயிற்றிலே கிளம்ப, யோனியானது அதிகம் நீண்டு, கருப்பை


* நெடுகக் கீறுண்டு திறந்த சினைப்பை. A. இளஞ்சினை அடங்கும் உறை ஒன்று. B. முற்றின சினையுள்ளஉறை. C. உறைக்குள்கிடக்கும் முற்றினசினை. இது கருப்பையிற்சேருமபொருட்டாய்ச் சினைப்பையிலிருந்து கழன்றுபோவதற்குஆயத்தமாயிருக்கின்றது.

Digitized by Google

வாய் விரலுக்குச் சற்றே தூரப்படும். ஏழாம் மாதத்திலே கருப்பை வெகுவாய் நாபியளவுக்கு எட்டி, கழுத்தானது அதிகம் விரிந்து மெல்லியதாய்விட, இதற்கூடாய்ச் சிசுவின் தலையைத் தொட்டுப்பார்க்கலாம். எட்டாம் மாதத்திலே, கருப்பையின்அடியானது நாபிக்கும்நெஞ்சாங்குழிக்கும், இடையே அரைவாசியளவில் நிற்க, கருப்பைவாயோ மேற்பந்தைமட்டுக்கு மிதந்துகிடக்கும். ஒன்பதாம் மாதத்திலே, கருப்பையின் மேலந்தம் நெஞ்சாங்குழி வரைக்கும்வர, கழுந்து கருப்பை அறையோடே ஒன்றுபட, கருப்பைவாயின் குறுக்குப்பிளவு அற்றுத் திரைந்த வட்டித்த துவாரமாய், யோனியுள் முன்னிருந்த முகைப் பின்றிக் கிடக்கும்.

பூரணபருமைக்கு வந்துவிட்ட கருப்பையானது சாய்வாகவும், வாய் பின்னுகச் சருவியும் இருப்பதினுல், இதின்மேரு நெஞ்சாங் குழியினின்று பீடிகை நுனிக்குச் செல்லும் ஓர் நேர்வரியெனக் கண்டு, இது மேற்பந்தையின் மேருவுடனே கிட்டத்தட்ட ஒன்றுய் நிற்கும். கருப்பைக்குள்ளே கையிட்டுப் பார்க்கவேண்டி வந்தால், இதுகாரியத்தை அவதானமாய் நினைத்துக்கொள்ள வேண்டியது. பிள்ளைகள் அனேகம் பெற்ற ஸ்திரிகளிலே, உதரபித்தி நகைவுகொள்ளுகிறபடியால், கருப்பை முன்னுக்குச்சரிந்து அதின்மேரு மேற்பந்தையின் மேருவுக்குச் சற்றே விலகியுமிருக்கும். சில வேளை வேறுகாரணங்களால், வலமிடமாய்ச் சரிந்தும்நிற்கும். சூற்கொண்ட கருப்பை வயிற்றினுள்ள குடல்களுக்கெல்லாம் முன்னுய்க்கிடந்து, சந்தென்பு இரண்டுக்கும் இடையிலுள்ளமுற்றிடத்தையும்,

*௧௨ ம். படம்.




* நாலாம் மாதத்தின் முடிவிலே கருப்பைதோன்றும் பாவனை. கழுத்து இன்னும் விரியத்துவங்கவில்லை. இப்படத்தில் சினைப்பாதைகளும், கருப்பைச்சிறைகளும் யோனிக்குள்ளோர்முகையாய் இறங்கிய கருப்பைக் கழுத்தும்தெரிகின்றன. கருப்பைக்குள் சிசுகிடக்கிறதைக் காட்டும் பொருட்டாய்க் கருப்பையின் முற்பாதி நீக்கப்பட்ட பாவனை இப்படத்தில் விளங்குகின்றது.

Digitized by Google

மேலே நெஞ்சாங்குழியளவுக்குள்ள இடத்தையும் அணவி நிற்கும்.

சூற்கொள்ளாதபோதிற்போலவேசூற்கொண்டகருப்பையின் பதார்த்தங்களிருந்தும், அதுமிகவும்விரிந்து பருத்துவரும். சூற்கொள்ளாத கருப்பையிலே ஒழுங்கில்லாதவைகள்போலிருந்தபேசியிழைகள் சூற்கொள்ளவேபடலங்களாகித் தீர்க்கமான ஒழுங்குபெற்று வெளிப்படலத்திழைகள் கருப்பைவதைகளின் மூலத்தினின்று வலயிடமாய் எழும்பி, ஒழுங்காக அகன்றகன்று, கருப்பையின் அடிமேற்பாய்ந்து, ஒன்றிலொன்று சந்திக்கும். பிரசவமுகனையிலே, கருப்பையைக் கூபகத்துள் இறக்கி, கருப்பைவாயைத் தருக்த நேரிலே இப்பேசி செலுத்துவதற்கு ஏற்றநிலையங்களாய்க் கருப்பைவதைகள் இருக்கின்றனவென்று பெல் என்னும் பண்டிதர் சொல்லியிருக்கிறார். கருப்பைப் பதார்த்தத்திலே, இப்படலத்துக்குள்ளே பேசியிழைகளானவை கருப்பை அடிக்குக்கிட்ட மண்டிலமாயும், கழுத்துக்குக்கிட்ட நேரோடலாயும் செல்லும். இவைகள் ஒன்றோடொன்று பின்னி, பெலமாய் இயங்குங் காலத்தில் தமக்கிடையே செல்லும் இரத்தக்குழல்களை நசித்து ஒடுக்கி, உதிரசலேயென்னும் இரத்தப்பெருக்கு வராதபடி தடுக்கும். பிரசவகாலத்திலேஇவை கருப்பை வாயைத் திறந்து சிசுவின்தலையால்அதைக் கழற்றியிழுத்துக் கருப்பைஅடியையுங் காண்டத்தையுஞ் சுருக்கி, கருப்பைவாயால் சிசுவைப் பிதுக்குகின்றன. இப்படிக் கருப்பையின் பித்திகள் சுருங்குவதினால் அதற்குள்ளொட்டிச் சுருங்குந் தன்மையில்லாதி


* ௧௯ம். படம்.



கருப்பை சில ஸ்திரீகளில் வியாதிகாரணமாய் முன்னுக்கு அல்லது பின்னுக்கு அதிகம் சரிந்துவிடும். சிலவேளை அதின்கழுத்துஇயல்பின்படி நிற்கக் கருப்பைமுன்னுக்கு அல்லது பின்னுக்கு வளைந்துமடிந்துவிடும்.

*கருப்பைவியாதிகாரணமாய்முன்னுக்கும் பின்னுக்குஞ் சரிந்துகிடக்கும் பாவனை.

† ௧௬ம். படம்.



† கருப்பையின் கழுத்து சரியாக நிற்க அதின்அடி வியாதிகாரணமாய் முன்னுக்கும் பின்னுக்கும் வளைந்திருக்கிற பாவனை.

Digitized by Google

ருக்த அணையம் விட்டுக்கழன்றுபோக ஏதுவாகும். உள்ளு க்குள்ளான பேசிப்படலமோ சினைப்பாதைகள் ஒவ்வொ ன்றின் துவாரமையமாக வட்டித்து, வட்டித்துவருமிரண் டு கூட்டமான இழைகளாற் சூழப்பட்டிருக்கும். இவ் விரண்டுகூட்டப் பேசிகளும் தங்கள் எல்லைகளில் ஒன் றோடொன்றுபின்னி இவைகளின் இருபக்கத்திலும்நின் று அகலமான இழைக்கச்சங்கள் நேரோடலாய்ச்சென்று, கருப்பைவாய்க்குநேரே கருப்பையடியை வருவிக்கவு ம், கருப்பைவாயைச் சிசுவின் தலையாலே கழற்றியிழுக்க வும், வெளிப்பேசிகளுக்கு உதவியாகும்.

கருப்பைப்பித்திகளின் தடிப்பு சூற்கொள்ளாத காலத்தி ற்போலவே சூற்கொண்டபோதிலுங் கிட்டத்தட்டஇரு க்கும். அணையம் இருக்கும் பக்கத்திலோ சற்றே அதிக தடிப்பாயிருக்கும். இதின் பதார்த்தம் மெதுமெதுப்பும் அதிக இரத்தக்குழல்களும் உடையதாயும், இதின் இரத்த ப்புரைகள் சூற்கொள்ளமுன் இருந்ததிலும் அதிகம் பரு த்துமிருக்கும்.

சூற்கொண்டகருப்பைக்குவரும் இரத்தக்குழல்கள் அ திகம் பருத்திருக்கும். பிரதானமாய், அணையத்தின் அய லிலுள்ள நாடிகள் சின்னிவிரலின் தனியளவுபருக்க, நா ளங்களும் இவற்றிற்கிசையப் பருத்து, ஒன்றிலொன்றுசே ர்ந்துலாவிப் பின்னல்களாகும். சோஷணிகளும் பருத் துத் திரளாகும்.

கூபகத்துள் உலாவும் சகவேதனியிற்சேர்ந்த இரண்டு பின்னல்களிலிருந்தும், பீடிகைச்சோடுகளிலிருந்தும் கிள ம்பிக் கருப்பையிற் செறியும் நரம்புகளுங்கூடப் பருத்து விடுமென்று சிலபண்டிதர் உரைக்க, சிலபண்டிதரோ இதை மறுக்கிறார்கள்.

சிசுவும், பன்னீருஞ், சராயுகமுங்கூடியே கருப்பையி ன் உள்ளுடனை கருவாம். சராயுகமாவது நாபிக்கொடி யும் அணையமுஞ் சவ்வுகளுமாம். இவைகளுக்குள், சவ் வுகளோ பலாயிதம், வெளிப்பரிப்பீள், உட்பரிப்பீளென் று மூன்று படலமாம்.

பலாயிதமானது கருவைச் சுற்றியிருக்கும் வெளிக்கவ சம். இது கருவுறுத்துங் காலத்திலே சினையானது கருப் பை அறையில் இறங்கமுன் கருப்பையிலுண்டாய்விடுவ தினால், கருப்பைக்கே அதிகம் உரியதாக இருக்கின்றது.

மேலும் சினையானது, கருப்பையிலன்றி முன்சொல்லிய படி அன்னியமான இடங்களிலே கருவாகி வளரு ங்காலத்திலும், கருப்பைக்கு வரவேண்டியிருந்துந் தப்பி ப்போன கருவுக்கு ஓர்கவசம்போல, பலாயிதமோ கரு ப்பையிலே இருந்த தென்று கண்டார்கள். இச்சவ்வி ன்தன்மை இன்னதென்பதைப்பற்றி அனேகர் தர்க்க முண்டு. இது கருத்தரிக்கும் அருட்சிகாலத்திலே கரு ப்பையிலுள்ள இரத்தக்குழல்களால் உண்டாகும் ஓர்வகை ப் பேசிசப்படலம்போலே தோன்றுகின்றது. இச்சவ்வு தடிப்பும் இறுக்கமுமாய் லேசிலே கிழியக்கூடியதாயிருக கின்றது. கருப்பைநாடிகள் வழியாய்ப் புகட்டும் மெழு குநீர் செறியத்தக்க இரத்தக்குழல்களும் இப்பலாயிதத்தி ல் உண்டாகும். பலாயிதம் கருப்பையின் கழுத்தில் வள ராமல், கருப்பைஅடியையுங் காண்டத்தையும் அடை த்துக்கொண்டு, கழுத்தின் மேற்பக்கத்துக்குக் குறுக்கே மூடிவளரும். கருப்பையின் இருபக்கத்திலும் தொடுத்தி ருக்கும் சினைப்பாதைகளின் துவாரங்களையும் அடைத்து ப்போடும்.

கருவானது கருப்பைக்குட் செல்ல இறங்கும் போது, சினைப்பாதையின் துவாரத்தை அடைத்திருந்த பலாயிதப் படலத்தைத் தள்ளிக்கொண்டுபோக வேண்டியது. இப்ப டிச் செய்கையில் தன் முன் கிடந்த பலாயிதத்தால் தனக் கே ஒருசிற்றுறை உண்டாக்குகிறது போலே, இவ்வுறையி ன் கழுத்தினது பருமை சினைப்பாதையின்துவாரமளவிருக் கும். பலாயிதம் ரூபகரமாகுந் தன்மையை உடையதாத லால் கருவின் வளர்ச்சிக்கு இசைய அச்சிறு உறையும் விரிந்து பருக்குமென்றும், அதின் கழுத்தோ சினைப்பாதை த் துவாரத்தின்வாயளவாய் முன்னிருந்தபடியே இருக்கு மென்றும், நம்ப வேண்டியது. பலாயிதம் கருப்பையிலே ஒட்டியிராமற் பிரிந்து கிடக்குமென்று சிலர் எண்ணுகிறப டி எங்கேயாகிலும் பிரிந்திராது. இங்கே சொல்லியபடி சினைப்பாதைத் துவாரத்தை அடைந்திருந்த பலாயிதச்சவ் வின் பகுதி விரிந்து வளர்ந்து வரும். கருவைச் சுற்றியிரு ந்த உறைக்கு உட்பலாயிதம் என்றும், இதை ஒழிந்து கருப் பையில் ஒட்டியிருந்த பகுதிக்கு வெளிப்பலாயிதம் என் றும் பெயர். இவ்விரு பலாயிதச்சவ்வுகளும் ஒன்றுக்கு ஒன்று கிடக்கும் விதம், வாய் வளமில்லாமல் அரைவா

Digitized by Google

சிமடித்து உள்ளேவிட்டிருக்குந் தலையணை உறைபோல் இருக்கும்.

கருத்தரித்த அந்நிய மாதங்களிலே பலாயிதங்கள் இரண்டும் ஒன்றுடனொன்று பொருந்தியும் பொருந்தாமல்வேறு வேறாயிருந்துங் கருவளர்ந்து முற்றமுற்ற இரண்டும் இணைந்து ஒரு சவ்வாகிவிடும். பிரசவகாலத்திலே அணையம் இவ்விரு பலாயிதங்களுக்கும் இடையே வரும் இடத்தில் மாத்திரம், இவை வெவ்வேறாகத் தோன்றும். நான் பலமுறையும் ப்ரேதசோதனைகளிற் கண்டபடி, பலாயிதம் அணையத்தின் அருகிலே இரண்டாய்ப் பிரிந்து, வெளிப் பலாயிதம் கருப்பைப் பக்கத்திலும், உட்பலாயிதம் சிசுப் பக்கத்திலும் ஒட்டிக்கொள்ளும். இப்பருவத்திலே சவ்வுகள் ஒன்றுடனொன்று சேர்ந்து அணையத்திலே உறுதியாக ஒட்டியிருப்பதினால், இவைகளை விளக்கிக் காட்டச் சற்று அவதானம் வேண்டியது.

வெளிப்பரிப்பீளின் சடைத்த தசிரங்கள் பலாயிதத்துள் ஓடி, கருப்பையினின்று இதனுள் ஏறிவந்த திரளானதசிரங்களுடன் அனுமுகித்திருப்பதினால், கருவைக் கருப்பையுடன் இணைத்துவைப்பதே பலாயிதத்தினாலாகும் பலன் என்று விளங்கும். மூளைத்தலுக்குரிய சொற்களையே இதற்கு வளங்கி பேசலாமாதலால், கருவின் மூலிகங்கள் நன்றாய் இறங்கிக் கருவை வளர்க்கப் போதுமான போஷணப்பதார்த்தங்களை அடைவதற்கு ஏற்ற செய்கை நிலம் போலவே பலாயிதம் அணையத்திற்கும் உதவியாகும். இது இன்னவிதமென்று அணையத்தைப்பற்றிச் சொல்லுகையிற் சொல்லுவோம். பலாயிதம் அதின் சொற்பொருளின்படியே பிரசவகாலம் வரைக்குங் கருவுக்காதாரமாய் அதனைச் சூழ்ந்திருந்து, பின்பு பிரசவம் முற்றுப்பெறத் தானுங் கழன்று கழிந்து போய் விடும்.


கருவுறுத்திய சினையானது கருப்பைக்குள் இவ்வளவு காலத்திலே இறங்கும் என்று தீர்க்கமாய்ச் சொல்லக்கூடாது. இதைப் பரிசோதனை செய்த பண்டிதர்கள் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள். மூன்று கிழமை செல்லமுன் சினை கருப்பைக்குள் இறங்கியது கண்டோமென்ற நிச்சயமில்லை. தீட்டு வந்து சரியாய் ஏழு கிழமையின் பின் ஒரு கரு கருப்பையிலிருந்து விழுந்தது நான் அறிவேன். அதிலே ஒரு சூலும், நாபிக்கிலோமேசமும், உட்பரிப்பீளும்

Digitized by Google

சடைத்த வெளிப்பரிப்பீளுந் தோன்றின. அக்கருவின் ப
ருமை ஒரு வேப்பங்காயளவிருந்தது. இந்தப்பருவத்திலே
கருவைப்பார்த்தால் ஒன்றுக்கொன்று உள்ளான இரண்டு
சவ்விலாகிய சிறுப்பையொன்று இருக்கிறதாகவும், பை
க்கு உள்ளாகவும் சவ்விரண்டுக்கிடையிலேயுந் தெளிவான
வீணீர்த்தன்மை கொண்ட நீர் கொஞ்சம் இருக்கிறதாகவுங்
காணலாம்.

வெளிச்சவ்வுதான் வெளிப்பரிப்பீள். இது முதலிலே
சடைத்த தசிரப்படலம் மூடியதாயிருக்கும். இத்தசிரங்கள்
பலாயிதத்திலே வேரிறக்கி மேற்சொல்லியபடி கருவின்
மூலிகங்களாம். கரு வளரவளர, சடைமாறி வெளிப்பரிப்
பீள் மெல்லியதும் உருவொளியுள்ளதுமாய் பலாயிதத்துட
ன்அணைந்து அணையத்தின் உட்பக்கத்தையும் நாபிக்கொடி
யையும் மூடியிருக்கும். கருவின் மற்றஉறுப்புகளைத்தன்னு
ள்ளே அடக்கிப்பெலப்பாக்கி, இவைகளைப் பலாயிதத்தின்
வழியாய்க் கருப்பையுடன் இணைத்து வைப்பதற்கே வெ
ளிப்பரிப்பீள் வேண்டியதாயிருக்கின்றது.

* ௧௫ம். படம்.




உட்பரிப்பீளானது மெல்லிதும், உரு
வொளியுள்ளதும், அதிகம் உரப்பான
துமான சவ்வாய் வெளிப்பரிப்பீளி
னுள்ளிருக்கும். மேற்சொல்லியபடி
வீணீரான நீர் இடையிலே இருப்பதி
னால் பரிப்பீள் இரண்டும் முதலிலே
வெவ்வேறாயிருக்கும். கரு முதிர்ந்தபி
ன்னே, உட்பரிப்பீள் வெளிப்பரிப்பீ
ளுடனே ஒன்றிவிடும். அது அணையத்
தையும் நாபிக்கொடியையும் வெளி
ப்பரிப்பீள் போல் மூடியிருக்கும். சிசுவுக்கு ஓர் கவசமா
ய் இரத்தத்தினின்று பன்னீரைப் பிரித்துவிடுவதே இதின்
உபயோகமாய் விளங்குகிறது. மனுஷ தேகத்திலே சோதி
த்த இடத்தில் இப்பரிப்பீள் ஒன்றிலும் மெழுகு நீர் புகட்
டிவிட முடியாமற்போயிற்று. ஆனாலும் மற்றும் பிராணி
களின் சிசுத்தசிரங்கள் வழியாய் மெழுகு நீர் புகட்டிப்

* சிசுவையும், அதைச் சூழுஞ் சவ்வுகள்அடுத்திருக்கிற விதத்தையுங் காட்டும் பாவ
னை. 1. வெளிப்பலாயிதம். 2 உட்பலாயிதம். 3. வெளிப்பரிப்பீள். 4 உட்பரி
ப்பீள். 4 என்ற லக்கத்தினின்று செல்லும் வரி அணையமானது கிடக்கும் இடத்தைக்
குறிக்கும், 5. சிசு.

Digitized by Google

பார்த்தளவிலே பரிப்பீன்கள் இரண்டுந் தசிரமுடையவை களென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.


பன்னீர் என்பது உட்பரிப்பீனிலே தங்கிப் பொசிந்து கிடக்கும் ஓர்வகைச்சலம். அதிலே தவளம் என்னும் பதார்த்தமும், உப்பும், வல்வேற்சுண்ணம் என்ற ஓர் சுண்ணம்புப்புங் கொஞ்சமாய்க் கலந்திருக்கும். அது சற்றே மஞ்சள் நிறமாய், ஒருவகை மணங்கொண்டிருக்கும். பன்னீர் மாதத்துக்கு மாதம் அளவு வித்தியாசப்பட்டு, கருமுதிர்ந்த பருவத்திலேயோ கால் நாழிதொடங்கி ஒரு நாழிக்கு ஏற இருக்கும். சிசுவானது சற்றே அசைந்து ஆடிக்கொண்டிருப்பதற்கும், தாய்க்கு வருஞ் சிற்சில மோசங்களுக்குத் தப்பிக்கொள்வதற்கும் உதவியாகவே பன்னீர் இருப்பதாய் விளங்குகிறது. பன்னீர் சிசுவுக்கு ஒரு போஷணமாய் இருக்குமென்று சிலர் எண்ணினும் அவர் கருத்துப் பொருந்தாமல், ஒருபிராணி தனக்குணவு தன்னிலிருந்தே தருமென்றாற் போல முடியும். உட்பரிப்பீன் தாய் உடம்பிலே சார்பாயிருக்குமிரத்தக்குழல்களோடு சற்றும் பொருந்தாமல் இருக்கிற நியாயத்தினாலே பன்னீர் சிசுத்தசிரங்களிலிருந்தே தோன்றவேண்டியிருக்க, இப்பன்னீர் சிசுவுக்கு உணவாகுமென்றால், சிசு தன்னிலிருந்தே தனக்குணவுகொள்ளுமென்று சொல்லவேண்டும். ஆனபடியால் அக்கருத்து முழுதுந் தப்பென்பது தெளிவாயிருக்கின்றது. மேலே விளக்கப்பண்ணிய துணைக்கருவிகளுக்கெல்லாம் முக்கியமான பொருளாயிருக்கும் சிசுவையும், இது கருப்பையிலிருக்கையில் அடையுஞ் சீவாதாரமான போஷணத்தையும், இதற்குச் சார்வான கருவிகளையும் பற்றிச் சற்றே சுருக்கமாய்ப் பார்ப்போம்.

சிசு. கலவிநடந்து சிலநாட்கள் சென்றபின்பு, கருவானது கருப்பையிற் சேர்ந்துவிடும். அப்போ கருவினது சவ்வுறையின் உட்பக்கத்திலே உருண்ட நுண்ணிய ஒரு பொருள் மெல்லிய சிற்றிழையினாற்தொடுக்கப்பட்டிருப்பது காணப்படும். முதலிலே பார்த்தால், இவ்வணுப்பொருள் சற்றேசுளிகொண்டதாய், யாதொரு உறுப்பென்றது இல்லாமற் கிடக்கும். பின் சிலநாட் கழிய தலை,உடலென்ற விகற்பந்தெரியும். பிரதானமானபகுதியோ முள்ளந்தண்டு. இரண்டாம் மாதத்திலே உடலினின்று கை கால்கள் அரும்பி, கால்களுக்கு இடையிலே முள்ளந்தண்டு வால்போல

Digitized by Google

நெடுகியிருக்கும். அப்பருவத்திலே எலும்பு உண்டாகத் தொடங்கும். சுளித்த அவ்வணுப்பொருளின் கவிந்தபக்கத்திலிருந்து முகம், இரத்தாசயம், சுவாசப்பை, இரைப்பை முதலிய குடல்களும் முகைக்கும். கண்களும், பின்பு வாய் நாசிகள் காதுத்துவாரங்களுந் தோன்றும்.

*௧௨ம். படம்.



இரண்டாம் மூன்றும் மாதங்களிலே, சனன உறுப்புகள் தோன்றும்; ஆகிலும், ஆண்பெண் என்ற விகற்பந்தெரியாமல், சிசினமும், சுமரியும் ஒரேபருமையாய், பீசங்கள் சினைப்பைகளை ஒத்திருக்கும். முன்னே குறித்தபடி ஏழாம் எட்டாம் மாதம் வரைக்கும் பீசங்கள் அடிவயிற்றுக்குள்ளே கிடக்கும். மூன்றும் நாலாம் மாதங்களிலே மூக்கும் உதடுகளுங் கண்மடல்களுங் காதுகளும் உண்டாய் வயிற்றின் முன்பக்கமானது, நாபிக்கொடித்தலைப்பிலே திரளையாய் முதல் இருந்த குடல்களைமூடி உள்ளடக்குவதற்கு முற்றிமேவும். கை கால்கள் மரக்கொம்புபோல வளர, அவற்றின் நுனிகளிலே விரல்கள் தோன்றும். ஐந்தாம் மாதக்கடைசியிலே, சிசு சற்றே பூரணரூபமாய்விடும். பின்பு முக்கியமாய் நடப்பது சிசுவளர்ச்சிதான்.

இன்னும் பீசங்கள் அடிவயிற்றிற் கிடந்து, கண்மடல்கள் திறவாமல் மூடுண்டு, கண்ணின் தாரை ஒருவகைச்சவ்வினால் அடைபட்டு இருப்பதால் பிள்ளையென்றரூபுக்குப் பேதமாய்த் தான் இருக்கும்.

சரிமாதமான பருவத்திலேதானுஞ் சிசு தனது கருவிகள் பலவற்றிலே பிரதானமாய் இரத்த உறுப்புகளிலே, பிள்ளையென்ற ரூபுக்கு வித்தியாசமாக இருக்கும். இவ்வித்தியாசங்கள் எல்லாம் இன்னின்னவென்று இங்கே காட்டாமல் இரத்த உறுப்புக்களுக்குரிய விசேஷங்களை மாத்திரம் சொல்லிக்காட்டுவோம். கருப்பைக்குள் வாயு இயக்கமில்லாதபடியால் சிசுவின் சுவாசப்பைகள் தங்களுக்குரிய தொழிலைச் செய்தல் ஏலாது. இதினாலே இவைகளுக்குப் பிரதியாக அணையமென்றகருவி நிற்கும். இக்கருவியினால் சுத்தமாக்கப்பட்டு அதிலிருந்து இரத்தம்

* ஒருசினையினுடைய புறத்தியிலிருக்கும் சடைத்த சவ்வு. இச்சடைத்தபகுதிவரவரக் குறைந்து ஒடுங்கி கொஞ்ச இடத்தைமாத்திரம் மூடி அணையமாகும்.

Digitized by Google

*கஎம். படம்.



நாபிநாளம் வழியாய்க் கீழ்க்குநாநாளத்துக்குச்செல்லும். ஈரலுக்கு ஓடும் பெருஞ்சாகைகள் நாபிநாளத்திலிருந்து கிழம்பும். ஈரற்பிளப்புக்கு ஊடாய்ச்செல்லும் நாபிநாளத்தின் பகுதிக்கு நாளசரமென்றுபெயர். பிள்ளை சுவாசிக்கத்தொடங்க அது துவாரமற்று வெறுங்கொடியாய்விடும். கீழ்க்குநாநாளத்தினின்று இரத்தம் இரத்தாசயத்தின் வலச்சிரவத்திலேற, இதினின்று ஒருபங்கு வட்டிகைத்தொளைக்கு ஊடாக இடச்சிரவத்துக்கேசென்று, இதினின்று இடச்சடரத்துக்குப்போய், இதிலிருந்து கண்டரை வழியாய்ச் சரீரம் எங்குஞ்செல்லும். வலச்சிரவத்தினின்று மற்றொரு பங்குஇரத்தம் வலச்சடரத்துக்குப்போய் இதினின்று சுவாசப்பைநாடியிலேறும். சுவாசத்தால் இன்னும் ஊதாத சுவாசப்பைகள் இவ்விரத்தத்தைச் தங்களுக்குள் வாங்க ஏலாததினால், இரத்தமானது நாடிசரமென்ற ஒருகுழலில் ஏறி, கண்டரையுட்சென்று வட்டிகைத்தொளைக்குஊடாக வந்த இரத்தத்துடன் கலந்து உடம்பெங்கும் பரம்பும். அதோதரநாடிகள் என்னும் இரண்டுசாகைகள், சந்துநாடிகளினின்று சலப்பையை வலமிடமாயடுத்துச்சென்று நாபிக்கு ஏறி நாபிக்கொடியின் நாடிகளாகும். இவைகள் இரத்தம் சுத்தமாகும்படி அதைச் சிசுவிலிருந்துஅணையத்துக்குத் திரும்பக்கொண்டுவரும். இந்நாடிகள் பிள்ளை பிறந்து சுவாசிக்கத்தொடங்கவே துவாரம் அடையுண்டு வெறுங்கொடிகளாய்விடும்.

சிசுவின் உடம்பை ஒருவிதமான வளும்பு மூடியிருக்கும். சிசு நெடுங்காலம் பன்னீருள் அமிழ்ந்திக்கிடப்பதினால் அதின் தோலுக்கு நேரிடக்கூடியதாயிருக்கும் இடையூறுகளுக்கு விலகிக்கொள்வதே வளும்பின் உபயோகமாயிருக்கவேண்டியதுபோலே.

முதிர்ந்த பூரணமான பருவத்திலே, சிசுவின் நிறை ஏக சகட்டுக்கு ஏழு இறுத்தலிருக்கும்; சில சிசுக்கள் பன்னி


* இது கருத்தரித்து மூன்றுகிழமைக்குப்பின் சிசு ஒரு நெல்லளவாய் கருப்பையின் நடுவாகக் கிடக்கிறதையும் அதைப் பன்னீர்க்குடச்சவ்வுகள் சூழ்ந்திருக்கின்றதையும் காட்டுகின்றது. சிசு தெரியத்தக்கனவாய்க் கருப்பையின் சவ்வுகள் விரிக்கப்பட்டு ஊசிகளாற்பிடிக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Google

ரண்டு இருத்தலும் கிறுக்கும். இரட்டைப் பிள்ளைகளின் பொது நிறை ஏகசகட்டுக்குப் பதினொரு இருத்தலிருக்கும். சிசுவானது கருப்பையிலே நாம் முன்னே விவரித்துக் காட்டியபடி, உறுப்புகளெல்லாம் நெருங்கிச் சிற்றிடங் கொண்டிருக்கும்.

*கஅம். படம்.




நாபிக்கொடியிலே மூன்றுஇரத்தக்குழல்களுண்டு. அசுத்தமான இரத்தத்தைஅணையத்துக்குக் கொண்டு வருமென்று மேலே சொல்லிய அதோதர நாடிகள்இரண்டு. அணையத்திலிருந்துசிசு உடம்பெங்கும் இரத்தம்பரப்பும் நாபிநாளம் ஒன்று. இவைகளுக்குள் நாளமே பெரிது. இக்குழல்களில் ஒன்றாகிலும் இடையிலே சாகைகள் விட்டுச் சந்தியாமல் அணையத்தில்வந்து புகுமிடத்திலே நாடிகளிரண்டுங் குறுக்குவிழுந்து சந்திக்கும்; மேலும் அக்குழல்கள் நேரேயோடாமல் ஒன்றிலொன்று புரிமுறுக்குப்போலத் திருகி, தம்மிலே வளையமாடி நெளிந்திருக்கும். நாபிக்கொடியானது நுங்குபோன்ற ஒருவகைப் பதார்த்தம் நிறைந்த ஆனுயோதியால் உண்டாய் வெளிப்பரிப்பீள், உட்பரிப்பீள் என்னும் சவ்வுகளால் உரப்பாய் மூடப்பட்டிருக்கும். இந்த ஆனுயோதியிலே குழல்கள் பதியுண்டு, விக்கினம்நேரிடாமல் விலகியிருக்கும். நாபிக்கொடியிலே பலமுறையும் முடிச்சுகள் விழுந்திருந்தும் மேற்சொல்லிய பக்குவத்தினாலே இரத்தஓட்டத்துக்கு இம்முடிச்சுகளால் யாதொரு இடையூறும் இல்லை. நாபிக்கொடியிலே மேற்சொல்லிய நாடிகளையும் நாளத்தையுமன்றி, கிலோமலம்பியின் தொற்றுவாயும் நாபிமதியாந்திரதசிரங்களும் குசமக்குழலுமுண்டு. இவைகள்

* பன்னீர்க்குட்டத்துக்குள்கிடக்கும் நாலுமாதச்சிசு. இதன் சவ்வு உருவொளிபுகுவதால் சிசு அதற்கூடாகத் தெரியுது. A. அணையத்தின் உட்பக்கம் B. அணையத்தின்வெளிப்பக்கம்.

Digitized by Google

இன்னவென்று பின்னாற்காட்டுவோம். நாபிக்கொடியிலே நரம்புகளும் சோஷணிகளும் இல்லையென்று அனேக வியூகனர் மறுக்கிறார்கள். கோம் என்னும் பண்டிதரோ அணுதரிசனியினால் நரம்புகள் கண்டோமென்று சொல்லுகிறார். வேறிரண்டு பண்டிதர்கள் சோஷணிகளிலே இதரம்புகட்டினோமென்றும், நாபிக்கொடியிலும் அனையத்திலும் சோஷணிகள் திரளென்றுஞ் சொல்லுகிறார்கள். நாபிக்கொடியின் நீளம் அரைஅடி தொடுத்து நாலைந்தடி வரைக்கும் இருக்கும்; வாடிக்கையாய் இரண்டடிமட்டுக்கிருக்கும். அதிகம் நீண்டிருந்தால் சிசுவின் கழுத்திலே சுற்றுண்டுமிருக்கும்.

* ௧௧-ம். படம்.



அனையமென்பது சிசுவுக்கு உரியவைகளாகக் கருப்பையில் இருக்குந்துணைக்கருவிகளுளெல்லாம் மகா முக்கியமானது. இதையின்றி, சிசுவுக்கு வளர்ச்சியாகுதல் போஷணமாகுதல் இராது. இதின்வடிவம் பிராணிபேதங்களிலே வித்தியாசமாயிருக்கும். ஸ்திரிகளிலே தட்டையானவட்டமாய், ஆறங்குலமளவுவிட்டமுடையதாய், நடுவிலே

* வயிற்றைமூடும் முந்தசைகள் இரண்டு பிரிக்கப்பட்டதையும், கருப்பையின் முற்பகுதி தள்ளப்பட்டதையுங், கருப்பைக்குட்கிடக்கும் எட்டாமாசச்சிசுவையுங்காட்டும்பாவனை. A. அனையத்திலொருபகுதி. B. நாபிக்கொடி. இது சிசுவின்கழுத்தைச் சுற்றுவது. C. கருப்பைப் பித்திகைகளின் விளிம்பு. D. கருப்பையுடன் தொடுத்திருக்கும் சினைப் பாதைகளின் தலைப்புகள், கருப்பை பருத்துவிட்டதினால் மேலே மிதந்துவிட்டன.

Digitized by Google

ஒன்றரைஅங்குலமளவு தடிப்பாய், அருகுக்குப் போகப் போக மெல்லிதாயிருக்கும். வெகுவாய் இதின்நடுவிலுஞ் சிலவேளை அருகில் அல்லது அருகுக்குக் கிட்டவும் நாபிக்கொடி தொடுக்கப்பட்டு, இக்கொடியின் குழல்கள் அணையத்திலே பரந்து கிளைத்திருக்கும்.

கருப்பையை அடுத்திருக்கும் அணையத்தின் பக்கத்தைத் தொட்டுப்பார்த்தால், பச்சை இறைச்சியைச் தொட்டாற்போலிருக்கும். கருப்பையிலே அணையம் இதுவென்று தெளிந்துகொள்ளும்படி, மாணாக்கர் இதினுடனே நன்றாய்ப்பழகிப் பரிசித்துவர வேண்டியது.

* ௨0ம். படம்.




கருப்பையை அடுத்திருக்கும் அணையத்தின் பக்கத்தின்பரப்பை, அணையத்துடன் ஒட்டி ஒன்றியிருக்கும் மெல்லிய பலாயிதப்படலமொன்று மூடி, அங்கே அணையம் இதழ்களாய்ப் பிரிந்து, இவற்றின் பரப்புகள் ஒப்பசெப்பமின்றி, சுபஞ்சுச் சாடையாயிருக்கும். பலாயிதத்திலே அணையத்தை மூடாமலிருக்குந் தீர்க்கமான வெளியிடைகளுண்டென்று சிலர் சொல்லுகிறார்கள். அணையத்தின் பரப்பு கருப்பையுடன் ஒன்றியிருக்குந்தன்மை இன்னதென்பதைப்பற்றி அனேக தர்க்கமுண்டு. தாயிலிருந்தே அணையத்தின் ஆணுயங்களுக்குப் பெரிய இரத்தக்குழல்கள் செல்லுகின்றன என்று அன்றர் என்னும் பண்டிதர் சொல்ல, வேறுசிலபண்டிதரோ கருப்பையும் அணையமும் நுண்ணிய போஷணக்குழல்களால் அல்லாமல் வேறெதினாலும் ஒனறிச் சேர்ந்திருக்கவில்லையென்று மறுக்கிறார்கள். லேய் என்னும் பண்டிதர் சூற்கருப்பையொன்றைத் திட்பநுட்பமாய்ப் பரிசோதித்து, அன்றர் என்பவரின் கருத்தையே வலியுறுத்த, வேபர்ஸ் என்னும் பண்டிதரும் இதையே சாதித்து நிறுத்துகிறார். கருப்பைக்கும் அணை

* கருப்பையுடன் ஒட்டியிருக்கும் அணையத்தின் புறவளத்தெரிகின்றது.

Digitized by Google

யத்துக்கும் இடையே பெரிய இரத்தக்குழல்கள் செல்லுமென்றதற்கு மாறாகவே காரியமிருப்பதாக விளங்கியும், இன்னும் இதற்குத் தீர்ப்பான முடிவாகவில்லை.

*௨௧ம். படம்.



அணையத்தின் சிசுப் பக்கப்பரப்பு முந்தினது போல இதழ்களாய்ப் பிரியவுமில்லை, அழுத்தமின்றி சுபஞ்சுச்சாடையாய் இருக்கவுமில்லை, திரளான இரத்தக்குழற் கூட்டத்தினால் உண்டாய், ஆறுயோதியும் வெண்கூந்தல்களும் உடையதாயிருக்கிறது. இக்கூந்தல்களின் நோக்கம் இன்னதென்று தெளிவாய் விளங்கவில்லை. மேலும் அது தன்னுடனே நன்றாயொன்றி ஒட்டியிருக்கும் மெல்லிய பலாயிதப்படலமொன்றினாலும் பரிப்பீள்கள் இரண்டினாலும் மூடப்பட்டிருக்கிறது.

அணையமானது உள்ளுக்கு அடுத்திருக்கும் விதத்தைப் பற்றி அதிக தர்க்கம் உண்டு. நாபிக்கொடியின் குழல்களால் அதிலே நன்றாய் மெழுகுநீர் புகட்டலாம். கருப்பையின் இரத்தக்குழல்களால் அணையத்தின் பதார்த்தத்திலுள்ள ஆறுயங்களுள்மெழுகுநீர்புகட்டலாமென்று அன்றர் என்னும் பண்டிதர் எண்ணுகிறார். இக்காரியங்களினாலும் அனேக மிருகங்களின் அணையம் கருப்பைப் பகுதி சிசுப்பகுதி என்று இருபகுதிகளாய்ப் பிரிவதினாலும், ஸ்திரிகளிலும் அணையம் இரண்டுபகுதிகளாயிருக்குமென்று அன்றர் என்பவர் அனுமானம்பண்ணுகிறார். அவைகளுக்குள் ஒருபகுதி ஆறுயம் உள்ளதாய் கருப்பையுடனே இரத்தக்குழல்கள்வழியாய் ஒன்றிச்சேரும். மற்றப்பகுதி இரத்தக்குழல்களுள்ளதாய் நாபியிலுள்ள குழல்களின் கிளைகளாயிருக்கும். மெழுகுநீர் புகட்டிப்பார்த்தளவிலே, இந்த இரண்டு பகுதிகளிலும் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு இரத்தக்குழல்கள் போகவரஇல்லையென்றும் அ

* சிசுவைநோக்கி நாபிக்கொடி தொடுத்திருக்கிற அணையத்தின் உள்வளம். இந்தக்கொடியின்தலைப்பில் அறுக்கப்பட்ட மூன்று இரத்தக்குழல்களின்வாய்கள் தெரிகின்றன.

Digitized by Google

வர் அனுமானம்பண்ணுகிறார். வேறுசிலபண்டிதரோ கருப்பையின் இரத்தக்குழல்களால் அணையத்துக்குள் மெழுகுநீர் புகட்ட வழிகாணாது என்றும், வழிகண்டால் குழல்கள்வெடித்தே ஆகவேண்டியதென்றும் அதிலே ஆனுயங்களென்பதொன்றுமில்லையென்றும், முற்றுஞ் சிசுவுக்குரிய இரத்தக்குழல்களாலேயே அணையம் உண்டாயிருக்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். என்றால் இயன்றளவு இதுகாரியத்தை நன்றாய் ஆராய்ந்துபார்க்குமிடத்தில் கடைசியாய் இங்கேசொல்லியகருத்தே அதிகஞ் சரியென்பதாய் எனக்குத்தோன்றுகிறது. ஆனாலும் இதுகாரியம் நான் அறிந்த அளவுக்கு இன்னுந் தீர்மானமாகவில்லை. மிருகங்களிலுள்ள கருப்பைப்பித்திக்குரிய அணையத்தின் தொழில்களை ஸ்திரிகளின் கருப்பையிலோ, அணையம் ஒட்டியிருக்கும் கருப்பைப்பக்கத்தில் ஓர் விசேஷமான வளர்ச்சியானது முற்றுவிக்கும் என்றும், அணையத்தின் பதார்த்தத்திலுள்ள யாதேனொரு பக்குவத்தால் அது முற்றாதென்றுமே முடித்துக்கொள்ள வேண்டிவருகிறது. அணையத்திலே நரம்புகளுஞ் சோஷணிகளும் உண்டென்பதற்குச் சாட்சி, நாபிக்கொடியிலே அவைகள் உண்டென்பதற்குச் சொல்லப்பட்டவைகளேயாம். சோஷணிகள் நாபிக்கொடியாலே தாயிலிருந்து போஷணபதார்த்தத்தைச் சிசுவின் சந்திலுள்ள சோஷணக்குழல்கள்வழியாக உடம்புக்குக் கொண்டுபோகுமென்று வோமன் என்னும் பண்டிதர் சொல்லுகிறார்.

சுவாசிக்கும் பிராணிகளின் சுவாசப்பைகளினதும் இரைப்பைகளினதுந் தொழில்களுக்கு ஒருமட்டுக்கு ஒத்தவைகளாகவே அணையத்தின் தொழில்களும் இருக்கின்றனபோலே. சிசுவின் அதோதரநாடிகளினின்று இரத்தம் அணையத்துக்குட்சென்று அதிலே நன்றாய்ப் பரம்பினதின் பின், நாபிநாளத்தாலே இரத்தாசயத்துக்குவந்து, சுவாசம் நிலைபெறும் வரைக்கும், இப்படியாய் ஓடிக்கொண்டிருந்து, சுவாசம் நிலைபெறவோ அவ்வகை ஓட்டம் வலிய நின்றுவிடும். சுவாசந் தொடங்குமுன் அவ்வோட்டம் தடைபட்டால் உடனே உயிர்ச்சேதமாம். ஆதலால் அணையத்திலே உண்டுபடும் மாறுதலின் தன்மை இன்னதென்றும், நாபிநாடிகளிலும் நாபிநாளத்திலும் நிற்கையில் இரத்தத்தில் உண்டாகும் இடவியல்புகள் இன்னவென்றும்,

Digitized by Google

மைக்குச் சற்றும் விளங்காதிருந்தும், சிசுவின் சீவனுக்கு அவசியமாய் வேண்டிய இரத்தசுத்தியாகுஞ்செயல் அணையத்தில் உண்டாகின்றதென்றே நினைக்க வேண்டிவருகிறது. அணையம் இரத்தத்தைச் சுத்தமாக்கி விடுகிறது மாத்திரமல்ல, புதிதாய்ச் சீவரத்தத்தைப் பெருக்கி, இப்படி இரைப்பையின் தொழிலை ஒத்திருக்கும் ஓர் தொழிலையும் செய்கின்றதென்பது, சிசுவளர்ச்சிக்கும் ஆதாரத்துக்குமான பதார்த்தங்களை அடைகிறதற்கான வேறொருவழியுமில்லை. ஆதலால் அனுமானமாகும்.

அணையம் இன்னவிதமாய் உண்டானதென்று நமக்குவிளங்காது. ஒருவேளை பின்னுற் காட்டும் உத்தேசம் போலேயும் உண்டாம். முன்னே உட்பலாயிதத்தைப்பற்றிச் சொன்னபோது நாம் காட்டிய விதமாய், சினையானது கருப்பைக்குட் புகும்போது, சினைப்பாதையின் வாசலை அடைத்திருந்த பலாயிதப்பகுதியைத் தன்முன் தள்ளிக் கொண்டுபோய் இதினுல் தனக்கொரு உறையுண்டாக்கும். இந்த உறைசினைப்பாதைவாசலுடன் ஒன்றியிருக்க, உறையோ கருவளர்ச்சிக்கேற்க விரிந்து பருத்து சிலகாலத்தின் பின் உறையாகிய உட்பலாயிதம் கருப்பைப் பக்கத்தின் ஓர் இடத்திலே, பெரும்பாலும் கருப்பைஅடியின் அயலிலே அண்டியமர்ந்து, அங்கே தனக்குச்சரியான வெளிப்பலாயிதச் சவ்வுடனே சந்தித்து, இருசவ்வுகளுக்கும் ஒரு தசிரசம்பந்தமுண்டாய், இச்சம்பந்தத்தினுல் இருபலாயிதங்களுக்கும் இடையே ஒரு உதி உண்டாய், சிலகாலஞ் செல்ல, இது பூரணமான ஒரு அணையமாய் வளரும்.

சூற்கருப்பையின் பிரதான உள்ளுடன்களைப்பற்றி இவ்வளவுங் காட்டினேம். இனி வேறிரண்டு உறுப்புகளைப்பற்றிச் சற்றே குறிப்பாய்ச் சொல்லுவோம்.

க வது. நாபிக்கிலோமேசம். இது மிளகளவான ஒரு சிறுப்பையாய், பரிப்பீளிரண்டுக்கும் இடையே, அணையத்தின் அருகுக்கயலிற் கிடந்து நாபிக்கொடியுள் ஓடியிருக்குங் குசுமக்குழலாலே சிசுவின் குடல்களுடனும், நாபிவழியாய் நாபித்தசிரங்களுடன் கூடிச்செல்வனவாகிய நாபிமதியாந்திரநாடி, நாளத்தாலே மதியாந்திரதசிரங்களுடனும், தொடுக்கப்பட்டிருக்கும். இச்சிறுப்பையுள் ஒருவகையான நீர்த்த நெய்ப்பதார்த்தங் கொஞ்சம் உண்டு. இது

Digitized by Google

கருவுக்கு முதற்பருவத்திலே போஷணமாகுமென்பார்கள். நமக்கு இதின் உண்மை சற்றுந் தெரியாது.

உவது. கருக்கமலம். இது பரிப்பீளிரண்டுக்கும் இடையே மிருகங்களின் கருக்கமலம் போலொத்த தசிரப்பின்னலான ஒரு சவ்வு உண்டென்றும், இதினின்றே நாபிக்கொடிநீட்டுக்குச் சிசுவினது சலப்பையின் மேற்பக்கத்துக்குக் கிலோமலம்பி செல்லுகிறதென்றுஞ் சிலர் சொல்லுவார்கள். வேறுசிலரோ மனுஷசிசுக்களிலே கருக்கமலம் இல்லையென்று மறுத்து, மிருகங்களிலுள்ள கருக்கமலத்துக்குக் கிலோமலம்பி சிசுக்களில் தோற்றுவாய் என்பார்கள். சிறுநீருக்கு ஒரு ஆசயமாகவே கருக்கமலமானது மிருகங்களில் இருக்கிறது என்று பெரும்பாலும் எண்ணப்படும். வெல்ப்போ என்ற பண்டிதர் மனுஷ சிசுக்களிலேயும் ஒருவகையான கருக்கமலம் உண்டென்றும், இது சிசுவின் முதற் பருவத்திலே அதற்குப் போஷணமாக ஏதோ ஒரு விதமாய் உதவுமென்றுஞ் சொல்லுகிறார்.

Digitized by Google

# எம். அதிகாரம்.

## சூலுடைமை.

*அதில் சரீரசுவாத்தியம் விகற்பமாதல்.*

*தேகத்திலே சவுக்கியமும் வெப்பும் ஒற்றுமைப்பட்டு விக்கினமின்றி நடைபெறுகின்ற நிலை அல்லது சீர் ஒன்று உண்டுபடுமெனில் அதுவே கர்ப்பிணியின் தேகக்கூறு எனக் கிரகித்துக்கொள்ளலாம். சனனகிருத்தியம் நிவிர்த்திகிருத்தியத்துக்கு ஒத்திருக்கும் என்று பிறவேஷ என்ற பண்டிதர் சொல்லியது உண்மையே. யாதொரு இடையூறை நிவிர்த்திபண்ண வேண்டியதாயிருந்தால் உடம்பில் அதின் செய்கைகள் என்ன? அழற்சி, உதிரநாட்டம், உறையத்தக்க ஒருவகை வீணீரை இரத்தக்குழல்களாற் கக்குதல், இவ்வீணீர் விரைவாய் அல்லது பொறுதியாய்ச், சற்றே இறுகி உயிர்கொண்டு உடம்புக்கு இசைந்த ஒருபகுதியாகுதல் முதலியவைகளே. இவ்வண்ணமே சனனகிருத்தியத்திலும், அழற்சி, சீவசத்தி, உன்னிப்பு, வீணீர் கக்குதல், வீணீர் உயிர்பெறுதலாகிய இச்செயல்களே முதற்தொடங்கும். பின்னை, சனனகிருத்தியமும் நிவிர்த்திகிருத்தியமும் ஒன்றுக்கொன்று நிகராய், இரண்டும் ஒரே மட்டான தாபிதக்குணங்களை உடையவைகளாயிருந்தால், சீவசத்திஉன்னிப்பும், உயிர்த்தொழிற் பிசகுமே குணங்களையுடைய அனுகுணச்சுரமானது அவ்விரு கிருத்தியங்களும் நடக்கையில் அவற்றோடுகூடி நிகழ்ந்தால் இது ஓர் அதிசயமல்ல இது வழமைப்பட்ட காரியம். சுரத்தின் சில குணங்களாகிய சூடு, உழற்றி, ஒருக்கால் மேனி ஒடிச்சுரத்தல், ஒருக்காற் குழிர்ந்து பதறல், இரத்தப்பூரிப்பு, இரத்தவோட்டக்கிளர்ச்சி, விரைந்த அழன்ற நாடித்துடிப்பு என்றவைகள் கர்ப்பிணியிலுந் தோன்றும். மனமும் மிகுதியாய்க் குழம்பி வெடுக்குந் துடுக்குங் கொதிப்புஞ் சினப்புங் காணும். இக்குணங்கள் தேகக்கூறுகளுக்குத் தக்கதாய்ப் பலரிலும் பலவிதமாயிருக்கும். மெலிந்தவர்களும் எழும்ப உசும்ப ஏலாத திணியர்களும், சீவசத்தியின் தனுச் சற்றே குறைந்தவர்களும், கருத்தரிக்கும்போது உண்டா*

Digitized by Google

குந் தேகக்கிளர்ச்சியினுல் மறு காலங்களிற் பார்க்க அதிக சுகம் உடையவர்களாவார்கள். இரத்தப்புஷ்டியுள்ள ஸ்திரிகளோ கருத்தரிக்கும்போது சுரக்குணங்களால் அவதிப்படுவோர்கள். இப்படியே மனக்கரணங்களுஞ் சிலரிலே அதிதுரிதம் அடைந்து, திணியர்களாய் மந்தர்களாய் இருப்பவர்களிலே அதிக சந்தோஷமும்; ஏங்கிப்போகிறவர்களாய் மனம் விதிருகிறவர்களாய் வெடுக்குச் சிலுக்காணவர்களாய் இருக்கிறவர்களிலே, பைத்தியக்குணமும் சிலவேளை முழுப் பைத்தியமும் உண்டாகும்.

கர்ப்பிணிகளின் இரத்தந் தாபிதநிலையைக் காட்டுவதாய் வெண்சிவப்புப் படர்ந்திருக்குமென்று முற்காலத்தில் அதிகம் உறுதியாய்ப் பேசிவந்தார்கள். கர்ப்பிணியானகாலத்தில் இரத்தம் வெண்சிவப்பேறிவிடுமென்பது மருத்துவர் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொண்ட ஓர் கோட்பாடு. பின்னிட்ட ஆண்டுகளிலோ, இதைமறுத்து வருகிறுர்கள். வெண்சிவப்பிரத்தமானது அனேகரிலே கருத்தரித்த மூன்மாசங்களிலே உண்டுதான் என்றும், கருவளரவளர அது குறைந்து எட்டாம் ஒன்பதாம் மாசங்களிலே பெரும்பாலும் இல்லாமற் போய்விடுமென்று மங்கமாரி என்னும் பண்டிதர் சொல்லுகிறுர்.

நாம் பிரதானமாய்த் தேகத்திலெழுங் குணங்களையல்ல, அக்குணங்கள்மூலமாய்அனுமானிக்கப்படுந் தேகநிலையை அல்லது சீரையே அவதானிக்கவேண்டும். கருத்தரிக்கும்போதெல்லாஞ் சுரம் உண்டுபடுவதற்கான்கோலம் ஒரு மட்டுக்கு உண்டு என்பது நாம் அதிகம் அவசியமாய் அறியவேண்டியது. இதை அறியாமல் அல்லது பாராமல் விடுவதே கர்ப்பிணிக்கு வருங் வியாதிகளுக்கேற்ற பத்தியங்கள் பக்குவங்கள் சொல்வதினுல் அனேக தவறுகளும் மோசங்களும் உண்டாவதற்குக் காரணம். சுரத்துக்கானகோலம் உடையவர்களாயிருக்குங் கர்ப்பிணியிடத்திலே சிசுவும் கூடியிருக்கிறபடியால், அவள் மற்றும் வேளையிலும் பார்க்க அதனமாய்த் தின்ன உண்ண வேண்டுமென்று சொல்வது தப்பான பேச்சு.

## கருத்தரித்திருப்பதற்கு அறிகுறிகள்.

கம். அறிகுறி. தீட்டுமறிபடுவது. ஸ்திரி சனங்களுக்கு இதிலேஅதிகநம்பிக்கை. கருத்தரிப்பதற்கு இதுவே அவர்

Digitized by Google

கள் அடையாளம் இதிலே அனேக தவறும் பிழையும் வருமாதலால், இது எப்படி ஒருஅறிகுறியாகும்என்று சற்றேறுட்பமாய்ப்பார்ப்போம். தீட்டு ஒழுங்காய்க்கண்டுவந்த ஸ்திரியிலே, சடிதியில்அதுமறிபட்டு,இதற்குமுன்னாகுதல்பின்னாகுதல் சுவாத்தியஹீனம் உண்டாகாதிருந்தால், அவள் கர்ப்பிணியென்று பொதுவாகச் சொல்வதாயிருந்தும், இதற்குச்சில விலக்குகளுமுண்டு; அன்றியுஞ் சிலரிலே கருத்தரித்தபின்பு தீட்டு மறிபடாமற் கண்டுவருவதுமுண்டு. இப்படி இராது என்று சில பண்டிதர் கண்டிப்பாய் மறுத்தாலும், அனேகரோ அதை நிறுத்துகிறார்கள். சந்தேகமில்லை அப்படிவரும். மேலுந் தீட்டானது யாதொரு பொல்லாத வியாதியினிமித்தம் மறிபட்டு நிற்க, அவ்வேளையிலே கருத்தரித்திருப்பதும் உண்டு. ஒரு ஸ்திரி இரத்தாசயத்திலே வியாதி கொண்டு நீர்ப்பொருமல் உள்ளவளாய் இரண்டுவருஷந் தீட்டுக்காணாமல் இருக்க, கருவுந்தரித்துவிட்டாளென்றும் மங்கமாரி என்பவர் சொல்லுகிறார். இன்னும் இருதுவாகமுன் கருத்தரிக்கிறதும் உண்டு. சில ஸ்திரிகள் ஒருக்காலுந் தீட்டுக் காணாதிருக்கவுங் கருத்தரித்தார்கள்.

தீட்டுமாறும் பேரிளம் பெண் பருவத்திலே மாதவிடை ஒழுங்காய்க்காணாமல் இரண்டொருமுறைக்குத் தப்பிப் பின்பு வாடிக்கைக்கு அதிகமாய்ப் பெரும்பாடு போல இறைக்கவுங்கூடும். கருத்தரித்துப் பின் அக்கரு அழிந்ததென்று அறியாதவன் தீர்த்துக்கொள்வான். அடுத்த மற்றைமுறைக்குத் தீட்டுக்காணாதிருந்தால் ஸ்திரியை அதிக கட்டாயமாய்ப் பராபரித்து, வைத்தியஞ் செய்விப்பார்கள். ஆகிலுங் காரிய நிருவாகங்கள் மேற்சொல்லியபடியே இருக்கையிற் கருத்தரிக்கிறதும் உண்டு.

சுவாத்தியஹீனம் ஒன்றும் உண்டாகாமல், அல்லதுபின் வராமற்றானும் தீட்டு மறிபடும் போது, கருத்தரித்தலாயிற்று என்று பேரிளம்பெண்களிற் சொல்லக்கூடாது. மற்றுங்காரியங்களுங் கண்டே தீர்ப்புப் பண்ணவேண்டியது என்று மேற்சொல்லிய காரியங்களால் விளங்குகின்றது.

உம். அறிகுறி. சலப்பை அழன்றிருப்பது. பிளந்தல்என்பவர்க்கு இதிலேஅதிகநம்பிக்கை. கருத்தரித்தஅன்னியநாளையிலே இதுவும் உண்டாகும். கருப்பை கீழே உறுத்தி அமர்த்துவதினாலல்லச் சலப்பைஅழலுவது;கருத்தரிக்குங்

Digitized by Google

காலத்திலே கூபகத்திலுள்ள சகல உறுப்புகளும் அழுதுவதினாலேயாகும். இதுபோல அபான வியாதியினாலும் சலப்பைஅழன்று அடிக்கடி சலம் நொடித்தல் உண்டாகும்.

௩ ம். அறிகுறி. காலைவாந்தி. இதைப்பற்றிச் சனங்கள் அதிகம் பேசிக்கொண்டாலும், சில ஸ்திரிகளிலோ இக்குணஞ் சற்றுங் கண்டிராது. ஒன்பது பிள்ளைப்பெற்றவளாயிருந்தும் காலைவாந்தி இன்னதென்று அறியாத ஒரு ஸ்திரிக்கு நான் வைத்தியம் பார்த்ததுண்டு. கருத்தரித்த மூன்றுங் கிழமையளவிலே காலைவாந்தி தோன்றுவது வாடிக்கை. விடியலிற் படுக்கையால் உன்னியெழும்ப, திடீரென உவாந்தியுண்டாய் திடீரென நின்றுவிடும். தீனிலே நல்ல பிரியமிருக்கும். சிலரிலே சடிதியாய் உவட்டும், சத்தியுமுண்டாம். தின்ற தீனைப்புரட்டியெடுத்தவுடனே நல்ல சுகமாயிருக்கும். சிலரிலே ஓங்காளம் நெடுக நிற்கும். வயிற்றிலே இரைப்பற்றுச் சற்றும் பிடியாது. கர்ப்பிணியாகுங் காலம்முதல் பிரசவிக்கும் நாழிகைவரைக்கும் காலைவாந்தி நிற்பதுமுண்டு. ஆயினும் முதல் நாலைந்து மாசங்களிலே தான் வெகுவாய் அதிகமாக ஆளை அலைத்துப்போடும். காலைவாந்திபோலவேகுக்கியழற்சியிற் சார்ந்ததாய் அடுப்புக்கட்டி முதலியவற்றில் மனம்வைக்குந் தீன்பிரியப்பிசகு உண்டாமென்று அதிகம் பேசிக்கொள்வார்கள். ஆகிலும் வேறு வியாதிகாரணமாயன்றித் தீன்பிரியப் பிசகுஉண்டுபடுவது மெத்த அரிது. உண்டுபட்டால் பெரும்பாலும் சராயிகை என்னும்வியாதியினாலே வரும்.

௪ ம். அறிகுறி. லசிகாசலை அல்லது உமிழ்நீர் சொரிதல். இதுவும் காலைவாந்திபோல் இரைப்பை அழற்சியினால் கர்ப்பிணிகளிற்றோன்றும் ஒருகுணம். வைத்தியம் பார்த்துவந்தவன் இதரம் வாய் அவியக்கொடுத்து விட்டானென்று எண்ணி, அவனைக் குற்றஞ்சொல்வதும் உண்டு.

௫ ம். அறிகுறி. தனவழற்சி. கருத்தரித்தவுடனே முலையிலே சூடுஞ் சுட்சுள்ளென்ற குத்தும் விம்முதலும் உண்டாய்த் தனங்கள் பருத்துச் சற்றே பாலும் பொசிவதான இச்செயல்கள் அதிகரிக்கும். தீட்டுமறிபடுதல்போல இதுவுங் கருத்தரித்திருப்பதற்கு அறிகுறியென்று திரீசனங்கள் அதிகம் நம்புகிறார்கள். பின்வரும் போலிநியாயங்களுக்கு இடனாயிருப்பதினால், தன்வழற்சி ஓர் விசேஷமான அறிகுறியல்ல.

Digitized by Google

க வது. தீட்டுமெறிபடுதல் என்னகாரணத்தினால் வந்தாலுஞ்சரி, தீட்டுமெறிபட்டவுடனே தனங்கள் பருக்கத்தொடங்கும்.

உ வது. விவாகஞ்செய்தபின் முதன்முதற் கலவிசெய்யும் அழற்சியினால் உடனேயே பெரும்பாலுந் தனம் பருப்பதுண்டு.

ங வது. தீட்டுமுறைக்கு அடுத்தாற்போலே முன்னே அல்லது பின்னே, பிரதானமாய் ஸ்திரியிலே குத்துவருத்தத்தோடே தீட்டுக்கண்டுவந்தால், தனம் பருப்பதாய்ப் பெரும்பாலுந் தோன்றும்.

ச வது. கொழுப்பினிமித்தந் தனம்பருக்க, கருத்தரித்தற்குச்சார்பாய் முலை அதிக வளர்ச்சி அடைகிறதென்று மோசம் போவதுமுண்டு. ஆகிலும் நெருடிப்பார்க்கும்போது முடிச்சும் நெறிப்புமாய்த் தோன்றினால், இம்மோசம் விளங்கிப்போம். பின்னை தனம் பருப்பது கருத்தரித்திருப்பதற்கு நிலைவரமான ஓர் அறிகுறியல்ல. மேலும், முலைக்காம்பிலும் அதைச்சூழ்ந்திருக்கும் வலையத்திலும் தோன்றும் வேற்றுமைகளினால், கரு உண்டோ இல்லையோ என்று தீர்த்துக் கொள்ளலாம். கருத்தரித்த இரண்டாம் மாதமளவிலே அவ்வேற்றுமைகள் தோன்றத் தொடங்கினாலும், மூன்றரைநாலு மாதத்தின்பின்தான் நன்றாய் விளங்கி, முலைக்காம்பு மற்றும்வேளையிலும் பார்க்கக் கருமைகொள்ளும். ஆனாலும் ஸ்திரி முன்னே பிள்ளைப்பெற்றவளாயிருந்தால் அப்பொழுதே முலைக்காம்பில் உண்டான கருமை முற்றும் எடுபட்டுப்போகாமல், பின்னுமிருக்குமானபடியால் காம்பின் கருமைநிறத்தையும் அதிகம் நம்பிக்கொள்ளக்கூடாது. மேலும், முலைக்காம்பின் சூழலிலுள்ள கடுக்கன் தன்னி நிமிர்ந்து காம்பிலும் வலையத்திலுமுள்ள தோல் மெதுக்கொண்டு ஊதிக் கசிந்து பன்னிரண்டு இருபது நிணக்கோளங்கள் வலயத்திலே தோன்றும், இவைகள் தன்னி, அரைநெல்லிடைக்கு உயர்ந்து காம்பின் வட்டாரத்திலேயே அதனமாயிருக்கும். இக்கோளங்களிலிருந்து பொசியும் நீர் அவ்விடத்தை ஈரமாக்கி, சிலவேளை தொங்கல் குறுக்குக்கட்டுகளிலும்பட்டிருக்கும். கருத்தரித்த காலத்தில் தனவலயத்திலே தோன்றும் இலட்சணங்கள் இவையே. இவை சற்றுப்பூரணப்பட்டிருக்கில், கருத்தரித்ததென்பதற்கு நிச்சயமுமாம்.



Digitized by Google

இவ்விலட்சணங்கள் சற்றுங் காணுவிட்டால் கருத்தரிக்க வில்லையென்றே முடியும்.

சும். அறிகுறி. பால் பொசிதல். ஐந்தாம் மாதத்துக்கு முன் பால்பொசிவது அரிதானபடியாலும்,அதின் பின்னும் சிற் சிலவேளை மாத்திரம் பொசியுமானபடியினுலும், கருத்தரித்திருப்பதை அறியுங் குறிக்கு இது உதவாது.

எம். அறிகுறி. அடிவயிறு துன்னல். இது எவர்களும் மிகுதியாய் அயிர்த்துக்கொள்ளும் அடையாளமாயிருந்தாலும், மருத்துவவைத்திய முறையாக நாம் எடுத்துப்பேசுமிடத்தில், ஏதோ பருமையான ஒரு பொருள் கூபகவறையிலே விரிந்து பருக்கின்றதென்று மாத்திரம் நிச்சயம்பண்ணலாம்; ஆனுலும் இப்படி விரிந்து பருக்கிறது கருப்பையோ வேறேதுமோ என்றதைத் தெளிய வேண்டில் மேல் விசாரணை செய்து தீர்க்கவேண்டும். கருப்பை பருக்கப் பருக்க அடிவயிறு துன்னுந் தானென்று திட்டாந்தம்பண்ணியபொழுதும் கருப்பை பருத்துக் கருத்தரித்ததினுலோ என்று விசாரிக்க வேண்டியிருக்கிறது. கருப்பை பருத்ததினுலோ அடிவயிறு துன்னியது என்பதை அவதானமான வெளிச்சோதனைகளாலே தெளிந்துகொள்ளலாம். இச்சோதனை செய்யும்படி, ஸ்திரியைச் சலம் விட்டுவரப்பண்ணி, பின்பு மல்லாரக் கிடத்தி, தலைக்கும் தோள்களுக்கும் அணைகள் கொடுத்து,தொடைகள் கிளம்பக்கால் முடக்கப்பண்ணிப், பின்பு ஸ்திரியுடனே சுவாசத்தை உள்ளே வாங்காமல் வெளிக்கு நன்ருய் விடச் சொல்லவும். அவள் அதிகம் கொழுப்பில்லாதவளேயாஞல், அடிவயிற்றிலே அவதானமாய்க் கையாலே தடவிச் சோதனை பண்ணிப்பார்க்கில், மேசனத்துக்குக்கிட்ட உரத்த வன்மையான திரளைபோற் கருப்பைஅடி மிதப்பது தெரியும். இவ்விதமாய், கருப்பை பருத்திருக்கிறதென்று நிச்சயஞ் செய்தபின், கருப்பையுள் இருப்பது சிசுவோ வேறேதுமோவென்று நிதானம்பண்ணும்படி பின்னுற் சொல்லிய பிரகாரமாக யோனிவழியாயுங் கர்ப்பதாடனஞ் செய்து பரிசோதிக்க வேண்டியது. கொப்பூழ் வாடிக்கையாயுள்ளது போல் பதிந்திருந்தால் கர்ப்பிணியல்லவென்றும், பதிவு மேவியிருந்தால் கர்ப்பிணியென்றும், இப்படிக்கொப்பூழின்பதிவு மிதப்புகளிலே சிலருக்கு அதிகநம்பிக்கை கொப்பூழ் மேவியிருக்கக் கர்ப்பிணியல்லாமலும் அது பதி

Digitized by Google

ந்திருக்கக் கர்ப்பிணியாயும் இருத்தல் கூடுமானபடியினாலே, அப்பேச்சுகள் உண்மையென்று கொள்ளத்தக்கனவல்ல. தூயார்க்குப் பட்டினத்திலுள்ள மருத்துவவைத்தியர் இருவர் கொப்பூழ் பதிந்திருந்தால் அது கருத்தரிக்கவில்லையென்பதற்கு அறிகுறியென்று நம்பியிருந்து, பின்னொருமுறை இந்த நம்பிக்கைக்கு மாறாக ஒரு காரியஞ் சம்பவித்ததினால் மோசப்பட்டுப்போனார்கள்.

௮ம். அறிகுறி. உசும்பல் அல்லது சிசுத்துடித்தல். கருப்பை பருத்துக் கூபகத்துக்கு மேலே கிளம்பினவுடனே சிசு உசும்புவதெல்லாந் தோன்றுமென்று முற்காலத்தில் எண்ணினார்கள். இக்காலத்திலோ இவ்விரு காரியங்களுக்குஞ் சம்பந்தம் இல்லையென்றும், சிற்சிலவேளை சடிதியாய்க் கருப்பை கூபகத்துக்குமேலே கிளம்பிவிடப் பதறல், இளைப்பு, நெஞ்சிடிப்புமுதலியவைகள் தோன்றுமென்றுஞ், சிசு துடிப்பதுஞ் சிலவேளை தோன்றும் சிலவேளை தோன்றாதென்றுங் கண்டிருக்கிறார்கள். சிசுவின் உசும்புதலுந் துடிப்புந் தோன்றச் சில காலத்துக்கு முன், கருப்பை பருத்துக் கூபகத்துக்கு மேலே கிளம்பிவிடுமென்று சிலர் எழுதியிருக்கிறார்கள். ஸ்திரிசனங்களிலே சிசு உசும்புங் காலம் வித்தியாசப்படும். ஒரே ஸ்திரியிலேயே முறைக்குமுறை வித்தியாசப்படும். பன்னிரண்டு கிழமையளவிலே சிசு உசும்பத்தொடங்கியும் விடும். ஆறுமாதவரைக்கு உசும்பாமல் நின்றும் விடும். கருத்தரித்தற்கு இது சற்றே அறிகுறியாகுந்தான். ஆகிலும் இவ்வறிகுறியிலே மட்டுக்கு மிஞ்ச நம்பிக்கை வைப்பதினால் மற்றெந்த அறிகுறியிலும் பார்க்க அதிகம் பிழைபட்டுப்போக ஏதுவாகும். ஆதலால் இக்குணம் எவ்வளவுக்கு அறிகுறியாய்க் கொள்ளத்தகும் என்பதைத் தீர்மானம்பண்ண வேண்டியதவசியம். சிசுவின் உசும்புதல் தாய்க்குத் தோன்றும். மருத்துவனும் அறியலாம். ஆதலால் இதற்கு இரண்டு வகையான சாட்சி உண்டு. முதல்வகையான தாயின் சாட்சியிலே அதிக நிச்சயம் இல்லை. சில ஸ்திரிகள் புரளியாய் இணைப்புவதும் உண்டு. வேறு சிலரிலே புரளி பண்ணவேண்டுமென்ற கருத்து இல்லையென்று வைத்த இடத்திலும், சிசு ஒருக்காலும் உசும்பாதிருக்கக் கூடும். இன்னுஞ் சிலர் முதன் முறைகளிலே சிசு உசும்பித் துடிக்கிறதை உணர்ந்தறிந்திருந்தும், பின் முறைகளிலே

Digitized by Google

யோ சிசுஇருந்துந் துடியாததினால் இல்லையென்றுஞ், சிசு இல்லாதிருந்துந் துடிக்கிறதினால் உண்டென்றும் மோசம் போகக்கூடும். ஆதலால் ஸ்திரியின் சாட்சி உதவாது. புத்திமான் அதை நம்பான். இரண்டாம் வகையாகிய மருத்துவரின் சாட்சியிலோ அதிக மோசம் வர இடமில்லை. ஆகிலும் கருப்பையில் இருக்குஞ் சிசுவின் துடிப்பைக் கையாற்றடவி அறிந்தவன், இது காரியத்திலே மோசப்பட்டுப்போகான் என்று சொன்னாலும் அவனும் மோசப்படுவான் என்றதற்கான சாட்சி உண்டு. தன் கையைத் தண்ணீரிலே தோய்த்துக்குளிரப்பண்ணி, உடனேஸ்திரியின் அடிவயிற்றின் நடுவிலே அக்கையை வைக்க, சிசுதுடித்துக் கையிலே தட்டும். கரு முதிர முதிர, துடிப்புப் பெலமாய்க் கைக்குத் தெளிவாய்த் தோன்றும்.

௬ம். அறிகுறி. நிசாமனம் அல்லது வயிற்றிற் காதைப் பொருத்திக் கேட்குதல். கர்ப்பிணியின் கருப்பை கிடக்கும் வயிற்றுப்பகுதியிலே காதை அல்லது நிசாமனியென்னுங் கருவியை வைத்துப் பார்க்கில், பெரும்பாலும் இரண்டு சத்தங் கேட்கும்; ஒன்று, புறாக்கூவுஞ் சத்தம் அல்லது வாயாற் சும்மா ஊதுஞ் சத்தம்போன்றதாய், ஸதிரியினது நாடித்துடிப்போடொத்த காலம் உடையதாயிருக்கும். இந்தச் சத்தத்துக்கு அணையராவம் என்று பெயர். இச்சத்தம் பெரும்பாலும் கருப்பையின் முற்பக்கமாயுஞ் சிலவேளை வலப்பக்கமாயுஞ் சிலவேளை இடப்பக்கமாயுங் கேட்கும். இது ஆளுக்காள் மெத்த வித்தியாசமாயும், மட்டுக்கட்டுவது சற்றே அபூர்வமாயும், சிலரிலே இப்படிப்பட்ட சோதனையில் வல்லவருக்குந் தோன்றாததாயும் இருக்கும். கருத்தரித்த பத்தாம் பன்னிரண்டாம் கிழமையளவிலே இச்சத்தங் கேட்டோமென்று சில பண்டிதர் சொல்லுகிறார்கள். பெரும்பாலும் பதினைந்துஇருபது கிழமைக்கு முன்னே இச்சத்தம் பிரியாது. கரு முதிர முதிரவோ சத்தந் தீர்க்கமாய்ப் பிரியும். கருப்பை சுருங்கி ஒடுங்கும் வேளையிலே இது குறைந்துபோம் அல்லது நின்றுபோம்.

அணையராவம் என்ற சத்தம் உண்டாவதற்குக் காரணம் இன்னதென்று இன்னுந் தெளிவாகவில்லை. நெருங்குண்ட ஏதோ நாடிக்குழல் வழியாய்ச் செல்லும் இரத்தம் தடைபடுவதால் உண்டுபட்ட அருத்திச்சத்தம் போலும் ஓ

Digitized by Google

வியேயன்றி வேறொன்றல்ல என்பதேபலரும் ஒப்புக்கொள்ளுங் கருத்து. இச்சத்தம் கருப்பையிலே அல்லது அதற்கு அயலான யாதொரு உறுப்பிலேயுள்ளநாடியிலேஅல்லது சூற்கருப்பையால் அமர்த்தப்பட்ட சந்து நாடியிலே இருக்கும். அந்நாடி கருப்பையிலேதான் உண்டு என்று திட்டாந்தம்பண்ணின பின்னும், கருத்தரித்ததினாலோ அல்லது வேறுகாரணத்தினாலோ அதில் சத்தம்கேட்பது என்று தீர்மானம்பண்ண வேண்டியது. கருத்தரித்திருக்கிறதென்று நிச்சயம்பண்ணின பின்பு, கருப்பைநாடிகளின்பெருஞ் சாகைகள் அணையத்திலே உண்டு என நாம் அறிந்தமட்டிலே, அணையராவமானது அணையம் இன்ன இடத்திலே இருக்கிறதென்று காட்டும். அணையராவமானது அணையம் வெளியிலேவிழுந்த பின்னுஞ் சிலவேளை கேட்கும் என்றும், சிசு இறந்த பின்னுங் கேட்கும் என்றும் திட்டாந்தம்பண்ணியிருப்பதினால், அணையத்தில் உலாவும் இரத்தத்தின் ஓட்டம் அணையராவம் பிறக்கிறதற்கு ஓர் காரணமல்ல.

கருத்தரியாதிருக்கவே அடிவயிற்றிலே துருத்திச்சத்தங் கேட்கவுங்கூடும். ஆதலால் கிட்டவிருக்கும் யாதொரு பெரிய நாடியானது காதில் அல்லது நிசாமணி என்னுங்கருவியில் அழுந்தி உறுத்தினால் இச்சத்தங்கேட்கும். கருத்தரியாத ஒரு ஸ்திரியிலே கூபகத்தினுட்கிடந்த பெரிய ஒரு சோபத்திலுள்ள நாடியினின்று தீர்க்கமான துருத்திச்சத்தம் பிறந்ததை இரண்டுபண்டிதர் காதாரக்கேட்டார்கள். ஆதலால் கருத்தரித்திருப்பதற்கு அணையராவம் ஓர் நிதானமான அறிகுறியல்ல. அணையராவந் தீர்க்கமாயிருந்தும் ஸ்திரி கர்ப்பிணியல்லாமல் இருக்கவுங் கூடும். ஸ்திரி கர்ப்பிணியாயிருந்தும், அணையராவம் க்ஷேமமுமிருக்கவுங் கூடும்.

கருப்பையிலே கேட்கும் இரண்டாவதான சத்தம் சிசுவின் இரத்தாசயத்துடிப்பின் சத்தம் அல்லது இரிகவோசை. இது ஒரு கடியாரத்தைத் தலையணையின் கீழ்வைத்தாற் கேட்குஞ் சத்தம் போலே டிக்டிக் என்றிருக்கும். இவ்விதமாய் ஒருநிமிஷத்திலே நூற்றிருபது நூற்றறுபதுதரந் தட்டும். இது தாயின் நாடித்துடிப்பைப்பார்க்க அதிகம்விரைவாயிருப்பதினால் அது அவளுக்குரிய சத்தமாயிராமல் பின்ஒரு சிருஷ்டிக்குரியதென்று விளங்குமே. மேலும் இது அடி

Digitized by Google

வயிற்றிற் கேட்கக்கூடியதான மற்றெந்தச் சத்தத்துக்கும் விகற்பமாயிருக்கும். பின்னை, இதுதான் கருத்தரித்திருப்பதற்கு நிதானமும் பூரணமுமுள்ள அறிகுறி. கருத்தரித்தாயிற்றென்பது மாத்திரமல்ல, சிசு உயிர்ப்பாயிருக்கிறதென்றும் இதனால் அறியலாம். இரட்டைப்பிள்ளைகளிருந்தாலும் பெரும்பாலும் அறியலாம். இரிகஓசையானது கருப்பையின் எதிர்த்த இருபகுதிகளிலே ஒன்றுக்கொன்று சரியான தீர்க்கமுடையதாய்க் கேட்டு, அப்பகுதிகளுக்கு இடையே எங்கேயாகிலும் கேளாதிருந்தால் ஸ்திரியிலே இரட்டைப்பிள்ளை உண்டென்று தீர்த்துக்கொள்ளலாம்.

சிசு உண்டோ இல்லையோ என்பதைக் காதாற்கேட்டு அறிகிறதற்கான விதிகள்.

க. ஸ்திரி கருத்தரித்து நாலரைமாதமானதென்று அறிந்தாலன்றி, அதற்குமுன் காதுவைத்துச் சோதனைசெய்யப்படாது.

உ. காதாலே சோதிக்கமுன் ஸ்திரி சலமலங்கள் கழித்துக்கொள்ளவேண்டும். குடல்களிலே பொருமும் வாயு இருந்தாலும் பரிசோதனைக்கு விக்கினமாகும்.

ரு. நிசாமனிக்கருவியால் சோதனைசெய்யப் பழகியிருந்தால் அப்படிச்செய்யவும், இல்லையெனில் காதுமாத்திரமே உத்தமம்.

ச. ஸ்திரியை ஓர் படுக்கையிற் கிடத்தி, தோள்களுக்கு அணைகொடுத்து உயர்த்தி, துடைகள் கிளம்பக் கால்களை முடக்கி அடிவயிற்றுப்பகுதியிலே அதிக கொழுப்பிருந்தால் அதைக் கசக்கி அப்புறப்படுத்திக் கருப்பைத் திரளையின்மேல் அழுந்த நிசாமனியைவைத்து, வைத்தியன் குனியாமலுங் கவிழாமலும் முழங்கால்போட்டிருந்து காதைவைத்துப் பார்க்கவும். கொப்பூழுக்கும் இடது முற்சந்துமுள்ளுக்குஞ் சரிநடுவிலே வெகுவாய்ச் சிசுவின் இரிகஓசை கேட்பதானபடியால் அந்த இடத்தையே முதற் பரிசோதித்து, அவதானமாய்ச் சற்று நெடுநேரம் பார்த்த பின்பு ஓசைகேளாதிருந்தால், கருவியைவேறொரு இடத்திற் பெயர்த்துவைத்து, இப்படிக் கருப்பைத்திரளை யடங்கலுஞ் சோதித்தும் கேளாவிட்டால், வேறொரு நாளைக்குச் சோதிக்கவும். அநேக கர்ப்பிணிகளில் இரிகஓசையைப் பரிசோதித்துத்துப் பழகினவன்தானும் முதன்முதல் ஒரு ஸ்திரியில் இச்சோதனைசெய்யும்போது பொறுமையாய்

Digitized by Google

இரண்டு மூன்று முறை சோதிக்கவேண்டும். கருத்தரித்து ஐந்து மாதத்திற்கு மேற்பட்டுவிட்டதேயானால் இரிக ஓசை அவனுக்குக் கேளாமற்போகிறது அரிது. ஒருமுறை கேட்டுதேயானால் கர்ப்பிணியென்பது நிச்சயம்.

சOம். அறிகுறி. கருப்பைவாயுங் கழுந்தும் இருக்குந் தன்மை கருத்தரித்த ஐந்து மாசமளவிலே கருப்பைக் கழுந்திற் சில வேறுபாடுகள் தோன்றும் என்று முன் சொன்னோம். ஆகையால் அப்பருவத்திலேதான் உட்பரிசோதனையினால்அதிக நிச்சயம்பண்ணுவது. கருப்பைக்கழுந்தானது முன்மாசங்களிலே அதிகம் நெகிழ்ந்து விரிந்திராதபடியால், கருப்பையடியின் அதிக பாரம் அதைக் கீழே உறுத்தி அமர்த்த, அது உள்ளதிலும் பார்க்க அதிகமாய் யோனிக்குள்ளே இறங்கிநிற்கும். ஐந்தாமாச முடிவளவிலோ கூபக அறைக்குள் மேலே தூக்குண்டு வரவரக் குறுத்து முகைப்புமழுங்கி,ஒன்பதாம் மாசத்திலே கழுந்தென்றது அற்று அதின் தூம்பு கருப்பையறையோடே ஒன்றுபட்டு முகைப்பும் அற்பமுமில்லாமற் போய்விடும். கருப்பைவாய் மாத்திரம் கருப்பையின் கீழந்தத்திலே வட்டிப்பாகத் தெரிந்து சிசுவின் தலையுடன் அண்டி அதைச் சூழ்ந்திருக்கும்.

கருத்தரித்தகாலந் தொடங்கி கழுந்திலே வேறுபாடுகள் தோன்றி அதிக துரிதமான இரத்தஒட்டத்துக்கு அது ஓர் இடமாகி, அதின் வைரிப்பற்று மெதுமெதுப்புள்ளதாகும். முதல் ஐந்து மாசத்திலே கருப்பைவாய் கைக்கு லேசாய்த் தோன்றும். கழுந்து குறுகிக் கருப்பையடியானது வயிற்றின்முற்பக்கத்தைச் சருவி முன்னாய்ச் சரியவோ கருப்பைவாய் பிற்பக்கமாய்ப் பீடிகைப்புடைப்புக்கு நேரே சரிந்துமேலேஏறி ஒன்பதாமாசமுடிவிலே விரலுக்கு எட்டாமலும் போய்விடும்.


அடிவயிற்றிலே தடவியறிந்த திரளையும் யோனியிலே விரலிட்டறிந்த திரளையும் ஒன்றேயென்ற நிச்சயம் பண்ணும்படி, அடிவயிற்றில் ஒரு கையை வைத்துக்கொண்டு மற்றக் கையின் விரல்களை யோனிவழியாய்க் கருப்பைவாயிலுங் கழுந்திலும் அழுந்த வைத்து இவ்விரல்களுக்கு அடிவயிற்றுக் கையின் அசைவனுக்கந் தோன்றுமோவென்று பார்க்கவும். கருப்பையானது வியாதிநிமித்தமாய்ப் பருக்கும்வேளையும், கருப்பையிலே சிசுவையின்றி நீர

Digitized by Google

சோணம் முதலிய இருக்கும்வேளையும் அப்படி விரல்களுக்குத் தோன்றுமாதலால், இப்பிழைபாட்டை விலக்கும்படி கர்ப்பதாடனம் என்ற பரிசோதனைசெய்வார்கள்.

௧௧ம். அறிகுறி. கர்ப்பதாடனம். கர்ப்பதாடனஞ் செய்யும்படி ஸ்திரியை நிற்கப்பண்ணி, இரண்டொரு விரலை யோனிவழியாய் உள்ளே விட்டு, மற்றக் கையை அடிவயிற்றில் வைத்துக் கருப்பையை மெல்ல அமர்த்திக்கொண்டு, சிசுவின் தலையை எற்றிக் கிளப்பத்தக்கதாய்க் கருப்பைக் கழுந்திலே விரைவாகத் தட்டத் தலை எற்றுண்டு இரண்டொரு நொடிப்பொழுதுக்குப் பன்னீரிலே மிதந்து, பின்பு மெல்லவாக விரலின்மேலே பட விழும். இப்படிச் சம்பவிக்கும் எனில் சிசு உண்டு என்பதற்கு அது திடச்சாட்சி. ஆகிலும் இச்சோதனை எப்போதும் வாயாது.

*௨௨ ம். படம்.



அறிகுறிகள் ஒவ்வொன்றையும் பற்றி மேலே நாம் ஆராய்ந்துபார்த்தளவிலே, சூலுடைமைக்கு அவைகளுள் ஏதேனும் ஒன்று தனியே நிதானமாகாதென்று கண்டோம். கர்ப்பதாடனத்தாலும், காதினாற் கேட்டுச் சோதிக்கிறதினாலும் வேண்டியமட்டுக்கு அறிந்துகொள்ளலாமென்பது நிச்சயமாயிருந்தாலும், இவைகளாலுந் தீர்க்கமான திட்டாந்தமறிவது அரிது. சகல அறிகுறிகளையும் அவதானமாக ஆராய்ந்து ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்தே, சூலுடைமை உண்டு இல்லை என்று தீர்க்கஞ் சொல்லக்கூடியது. தீர்மானஞ்சொல்லக்கூடாத முட்டுப்பாடுகளும் இப்படியிருக்க, சூலுடைமையுடனே மகோதரம், அடிவயிற்றுக்கழலை முதலிய ஏதேனுமொரு வியாதியுங் கூடிவிட்டாலோ, கருவுண்டென்ற அறிகுறிகளும், இல்லையென்ற அறிகுறிகளும் ஒருமிக்கவே பார்க்கவேண்டியனவாய் வரும். இப்படியான காரியங்களிலே அதிக பொறுதியாயும், வேண்டுமெனில் நெடுகவும் ஆலோசனைபண்ணியேயன்றித்தீர்மானஞ்சொல்லப்படாது.

* அணையமானது கருப்பையின் பித்தியுடன் ஒட்டியிருக்கும்பாவனை. 1. கருப்பையின் பித்தி. 3. அணையம். 2. அணையம் கருப்பையுடன் சந்திக்கும் இடம். இவைகளின் இரத்தக் குழல்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து ஓடும் விதம் இதிற் தெரியுது.

Digitized by Google

கர்ப்பிணியாயிருக்குங் காலவரை. ஸ்திரி கர்ப்பிணியாயிருப்பது இவ்வளவு காலத்துக்கென்று சரியாகச் சொல்லிக்கொள்வது மெத்தப் பிரயாசம். ஒன்பது மாசம் அல்லது முப்பத்தொன்பது கிழமைக்கும் நாற்பது கிழமைக்கும் இடையிலே என்று பெரும்பாலும் சொல்லிக்கொள்வார்கள். இதுதான் அதிக நிதார்த்தமுமாய் இருக்கும். சிற்சில வேளைகளிலே பிரசவம் இரண்டொருநாள் முந்தியும்விடும் பிந்தியும்போம். இதிலே நீர்க்கஞ் சொல்வதுஏலாது.

பிரசவிப்பது இவ்வளவு காலத்தால் என்று மூன்றுவிதமாய்க் கணக்குப் பார்க்கிறார்கள். ௧வது. கருத்தரித்தகாலத்தொடங்கி. கருத்தரித்த காலம் அறிந்தால், அதிக நிதார்த்தமாய்க் கணக்குப் பார்க்கலாந் தான். சிற்சில விசேஷமான காரியங்களில் மாத்திரமே கருத்தரித்த காலம் அறியக்கூடியது. ௨வது. தீட்டு மறிபட்டகாலத் தொடங்கி. ஸ்திரி தீட்டு மறிபட்டுநின்றவுடனே கருத்தரிப்பதுமுண்டு. மறுதீட்டு வரும் முறைக்கு அடுத்தாற்போலே முன்னே கருத்தரிப்பதும் உண்டு. ஆதலால் இதிலே சொற்பநிதார்த்தவீனம் உண்டாம். இதற்காக இரண்டு கிழமை கூட்டி, தீட்டு மறியட்ட காலந்தொடங்கி நாற்பத்திரண்டு கிழமையாலே பிரசவமாகுமென்று கணக்குப்பார்ப்பது. ௩வது. பிரசவிக்க இருபத்துநாலு கிழமைக்குமுன் சிசு உசும்புமென்று கணக்குப் பண்ணிக்கொண்டு, இதனாலே மேற்சொல்லிய இரண்டாங்கணக்கைச் சரி பார்த்துக்கொள்வது.

Digitized by Google

# ௮ம்.' அதிகாரம்.

## கர்ப்பிணியிற் காணும் வியாதிகள்.

கர்ப்பிணியிற் காணும் வியாதிகளுள் அனேகம் சூலுடைமைக்குறிகுறிகளின் சினப்பே. இவற்றில் ஏதாவதொன்று மட்டுக்கு மிஞ்சி அதிகரித்துவிட்டால் வியாதியாய் விடும்.

காலைவாந்தி. இது சிலவேளை கடுமையாய் நெடுகநின்று கஸ்தியுண்டாக்கி, சுவாத்தியத்தையுங் கெடுத்து அரிதாகச் சிவசேதமுஞ்செய்யும். ஒங்காளங் கடுமையாயிருக்கும் கர்ப்பிணிகளுக்கு இடைக்கிடை சற்றேஆற்றியுண்டு. சிலவேளை ஓயாமல் இராப்பகலாய் வயிறு குமட்டிக்கொண்டே நிற்கும். உண்டவுடனே இரை வெளியில் எடுத்துப் போடும். இடையிலே ஆற்றி காணும்போது ஏதேனுந் தின்றால்த்தான் இரைப்பையிலிருக்கும். அடாத தீனினுலும் மலக்கட்டினுலும் இரைப்பையிலாவது குடல்களிலாவது உண்டுபடும் புண்பாட்டினுலும் ஒங்காளம் பெரும்பாலும் அதிகப்படும். இக்காரணங்கள் ஏதேனென்று உண்டென்று அயிர்த்தால் அதை நீக்கவேண்டியது. நீக்கியுஞ் சத்தி தணியாதிருந்தால் இரைப்பை அழற்சியை விலக்க உபாயங்கள்பண்ணவேண்டும். நாச் சிவத்து, நாடித்துடிப்புக் கிழர்ந்திருந்தால், மேல்வயிற்றுப் பகுதியிலே அட்டை விடுவதினுல், அல்லது இரத்தம் வாங்குவதினுற் சகாயங்காணும். இரத்தம் எடுக்கவேண்டிய கோலமில்லாதுபோனுல் மருந்து கொடுத்து ஒன்றிலே வாயாவிட்டால் மற்றதிலே வாய்க்குமோவென்றுபார்க்கவேண்டும். முதலாம் இலக்கத்திற் சொல்லியிருக்கும் அவிழ்தத்தைத் தனியே அல்லது லாடனம் கலந்து கொடுப்பதினுலும் கைப்புக்கள் சேர்ந்த கஷாயங்கள்கொடுப்பதினுலும் நயங்காணும். பழகினவர்களுக்குத் திறத்த கோப்பிகுடித்தாற் சகாயமாகும். துளசி வெங்கஷாயம்; நன்றாய்க் குளிர்ந்த தண்ணீர் இவைகளைக் குடித்தும் பார்க்கலாம். இரத்தம்வாங்கினபின்பு அபின் தின்றால் அல்லது தண்ணீரிற் கரைத்து அபானவழியாய்ப் புகட்டினுற்

Digitized by Google

சகாயமுண்டாம். ஆகிலும் இப்படி அபின் சிறுக இரண்டொரு நாளைக்கன்றி நெடுகப் பாவிக்கப்படாது.

மெல்லிய பழஞ்சீலைத் துண்டை லாடனத்திலே தோய்த்து மேல் வயிற்றுப்பகுதியிலே போட்டுக்கொண்டால், இது மேற் சொல்லியவைகளிலும் பார்க்கப் பத்திரமான முறையாம். மேல் வயிற்றிலே கொப்புளப்பற்று அல்லது கடுகுப்பற்றுப் போட்டு, இரப்பை அழற்சிக்கு எதிர் அழற்சியுண்டுபடுத்துவதினாலுஞ் சிறிது நாளைக்கு நயப்புக்காணும். ஸ்திரியிலே புளிச்சலேப்பங் கண்டால், கரியைப் பொடிப்படுத்திப் பத்துக்கிறேன் எடுத்துக் கொஞ்சப்பாலிற் கலந்து குடித்துப் பார்க்கலாம், அல்லது கொஞ்சம்சருச்சியென்ற மருந்துவகையில் ஏதுமொன்று தின்றுபார்க்கலாம். இவைகள் ஒன்றுக்கும் ஓங்காளம் தணியாமல், சீவசேதம் சம்பவிக்கும் போலே கண்டால் பெறுமாதம் வரமுன பிள்ளை பெறுவிக்கவும் வேண்டும். கோழியாணம்முதலியவைகளை அபானவழியாகச் செலுத்தி ஆளைப்போஷிக்கவும் பார்க்க வேண்டியது. வாந்திக்கும் மருந்து உட்கொண்டதினாற், கருவழிதல் சம்பவிப்பதுண்டுதான். காலைவாந்தியினால் வருஞ் சத்தியினாலோ கருவழிதல் அரிதென்று அறியவும்.

நெஞ்செரிப்பு. இது கர்ப்பிணிகளிலே மிகவும்வாடிக்கை. இதற்கு சருச்சி மருந்து சேர்ந்த கைப்புக்கஷாயம், சோடா அதிகம்சேர்ந்த நுரைபானம், சுண்ணநீரம்; பற்றஷ்நீரம், இவைகளிலே கொடுத்தும் பார்க்கலாம். தீன் உண்டபின்பு சப்காபனேற்சோடாவிலே ஐந்தாறு கிறேன்கொண்ட ஒவ்வொரு குளிகைதின்றுவந்தால் நயப்புக்காணும். இதை, தண்ணீரிலே கலக்கிக் குடிப்பதிலுங் குளிகையாகத் தின்பது உத்தமம். கராம்புக்கஷாயந் திறமென்றும், ஆகரியமிலம் நல்லதென்றும், தாபராமிலம் நேற்றியென்றும் சிலர் பாராட்டிப்பேசுகிறார்கள். இரண்டாம் இலக்கத்திற் சொல்லியிருக்கும் அவிழ்தம் அதிக உத்தமம்.

மலக்கட்டு. இது கருத்தரித்தமுன்மாசங்களிலேயேமிகுதி. சாந்தமான மெல்லிய விரேசனங்களினாலும் பதமையான பாயுரியங்களினாலும், இதைத் தொலைக்கவேண்டும். மக்னீசமும் றூவாபும் சேர்த்துக்கொடுக்கலாம். கொஞ்சமாய் ஆமணக்கெண்ணெய்யுங் கொடுக்கலாம், கரு

Digitized by Google

த் தரித்திருக்கும் முற்பருவத்திலே மலசுத்தியொழுங்காய்ப் பண்ணுமல் விட்டால் மலமானது குடல்களிலே கட்டுண்டு அதிகம் அழற்சிஉண்டாக்கி, சீரணத்துக்கு விக்கினமாய், ஓங்காளத்தை அதிகரிக்கச்செய்து, அம்மலத்தைக் கழித்துத் தள்ள ஸ்திரி நெரித்துமுக்குவதினுற் கருவழிதலையுஞ்செய்யக்கூடும். பிரசவகாலம் வரைக்கும் மலக்கட்டுஇருந்துவிட்டால், மலவாயிற் கிடக்கும் மலத்திரளை பிரசவத்துக்கு அதிக விக்கினமாம். அந்நேரம் மலக்கட்டு உண்டென்பது யோனிவழியாய்ப் பரிசோதிக்கும்போது அறியலாம். உண்டென்று அயிர்த்தால், உடனே விரலினுலாகுதல் அபானத்தில் தண்ணீர்செலுத்துவதினுலாகுதல் அதைக்கழற்றித் தொலைக்கவேண்டியது. மலக்கட்டு மிஞ்சும் வேளையில் மூன்றும் அவிழ்தத்திற்சொல்லியிருக்கும் விரேசனம், அல்லது றூவாப், அல்லது போதுமான ஆமணக்கெண்ணெய் நித்திரைக்குப் போகமுன் உட்கொள்ளவும். காலையிலே வெள்ளென அபானவழியாய்த் தண்ணீர் தாராளமாய்ச்செலுத்தவும். நாலாம் அவிழ்தத்திற்சொல்லியிருக்கும் குழிகையிலே இரண்டெடுத்துத் தின்றால் நன்றாய் மலத்தை இளக்கிவிடும். அயசியாமசும் அலோசும் கலந்துகொடுத்தால் திறமென்று சிலர்சொல்வார்கள். மலத்தை இளக்கக்கூடிய தீன்வகைகள் பழவற்கங்கள், கீரை முதலியவற்றைச் சற்றதிகமாகச் சாப்பிடுவதும் உத்தமம். மலக்கட்டையும் அதனுல் உண்டாகும் விக்கினங்களையும் பக்குவமான போசனங்களால் நீக்கிக்கொள்வதே மகா சவுக்கியம்.

கழிச்சல். இது மலக்கட்டுப்போல் மிகுதியாய் வராதிருந்தும், சிலவேளைகளில் உண்டாகுங் கழிச்சலுக்குக் காரணம் பெரும்பாலும் மலக்கட்டு. கட்டுண்டு நெடு நாளாய்க்கிடந்த மலமானது குடலைஅழற்றி அதினுள்ளுறைச்சவ்வானது அதனமாய் நீருஞ் சளியுஞ்சொரியவும்,குடல் முறுகிக்கொள்ளத்தக்கதாய் அதின்பேசிக்கவசம் மட்டுக்கு மிஞ்சிச் சேட்டை கொள்ளவும்பண்ணும். இப்படியானவேளைகளிலே குடல்கள் தாராளமாய்ச் சுத்தியாவதினுற்றான் கழிச்சல் சகாயமாம். கழிச்சலின் காரணம் இன்னதென்று விளங்காதிருந்தால் வாடிக்கைபோல அதற்கு வைத்தியம்பார்க்கவும்.

லசிகாசலை. இது அதிகப்பட்டுக் கர்ப்பிணியிலே பெ

Digitized by Google

லக்கேடுண்டுபண்ணினால் இதை மாற்றவேண்டியது. மா ற்றுவதுஆகாதென்று சிலர் சொன்னாலும் மாற்றுவதினால் மோசம்வந்துவிடாது. வாயூற்றல் அதிகப்படுகிறதினால் இ ரைப்பையிற் பிசகு தோன்றாதபடி பத்திரம் பண்ணிக்கொ ண்டு காய்ச்சுக்கட்டிப்பாசனம், தர்பந்தீனமிசநீரம்,இவை போலுந் துவர் மருந்துகள்வாயிலேவிட்டுக் கொப்பளிக்க வும். பின் காதவடியிலே கொப்புளப்பற்றுப்போடுவதினா லுஞ் சிலவேளை நயப்புக்காணும்.

பூரோதிரம். கர்ப்பிணிகளிற் பிரதானமாய் மூன்மாசங் களிலே இரத்தக்குழல்களில் ஒருமட்டுக்கு இரத்தம் நி றைந்து இரத்தஓட்டம் துரிதமுமாய் இருப்பது இயல் பென்றும் இதற்கு யாதொன்றுஞ் செய்யப்படாதென்றுஞ் சொன்னோம். ஸ்திரி கர்ப்பிணியாய்விட்டபடியால் இர த்தம் வாங்கவேண்டுமென்பது வைத்தியருக்குள்ளே மு ற்காலங்களில் இருந்த ஒருவழக்கம். தற்காலத்திலோ அவ் வழமை தம்மிட்டுப்போயிற்று. பூரோதிரம் இல்லாதிருக் கையில் இரத்தம் வாங்குவது தப்பு. இரத்தநிறைவும் இர த்தஓட்டக்கதியும் ஒருமட்டுக்கு இருந்தவிடத்திலும், இ வை இயல்புக்குமிஞ்சி ஏதேனும் வியாதியை உண்டாக்கி ன அல்லது அதிகப்படுத்தின என்று நிச்சயங்கண்டாலன் றிமருந்தொன்றுஞ்செய்யப்படாது. இவ்விதி முதல்நாலேந் துமாசத்துக்குமே அமையும். கருமுதிர்ந்து பிரசவகாலங் கிட்ட, பூரோதிரம் அதிகமாயிராது, இருந்தாலோ மோசம். உடம்பு இயல்பிலே உள்ளபடிக்குக் குறைந்து தளர்ச்சிப் பட்டிருந்தால் கர்ப்பிணிகளுக்குப் பிரசவம் லகுவாய் மு டியும்; ஆதலால், சிறுகஉண்டு மலமிளக்குந் தீன்தின்றும், உடம்பைத் தளர்ச்சிசெய்துகொள்வது நலமாம்.

பூரோதிரத்தலைவலி. இது இரத்த நிறைவினால் உண் டுபடும். கர்ப்பிணிகளிலே ஓங்காளத்தினால் வரும் வாந்தி த்தலைவலிக்கும்,நாம் பின்னாற் சொல்லிக்காட்டுகிற சிரோ த்தாபத்தலைவலிக்கும், இது வித்தியாசமானதாய்ப் பெரும் பாலும் ஆறும் மாசத்திலே தோன்றி இரத்தம் அதனமாய்த் தலையிற் சுரந்து, நெறிநாடிகள் துடித்து, காது இரைந்து, கண்கள் சுரப்புக்கொண்டு மின்னி ஒழி மழுங்கவரும். இக்குணங்களுடனே கபாலமும் உண்டுபட்டுத் தலையை ப் பிளக்குமாகில், அங்கவிகிர்தியாகிலும், குதிரைவலி குர ங்குவலியென்னப்படும் பிரசவ வலிகளாகிலும் வருமெ

ன்று பயப்படவேண்டியது. உடனே பூரோதிரத்தைமாற்ற உபாயம்பண்ணவேண்டும். இவ்வகையான அவக்குணங்களைத் தடுக்கத் தகுந்த உபாயங்கள் பத்துப்பன்னிரண்டுஅவுஞ்சளவுக்கு மாத்திரம் இரத்தம் வாங்கல், நெறிகளுக்கு அட்டை இடுதல், தலையைக் குளிராக்கல், குளிர்த்தியான விரேசனம்பண்ணல், சிறுக உண்ணுதல் இவைகளே.

அரிசமாகிய அபானமுளை, விவாரநாளம், காலதைப்பு. இரத்தவோட்டந் தடைப்படுவதினாலேயே இவ்வியாதிகள் தோன்றும். நிமிர்ந்துநில்லாமல் எழும்பாமல் படுத்துக்கொள்வதினாலும், வாடிக்கையாய் வழங்கிவரும் மற்றும்பக்குவங்களினாலுமே இவைகளைச் சாந்திசெய்வது. கர்ப்பிணியாயிருக்கையில், ஸ்திரியிலே அபானமுளை வெட்டப்படாது. வெட்டினால் இரத்தம் அதிகமாய்ப் பெருகிமோசம் உண்டாகும்.

நெஞ்சிடிப்பு, மூர்ச்சை. இவைகள் இரத்தச்சுற்றோட்டத்தொழிற்பிசகினால் உண்டுபடும். இவ்விருகுணங்களும் கர்ப்பிணிகளிலேகாணலாம். மெலிந்தவர்களாய், விதிருகிறவர்களாய், பதறுகிறவர்களாய் இருக்கும் ஸ்திரிகளே இவ்வியாதிகளால் உபாதிப்பட ஏதுவானவர்கள். ஏக்கம், இளைப்பு, பசித்தவக்கம் இவைபோன்ற காரணங்களினாலே அவை உண்டுபடுவதினால், இக்காரணங்களைக் கருத்தாய் விலக்கிக்கொள்ளவேண்டும். திறமான தீனும் தீபகமருந்துகளும் தின்று, சரீர அப்பியாசஞ்செய்து, உடம்பைத் தேற்றவேண்டும். கிருட்டிக்கின மருந்துகளுஞ் சிலவேளை உபயோகமாம். இவைகளுக்குள் ஐந்தாம் அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் மருந்து உத்தமம். அபின் முதலிய மஸ்துள்ளமருந்துகள்அந்நேரத்துக்குச் சகாயங் காட்டினாலும், பின்னே அதிக உபாதிப்படுவதற்கு முன்னே விலைக்குவாங்கி உண்டதுபோலாம். இவைகளை உட்கொள்வதினாற் சீரணத்தொழில் சிதைவாகி நெடுக உட்கொண்டுவந்தாற் சிசுவையுஞ் சிலவேளை அழிக்கும். மூர்ச்சைக்கு இடமான ஸ்திரிகளிலே இரத்தாசயத்தினது நிலைபரம் இன்னதென்று காதுவைத்து அவதானமாய்த் தெளிந்து, வியாதிகாரணமாய் இரத்தாசயம் பழுதுபட்டிருந்தால் அசாத்தியகுணம் நேரிட்டதென்று தீர்த்துக்கொள்ளவும். இக்காரணத்தினாற் பலமுறைகளிலும் மூர்ச்சைகண்டு தெளிந்தாலுங் கடைசியிலே மூர்ச்சையுண்டுபடவே உயிருக்கு இறுதிகாண்பதும் உண்டு.

Digitized by Google

சிரோத்தாபத்தலேவலி. இது ஒருத்தலைவலியாய் கர்ப்பிணிகளில் உண்டுபட்டால் மருந்திலே சுறுக்கு எடுபடாது. சிலவேளை இது வேகம் வேகமாய் வந்து ஒரு சிறு இடத்திலேயேநிற்கும். இரத்தம் வாங்கவேண்டியதென்று உடம்பிலே கண்டால், அப்படிச் செய்வதினுற் பொதுவாய் நயப்புண்டாம். வலிநிற்கும் இடத்தில் அட்டைவிட்டு, கொம்புவைத்து இரத்தம் எடுக்கிறதே உத்தமம். உடம்பிலே இரத்தம் அதிகப்பட்டதாய்க் காணுவிட்டால் மலசலங்களின் சீர் எப்படியென்று முதல் ஆராய்ந்து ஒழுங்குபண்ணிக்கொண்டு பின்பு கிருட்டிக்கின அனுகக்கின மருந்துகளும் உட்கொண்டால், வாய்க்கும். அயசியாமசிலுங் கர்ப்பூரத்திலும் ஒவ்வொரு கிறேன் எடுத்துக்கலந்து உண்டால் நல்லது. ஐந்தாம் அவிழ்தத்திற் சொல்லியிருக்கும்மருந்தும் உண்ணலாம். ஊமத்தை, பெலடொ, கோனியம் என்ற செடிகளேதேனும் ஒன்றில் எடுக்கும் சாற்றைச் சீலேயில் பூசி, தலையிலே போட்டுப் பார்க்கவும். இம்மருந்துகளின் விஷம் உடம்பிலே தாக்காதபடி, கொஞ்சமாய்ப்போடவும். நெடுநேரம் விடப்படாது.

பற்கொதி. இது கர்ப்பிணிகளிலே சிலவேளை உண்டுபடும். இதற்கு வாடிக்கையான மருந்துகளாகிய கிறீயசற்று, கராம்பு, கறுவாத்தைலம், அல்லது அபின் அடைசிப்பார்த்து இவைகளிலே வாயாதிருந்தால் ஸ்திரி பற்கொதியைத் தாங்கிக்கொண்டிருப்பது உத்தமம். அல்லவென்று பல்லேப் பிடுங்கினுலோ கரு அழியவேண்டிய மோசம் வரும். இதிலேயும் பெரிய பல்லில் ஒன்றைப் பிடுங்கினுல் கருவழிவுக்கு அதிகம் ஏதுவாம்.

நித்திரையின்மை. கர்ப்பிணிகளிலே நித்திரையுறக்கம் ஒரு மட்டுக்கு வராமலிருப்பதுமுண்டு. மெலிந்தவர்களாய் பெலவீனமுள்ளவர்களாய் வெடுவெடுப்பானவர்களாய் இருப்பவர்களிலே சிலவேளை கருத்தரித்த முற்பருவத்திலும், மிகுதியாய்ப் பிற்பருவத்திலும், நித்திரை குறைந்துபோம். இப்படி நித்திரையின்றி நெடுநாளிருக்கில், ஆற்றியின்மை, சுரம், மனக்கலக்கம், வலி முதலிய அவக்குணங்களுந் தோன்றி, சிலரிலே கருவழிதலும், சிலரிலே மாருட்டமும், சிலரிலே சீவசேதமும் உண்டாம். ஆளிலே இரத்தம் மிஞ்சினுல் கொஞ்ச இரத்தம் வாங்குவது நலம். குளிர்த்தியான விரேசனம் வெகுவாய் நயந் தரும்

Digitized by Google

ஒரு சிறு வாளியில் அரைச்சாணளவுக்குத் தண்ணீர்விட்டு ஒருநாளுக்கிரண்டொருமுறை கொஞ்சநேரத்துக்கு அதிலிருப்பது நயப்புக்காட்டும். குளிர்த்தியான தீன்தின்று வசதியானமட்டுக்கு வெளியிலே காற்றில் உலாவிச்சரீரவப்பிரயாசஞ் செய்யவும். அனுகக்கினமருந்துகள் இட்டம்போலே கொடுக்கப்படாது. கொடுக்கில் அயசியாமசும் கர்ப்பூரமுங் கலந்துகொடுப்பது அதியுத்தமம். கஞ்சாவிலைத் தலையணையில் படுத்தால் கர்ப்பிணிக்குச் சுகிர்தமாம்.

குச்சுவாசமாகிய முட்டுத்தொய்வு, இருமல். கருமுதிர்ந்தபின்பு, கருப்பை பருத்து வயிற்றறையை மேவ, விதானஇறக்கம் மேலே எற்றுண்டு, முட்டு அல்லது ஓயா இருமல் உண்டுபடும். முட்டுத்தொய்வானது ஆளை அலைக்கழிவுபண்ணினாலும் கொடியதல்ல. இருமலோ பெரும்பாலுங் கொடியதுந் தணியாததுமாய், மருந்தினாற் சாந்தியாகாவிட்டால், அனேகரிற் கருவழிதல் செய்வதுமாய் இருக்கும். கர்ப்பிணியிலே பெலவிறுதி இல்லையென்றுகண்டால், முதலிலே இரத்தம்வாங்குவதினால் நயங்காணும். இதற்குப்பின்பு மலசலக்கழிவுகளிலே பிசகுகண்டால், ஒழுங்குபண்ணும்படி, முதற் பிளுப்பில் கொடுத்துப் பின்பு றூவாப்பும் மக்னீசமும் சுகபேதியாகக் கொடுக்கவும். மலசலம் ஒழுங்குப்பட்டால், அனுகக்கினமருந்துகள் தாராளமாய்க் கொடுக்கலாம். தீன்பக்குவங்களைக் கவனமாய்ப்பார்க்கவும். அரூற்றுமாவும், சவ்வரிசியும், நெல்லரிசியுமே இதற்கு இணங்கின பதார்த்தங்கள். கர்ப்பிணி ஒரே வகையான பதார்த்தம் உண்டுவருவதினால் அதிக நலப்புண்டு. இதனால் சீரணமும் லகுவாம். அதிகந்தீன்தின்னாதபடி தடுப்பதற்கு நல்ல உபாயமுமாம்.

முலைவாதை. முதன்முதற் கருத்தரிக்கும் ஸ்திரிகளிலே முலைவாதை அதிகமாயிருக்கும். வாதை அதிகமேயாகில் வெந்நீர்ச்சீலைபோடலாம்; அல்லது வருத்தத்தைத்தணிக்கப் பூச்சுமருந்து பூசலாம். முலைவீங்கி அதிகம் வெப்புக்கொண்டால் இரண்டொரு அட்டைவிடலாம். முலையிலுள்ள இரத்தக்குழல்களிலே அந்நேரம் இரத்தம் நிறைந்து அதிகம் விம்மியிருக்குமாதலால் அட்டைக்கடிவாயினால் உண்டாகும் இரத்தப் பெருக்கைத் தடுத்துக்கொள்வது சிலவேளை பிரயாசம்.

சலம் கொடித்தல். கர்ப்பஸ்திரிகளிலே பெரும்பாலும்

Digitized by Google

ஒவ்வொரு மாசத்திலும் இக்குணந் தோற்றும். இதுமருந்திலே நில்லாது. பிரசவம் நன்றாய் முற்றுமென்பதற்கு இது ஓர் நற்குறியென்று வயதுமுதிர்ந்தபெண்கள் பேசுவார்கள். அவர்கள் சொல்வதுஞ் சரிதான்.

அல்குற்றினவு அல்லது சொறிவு. இது பிறருக்கும் உண்டேயென்றாலும், கர்ப்பிணிகள் இதினால் அதிக உபாதிப்படுவார்கள். சிலவேளை இது அதிகங் கடுமையானதாய், மானம் மருங்கையுங் கெடுக்கும். இவ்வியாதியின் தன்மை இன்னதென்று நிதார்த்தமாய் எடுத்துவிளக்கி இதற்கு உபயோகமான மருந்துங்காட்டினவர் திவீச என்றபண்டிதரே. இவர் அல்குற்சொறிவுள்ள ஒரு ஸ்திரியைக் கண்ணாரப் பரிசோதித்துப்பார்த்தபோது அல்குலிலே சிதகவிதையாகிய புண்பிடித்திருப்பதுகண்டு, வாயிலே அப்படிப்பட்ட புண்வந்தாற் பாவிக்கும் மருந்தாகிய வெங்காரவிலயனம் இதற்கும் பிரயோகித்து, உடனே மாற்றிப்போட்டார். அல்குற் சொறிவிலே சிதகவிதை என்னும் புண் கண்டால் இம்மருந்து மாற்றிப்போடும். காணாதிருந்தால் கலமல் பற்பம் போட்டால் சிலவேளை பிடிக்கும். சூடும் வீக்கமுங் கண்டால், இடைக்கிடையே பேதியுப்புக்கொடுப்பதும் சிறு கடகமொன்றிலே மூன்றங்குலஆழத்துக்குத் தண்ணீர் நிறைத்து, நாளொன்றுக்கு இரண்டுமூன்றுமுறை அதினுள் இருத்துவதும் நலமாம். திவீசு என்பவர் ஒருத்திக்குக் கபேவபல்சம் என்ற மருந்துகொடுத்து மாற்றினார். அல்குலினது புனிதமேஅதிகம் அவசியம்.

பொய்நோக்காடு. இது பின்மாசங்களிலே அனேக கர்ப்பிணிகளில் உண்டுபடும். ஆறும் மாசத்தின் பின்பு, வெகுவாய் எட்டாம் மாசக் கடைசியிலே, அல்லது ஒன்பதாம் மாசத்திலே பொய்நோக்காடு உண்டாகும். பிரசவநோக்காடு அல்லாதபடியினால் இதைப் பொய்நோக்காடு என்பது. பிரசவநோக்காட்டையும் பொய்நோக்காட்டையும் விகற்பித்தறிவது சிலவேளை பிரயாசம். நோக்காட்டின் தன்மையையும் அதுவரும் வேளையையும் அறிந்தால் காரியம் இன்னதென்று அறிவதற்கு நமக்கு உதவியாம். பொய்நோக்காடு பிரசவநோக்காடுபோலே ஒழுங்காய்வருவதரிது. கருப்பைவாய் இதினால் விரிந்துகொடுப்பதாகுதல், குறிகாண்பதாகுதல் அரிது. கனத்தபொருளைத்தூக்கி உயர்த்தல், முக்கல், நெடுநேரம் நட

Digitized by Google

த்தல், ஈரமானநிலத்திலே நெடுநேரம்நிற்குதல், இவைபோ லும்புத்தியீனமானசெய்கைளினுலாவது, யாதொருஇடை யூற்றினுலாவது பொய்நோக்காடு சம்பவித்ததென்று கண் டால் அது இன்னதென்று லேசாய் நிதானிக்கலாம். இதற் கு அனுகக்கின மருந்துகள்கொடுக்கவேண்டியது போலத் தோன்றினுலும் முதல் நன்ருய்மலசுத்திசெய்யும்படி றூவா பும் சோடாவும் கிலவாகைச் சீனிலேகமும் அல்லது பிளு ப்பிலும் றூவாபும் கொடுத்து மலசலக் கழிவுகளை ஒழுங்கு பண்ணிக்கொண்டே, பின்பு அனுகக்கினங்களாகியமாவி யா அயசியாமல் கர்ப்பூரம்முதலியமருந்துகளைக் கொடுத்து ப்பார்க்கவேண்டியது. நல்லெண்ணையும் லாடனமுங்கலந் து வயிற்றிலே மெல்லெனவாக உரைஞ்சுவதுந் திறம்.

சூலுடைமைக்கும் வியாதியின் தோற்றத்துக்கும் நடை க்குமுள்ள சம்பந்தம். இவைகளைப்பற்றிச் சொல்வதற் குக் கண்டறிந்த சம்பவங்கள் போதா. கர்ப்பிணியாயி ருந்தால் இது மாரகநோய்களை அணுகவிடாது என்பது ஓர் பொது விதியேயாயினும் விலக்குகளும் உண்டு. இதற் கு மாருய்ச் சில தருணங்களிலே கர்ப்பிணிகளையேமாரக நோய் அதிகந் தாக்குமென்றுஞ் சொல்லுவார்கள்.

கர்ப்பிணியிலே தீவிரநோய் உண்டுபட்டால் மிகுதியா ய் மோசப்படுத்துமாதலால், "தீவிரநோய் வந்தாற் கர்ப்பி ணிகள் சாவார்கள்" என்பது இபாக்கிரத பண்டிதர்சொ ல்லிய ஓர் சூத்திரமாயிற்று. இவ்வண்ணமே கர்ப்பிணி களில் உண்டுபடும் மோசம் சுரக்கோலத்தினுலும் கரம் புமண்டலத்தின் அதியழற்சியினுலும் மாத்திரமல்ல, தீவி ரநோய் பெரும்பாலும் சிசுவை அழிக்கிறதினுல் விளையும் மோசங்கள் அக்குணங்களோடு கூடுவதினுலும் ஆகின்ற து. தீவிரநோயை மாற்றுவதற்குக் கடினமான வைத்தி யஞ்செய்வதினுலுஞ் சிசு நாசமாகக்கூடும். கடியவிரேச னங்களும் வலிங்கரமான வாந்திமருந்துகளுங் கொடுத்தா ல், இதரத்தால் அதியுமிழ்நீர் பாயப்பண்ணினுல், மட் டுமிஞ்ச இரத்தம்வாங்கினுல் சிசுநாசம் நிச்சயமாம். ஆகையால் கர்ப்பிணிகளிலே தீவிரநோய்க்கு வைத்திய ஞ்செய்யும்போது நாம் அவதானமும் பத்திரமுமாய் இரு க்கவேண்டுமென்று அறிந்துகொள்வோமாக. சுரத்தின் தோற்றக்குணங்கள் எப்பொழுது உண்டாமென்று காத்தி ருந்து, கைகண்டசாந்தியான மருந்துகளினுல், உடனே

Digitized by Google

அவைகளைத் தடுத்து, பத்தியத்திலுந் தீனிலும் அதிக அவதானமாயிருக்கவும். கர்ப்பிணியை இப்படிச் சூழ்ந்திருக்கும் மோசங்களுக்கு விலக்கி அவளைச் சீவனுடனே தப்புவிப்பது சாந்தியான மருந்துகளினாலும் அற்பகாரியங்களிலே அதிக அவதானமாயிருப்பதினாலுந் தான். ஸ்திரியில்உண்டுபடுந் தீவிரநோய்க்கு வைத்தியஞ் செய்கையில், அவள் கர்ப்பிணியென்றதை மறந்து மோட்டுத்தனம் பண்ணப்படாது.

கர்ப்பிணியாயிருப்பதினால் நாட்பட்ட வியாதிகள் வேறுபடுவது துலக்கமல்ல. தீவிரநோயைப்போல நாட்பட்டவியாதி ஆளுக்கு மோசஞ் செய்வதில்லை. சில ஸ்திரிகள் கர்ப்பிணியானவுடனே அவர்களிலுள்ள நாட்பட்ட நோய்கள்அதிகப்படாமற் பிரசவகாலம் வரைக்கும் இருந்தபடியே இருந்துவிடும். சிலர் கர்ப்பிணியானவுடனே நீர்க்கவியாதி மாறுவதற்கான இடமுண்டாம். கர்ப்பிணியாகவே சிலவேளை கயரோகந் தடைப்படவுங் கூடும். ஆகிலும் பிரசவித்தபின்பு அதிககெதிகொள்ளும். சிலகாலந் தடைப்படுவதுமுண்டு. மற்றும் வேளைகளிற்போற் கர்ப்பிணியாயிருக்கும் வேளைகளிலுங் கயஞ் சீக்கிரம்பண்ணவும் எலும். கயரோகத்தினாற் கருவழிவது அரிது. சிசு பூரணமாகப் போஷிக்கப்படுவதற்கு அதினால்விக்கினமில்லை.

தீன். அதிகம் போஷணமில்லாதனவாய்ச் சற்றே மலவிளக்கஞ்செய்யும் மெல்லிய தீன்களாயிருக்குங் கனிகள், கீரைகள், மரக்கறி முதலியவைகளையே தின்று, சீரணமாகாத கடுந்தீன், நன்றாய்த் தாளித்த இறைச்சிக்கறி, மதுபானம், இப்படிப்பட்டவைகளையோ உண்ணப்படாது. முதல் நாலுமாசமும் இந்த ஒழுங்காயே நடப்பது தகும். சிசு உசும்பி, சீரணந் திறப்பட்டபின்பு புஷ்டிதரும் போஷணசாரமுள்ள தீன்தின்று பிரசவகாலங்கிட்டவோ மறுபடி மெல்லியதீனிலே தொடங்கவும். பிரசவகாலத்துக்குச் சிலநாட்களுக்குமுன் கர்ப்பிணிகளின் தேகம் சற்றே தளர்ச்சிகொண்டிருக்குமாகில், அது பிரசவத்திலே அவர்களுக்கு நன்மையாகிறதென்றுதமது அநுபவத்தினால் அறிந்ததென்றும், ஆனதால், ஒன்பதாம் மாசத்திலே உண்டியைச்சுருக்கி மலமிளக்கும் விரேசனங் கொடுத்துவருவது நலம் என்றும், தெலவீல் என்னும் பண்டிதர் சொல்லுகிறார். இது நல்ல ஒரு பக்குவந்தான். வாயுப்பொருமலுண்டாக

Digitized by Google

க்கூடிய பதார்த்தங்களும் இவ்வேளையில்உண்ணப்படாது.

குளிர், நச்சுக்காற்று முதலியவைகள் கர்ப்பிணியில் தாக்கும் என்பது அறிந்தகாரியம். குளிர், மாரி, பதிவும் ஈரமுமானஇடங்கள், நச்சுக்காற்றுவீசும் வெளிகள் இவை கர்ப்பத்தைப் பழுதுபண்ணிக் கருவழிதலையுஞ் செய்யுமென்பது, வெகுகாலமாய் அறிந்தகாரியம். சிலசில நூதனமான காலங்களிலே மிகுதியாய்க் கருவழிந்தும் பிள்ளை செத்துப் பிறந்தும் வேறுசில விக்கினம் நேரிட்டும் வந்ததற்குக்காரணம் மாரி, குளிர் முதலிய காலவிசேஷமேயாம். மிகுதியாய்க் கருவழிவுக்கு உறுதியானகாரணம் நச்சுக்காற்று. பதிவும் ஈரமுமான அல்லது நச்சுக்காற்று வீசுவதான இடத்திலே வசிக்கும் ஸ்திரிகளிலே பலமுறையுங் கருவழிதலுண்டுபடுமானால் அவர்கள் கர்ப்பிணியாகும்போது, அவ்விடம்விட்டுச் சுவாத்தியமான இடத்துக்குப் போகவேண்டும்.

சரீரஅப்பியாசம். கர்ப்பிணிகள் சுவாத்தியமாயிருக்கவேண்டில், சரீர அப்பியாசம்போலப் பின்னொன்று உத்தமமல்லாதபடியினால், எவருஞ் சரீரஅப்பியாசமே செய்யவேண்டும். ஆள் சற்றே தொய்யுமளவுமேயன்றி முற்றாய் இளைத்துப்போமளவுந் தேகஅப்பியாசஞ் செய்யப்படாது. கர்ப்பிணியாயிருக்கும் பின்மாசங்களிலே சில ஸ்திரிகளை வருத்துவதாயிருக்கும் நித்திரையில்லாமையை நீக்குவதற்கேற்ற பக்குவஉபாயம், சற்றுத்தொய்யுமளவும் வெளிகளிலேதேகஅப்பியாசஞ்செய்தலேயாம். இத்துடனே ஒழுங்கான குழிப்பு,முழுக்கு,நித்திரையும் வெள்ளென நித்திரையால் எழும்புதலுங் கூடிவிட்டால் நித்திரைஉண்டாகும்பொருட்டு என்னமருந்தைக் கொடுத்தபோதிலும் இதுபோல வாயாது.

உடை. ஒருபோதும் மெத்த இறுக்கி உடுக்கப்படாது. உடம்பை அதிகம் அமர்த்தி இரத்த ஓட்டத்தைத் தடுக்கும் எதினாலும் மோசம்வரும்.

கிளர்ச்சி, ஏக்கம், கிலேசம், வியாகுலம் முதலியவைகளை உண்டாக்கும் யாதொரு செய்கையையாகிலுங் காட்சியையாகிலுஞ் செய்தியையாகிலுங் கர்ப்பிணிகள் காணக்கேட்கப்படாது. இவைகளால் விளைந்தகேடுகள் பலருக்கும் விளங்கும். சாவீடு, திருவிழா, கூத்து இப்படியான இடங்களுக்கு அவர்களை விடப்படாது.

Digitized by Google

## ௬ம். அதிகாரம்.

### பிரசவம்.

சூற்கருப்பையின் வியூகனத்தையும் தொழிலையும்பற்றி நாம் சொல்லிக்காட்டிய விவரத்தினால், அச்சூற்கருப்பையினுள் இருக்கும் அன்னிய பதார்த்தங்கள் அதினின்று பிரிவது பிரயாசமான செயலென்றேமுடியும். நடக்கவேண்டியசெயல், அவ்வன்னிய பதார்த்தங்கள் வெளியிலே பிதுக்குண்பதுமாத்திரமல்ல; கருவைத்தாங்கி இருந்தஉறுப்புகள், கருத்தரிக்கமுன் இயல்பிலே இருந்தவண்ணமாய் மறுபடியும் நன்றாய்ச் சீர்ப்படுவதற்கு ஏற்ற பக்குவமாவதுமாம். கருப்பையின் பேசிஇழைகள் உதரபேசிகளினதும் விதானத்தினதும் செய்கையோடுகூடி, தாமாய்ச் சுருங்கச் சுருங்க, இவைக்கிசையப் பிறவிவாசல்களோ விரிந்து விரிந்துகொடுத்தே அவ்விருகருமங்களும் முற்றுப்பெறுகின்றன. கிரமப் பிரசவத்திலே கருப்பையானது அடிக்கடி திரும்பத் திரும்பச் சுருங்கித் தன் உட்பக்கத்துக்குஞ் சினைக்கும் இடையிலேஇருந்த ஒட்டைப்பிரித்து கருமுதலிய உள்ளுடன்களை முற்றும் வெளியேபிதுக்கிவிடும்; அந்நேரமே ஒருதுளிஇரத்தமாகிலும் வெளியே பொசியாதபடி, சுருங்குண்ணும் கருப்பையின் இழைகள் கருப்பைக்குஞ் சினைக்கும் இடையேசெல்லும் பெரிய இரத்தக்குழல்களை நெரித்துத் தடுத்துக்கொள்வதுமுண்டு. கடைசியாய், கருப்பை மெல்லமெல்லச் சுருங்கி, சிலநாளின்பின்பு கருத்தரிக்க முன்னிருந்த தன்மை பருமையிலேவந்துவிடும். கருப்பையின் இழைகள்சுருங்கச் சுருங்க ஸ்திரிக்கு வருத்தம் உண்டுபடும், இதையே நோக்காடென்பது.

கிரமப்பிரசவம் குறித்த தவணையிலே தொடங்குவதற்குக்காரணம் இன்னதென்றுவிளங்க ஏலாது. கருவானது கருப்பைக்குள் சிலகாலத்துக்கு இருக்கும் சத்தியைஉடையதாய்ப் பின்பு கருப்பைக்கு அன்னிய பதார்த்தமாய் வருவதுபோலே தோன்றுகின்றது. ஒன்பதாமாசமுடிவிலே கரு பூரணமாய்ப் பிரசவவேதனை தொடங்கும் என்றதே நாம் அறிந்தது.

மருத்துவநூலாசிரியர் தங்கள் தங்கள் கருத்துக்கு இசை

Digitized by Google

யவே பிரசவங்களைப்பகுத்து இலக்கணம் சொல்வார்கள். தென்மன் என்றபண்டிதரின் பகுப்பிலக்கணங்கள் தெளிவும் வேண்டியளவு விரிவுமாயிருப்பதினால் அவைகளையே நாமும் அங்கிகரித்து, ஒழுங்கும் ஒழுங்கீனமுமாய் வரும் பிரசவ விகற்பங்களையெல்லாம் கிரமப்பிரசவம், கஷ்டபிரசவம், கிரமாதீதபிரசவம், விபரீதபிரசவம் என்னும் நாலுபகுதிகளாய்ச் சிந்திப்போமாக.

கிரமப்பிரசவம். இது, மாசஞ் சரியாய்நிறைவேறிச் சிசுவின் சிரசுஉதயமாய், அறுபதுநாழிகைக்குள் பிரசவம்முற்றி கருவிமுதலிய பிரயோகம் வேண்டாமற் பிள்ளைஉயிராய்ப்பிறப்பது.*

பிரசவத்தின் முற்குறிகள். பிரசவந்தொடங்கச் சிலநாளுக்குமுன் பெரும்பாலும் வயிறுவிழுந்து சற்றேவாடிப்போம். கருப்பைக்கழுந்து கூபக மேற்பந்தையுள் இறங்குவதினாலும், கருப்பையின் உட்பக்கம் சுருங்க எத்தனிப்பதினாலுமே அப்படியாகின்றது. கூபகத்தினுள்ள இடம் போதுமானதென்றும், கருப்பை தன்தொழிலிலே தொடங்குகிறதென்றும், அதினாலேதோன்றுகிறபடியால், அது ஒரு நயந்த குறிதான். அப்போது ஸ்திரியிலே ஆற்றியின்மையும் கவலையுமுண்டுபடும். சலப்பை அழற்சிகொண்டிருந்தால் சலக்கடுப்பும், மலவாகி அழற்சிகொண்டிருந்தால் மலச்சிறுப்பும் உண்டாம். யோனியாலே சளிசீதங்கள் அதிகமாய்வரும். இடுப்புவழியேயும் வயிற்றிலேயும்அங்கும் இங்கும் சற்றே குற்றுந் தெண்டலுந்தோன்றும். பொதுவாய் இப்படியேதொடங்கும் சிலரிலோ இவைகளில் யாதொன்றுந்தோன்றாமற் பிரசவவேதனைதொடங்கிவிடும்.

பிரசவநோக்காட்டு வருத்தம் மிகுதியாய் முதுகிலும் இடுப்பிலுமேயுண்டாய் தொடையின்மேற்பகுதியைச் சுற்றிச்செல்லும். சிலவேளை அடிவயிற்றிலே முதல் உண்டாய், கருப்பைக்கழுந்தாலே, பின்பக்கமாக இடுப்புக்குச்செல்லும். மெய்நோக்காடு பொய்நோக்காட்டுக்கு வித்தியாசப்பட்டு ஒழுங்கொழுங்காய்வரும். இடையாற்றிநேரம்

* வெல்லேசிலிசாலையிலே சம்பவித்த, ௮௧௧. பிரசவங்களிலே, ௬௪௭. ௧௫. நாழிகையில் முற்றின. ௬௦௦. ௬௦. நாழிகையில் முற்றின. ௮௭. ௪௫. நாழிகையில் முற்றின. ௯௧. ௫௦. நாழிகையில் முற்றின. ௧௭. ௧௨௦. நாழிகையில் முற்றின. ௬. ௧௪௦. நாழிகையில் முற்றின. ௯. ௧௫௦. நாழிகையில்முற்றின. ௧. ௧௮௦. நாழிகையில் முற்றிற்று.

Digitized by Google

ஒன்றுக்கொன்று சமனுய்இருக்கும், அல்லது பிரசவநடை ஏறஏற இதுவோ குறைந்துவரும். நோக்காட்டின் இடையாற்றிநேரமானது கருப்பையின் துரிதத்துக்குத் தக்கதாய் ஒருநிமிஷந்தொடுத்து முப்பது நாற்பது நிமிஷம் வரைக்கும் ஆளுக்குத்தக்கதாய் வித்தியாசப்படும். மெய்நோக்காட்டுவேளையிலே கருப்பைவாயிலே விரலைவைத்துப்பார்த்தால், கருப்பை சுருங்குதலின் உன்னிப்புக்குத் தக்கதாகவே ஒருமட்டுக்கு அதுவும் விரிகிறதாய்த்தெரியும். கருப்பைவாய் சற்றேவிரியவிரிய, பன்னீர்க்குடம் அதற்குள் இறங்குவதாய் அந்நேரம்தெரியும்.

பிரசவத்தின் பருவத்துக்குத்தக்கதாக நோக்காட்டின் தன்மையிலேயுந் தெளிவான வித்தியாசமுண்டு. பிரதானமாய் கருப்பைவாயை விரிப்பதே அது முதன்முதற் செய்யுந் தொழில். இக்காரியத்தை நிறைவேற்றக் கருப்பை இழைகள் சுருங்குவது மாத்திரம்போதுமாகையால் அவ்வேளையில் ஸ்திரிகள் தெண்டித்துமுக்கார்கள். இவ்வகையான நோக்காடுகளால் உண்டுபடும் வருத்தம் நெருநெருப்பாய்க் கூர்க்கத்தியால் வெட்டுமாப்போல் இருக்கும். அந்நேரத்திலேதான் ஸ்திரி இரைந்து கீச்சிட்டலறுவது. கருப்பைவாய் விரிந்தபின்பு பெறுநோக்காடு உண்டாக ஸ்திரியானவள் நன்ருய் முக்கித்தள்ளுவாள். இப்படி முக்குகையில் அவள்மூச்சுவிட ஏலாது, ஆகையால் அந்தநோக்காடுஒன்றுவந்தால் அதுஆறும் வரைக்கும் சற்றும்அனுங்கமாட்டாள். இடையாற்றி வந்தவுடனே பெரிய நெடும் புலம்பலாய் அனுங்குவாள். புலம்பனுங்கலின் சாடையிலே, பிரசவம் இன்னபருவத்திலே வந்து விட்டதென்று இதுகாரியத்திலே நன்ருய்ப்பழகினவர்கள் மட்டிட்டுக்கொள்ளுவார்கள். அனேக ஸ்திரிகள், பிள்ளையின் சிரசு யோனியால் வெளிப்படுவதற்குமுன் வருத்தத்தினீட்டம் அனுங்கார்கள். வெளிப்படுகையிலோ வேதனையினீட்டம் கீச்சிட்டிரைவார்கள். இதை ஒரு முறை கேட்டவன் எவ்வேளையிலும் மட்டிட்டுக்கொள்ளுவான்.

மேற்சொல்லிக்காட்டியவைகளுக்கு மிகவும்வித்தியாசமான நோக்காடுகளுண்டாய், இடையாற்றியிலே ஒழுங்கின்றிக் கருப்பைவாயிலே விரிவுதோன்ருதிருக்கில், அவை பிரசவத்துக்கு அறிகுறியல்லாத பொய் நோக்காடுகளென்னப்படும்.

Digitized by Google

கிரமப்பிரசவ நடையைப் பலஆசிரியரும் பாதங்களாய்ப் பகுத்திருக்கிறார்கள். தென்மன் என்ற ஆசிரியரின் பகுப்பு தெளிவாயும் வேண்டியவைகள் அடங்கியவாயும் இருப்பதினால், அவருடைய பகுப்பின்படியே மூன்றுபாதங்களாய்ச் சிந்திப்போம்.

முதற்பாதத்திலே, பிரசவத்தின் தொடக்கந்தொடுத்து கருப்பைவாய் நன்றாய்விரிந்து பன்னீர்க்குடம் உடைந்து பன்னீர்பாயும் வரைக்கும் உள்ளசெயல்களும், இரண்டாம்பாதத்திலே, அதுதொடுத்துப் பிள்ளை வெளிப்படும் வரைக்கும் உள்ளவைகளும், மூன்றாம் பாதத்திலே, அணையமானது கருப்பையினின்று பிரிந்துவெளியில் விழும்செயலும் அடங்கும்.

மேலேசொல்லிக்காட்டிய முற்குறிகள்தோன்றினபின், இடுப்புவழியே அல்லது அடிவயிற்றிலே சுட்சுள்ளென்று நோக்காடுகண்டு, முதற்பாதந்தொடங்கும். இந்நோக்காடு ஒழுங்கொழுங்காய்வந்து, கொஞ்சநேரம்நின்றபின், யோனியாலே இரத்தங்கலந்ததாய்ச் சளிப்பற்றுவரும். இதைத்தான் மருத்துவிகள் குறிகண்டிருக்கிறதென்பது. கருப்பைக்கழுந்தின் பக்கங்களையும்அதற்குக்குறுக்கே கிடக்கும் பலாயிதச்சவ்வையும் தொடுத்திருந்த சிறு இரத்தக்குழல்கள் வெடித்துப்பாயும் இரத்தமும், கர்ப்பிணியாயிருக்கையிலே கருப்பைவாயில் அடைத்திருந்த இறுகற்சளித்திரளையும், அவ்விரத்தச் சளிப்பற்றிலே காணும். சிலரிலே, இவ்விறுகற்சளியே வட்டத்துண்டமாய் வெளிப்படும். முதலிலே நோக்காடு நெரிநெரிப்பாகவும் இடையாற்றி நெடிதாகவும் இருக்கும். வரவரவோ இடையாற்றி நேரம் குறுகி, நோக்காடுநெடிதாகும். யோனிவழியாய்ப் பரிசோதித்துப் பார்க்கில், கருப்பைவாய் நோக்காட்டுவேளையிலே சற்றுத்திறந்து படிப்படியே அதிகமதிகம் விரிந்து நிற்பதாய்த்தெரியும். இப்படி விரிந்து விரிந்துவர, பன்னீர்க்குடம் மெல்லிய ஆப்புப்போல அதனுள்இறங்கி, குணமாய் விரிவதற்கு ஏதுவாம். நோக்காடு எழும்பஎழும்பப் பன்னீர்க்குடம் யோனிக்குள்ளே தள்ளுண்டு கடைசியிலே வெளியிற்பிதுங்க, கருப்பைவாய் நன்றாய்விரிந்த பின்னே, பன்னீர்க்குடம் உடைந்து பன்னீர்பாய, இப்படி முதற்பாதம்முற்றுகிறது.

Digitized by Google

*௨௩ம். படம்.



இம்முதற்பாதத்திலே சற்றே சுரக்கனற்பு உண்டாய், ஸ்திரியிலேஎம்பலுந்தேம்பலுந்தோன்றி நாடித்துடிப்புக் கிளர்ந்து முகஞ்சுரந்துவிடும். சிலவேளை சுரம், குலைப்பன், தலையிடி, தாகம்முதலியனகிளம்பும். இரைப்பைக்கும் கருப்பைவாய்க்கும் நரம்புவழியாய் நெருங்கிய சம்பந்தம் இருப்பதினால் அனேக ஸ்திரிகளிலே ஓங்காளமுஞ் சத்தியுமுண்டுபடும், சில ஸ்திரிகளுக்குப்பிரசவத்தில் நோக்காட்டுக்கிடையாற்றிநேரம் எல்லாம் நித்திரையுறக்கம்வரும்.

தலைப்பிள்ளைப் பேற்றிலே கருப்பைவாய் விரியப் பதினைந்து நாழிகை தொடுத்துத் தொண்ணூறு நாழிகையளவு செல்லும். சில ஸ்திரிகளிலோ பிரதானமாய் மூன்றும் பிள்ளைகளைப்பெற்றவர்களிலோ, அற்ப வில்லங்கமாய்ச் சொற்ப நோக்காட்டோடே விரியும். சில வேளைபன்னீர் மெத்த முந்திப் பாய்ந்துவிடுவதுமுண்டு.

†௨௪ம். படம்.



இப்படியான பின்பு மிகுதியாய்க் கருப்பைசுருங்குதலால்நோக்காடு அதிகரித்து சிசுஇறங்கத்தக்கதாய்க் கருப்பைவாய்விரியமுன் ஸ்திரியைப்பெலச்சோர்பாக்கும். அதற்குப் பின்பிரசவநடைசோலியுந் தொந்தரவுமாகும். பிரசவந் தொடங்கப் பலநாள் அல்லது சில கிழமைக்குமுன், பன்னீர் பாய்ந்திருந்தும் பிரசவமானது லகுவாய் கிரமமுமாய் முற்றினதுமுண்டு.

இரண்டாம் பாதம். பன்னீர் பாய்ந்தபின்புதான் பெறுநோக்காடு தலைப்படும். இடையாற்றிநேரங் குறுகி, நோக்காட்டுவேளை நெடுகி அதிக முக்கல் உண்டாம். அப்போது சிசுச்சிரசின் பித்திகைக்கரேகை, மேற்பந்


* வலமிடமாய்ப்பிளந்த கூபகத்தின் இடப்பாதி. இதில் இளஞ்சிசு கருப்பையில் கிடப்பதும், சலப்பை, மலப்பை, யோனி, பீடிகையென்பு அடுத்திருக்கும் விதமும்விளங்குகிறது. கர்ப்பதாரனஞ் செய்யும்படி விரல் விடுகிற மாதிரி இதில்தெரிகின்றது.

† கருப்பைக்கழுத்தின் பாவனை. அதின் கீழ்நுனியிலுள்ள வாய்வழியாகப் பிரசவத்தின் தொடக்கத்திலே, பன்னீர்க்குடம் பிதுங்கிவரும்விதந் தெரிகின்றது.

Digitized by Google

தையின் சாய்விட்டங்களுள் ஒன்றோடிசைய மேற்பங் தையைக் கடந்து கருப்பைவாய்க்கு ஊடாக யோனியுள்

*உரும். படம்.



இறங்கி, நோக்காடு கொள்ளக் கொள்ளச் சிசுவின் முகமானது பீடிகைக்கவிகையுள் திரும்பி சிரசானது விடபத்திலே உறுத்தி, கருப்பைச்சுருங்குதலானதுமூன்றும் அதிகாரத்தில் விளக்கிய பிரகாரம் சிசுவைப் பின்னுக்கு விடபத்துக்கூடே தள்ளுமாப்போல் சிசுவில் உறுத்தும். மலவாகியில் அந்நேரம் மலம் இருக்குமெனில் அது நோக்காட்டுவேளையிலேகழன்றுபோம். மலமில்லாமல் இருக்கில் சிசுவின் சிரசு அக்குடலில் உறுத்த மலங்கழியவருகிறதென்று நினைப்பாள். சிசுவின்சிரசு படிப்படியாய்ப் பீடிகையினதும் ஆசனத்தினதுஞ் சாய் தளங்களாற்சென்று அதின் உச்சி மேகனத்தவரின்கீழ்த் தள்ளுண்ண, அல்குலின் இதள்களுக்கிடையே உச்சிவெளிப்படும். இப்படி நின்றுவிட்டு நோக்காடு தணியவோ, சிரசு உள்ளுக்குவாங்குண்டு மறுபடிநோக்காடுதோன்றி முக்க வெளிக்குப் பிதுங்குண்டு இப்படி வெளியுறுப்புக்கள் நெகிழ்ந்துகொடுத்ததற்குத் தக்கதாய்ப் பலதரம் உள்வாங்கியும் வெளியே பிதுங்கியும்நின்று, கடைசியாய் ஒருவலுநோக்காட்டுமுக்கிலே சிரசு உள்வாங்காமல் முற்றாய் வெளிக்குவரும். அந்நேரந்தான் பிரதானமாய் தலைப்பிள்ளைப் பேறேயாகில் ஸ்திரி கொடிய வேதனைப்பட்டு, சில்வேளை சரீரம் உதற சற்றுநேரம் மாறாட்டமாயும் போவாள்.

தலை வெளிப்பட்டபின்பு, ஐந்து நிமிஷந் தொடுத்துப் பத்துப்பதினைந்து நிமிஷம்வரைக்கும் ஒரு இடையாற்றிவருவதுண்டு. இதின்பின், நோக்காடு மறுபடியுண்டாய்ச் சிசுவைத்தள்ள, இப்படித் தள்ளுகையில் அபானத்தை நோக்கிக்கிடந்த அதின் முகம் தாயின் தொடையொன்

*பன்னீர்க்குடம்உடைந்து சிசுவின்தலை கருப்பைவாய்வழியாகவெளிக்கிடுகிறபாவனை. B.சிசுவின் தலை. அதற்குமுன் மேகனுசந்தி, அதற்குப்பின் பீடிகைக்கவிகை, அதற்குக் கீழ் யோனிதெரிகின்றன. O. ஓர்சினைப்பை. கருப்பைப்பக்கங்களிற் படரும் இரத்தக்குழலொன்றும், கருப்பைலதையொன்றின் வெட்டுண்டதலைப்பு தூங்குகிறதுந் தெரிகின்றன.

Digitized by Google

றுக்கு நேரே திரும்பித் தோள்கள் அல்குலின் நெடுவிட்ட நேருக்குவரும். பின்னும் நோக்காடு எழும்பவெழும்ப, தோள்கள் ஒன்றின் பின் ஒன்று வெளிப்பட்டு, கடைசியாய் உடலுங் கைகால்களும் யோனி வழியாய்வந்து இப்படியே கிரமப்பிரசவத்தில், கருப்பைசுருங்குதலொன்றினாலே பிரசவம் முற்றுப்பெறும்.

கிரமப்பிரசவங்களெல்லாம் நாம்இங்கேசொல்லியவண்ணம் மூன்று பாதங்களாகவே பகுக்கப்படும் என்று எண்ணவேண்டியதில்லை. அற்பசொற்ப காரியங்களிலேஅநேக விகற்பம் உண்டாகும். உதாரணமாய் அநேக ஸ்திரிகளிலே கருப்பைவாய் நன்றாய் விரியுமுன்னே, பன்னீர்பாய்வதுண்டு. பன்னீர்க்குடம் முதல்வெடியாமல், அதுவும் அதற்குள் இருக்குஞ் சிசுவின் சிரசும் யோனிவழியாய் வெளிப்பட்டபின் வெடிப்பதுண்டு. சிரசும் உடலுங்கை கால்களும் வெளிப்படச் செல்லுங் காலமளவும் நோக்காடுகளும் மிகவும் விகற்பப்படும். இவ்விகற்பங்களையெல்லாம் அநேக பிரசவங்களைக் கண்டே அறிந்துகொள்ளவேண்டியது. இவைகள் நூல்களிற் சொல்லப்படாதிருந்தும், இவைகளை நன்றாய் அறிந்துகொள்வதே நன்றாய்ப்பயின்ற மருத்துவருடைய வித்தையில் மிகவும் முக்கியமானபகுதி.

மூன்றாம்பாதம். பிள்ளைபிறந்தவுடனே கருப்பை ஒரு பனங்காயளவாய்ச் சுருங்கி வடிந்து போகும். வயிற்றிலே தடவிப்பார்த்தால் அது கைக்கு நன்றாய் விளங்கும். கொஞ்ச இடையாற்றி நேரத்தின்பின்பு சொற்பமான மூறுக்குநோக்காடு உண்டாகி, அணையமானது சில இரத்தக்கட்டிகளுடன் பெரும்பாலுஞ் சேர்ந்ததாய், பன்னீர்க்குடச்சவ்வின் வெடிப்புக்கூடாலே அச்சவ்வின் உட்புறம் வெளிப்புறமாக்கிக் கொண்டு வந்து வெளிப்படும். இப்படி அணையமுஞ் சவ்வுக்கொடிகளும் விழுகிறதற்குச் சிலவேளை ஒரு நோக்காடுபோதும். சிலவேளை இரண்டாம் பாதத்துக்கடைசி நோக்காட்டோடே இவை விழுவதுமுண்டு; ஆகிலும் மிகுதியாய் இப்படியல்ல. கிளாக்கு என்ற பண்டிதர் சொல்லுகிறபடி, பிள்ளைபிறந்து ஒரு நாழிகையின் பின்பு சராயுகம் விழுவது. காலம் எவ்வளவாயிருந்தாலுஞ்சரி, கிரமப்பிரசவத்திலே சராயுகம் விழுவதற்குக் காரணங் கருப்பைச் சுருங்குதலே. பிரசவத்தின் மூன்றாம்பாதம் முற்றினபின், கருப்பை கூபகத்துள் வடி

Digitized by Google

ந்து இறங்கி, ஒரு கைப்பொற்றளவாய்ச் சுருங்கிவிடும். அடிவயிற்றிலே தடவிப்பார்த்தால் இதுகாரியந் தெரியும்.

கருப்பையானது ஒவ்வொருக்காற் சுருங்கி இறுகி, இடையிலே ஆற்றிகொள்வதுபோல ஒவ்வொருக்காற் சற்றே நெகிழ்ந்து விரிந்து, இப்படியே ஆற்றிக்காற்றி முற்றும் நன்றாய்ச் சுருங்க வேண்டிய அளவிலே வந்துவிடும். புதுப்பழக்கமான மருத்துவர் இதை நினைந்துகொள்ளவேண்டியது. இரத்தப்பெருக்கை மறிக்கவேண்டுமேயென்று பயந்து கருப்பை சற்றுநெகிழ்ந்து விரியாமல், ஒருமுறையோடே சுருங்கிப்போகும்படி கையால் வயிற்றைப் பிசைந்து கருப்பையை அழற்றப் படாது.

Digitized by Google

# ௧௦ம். அதிகாரம்.

## கிரமப்பிரசவத்திலே மருத்துவர் கடன்கள்.

சுத்தமான கிரமப்பிரசவம் நடக்கும்விதத்தை முந்தின அதிகாரத்தில் விளக்கினோம். இனி அதிலே மருத்துவர் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னவென்றுபார்ப்போம்.

முதற்செய்யவேண்டியதென்னவெனில், அழைத்தவுடனே கூடியளவு சுறுக்காய்ப்பிரசவஸ்திரியைப்போய்ப் பார்ப்பது புத்தி. அவளுக்கு அணைதுணையாய் நிற்பவர்கள் சொல்லுங் குணங்குறி விவுரத்தைக்கேட்டு நம்பிக்கொள்ளாமல், தானே பிரசவநடை இப்படியென்று பார்த்துத் தெழிந்து ; சகாய்ஞ்செய்யவேண்டில் தருணந் தப்பவிடாமல் அவதானமாயிருக்கவேண்டும்.

பிரசவவீட்டுக்குக் கொண்டுபோகவேண்டிய அணியங்களாவன, சிராவணி, அயில், லாடணம், குலோறுவாம்.* இவை சடிதியில் தேவையாய் வரக்கூடும். ஆகையினாற் கையுடன் கொண்டுபோவது நல்லது. மற்றும் பிரசவக்

* குலோறவாமென்றமருந்துஅறிவுகெடுத்து மயக்கத்தை உண்டாக்கும். சிசுச்சிரசுவெளிக்கிடுவதாகிய பிரசவத்தின்முடிவிலே தோன்றுங் கடுவேதனையிலே இது பிரதானமாப் உபயோகமுள்ளது. இதில் ஒருதிருமளவு காலாறுமடிப்புள்ள ஒரு சீலைத் துண்டிலே வார்த்து, ஸ்திரியின் உதடு, மூக்குகளுக்குச் சற்றுத்தூரத்திலே அதைப் பிடித்துக்கொண்டு, மூன்றுநாலுதரம் நன்றாய்த் தாராளமாய் உறிஞ்சும்படி ஸ்திரிக்குச்சொல்லவும். உறிஞ்சின பின், காற்றிலும் நல்லதாராளமாய் உறிஞ்சும்படி சொல்லவும். குலோறவாமிலே கால்திருமுக்கு உட்படவன்றி, அதனமாய் ஒருமுறையிலே ஸ்திரியின்தேகத்திலே ஊட்டுவது நல்லதல்ல.

ஸ்திரியின் கண்விழியிலே தொடும்போது, அவள் ஒடுங்கிக் கூசாதிருப்பாளேயாகில் அறிவுகெட்டுப்போனாளென்று தெளிந்துகொண்டு, வேதனைநீங்கும்வரைக்கும் அறிவுகெடுநிற்கத்தக்கதாய் ஒவ்வொருக்கால்மாத்திரம் இடைக்கிடை உறிஞ்சக்கொடுத்துக்கொண்டு,மற்றும்படி சீலைத்துண்டைத்திரட்டிக் கைக்குள் இறுக்கிப்பிடித்துக்கொள்ளவும். மருத்துவர் வேறுகாரியம் பார்க்கவேண்டியதால் குலோறவாம் பிரயோகிக்கும்படி பழகினஆளிடங் கொடுக்கவும்.

சுவாசம் நின்றுவிடல், நாடித்துடிப்பு விழுதலாகிய அவக்குணங்கள் கண்டால், ஸ்திரீயைக் காற்றுமுகத்திலேவைத்து, விசிறியால் வீசி, சுவாசத்தைக்கிளப்பும்படி மார்பிலும் முகத்திலும் தண்ணீர் எறியவும். இவ்வுபாயங்களினாலே மூச்செழும்பாதிருந்தால் வேறுவகையான உபாயங்களால் சுவாசம எழுப்பவேண்டியது. குலோறவாம் சுவாசிப்பது ஆயிரத்திலொருவர் பிராணசேதம் அடைவதற்கு ஏதுவாகும். ஒருமுறை இம்மருந்தை உறிஞ்சியதினால் மோசங்காணாத ஒரு ஆளிலே, மறுமுறை உறிஞ்சினால் மோசங்காணவுங்கூடியது. ஆதலால் இதை அவதானமாய்ப் பிரயோகிக்கவேண்டும்.

Digitized by Google

கருவிகளையோ அங்கே கொண்டுபோகப்படாது. பிரசவ ஸ்திரி அவைகளைக்கண்டால் ஏங்கிப் பயந்துவிடுவாள். இக்கருவிகளை எங்கும் கொண்டுபோவதினால் இவை எப்போதும் அவசியமானவையென்ற கருத்தை நம்முடைய மனதிலே பதித்துக்கொள்ளவும் படாது.

பிரசவகூடத்தின் ஒழுங்கு. பிரசவ்கூடத்திலே வெகு சனங்களை விடப்படாது. மருத்துவருடனே இரண்டு பேருக்கதனமாய் விடவேண்டியதில்லை. பிரசவகூடம் அதிக உஷ்டணமாயிராமல், சற்றே குளிர்ச்சியாய் இருக்கலாம். புட்பம் வாசநீர் முதலிய சுகந்தங்களால் வாசமூட்டவேண்டியதில்லை. கூடத்திலே நல்ல புனிதமான்காற்று உலாவவிடுவதினாலே சுவாசத்துக்கேற்ற சுத்தமான காற்றுண்டாகும்.

கூடத்தின் உட்டண சீதளங்கள் பிரசவநடைக்குத் தக்கதாய் விகற்பமாகலாம். இரண்டாம்பாதத்திலே ஸ்திரியானவள் பெலனும்முக்க அசையக்கூடியது இயல்பு, ஆதலால் அவளுக்கு வேர்வை புழுக்கம் உண்டாகாதபடிக்கு, கூடம் நல்ல குளிர்ச்சியாயிருக்கவேண்டும். பிள்ளைபிறந்தவுடனே ஸ்திரி தியங்கித் தேம்பிக் குளிர்க்கோலங்காட்டுவாளானதால் அந்நேரம் அவளிலே காற்றுப்படுவதினாலும், ஈரப்புடைவை முதலியவைகளாற் கூடம் அதிக குளிராவதினாலும் ஸ்திரிக்குக் கூதல்பிடியாமற் கவனமாய்ப்பார்த்துக்கொள்ளவும்.

உடைபணிதி. இரண்டுமூன்று சேலைஇறுக்கி அரையை வரிந்துகட்டாமல், சுத்தமான இரண்டொரு புடைவை தளர உடுத்து, கழுத்தை இறுக்குவதான அட்டியல் உட்கட்டு, தாலி இப்படியானவைகளைக் கழற்றி ஸ்திரி லேசாய்முக்கவும் அசையவும் பக்குவம்பண்ணவேண்டும்.

மருத்துவர் முதன்முதல் ஸ்திரிக்குக் கிட்டவரும்போது சற்றே சாதுரியமாய், தாம்வருவதை அவள் முதலே விளங்கிக்கொள்ளும்படி சமாளிக்கவேண்டும். இப்படிச்செய்யாமல் அவர் திடீரென உள்ளே வந்துவிட்டால், ஏழை நெஞ்சுள்ள ஸ்திரி திடுக்கிட்டு ஏங்கக் கருப்பையோ கொஞ்சநேரஞ் சேட்டணமற்று நோக்காடு நின்றுபோம். மேலும் ஸ்திரியைக்காணமுன் அவளுடைய துணையாளியிடத்திலே, பிரசவந்தொடங்கினநேரத்தையும் நோக்காடுகளின்தன்மையையும் யோனியாலே சளிநீர் முதலியன

Digitized by Google

வந்ததோ, மலங்கழன்றதோ, சலம் சென்றாய்ப் போயிற்றோ என்பதையும் விசாரணைபண்ணி அறிந்துகொண்டு; பின்பு ஸ்திரியிடம்போய், வேதனையுண்டாய் எவ்வளவு நேரமென்றும், நோக்காடுகள் தோன்றுகிறதெங்கேயென்றும், எவ்வளவுநேரத்துக்கொருக்கால் வருகின்றன என்றும் இவ்வகையாய் அவளிடம் விசாரிக்கவும். மேலும் அவளுடைய நாக்கையும் நாடித்துடிப்பையும் பார்த்து, அவள் படுத்திருந்தால், கருப்பை சுருங்கித் தனக்குள்ளிருக்கும் சிசுமுதலியவைகளைப் பிதுக்கித்தள்ளுந்தன்மையாய் வயிறு வாடி வடிந்திருக்கிறதோ என்பதைத் தெளியும்படி, அவ்வயிற்றிலே கை வைத்துப்பார்க்கலாம். இவைகளை எல்லாங் கவலையுஞ் செர்தளிப்புமாய் பதகளிப்பில்லாமற் செய்யவேண்டும். ஸ்திரி முன்னும் பிள்ளைப்பெற்றவள் என்றும், இருக்கிறகுணங்களாற்பிரசவந் தொடங்கியாயிற்றென்றுந் தெளிந்துகொண்டால், முதல் அவளைப் பரிசோதித்துப் பாராமற் போகப்படாது. ஆனாலும் தலைப்பிள்ளைத் தாய்ச்சியாய்ப் பிரசவம் அச்சமயத்தில் தொடங்குவதாய் இருக்கில், உடனே பரிசோதனைசெய்வது அவசியமல்ல.

புதுப்பழக்கக்காரர் பரிசோதனைசெய்யப் போகிறோமென்று ஸ்திரியைக்கேட்க மிகவுங் கூசுவார்கள். இவ்வகையான முட்டுப்பாடு இவர்களுடைய எண்ணமேயாம். "மனம் ஒப்புக்கொள்ளவில்லை என்செய்வோம், பரிசோதிக்கத்தான் வேண்டும்" என்று இப்படி வீண்பேச்சாய் அலட்டி, ஸ்திரியில் நாணத்தைக் கிளப்பாமல், அவளுடைய நாடித்துடிப்பைஅமைவாய்ப்பார்ப்பதுபோலப் பரிசோதனையையுஞ் செய்ய வேண்டியது. பரிசோதனை செய்யும் மாதிரியிலே, அது ஒரு மருங்கீனமான செய்கையென்று அற்பமாகுதல் தோன்றப்படாது. இப்பக்குவமாய் நடந்தால், அவசியமர்னவேளை எல்லாம் பரிசோதிக்க விடுவார்கள். பரிசோதிக்கப் போகிறோமென்பதை ஸ்திரீக்கு விளக்குவதெப்படியென்னில் "இன்னமாதிரிப்படு" என்பதினாலே அல்லது துணையாளியைப்பார்த்துக் "கொஞ்சம் எண்ணெய் வேண்டும்" என்பதினாலே, இவற்றுள் ஒன்றினாலே ஸ்திரீக்குக் கருத்து இன்னதென்று விளங்கிவிடும். அப்பால் யாதொரு முட்டுப்பாடும் இராது.

பரிசோதனைமுறையைச் சொல்லமுன், பரிசோதிக்கையில் ஸ்திரி படுக்கவேண்டிய மாதிரி இன்னதென்று

Digitized by Google

சொல்லுவோம். இது ஸ்திரிகள் பெறும்போது என்னென்னமாதிரி படுப்பார்களோ, அந்தந்தமாதிரியே பெரும்பாலும்பரிசோதனை நடக்கும். தேசத்துக்குத்தேசம் வித்தியாசப்படும். இங்கிலாந்துதேசத்திலே ஸ்திரியானவள் இடப்பாரிசத்துக்குச் சரிந்து கால்களைமுடக்கி, கட்டிலின் வலப்பக்கத்துக்கு ஒட்டி இடுப்புகள் நிற்கப்படுப்பாள். மெத்தை நனையாதபடி கம்பளத்தை நாலைந்தாய் மடித்து மெழுகுசீலையினால்மூடிப்போட்டு இதற்குமேல் ஸ்திரியின் இடுப்புகளின் கீழே துப்பட்டி மடித்துப்போட்டு, பிரசவம் முற்றினபின்பு ஸ்திரியிலே நோகாமல் மெல்லெனத் துப்பட்டியை நெகிழ்த்தெடுத்துப் போடுவார்கள். பிரூஞ்சு, ஜெமனி முதலிய தேசங்களிலே ஸ்திரிகள் பிரசவிக்கையில், பெரும்பாலும் மல்லாந்து படுப்பார்கள்.

இந்திந்த மாதிரியாய் ஸ்திரி படுத்தபின்பு, அவளுடைய முதுகுப்பக்கத்திலே நின்றுகொண்டு, வசதிக்குத்தக்கதாய் வலது அல்லது இடதுகையை, கூடியளவு தாமசமின்றி புடைவைக்குள்ளாலே அல்குலிற்கொண்டுவந்து, இதின் பிற்கோணத்துள் இரண்டொருவிரலைவிடவும்.* கருப்பைவாய் சற்றே மேலேறி நில்லாவிட்டால் தர்ச்சனிவிரலைமாத்திரம் விடவும். தர்ச்சனிக்கு எட்டாவிட்டால் மத்திமைவிரலையும் விட்டுத் தெளிவாகப் பரிசோதிக்கலாம். எது வகையிலும் கருப்பைவாய் இன்னதன்மையாய் இருக்கிறதென்றும், அதினுள்ளே உதயம் இப்படியாகிறதென்றுந் தெளிந்துகொள்வதே நமதுநோக்கம். முன்கண்டிராத புது ஆளாய் இருந்தால், கீழ்க்கூபகம் வேண்டியஅளவு விதிஉள்ளதோவென்று விரல்களால் அந்நேரமே உத்தேசம்பண்ணிக்கொள்வதும் நல்லது. கருப்பைவாய் எங்கேயென்று பரிசோதிக்கையில், அது பீடிகையைத்தாவி மெத்தப் பின்பக்கமாய் இருக்குமென்றும், அதுசற்றே மேலேற்றமாய் விரலுக்கு எட்டாமல்நிற்க, உதயவுறுப்பின்மேற் படர்ந்திருக்குங் கருப்பைக்கழுந்தானது வெளிவாசலுக்குக்கிட்டி விரலுக்குச் சிலவேளை தட்டுப்படுமென்றும், நினைந்துகொள்ளவேண்டியது. கருப்பைவாய் இப்படிவிரலுக்கு எட்டாமல் நிற்கும்வேளைகளிலே ஸ்திரியின் மேல்வ

* மருத்துவர் ஸ்திரியின் முற்பக்கத்திலே நின்றுபரிசோதிக்கில், கருப்பைவாய் முதலியவைகள் விரலுக்கு அதிகலகுவாய் எட்டுமென்று சிலர்சொல்லுகிறார்கள். பரிசோதனைசெய்கையில் ஸ்திரி கால் இடக்குநின்றுகொண்டால் உத்தமம்.

Digitized by Google

யிற்றிலே கையைவைத்துக் கூபகத்துள் இறங்கக் கருப்பையை மெல்லென அமர்த்தென்று துணையாளியிடம்சொல்லிப் பரிசோதனைசெய்யவும்.

கருப்பைவாயானது கைவிரலுக்குப் பலரிலும் பலபேதமாய்த் தோன்றும். பிரசவம் கொஞ்சநேரம் நடக்கும்போது, மிகுதியாய்விரலைக் கருப்பைவாய்க்குள் இட்டுப்பார்க்கில், இதின் ஓரமானது சிசுவின் சிரசின் மேல் படர்ந்திருக்கும் மெல்லிய சவ்வுபோல், தோன்றும். அந்த ஓரம் இத்தன்மையாய் இருக்குமெனில், கருப்பைவாய் சுறுக்காயும் வாய்ப்பாயும் விரியும். விரியவிரிய அது தடிப்புக்கொள்ளும். சிலரிலோ கருப்பைவாயானது பிரசவமுகனைதொடுத்துத் தடிப்பும் திரணையுமாகி வெப்புக்கொண்டு வீங்கினதுபோல் கடும் உரப்பாய்த் தோன்றும்.

நோக்காட்டுவேளையிலும் பரிசோதிக்கவேண்டியது. அந்நேரம் கருப்பைச்சேட்டணத்தாற் கருப்பைவாய் விரிந்து பன்னீர்க்குட முதலியன அதினுள்ளேதள்ளுண்ணுமாகில், பிரசவந் தொடங்கிவிட்டதென்ற நிச்சயம் பண்ணலாம்.

முதற்பாதம் எவ்வளவுநேரத்துக்கு நிற்கும் என்பதைப்பற்றியோ கருப்பைவாய் இவ்வளவுக்கு விரியவேண்டுமென்பதினாலும், இரண்டு பரிசோதனைக்கு இடையிலே அது இம்மட்டு விரிந்துவிட்டதென்பதினாலும், நிதானம்பண்ணவேண்டியது. உதாரணமாய், தலைப்பிள்ளைக்காரியமாயும், விரல் உள்ளிடத்தக்க அளவுமாத்திரங் கருப்பைவாய்விரிந்ததாயும், நோக்காட்டுக்கு நோக்காடு கருப்பைவாய்விரிவது மெத்தச்சொற்பமாயும் இருக்கில், முதற்பாதஞ் சற்று நெடுநேரம் பிடிக்கும் என்று முடிக்கலாம். கருப்பைவாய் ஒரு ரூபாயளவுக்கு விரிந்து நோக்காட்டுக்குநோக்காடுவிரைவாகப்பருத்துவருமாகில்,பிரசவஞ்சற்றுச்சுறுக்கிலேமுற்றுமென்றுஅறுதியிடலாம். மேலும்கருப்பைவாய், யோனி முதலியவைகள் தளர்வாய் லகுவாக விரியத்தக்கதாயிருந்தால் பிரசவம் விரைவிலே முற்றும் என்று காத்திருக்கலாம். இப்படியில்லாதிருக்கில், அதுசுறுக்கிலே முற்றாதுஎன்று தீர்த்துக்கொள்ளலாம். முன்னும் பிள்ளைகளைப்பெற்ற ஸ்திரிகளிலே, நிலைவரஞ்சொல்லக்கூடாது. கருப்பைவாய்முதலியவைகளிலேஅப்படிப்பட்டதன்மை கொஞ்சமும் முதலிலே தோன்றாமல் சடிதியாய்க் கருப்பைவாய்முதலியவைகள் விரியுமாதலால், அவதானமாய்க்

Digitized by Google

காத்திருக்கவேண்டியது. பிரசவம் இவ்வளவுநேரத்திலே முற்றுமென்று ஒருபோதும் உறுதியாய்ச் சொல்லாதிருப்பதே மருத்துவருக்கு ஒரு நியம விதி.

இனி, உதையத்தைப்பற்றிய பரிசோதனைசொல்லுவோம். நோக்காடு ஆறிப் பன்னீர்க்குடந் தளர்வாயிருக்கும் வேளையிலேயே, சிசுவின் எவ்வுறுப்புக் கருப்பைக்கழுத்துக்குள் இருக்கிறதென்று லகுவாய் மட்டுக்கட்டக்கூடியதாயிருக்கும். அச்சமயத்தில் பன்னீர்க்குடம் லேசாய் உடைந்து போகத்தக்கதல்ல. ஆதலால் அதுஉடையும்மோசம் நேரிடாதபடி அப்படியான வேளைகளிலேதான் உதயபரிசோதனை ஆகவேண்டியது. இப்படிக் கிரமப்பிரசவத்திலே, சிசுவின்சிரசே விரலுக்குத் தட்டுப்படுவது வழக்கம். சிரசு என்பதை, அதின்வட்டிப்பு உரப்புகளாலும், தெளிந்து தேரக்கூடிய இடங்களிலே கரேகை, பின்னுச்சிகளாலும் நிதானஞ்செய்வது. நெடுநாளில் அனுபவத்தால் கைப்பழக்கமானவர்களோ கூபக பக்கங்களுக்கு இன்ன நிலையமாயச் சிரசு கிடக்கிறதென்று அறிந்து கொள்வார்கள். புதுப்பழக்கக்காரரால் இந்த நுட்பம் முடியாது. வைத்தியத்துக்கு இதினால் ஏதேனொரு நயமாவதுமில்லை, வித்தையின் சாதுரியமொன்றே விளங்குமாதலால், இந்நுட்பம் அதிகம் வேண்டியதுமல்ல. முந்தப் பரிசோதனை செய்கில் முன்பு சொல்லிய பிரகாரம் மேல்வயிற்றிலே கை வைத்து கருப்பையைச் சற்றே இறங்க அமர்த்திக்கொண்டு உதயம் ஏதென்று பார்க்கலாம்.

இப்படிப் பரிசோதனைசெய்து சகலமும் ஒழுங்குஎன்றும், பிரசவம் நடைகொள்ளுகிறதென்றுந் தீர்த்துக்கொண்டபின்பு பிரசவகூடத்தைவிட்டுப்போகலாம். முதற்பாதவேளையில் மருத்துவர் அங்கே நிற்கவேண்டியதில்லை நிற்பதினாலே ஸ்திரிக்குக் கூச்சம் உண்டாகி, இதினால் விக்கினம் உண்டாகக்கூடும். பிரசவம் சுறுக்கிலே முற்றும் என்று கண்டால் பிரசவவீட்டை விட்டுப் போகப்படாது. தாம் நில்லாமற்போனவேளையிலே பிரசவம்நிறைவேறும்படி விடும் மோசத்திலும், தாம்நிற்பதினாற் பிரயோசனம் இல்லையென்றவிடத்தும் நின்றுகொள்வதே தம் பேருக்குக் கீர்த்தியென்று புதுப்பழக்கக்காரர் என்றும் நினைந்துகொள்ளவேண்டியது.

கருப்பைவாய் விரியும்வேளையிலே ஸ்திரிபடுத்துக்கொ

Digitized by Google

ள்ளவேண்டியதில்லை. பிரியப்படி இருக்கலாம், அல்லது பிரசவகூடத்திலே உலாவலாம். தீனிலே மனமிருந்தால் மெல்லியஉணவாகிய கஞ்சி,கஞ்சித்தெளிவு,நெற்பொரிநீர் முதலியவைகள் சாப்படலாம். தாளிதமில்லாதவெறுங் கோழியாணமுஞ் சிறுகப் பரிமாறலாம். அசீரணம்கொண்ட ஸ்திரிகள் நீர்த்தபதார்த்தம் உண்டால் இரைப்பையிலே பிசகுண்டாய், இதினுற் கருப்பைச்சேட்டணமும் குழம்புமாதலால், அவர்கள் சற்றே இறுகலான பதார்த்தம் உண்பதுபுத்தி. இவ்வகையான உணவுக்கு இரைப்பை சுவாத்தியங்கொடுத்து ஸ்திரியைப் பெலப்படுத்துங் காரசாரங் கதித்த உண்டி பானங்கள் ஒருபோதும் பரிமாறப்படாது.

கிரமப் பிரசவத்திலே வைத்தியம் செய்யவேண்டிவருவது அரிது. மலக்கழிவு தடைபட்டுநின்றால், பிரசவமுகனையாகில் மெல்லியவிரேசனங் கொடுக்கலாம். ஸ்திரியின் இரைப்பைக்கு இணங்குமெனில், விரேசனத்துக்கு ஆமணக்கெண்ணெய் உத்தமம்; இணங்காமல் ஓங்காளித்தால் ஆறுவதாய்ச் சொல்லியிருக்கிற அவிழ்தங் கொடுக்கலாம். பிரசவகடையேறினதாகில் அபானவழியாய்த் தண்ணீர் புகட்டி மலசுத்திசெய்யலாம்.

பிரசவகடைமுழுவதிலுஞ் சலப்பையின் சீர் எப்படியென்று கவனமாய்ப் பார்த்து, நேரத்துக்கு நேரம் ஸ்திரி சலசுத்திசெய்யும்படியாய்த் துணையாளி சொல்லிவிடவேண்டியது. சலம் மறிபட்டுநின்றால் சிராவணிவிட்டு அதை இறக்கவேண்டும்.

பிரசவவேளையிற் சிலரிலே சிராவணிஇட்டுக்கொள்வது அதிகபிரயாசம். சிராவணி விடும்விதம் இன்னதென்று இங்கே சற்றுச்சொல்லுவோம். ஸ்திரியை மல்லாந்து படுக்கச்சொல்லி அல்லதுஇதைப்பார்க்கிலும் உத்தமமாக இடப்பாரிசத்துக்குப் படுக்கச்சொல்லி, இடக்கையின் தர்ச்சனிவிரலைமுதலிறைமட்டுக்கும்யோனியுள்விட்டுமுன்னுக்குஏற்றி,விரலுக்கும்மேகனவென்புக்கும் இடையேகிடக்கும் சலவாசியை லகுவாய்ப் பிடிக்கவும். அதுகனிட்டவிரலின் அரைவாசிப்பருமையானஒருகொடிபோலிருக்கும். இதின்வழியாய் நெடுகமெல்லெனவாக விரலை இழுத்து, விரல்நுனி சலவாசலின் முகப்பிலுள்ள குளியுள் இறங்கினவுடனே,விரலைஅங்கே நிறுத்திக்கொண்டுசிராவணியை

Digitized by Google

வலக்கையின் பெருவிரலுக்குந்தர்ச்சனிவிரலுக்கும் இடை யே தளரப்பிடித்து இடது தர்ச்சனிவழியாய்ச் சற்றே பின் னேக்கக் குளியுள் இடவும், உடனே அக்குழல் சலவாச லுக்குள் புகும். பின்பு அதின் பிடியைச்சற்றே கீழே அமர்த்தி அவதானமாய்ச் சலப்பையுள் விடவும். இப்படி விடும்போது, ஏதேனுஞ் சுருக்கிலே குழல்நுனி தட்டுப்ப ட்டால், குழலைச்சற்றேயிழுத்துச் சற்றேமிதத்திவிடவும். சலவாகியின் நீழம்ஒருஅங்குலந்தொடுத்து இரண்டங்குலம் வரைக்குமிருக்குமானதால், இரண்டங்குலம் அளவுக்குக் கருவிஏறினவுடனே, சிறுநீர் அதாலே இறங்கும். வேண் டியதாயிருந்தால், ஸ்திரியானவள் ஒருநாற்காலியிலே வி ளிம்போடே உட்கார்ந்திருக்க, மருத்துவர் அவளுக்கு முன்னாய் முட்டுக்குத்தி அல்லது குந்திக்கொண்டு, தன்கை யை அவள்தொடைகளுக்கூடே இட்டுச் சிறுநீர் இறக்கலா ம். எப்படியும் ஸ்திரியின் மானந்தோன்றுதபடி மரியா தையாய் நடத்தவேண்டியது.

வில்லங்கமானவேளையில் சிராவணி பிரயோகிக்கும் முறையைப்பற்றிப் புதுப்பழக்கக்காரருக்கு உபயோகமா ன சில குறிப்புகள் சொல்லுவோம். சலவாசல் மேலகுவி லே பிடித்தபோதைக்கும், அதாலே மேலாய்ப் பின்னுக்கு சாயச் சிராவணியைச் சலப்பையுள் விடப்பார்த்தால், இதின்மேல் அந்நேரம் படிந்துகிடக்கும் சிசுத்தலையானது தடக்கிக்கொள்ளும். சலப்பையானது, இடப்பெயர்ச்சி கொண்டு, மேலே மேகனத்துக்குமுன்னாக ஏறுவதும் உ ண்டு. யோனியின் முன்பக்கத்திலே ஒருவீக்கம்போலே கீழுக்குப்பின்னாக இறங்குவதும் உண்டு. இப்படியான வேளைகளிலே,சிறுநீர் இறக்கவேண்டிய முறையைப்பற்றி ப் பாய்வின் என்றமருத்துவி சொல்வது,மேலேகாட்டியப டி சிராவணியின் நுனியைச் சலவாசலில் விட்டவுடனே அதின் புறவளைவு மேகனத்தை நாடப் பிடித்துக்கொ ண்டு அதின்பிடியைப் பின்னுக்கு அபானத்தை நாட அம ர்த்தி, அவதானமாய்ச் சலவாகியுள் ஒன்றேகாலங்குலமள வுக்கு ஏற்றி, பின்பு பிடியைமுன்னுக்குச்சற்றே உயர்த்திக் கருவியைச் சற்றே உருட்டி, சலப்பையுள் மெல்லெனச் செலுத்தவும். சிராவணியின்குழல் உருளையாயிராமற் சற் றே சப்பையாயிருந்தால் வாய்ப்பு.

முதலாம்பாதம்முழுவதிலும் பிரசவவைத்தியன் செய்ய

Digitized by Google

வேண்டியகடமை. தானாக ஸ்திரிக்கு யாதொருசகாயம் பண்ண முயலாமல், பிரசவம் இயல்பிலே யாதொரு விக்கினம் இடையூறின்றி முற்றும்படி பார்த்துக்கொள்வதேயாம். இரண்டாம் பாதந் தொடங்கும்போதோ அவனுஞ் சற்றே சகாயஞ் செய்யலாமென்றாலும், பிரசவம் வலியத் தானாய் முற்ற விடவேண்டியது.

இரண்டாம் பாதத்திலே, அதிக சாவதானமாய் நாம் பார்க்கவேண்டிய இரண்டு காரியமுண்டு; ஒன்று விடபம் கிழியாமற் பேணிக்கொள்வது. மற்றது, கருப்பை செம்மையாய்ச் சுருங்கும்படி பார்த்துக்கொள்வது.

க வது. விடபந்தாங்கல். தகுந்த உதவியின்றி ஸ்திரிகள் பிரசவிக்கும்போது, சிசுவின்சிரசு, அல்குல்வழியாய்ப் புறப்படுகையில், விடபத்திலே சிலவேளை மோசங் காண்பதுண்டு. விடபங்கிழிந்து, சிலவேளை இக்கிழிவு அபானத்தோடே ஒன்றத்தக்கதாக ஓடும். சிசுவின்சிரசு அல்குற்கவையிலே தாக்காமல், அல்குல்வழியாய்ப் புறப்படுவதை விட்டு, விடபத்திலே கிழிந்து தோன்றும் ஓர் துவாரத்தினால் வெளிக்கிடுவதும் அரிதாய் உண்டு. விடபத்தினது அதிகமென்மையையும், அது இசிந்து படர்ந்திருக்கும் மாதிரியையும் பார்க்கும்போது, சிசுவின் தலை வெளிப்படும்நேரத்தில் அது பெரும்பாலுங் கிழியாமல் இருந்துவிடுவது ஓர்ஆச்சரியம். ஆகிலும், முதலாம் பிரசவம் எதிலுஞ் சற்றேனும் ஓர் கிழிவுண்டாம்; இல்லையென்றுபோகில் யோனியின் உள்ளுறைச் சவ்விலாவது கிழிவுண்டாம். இவ்வகையான கிழிவு சற்றதனப்பட்டால், ஸ்திரிக்குச் சஞ்சலமாயேமுடியுமாதலால், இதைச் சற்றேவிலக்கிக்கொள்ளும்படி விடபந்தாங்கல் என்னும் உபாயஞ்செய்துவருகிறார்கள். முதற்பாதம் முடிந்து, சிசுவின்சிரசு வெளிவாசலைவிரிக்கத் தொடங்கினவுடனே, மருத்துவர் விடபத்தைத் தாங்கிக்கொள்ளும்படியாக, அதிக வசதியாய்ப் படுக்கையின் வலப்பக்கத்திலே ஸ்திரிக்குப் பின்னாலே இருந்துகொண்டு, வலதுள்ளங்கையில் ஓர் சீலைத்துண்டு அணைத்து, பெருவிரற்பக்கத்திலுள்ள கை விளிம்பானது அல்குற்கவைக்குக் கிட்டநிற்க, அவ்வுள்ளங்கையை விடபத்தில் விரித்துவைக்கவும். நோக்காட்டு வருத்தவேளையிலே ஸ்திரி சற்று நழுவுவாளானதினால் திடீரென அப்படிநழுவாதபடி இடக்கையை அவளுடைய வயிற்றில் அ


Digitized by Google

ணைத்து அவளைத் தடுத்துக்கொள்ளலாம். விடபத்தை நெடுக உறுதியாய்த் தாங்கி அணைக்கவேண்டியமட்டுக்கே உள்ளங்கையை அமர்த்தவேண்டியதன்றிச் சிசுவின்சிரசுக்குத் தடையாய் மெத்தவூன்றி அமர்த்தப்படாது. நெடுநேரந் தாங்கிக் கொண்டிருக்கில், அது விடபமுதலியவற்றைக் கனற்றி அழற்றுமாதலால், மெத்த முந்தித் தாங்கத் தொடங்கப்படாது. விடபத்தைத் தாங்கும்போது உள்ளங்கையை எப்பக்கத்துக்கு அமர்த்தவேண்டியதென்பதை நிதானிக்கிறதினாலே, நாம் நயமோ மோசமோ செய்கிறோமென்றுந் தீர்த்துக்கொள்ளலாம். புச்சவென்பும் பீடிகையென்பும், சிசுவின்சிரசு விடபம்வரைக்குஞ் செல்லுகையில் அதைத் தாங்கித்தாங்கி விட்டதுபோலவே, நாமும் விடபத்திலே அதைத் தாங்குவது நமதுநோக்கம். பீடிகை புச்சங்களின்வளைவுக்கு இசைந்த வளைவாகும்படியாய் உள்ளங்கையைவைத்துச் சற்றே மேற்பக்கமாய் முன்னோக்க அமர்த்தவேண்டும். இப்படிச்செய்வதினாலே, சிசுவின்சிரசு தடைகாணாமற் பிறவிவாசலாலே லகுவாய் இறங்கும்படிபண்ணலாம்.

சிசுவினது சிரசின் இறங்குதலைத் தடுக்கத்தக்கதாய் விடபத்தில் அமர்த்தினால், சிரசின் பித்திகையென்புகள் அதிகம் நெருங்குவதினால் நெற்றியென்பின் பின்னருகிலேயுள்ள கூரியவிளிம்பு மிதந்து விடபத்தில்அழுந்தி மோசஞ் செய்ய ஏதுவாம். வேண்டிய பக்குவமாய் மெல்லெனக் கையைஅணைத்துத்தாங்குவதினால்தான், பாரமானமோசம் வராமல் மிகுதியும்விலக்கி இசிந்து விரிந்த விடபம் மோசமின்றிச் சிசுவின் நெற்றியாலும் முகத்தாலும் வழுக்கிக் கொண்டுபோகும்படி பண்ணக்கூடியது. இது முற்றவே விடபத்துக்கு வரக்கூடிய பெருமோசமும் ஒழியும். ஆகிலும், சிசுவின் தோழ்கள் திடீரெனவந்தாலும் மோசமாம். அவை வெளிப்படும்வரையும் விடபத்தைத் தாங்கிக்கொள்வது புத்தி.

சிரசு வெளிப்பட்டுச் சில நிமிஷஞ் சென்றபின்பு தான் மறுபடி நோக்காடுண்டாகும். இந்த இடையாற்றிநேரத்திலே, நாபிக்கொடி சிசுவின் கழுத்திற் சுற்றுண்டிருக்கிறதோ என்று இடக்கையின் தர்ச்சனிவிரலினாலே நிதானம் பண்ணவேண்டியது. சுற்றுண்டிருந்தால், அதை அவதானமாய் யோனியால் இழுத்து நகைத்துத் தலையாலே கழற்ற

Digitized by Google

வும். இது கூடாதிருந்தால், நாபிக்கொடித்தடத்துக்கூடாலே தோள்கள் வரத்தக்கதாய் அதை இளக்கிவிடவும். இப்படி ஒழுங்கு பண்ணினபின், அவ்விரலைச் சிசுவின்வாயிலிட்டு, காற்று நன்றாய்ச் செல்வதற்குத் தடையாக ஏதேன் சவ்வு சளியிருந்தால், அதை அகற்ற வேண்டியது. இப்படி வாயில் காட்டும் அருட்சியினால், சிசுவின் உடல் வெளிப்படாமல் யோனியுள்ளேயேயிருக்க, சிசு சுவாசிக்கக் கூடியதாயும் இருக்கும். இதினால், பாதிவெளியும் பாதியுள்ளுமாய்ப் பிறவி தாமசமாகும் போதுள்ள சுவாசரோதம் என்ற மோசத்துக்குச் சிசு பெரும்பாலுந் தப்பிக்கொள்ளும். வாடிக்கையான பிரசவங்களிலே, சிசுவின் எவ்வுறுப்பையாகுதல் விரைவாக வெளியில் வருவிக்க எத்தனஞ் செய்யப்படாது. கருப்பையானது தலையை அல்லது தலையையுந் தோள்களையும் வெளியே பிதுக்கிவிட்டிருக்க, மிச்சமான உறுப்புகளையும் பிதுக்கிவிடுமாதலால் அது தானாய் எதையும் நிறைவேற்றும்படி விடுவதே புத்தி. தோள்கள் வெளிப்பட்டபின், விடபத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை ஆதலால் வலதுஉள்ளங்கையை விடபத்தாற் பெயர்த்துச் சிசுவின் தலையைத் தாங்கிக் கொள்ளலாம்.

௨வது. கருப்பைச்சுருக்கம். கருப்பை நுகைவின்றி நன்றாய்ச்சுருங்கும்படி கருப்பையில் உறைக்கும்படி வயிற்றிலேமெல்லெனஉரைஞ்சிஅமர்த்துவது நல்லஉபாயம். விடபத்தைத்தாங்கவேண்டியஅவசியம்நீங்கினவுடனே, ஸ்திரியின் வயிற்றிலே இடதுகையைவைத்துக்கருப்பைசுருங்கிச் சிசுவின் உடல் முதலியவைகளையும் பிதுக்கும்போது, இதைக் கூபகத்துள் உருவி இறக்கிவிடவும். சிலரிலே கருப்பைச்சேட்டனம் குறைவாயிருந்தால் அல்லதுநின்றுவிட்டால் வயிற்றிலே மெல்லெனஉரைஞ்ச நோக்காடு உடனே உண்டாகும். கருப்பையின் இழைகள் நன்றாய்ச் சுருங்கும்படி பண்ணிக்கொண்டபின்பு, இச்சுருக்கத்தை நிலைவரமாக்கிக்கொள்ளும்படி மெல்லென இன்னும் அமர்த்திக்கொண்டே இருக்கவும். கருப்பை அதனமாய் நுகையாதபடிஇடையிலே அமர்த்தாமல் விடப்படாது. இந்நோக்கத்தை நிறைவேற்றவேண்டியிருப்பதில் பிள்ளையின் காரியத்தை நாம் பார்க்க வேண்டி வந்தவுடனே, நாம் செய்தவண்ணமாய்க் கருப்பையிலே அழுந்த அமர்த்திக்கொண்

Digitized by Google
627479A

டிருக்கும்படி துணையாளியின் கையை நமது கையிருந்தவிடத்தில் வைப்பித்துக்கொண்டே நமது கையை நெகிழ்த்து எடுக்கவேண்டியது. இனிமேற் சொல்லிக்காட்டும் பிரகாரமாய் உதரகவளிகையிட்டு அணைத்துக்கொண்டேயன்றி மற்றும்படி அமர்த்தின கை எடுக்கப்படாது.

பிள்ளை முற்றும் வெளிவந்து பிறந்தவுடனே கைகாலுதறிக் கீச்சிட்டழும். அப்படியர்கில் உடனே பிள்ளையைத் தாயைவிட்டுப் பிரித்தெடுக்கலாம். ஆகிலும் இதுசெய்யமுன் தாயையும் பிள்ளையையும்வெவ்வேறுக்கும்படி நாபிக்கொடியிலே பிள்ளையின் தொப்பூளுக்கு மூன்று அங்குலத்துக்கப்பால் நாலைந்துபட்டாய் மடித்தநூலினற்சுற்றிக்கட்டி இன்னும்இரண்டங்குலத்துகப்பால்இப்படியே வேறுமொருகட்டுப் போட்டுக், கட்டிரண்டிற்கும்இடையேயுள்ளகொடியைக் கத்தரித்துவிடவும். சற்றுகுதல் ஸ்திரியினது மானந்தோன்றமல் இச்செய்கை முற்றையுங் கண்பார்த்து நடத்தவேண்டியது. மானந்தோற்றமல் நாபிக்கொடியைக் கத்திரிக்க முடியாதவிடத்து மானத்தைப் பிரதானம் என்று கவனியாமல் நாபிக்கொடியைக் கண்பார்த்தே கத்திரிக்க வேண்டுமென்பதே வழுவா விதி. போர்வையின் கீழ்க் கையைவிட்டுக் கண்பாராமல் நாபிக்கொடி கத்திரிக்கும்வேளைகளிலே, பிள்ளையின் சினம் அல்லது விரல் தறிந்து போகஇடமாகும். ஆனதால்த் தாயின் மானத்தைப்பேணிப் பிள்ளைக்குப் பெருமோசம் வருவிப்பது தகுதியல்ல. நாபிக்கொடி அரிந்தபின்பு பிள்ளையின் கொப்பூளிலே தொடுத்திருக்கும் கொடித்தலைப்பில் இரத்தத்தை நன்றாய்த்துடைத்து, நூற்கட்டு இறுகியிருக்கிறதோ, வெட்டுவாயாலே இரத்தம் பொசிகிறதோ என்று பார்க்கவும். பொசிவு இருந்தால், பிறகு உதிரப்பெருக்கு உண்டாகுமானதால் நூற்கட்டை இறுக்கிவிடவும்.

பிறந்தபின்பு பிள்ளைநன்றாய்ச் சுவாசம் விடாதிருந்தால் நாபிக்கொடியிலே துடிப்பிருக்கும் வரைக்கும், பிள்ளையைப்பிரித்தெடாமல் தாயுடன் தொடுத்திருக்கவே விட்டு, பிள்ளையின் வாயிலும் மிடற்றிலுங் கூச்சங்காட்டியும் நெஞ்சிலே மெல்லெனத்தட்டி உரைஞ்சியும் சுவாசங்கிளப்பப் பார்க்கவேண்டும். இவைகளாற் காரியம் வாயாமல் நாபிக்கொடியின் துடிப்பு நின்றுபோனல், நாபிக்கொடியைக் கத்திரித்துப்போடலாம். இப்படியான வேளையி

Digitized by Google

லே பிள்ளையின்முகம் நீலம் பாரித்திருந்தால், நாபிக்கொடியைக் கட்டமுன், அதைக் கத்திரித்து வெட்டுவாயாலே கொஞ்ச இரத்தத்துளிகள் ஒழுகும்படி விடவும். இதினுற் பிள்ளையிலுள்ள மூச்சடைப்பு அற்றுப்போவதுமுண்டு. இவ்வுபாயங்கள் வாயாமற்போனால், பிள்ளையை எடுத்து ஒரு ஆள் மடியிலே வைத்துக்கொண்டு, சற்றே அனற்படும்படி சூடுகாட்டி, நெஞ்சையும் வயிற்றையும் காய்ந்த சூடான சீலையால் மெல்ல உரைஞ்சி, பட்சிஇறகினுலே பிள்ளையின் நாசியுள்ளும் அண்ணத்திலுங் கூச்சங்காட்டி விடவும். மருத்துவர் தமது உதட்டைப் பிள்ளையின்உதட்டுடனே சிறுக்கவணித் துண்டொன்று இடையிலே வைத்து அணைத்து, மெல்லென அதின் வாயில்ஊதி இரண்டொருமுறை பிள்ளையின் நெஞ்சைப் பூரிப்பித்து விடவும். இப்படிச்செய்யும்போது ஒருகையின் விரல்களாலே பிள்ளையின் மூக்கைப் பொற்றிக்கொண்டு, வாயுவானது இரைப்பைக்குள்ளுஞ் செல்லாதபடி மற்றக் கையின் விரல்களாற், பிள்ளையின் நெஞ்சாங்குழியிலே சொற்பமாய் அமர்த்திக்கொள்ளவும். நெஞ்சு வாயுவினுற் பூரித்தவுடனே, வாயுவெளிக்கிடும்படி பிள்ளையின் நெஞ்சைக் கையினுல் மெல்லென அமர்த்தி, இப்படி இரண்டொருமுறை ஊதவும். இதற்கு அதிகமாய் ஊதுவது திறமல்ல.

நாபிக்கொடியை ஒழுங்குபண்ணினதின்பின், பிள்ளையைக் கழுவக்கொடுத்துவிட்டு, ஸ்திரிக்கு உதரகவளிகை இடத்தொடங்கவும். உதரகவளிகையென்பது ஸ்திரியின் உடலைச் சுற்றிவந்து ஒருசாணுக்குமடிந்து நிற்கத்தக்கஅளவு நீளமும், விலாவிலிருந்து பெருந்தொடைவரைக்கும் போகத்தக்களவு அகலமுமுள்ள ஓர் இரட்டுச்சீலைத்துண்டு. கவளிகையின் ஓர்பக்கத்தலைப்பை அதின் நீட்டின் மூன்றிலொரு பங்களவுக்குச்சுருட்டி ஸ்திரியைச் சற்றும் உசும்பி அசையவிடாமல், சுருட்டின தலைப்பை அவளுடைய இடுப்புக்குக் கீழே ஒருகையாலே மெல்லெனத் தள்ளித்தள்ளிமற்றப்பக்கத்தில் வெளிக்கிட்டவுடனேமற்றக்கையாலேபிடித்து அல்லது ஒரு உதவியாளைக்கொண்டு பிடிப்பித்துப் பின்பு கவளிகைச்சுருட்டைவிரித்து இதின் கீழோரம் இடுப்புக்குக்கீழே போய்நிற்க இழுத்து,இருதலைப்பும் ஒன்றுப்பெலப்பான குண்டூசிகளால் நன்றாய்ப்பொருத்திவிடவும். இவ்வேலை முடியும்வரைக்கும் துணையாளி கருப்

Digitized by Google

யையின்மேல் அமர்த்திக்கொண்டிருந்த கையை எடுத்துப் போடப்படாது. வசதியாய் அணையத்தக்க அளவாகக் கவளிகையை இறுக்கவேண்டியது. அணையம் வெளியில் விழுந்தவுடனே கருப்பை சுருங்குவதினால் வயிறு சற்றுச் சிறுத்துப்போமானதால், கவளிகையை முதலிலே சற்றே இறுக்கமாய்க் கட்டினாலும் விக்கினமில்லை. கவளிகையின்கீழோரம் இடுப்புக்குக் கீழே நிற்க விடுவதினாலும், குண்டேசியாற் பொருத்தும்போது கீழோரத்தினின்றே தொடங்குவதினாலும், கவளிகை மேற்பக்கத்துக்குச் சுருங்குண்டு தவராதபடி பண்ணிக்கொள்ளலாம். இல்லாவிட்டால் இடுப்பானதுமேலொடுக்கமாயிருப்பதினால் கவளிகை தளர்ந்துவிடக்கூடியதாயிருக்கும். வாடிக்கைபோல் ஸ்திரியின் சேலைத் தலைப்பொன்றினால் அல்லது கொடியினால் வரிகிற மாதிரியாய் அவளுடைய வயிற்றைச் சுற்றிக் கட்டுகிறதிற் பார்க்க, யாதொருகட்டிறுக்கம் இல்லாமல் விடுவது நலம். ஸ்திரியின் விருப்பம்போலக் கவளிகையைக் கட்டுகிலும் கட்டலாம்; கட்டாமல் விடுகிலும் விடலாம்.

கவளிகையை இப்படி ஒழுங்குபண்ணினதின்பின், ஸ்திரியின் உடம்பு ஈரத்திலே பட்டு நனையாதபடி ஒருதுப்பட்டி எடுத்து நாலாய் மடித்து அவளுடைய இடுப்புக்குக் கீழே கொஞ்சந் தள்ளிவிட்டு, இதற்குமேலே நாபிக்கொடியை வைத்துவிட்டு, மூன்றும்பாதம் முற்றுவதைச் சற்றுப் பொறுதியாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவும்.

பிரசவத்தின் முதல்இருபாதங்களும் மேலே காட்டிய முறையாய் நடந்தேறினபின் அணையமானது பெரும்பாலும் தானே வலிய யாதொரு விக்கினமின்றி விரைவிலேவிழுந்துபோம். சிலவேளை, பிள்ளையின்கால் குண்டிகளைப் பிதுக்கித் தள்ளின நோக்காடுதானே சராயுகத்தையும் யோனிக்குள்ளே தள்ளிவிடும். ஆகிலும் கருப்பை பெரும்பாலும் பத்துப்பதினைந்து நிமிஷமாய் ஆறியிருந்தபின்பு, ஸ்திரியின் வயிற்றிலே இரண்டொரு மெல்லிய முறுக்குநோக்காடு தோன்றும். அந்நேரம் நாபிக்கொடி அருகாய் விரலை உள்ளேவிட்டால், அக்கொடி அணையத்துடனே தொடுத்திருப்பதையும் அணையம் கருப்பை வாயால் வெளிப்படுகிறதையும் தெளியக்கூடியது. கருப்பைச் சுருக்கமே சராயுகத்தை முற்றும் பிதுக்கி வெளியிலே தள்ளுமானதால், நாபிக்கொடியைப் பிடித்திழுத்து

Digitized by Google

வலிக்கப்படாது. சராயுகம் வலிய விழாதிருந்தால், அதை யோனியாற் பிரித்தெடுப்பது குற்றமல்ல. இரத்த ஓட்டம்கிளர்ச்சிகொண்டு நாடித்துடிப்பு விரைவாயிருந்தால், இதினல் இரத்தப்பெருக்கு உண்டாகுமென்று அஞ்சவேண்டியதாய் வரும். இரத்தஓட்டம் கிளர்ச்சிகொள்ளாதிருந்தாற்றான், சராயுகத்தைப் பிரித்தெடுக்கலாம். இப்படிப் பிரித்தெடுக்கும்போது, கொடியிலே பிடித்திழுத்தால், அணையம் அகன்றபக்கமாய் அல்குலுக்குக் குறுக்கே வந்துவிடுமானதால், நாபிக்கொடியிற் பிடித்திழுப்பது புத்தியல்ல. அணையத்தின் அருகிலே இரண்டொரு விரலைக்கொழுவி, அதை முற்பக்கமாய்த் தள்ளி, பின்பு அணையத்தின் அருகுப்பக்கமாய் மெல்லெனப் பிறவிவாசலாலே லகுவாய் இழுத்தெடுக்கலாம். சராயுகத்தின் ஏதொரு பகுதியாவது வெளியில் வராமல் உள்ளேயும் நின்றுவிட்டுதோ முற்றும் வெளியில் வந்துவிட்டுதோ என்று தெளியும்படி, விழுந்த சராயுகத்தை அவதானமாய்ச் சோதிப்பது நல்லயோசனை.

நாம் எண்ணியிருந்த பிரகாரம் விரைவிலே சராயுகமானது விழாமல், கருப்பைச் சேட்டனமின்றி இரண்டொரு நாழிகையளவு சென்றுபோயிற்றேயாகில், வயிற்றிலே சற்றுக் கையினுற் பிசைந்து உரைஞ்சிக் கருப்பையைஅருட்டி நோக்காடு கிளப்புவது நல்லது. நாபிக்கொடியிற்பிடித்திழுத்துச் சராயுகத்தை எடுக்கப்படாதென்பது ஓர்பொது விதி. அதிற் பிடித்திழுப்பதினல் விளையக்கூடிய மோசங்களாவன; நாபிக்கொடியாவது அணையமாவது கிளிதல், கருப்பையின் உட்புறம் வெளிப்புறமாகத் திரும்புதல், கருப்பைவாய் அழற்றிகொண்டு சுருங்குதிவனல், அணைய முதலானவை வெளிப்படாமல் மறிபடுதலாகிய இவைகளே. நாபிக்கொடியைச் சற்றே மெல்லெனவாய் இழுத்துப் பார்க்கலாம். இதினல் கருப்பை சேட்டனங் கொள்வதுமுண்டு. இவ்வகையான உபாயங்கள் வாயாமற் போனல் அணையமறி எனக்கண்டு இதற்கேற்ற வைத்தியஞ் செய்யவும்.

பிரசவம் முற்றாய் நிறைவேறின பின் ஒரு நாழிகைவரைக்காகுதல் ஸ்திரிக்குக் கிட்ட மருத்துவர் நிற்கவேண்டியது. இரத்தப் பெருக்குக்கான கோலங் கண்டால், அல்லது நாடித் துடிப்பு வழமைக்கு மிஞ்சி விரைவாயிருந்தா

Digitized by Google

ல் ஸ்திரீயை விட்டுப் போகவேபடாது. கருப்பைவாய் சரியாய்ச் சுருங்கிக் கவளிகை ஒழுங்காய் இட்டிருக்கிற தென்றும், நாடிஒழுங்காய்த் துடிக்கிறதென்றும், பிள்ளையி ன் கொப்பூழ்க்கொடியால் இரத்தப்பெருக்கு வராதென்று ம், அவதானமாய்த் தெளிந்துகொண்ட பின்பு தான் ஸ் திரீயை விட்டு, மருத்துவர் போகவேண்டியது.

Digitized by Google

# கக ம். அதிகாரம்.

## கிரமப்பிரசவ விகற்பங்கள்.

கிரமப்பிரசவங்களிலேசிற்சில விகற்பங்களுஞ் சம்பவிக்கின்றன. அவைகளுக்குள் பின்வரும் மூன்று விகற்பங்களையுமே சற்றே சிந்தனைசெய்வோமாக.

கவது. சிசுவின் நெற்றி மேகனத்தை அணைந்து நிற்கச் சிரசு புறப்படுதலாகிய முன்னுச்சி உதயம்.

உவது. முகவுதயம்.

ஙவது. அஸ்தம் அல்லது முன்கை சிரசுடன் கூடிவெளிப்படுதல்.

கம். விகற்பம். சிரசு அல்குல் வழியாய் வெளிப்படுகிறபோதேயன்றி அதற்கு முன், முதல் விகற்பம் நமக்கு வெகுவாய் விளங்காமற் போய்விடும். ஆகிலுஞ் சிரசின் உதயபக்கமானது, பின்னுச்சி உதயத்திற்பார்க்க அதிகம் அகன்று வட்டித்திருப்பதினாலும், மேகனத்தவரின் கீழ் அவ்வளவு லகுவாய் அது இறங்காமையாலும், பித்திகைக்கரேகை இன்னபாட்டுக்கு இருக்கிறதென்பதை நிதானித்துக்கொள்வதினாலும், மேகனானுசங்கிக்குக்கிட்ட முன்னுச்சியை லகுவாய் மட்டுக்கட்டக்கூடியதினாலுமே, முதல்விகற்பம் இன்னதென்று அறிந்துகொள்ளலாம். முன்னுச்சி பின்னுச்சிகளுக்குள்ள வித்தியாசமின்னதென்று சிசுவைப்பற்றிய அதிகாரத்திலே கண்டுகொள்ளவும். முதல் விகற்ப உதயத்திலே பிரசவம் பெரும்பாலும் அலுப்பாய் முடியுமென்று பிரசவ முறையைப்பற்றிச் சொல்லிய அதிகாரத்திற் பார்த்தால் விளங்கும். அலுப்பானாலும், இதில் நேரிடும் அவலப்பாடுகள் வலிய நீங்கக்கூடியவைகள். கீர்த்தி சிறந்த சிலபண்டிதரோ முதற்பாத வேளையிலே சிரசின் நிலையத்தைமாற்றி வைப்பது உத்தமம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரசவங்களில் பெரும்பாலும் நிலயம் வலியத் தானாய் மாறிவருமென்றும், முகம் முற்பக்கத்தை நோக்கி நிகழ்ந்த பிரசவங்களிற் கண்ட கெசேடான நயத்தைப் பார்க்கும்போது நாம் சகாயோபாயஞ் செய்யவேண்டுமென்ற நியாயங் காணவில்லையென்றும், நாகீல் என்ற பண்டிதர் கண்டறிந்தவைகளால்

Digitized by Google

விளங்குகிறது. விடயம் மோசத்துக்கு அதிக இடமானதாயிருப்பதினால் அதை அவதானமாய்க் காத்துக்கொள்வதே அவசியம்.

உம். விகற்பம். முகம் உதயமாகும்வேளையிலேயும் பிரசவம் அலுப்பாய் முடியுமென்று, சிசுவைப்பற்றியும் பிரசவ முறையைப்பற்றியுஞ் சொல்லிய அதிகாரங்களிற் காட்டிய நியாயங்களால் விளங்கும். இவ்வகையான பிரசவங்களில், உதய நிதானஞ்செய்வது சற்றே பிரயாசம். வாய் மூக்கு கண் முதலியவைகளிலே நிதானஞ்சொல்வதற்கு அடையாளங் காணலாம். முகமோ வழப்பமாய் அதிகம் அதைப்புக்கொண்டிருப்பதால் அவ்வடையாளங்களை எளிதிலே மட்டுக்கட்டிக் கொள்வது அபூருவம். வாயை அபானமென்றதாக எண்ணி, குண்டி உதயமென்று மோசப்பட்டதும் உண்டு. நாக்கு உண்டோ இல்லையோ என்று தடவிப் பார்த்து முக உதயமோ, குண்டி உதயமோ என்று நிச்சயம்பண்ணிக் கொள்ளலாம்.

முகவுதயம் நடந்தேறுகையில், மேகனத்தவரின் கீழ்மோவாயே பெரும்பாலும் முதற் புறப்பட்டு, வலியத் தானகவே பிரசவம் முற்றுவதுண்டு. முகவுதயத்திலே, சிசுவின் நிலயத்தை மாற்றி வைப்பது அவசியமுமல்ல நியாயமுமல்ல. ஸ்திரியின் சலப்பையானது உச்சி உதயத்திலும் பார்க்க அதிகமாய் நெருக்குண்ண எதுவாயிருப்பதினால், அதிலே அமர்த்தி உறுத்துதலால் உண்டுபடும் விக்கினங்களை விலக்குவதும், மடைமைத்தனமாய்ப் பலதரம் பரிசோதனை செய்து சிசுவின் முகத்தைக் கிரியை கெடுத்துப்போடாமற் பேணிக்கொள்வதுமே நமது கடன். பிறவி நேரத்திலே சிசுமுகம் சிற்சிலவேளை அதிகம் அதைத்து நிறம் பேதமாய் விடும். ஆகிலும், பிறந்து சிறிதுநேரத்துக்குள்ளே உள்ளபடியான சுபாவமுகமாய் விடும்.

கூம். விகற்பம். சிற்சிலவேளை அஸ்தம் அல்லது முன்கை சிரசோடு கூட அல்லது சிரசுக்குமுதல் இறங்கும். இப்படியான வேளையிலே, பிரசவத்திலே தாமதமும் அவலமும் உண்டாகும். கூபகம் ஒடுங்கியிருந்தால் கருவிச் சகாயமும் வேண்டியதாய் வரும். சிரசு கூபகவறையிலே பூண்டு இறுகிக்கொள்ள முன்னே இவ்விதமான சிக்கு வருமென்று அறிந்தால், கை சிரசுடன் இறங்காதபடி, நோக்காட்டு வேளையிலே அதை மேலே பிடித்துக்கொண்

டு சிரசை அதற்கு முந்தியிறங்கவிடலாம். கையைப் பின்னுக்கு விட்டுச் சிரசை முதலிறக்கப்பார்க்கையிலே, தோளுதயமாய் வரவுஞ் செய்து அவலப்படுவோமாதலால் அவதானத்தோடேயே இச்செய்கையை முடிக்கவேண்டியது.

கிரமப்பிரசவத்தின் விகற்பங்களுள் சொற்ப விகற்பம் வேறொன்றுண்டு. அதென்னவெனிற் பன்னீர்க்குடம் மெத்த முந்த உடைந்தும், பிரசவமோ உடனே தொடங்காமல் நிற்பது. ஒரு தருணத்திலே பிரசவகாலத்துக்கு மூன்று கிழமைக்குமுன் பன்னீர்க்குடம் உடைந்த செய்தி எனக்குத் தெரியும். இதிலே பிரசவம் நன்றாய் முற்றுப்பெற்றுப் பிள்ளையும் உயிராய்ப் பிறந்தது.

இங்கே காட்டிய கிரமப்பிரசவ விகற்பங்களுள் ஏதேனுமொன்று தோன்றும்போது, கருவிப் பிரயோகம் செய்வதற்கு அதுவே போதிய தகுந்த நியாயமாக முடிய மாட்டாதென்பதே நமது தாற்பரியம் என்று முன்னே சொல்லியவைகளால் விளங்கவேண்டியது. சில தருணங்களிலே கருவிப்பிரயோகம் வேண்டியதாயும் வரும். அத்தருணங்கள் இன்னின்னவென்று இனிமேற் சொல்லுவோம்.

Digitized by Google

# கஉம். அதிகாரம்.

## கஷ்ட பிரசவம்.

தென்மன் என்ற ஆசிரியருடைய பகுப்பின்படி கஷ்ட பிரசவம் என்பதிலே சிசுவின் சிரசு உதயமாய் அறுபதுநாழிகைக்குள் முற்றுப்பெறாத பிரசவமெல்லாம் அடங்கும். கஷ்ட பிரசவம் என்பதற்கு இவ்விலக்கணம் சரிவரப்பொருந்தாதென்றும், முப்பது நாழிகைக்குள் நிறைவேறிய பிரசவங்கள் கஷ்டமாயிருக்க, நூறுநாழிகைக்குள் நிறைவேறியவைகளோ கஷ்டமல்லாமற் போய்விடக்கூடுமென்றும் பின் சொல்பவைகளால் விளங்கும். இதிலே அனேக விகற்பங்கள் அடங்குமாதலால் நாம் இதை மூன்று வர்க்கமாய் வகுப்போம்.

கவது. பிரசவகாலம் அறுபது நாழிகைக்குமேலே சென்றும் பக்குவமாய்ப்பராபரித்துக்கொண்டால் தாமே வலிய முற்றும் பிரசவங்கள்.

உவது. சாவணம், உற்கருசி, என்ற கருவிகள் பிரயோகித்துந் தாய்க்கும் பிள்ளைக்கும் யாதொரு சேதமின்றி முற்றுவனவாகிய கருவிச் சகாயப் பிரசவங்கள்.

ஙவது. அதிக அவலமாகிச் சிசுவின் பருமத்தைக் கருவிகளாற் சிறுப்பிக்கவேண்டி அல்லது சிசு இறங்கும்படி பிறவி வாசலை இருந்ததற்கதன்மாய்ப் பருப்பிக்கவேண்டிவரும் பிரசவங்கள்.

### கஷ்டபிரசவம், முதல்வர்க்கம்.

முதல்வர்க்கக் கஷ்டபிரசவம் இன்னதென்று மேலே விளக்கிக் காட்டினோம். இங்கே அதற்குரிய காரணங்களை இரண்டுவகையாய்ச் சிந்திப்போமாக.

கவது. சிசு லேசாய் இறங்க இடங்கொடாதபடி தடைபண்ணுங் காரணங்கள்.

உவது. பிதுக்கித்தள்ளும் ஏதுக்களினது சத்தியைக் குறைக்குங் காரணங்கள். பிரசவமொன்றிலே இவ்விரண்டு வகையுந் தோன்றக்கூடும்.

க. தடைபண்ணுகிற காரணங்கள்.

தசைப்பகுதி முரணுதல், பிரசவவேளையிலே கருப்பை

Digitized by Google

வாய் பலதன்மைகொள்ளும் என்று சொன்னபோது அது விரிவதற்கு அந்தன்மைகளுக்குட் சில அதிக வாய்ப்பான வையென்றுசொன்னோம். இப்படியே அல்குல், யோனிகளைப்பற்றியுஞ் சொல்லலாம். சிலரிலே பிரதானமாய் நெடுநாட் பிள்ளையில்லாதிருந்து வயது சற்றே முதிர்ந்தபின் கர்ப்பிணிகளானவர்களிலே அல்குல் முதலியன முரணுங் கனற்புமாய் ஈரமிளக்கமில்லாமல் வரண்டு சிற்சில வேளை பரிசோதனையைச் சகித்துக்கொள்ளக்கூடாதளவு அழற்சிகொண்டிருக்கும். அந்நேரங் கருப்பைவாயும் முரணுகி விரிந்து கொள்ளமாட்டாமலிருக்கும்.

ஸ்திரியினது உடம்பிலே சுரக்கோலத்தைத் தோற்றுவிக்கும் எக்காரணத்தினாலும் இப்படியாவதுண்டு. சிலவேளை பிரசவமானது வலியத்தானே விக்கினமின்றி முற்றக்கூடியதாயிருக்க, அதைப் பக்குவக்கேடாய் நடத்துகிறதினாலும் அப்படிமுடியும். உதாரணமாய், முதற்பாத வேளையிலே பன்னீர்க்குடத்தை உடைத்துப்போட்டால் கருப்பைவாய்க்கிசைந்து மென்மையாயிருக்கும் பன்னீர்க்குடத்தின் முடி அதில்வந்து அண்டாமல், சிசுவின்துவன்மையான சிரசு அக்கருப்பைவாயில் அண்டி இதினால் அது வெப்புக்கொண்டு விரியாமல்த் தடைபட்டு, பிரசவமும் அலுப்பாய் முடியும். காரசாரங் கதித்த உண்டி பானங்கள் பரிமாறினால், பிரசவகூடம் அதி உஷ்ணமாயிருந்தால், ஸ்திரி நெடுகிலும் படுத்தேகொண்டால், அதனமான பரிசோதனைசெய்தால், சலசுத்தி செய்யாமல் அசட்டையாய் விட்டால், மலக்கட்டுஅகற்ருதிருந்தால், இவைகளுள் ஏதேனொன்றினால் பிரசவம் அலுப்பாய்முடியக்கூடும். கருப்பைவாயானது வாடிக்கைக்கு அதனமாய்ப் பீடிகைமுனைப்பைத் தாவி மேலாய்ப் பின்னுக்குத் திரும்பியிருக்கும்வேளைகளிலேகருப்பைக்கழுந்தின் முற்பக்கம் சிசுவின்சிரசுக்கும் மேகனஎன்புக்கும் இடையே நெருங்குண்ண இதினாலுங் கருப்பைவாய் விரியமாட்டாமற் போவது உண்டு.

இப்படியான சமையங்களிலே வைத்தியமுங் காரியத்துக்குத்தக்கதாய் விகற்பிக்கவேண்டியது. சுரக்குணத்தைக்கிளர்த்துவதற்குச் சார்பானஎதையுங் கண்டிப்பாக விலக்கவும், பிரசவகூடங்குளிர்மையும்அமைதியுமாயிருக்கவும். ஸ்திரி பேசமனங்கொண்டால் அவளுக்குத் துணையாளராயிருப்பவர்கள் மனச்செந்தளிப்பான பேச்சைப் பேசவும்,

தேகம் இளைத்துப்போகாமலுஞ் சுரக்கோலங்கொள்ளாமலும் ஸ்திரீ இடைக்கிடையே மட்டாக உலாவிக்கொள்ளவும். சாவதானமாய்ச் சலசுத்திசெய்துகொள்ளவும்; அவசியமாகில் சிராவணி விடவும். மலக்கழிவு தடைபட்டுநின்றால் கிரமப்பிரசவத்திற்சொல்லியவண்ணம் சாந்தியான விரேசனங்கொடுக்கவும், அல்லது அபானவழியாய்த் தண்ணீர் புகட்டவும். கஞ்சித்தெளிவு, எலுமிச்சம்பளச்சாறு கலந்த தண்ணீர், இவைபோலுங் குளிர்மையான பானங்கள் பரிமாறவும். தின்னுகில் ஏதேன் மெல்லியதின் கொடுக்கவும்.

இரத்தப்பூர்த்தியுள்ள ஸ்திரிகளில்நாடித்துடிப்பு அதிகரித்து, முக்குஞ்சுரந்து, மேலிலே சூடுகண்டால், இரத்தம்வாங்குவது புத்தி. இருக்குங் காரியநிருவாகத்துக்குத்தக்க அளவாய் இரத்தம்வாங்கவும்; கூடியளவுகொஞ்சமாய் வாங்குவதே நல்லது. இரத்தம் வாங்கிப்போட்டு, அல்லது இரத்தம்வாங்காமல் விட்டு, தாத்தர் அந்திமோனியென்ற மருந்திலே ஓங்காளமுண்டாகத்தக்க அளவு கொடுப்பதே சற்றிகநயப்பாய் முடியும். ஆகிலும் சிலரில் அவசியமாய்இரத்தம்வாங்கவேண்டியும்வரும்.

முரணை இளக்குவதற்கு அபின் உத்தமமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகிலும் பிரசவத்திலே இம்மருந்தை உட்கொள்ளுவதினால் உண்டாகும்பயன் இவ்வளவென்று நிதானிக்க ஏலாது. சிலதருணங்களிலே அபின் முரணிப்பை இளக்கிப் பிரசவத்தை விரைவாக முற்றுவிப்பதற்குப் பிரதியாக, நேர்க்காட்டை முற்றாய் நிறுத்திப்போடவுங்கூடும். மலக்கழிவு தடைபட்டிருக்கும்போது, அபின்சேர்ந்த மருந்துகள் கொடுக்கப்படாது. மலஞ்சுத்தியாகி, காரிய சித்தியில்லாத நோக்காடுகண்டு, ஸ்திரியிலே அலுப்புத்தோன்றுமேயாகில், இருபது, முப்பது துளி லாடனங்கொடுத்தாற் சிறிதுநாழிகைக்கு நித்திரைவந்து நயமுண்டாம். அபின் கொடுப்பதைப்பற்றி அவதானிக்கவேண்டிய ஒரு விதியென்னவெனில், அம்மருந்துகொடுத்து நித்திரையுண்டாக்கவேண்டியதாயிருந்தால், ஸ்திரியிலே வலியஉறக்கம் உண்டாகும் வேளைகளிலேயன்றி, மற்றும்படி ஒருபோதுங் கொடுக்கப்படாதென்பதே. உதாரணமாய் இரவிலே அமைதியான நித்திரையை வருவிக்கத்தக்க அளவு லாடனத்தைக் காலையிலே தின்றால் உடம்பிலே காய்ச்சற்குணம் உண்டாகக்கூடும்.

Digitized by Google

முன்னே எடுத்துக்காட்டிய உபாயங்களுடன் பொறுதியுங் கூடினல், தசைப்பகுதியின் முரணினல் உண்டாகும் விக்கினங்கள் வெகுவாய் நீங்கிவிடும். வெந்நீர்ச்சீலை போடுதல், யோனியுள் நல்லெண்ணெய்தடவுதல், கருப்பை வாயிலே பூமத்தஞ்சாறுபூசுதல், புகையிலைக்கஷாயம் அபானவழியாய்ச்செலுத்தல், வெந்நீரில் இருத்துதல் முதலிய இவ்வகையான வைத்தியங்களும் உத்தமமென்று சொல்லியிருக்கிறார்கள். அனுபவத்தளவிலே, இவைகளால் விளையும் பயன் இன்னதென்று அறியேன். இவற்றைப் பிரயோகிக்கலாமென்றதற்கு அவைகளளவிலே நியாயமுங்காணவில்லை.

உ௯து. சோபங்களுந் தசைப்பகுதியின் வியாதியும். சிலரிலே பிறைச்சவ்வானது உள்ளபடிக்கு அதிகமாய் உரத்து, அற்றொழிந்துபோகாமற் பிரசவகாலம்வரைக்கும் இருப்பது உண்டு. இதழ்கள்தாமே வலிய ஒட்டிக்கொள்வதும் உண்டு; இடையூறுகளினல் இப்படியாவதும் உண்டு. இவ்வகையான தடக்குகள் பிரசவகாலத்திலே தாமாய்நீங்குவதும் உண்டு. அவ்வுறுப்புக்களை வெட்டிப்பிரித்துவிடவேண்டிய தருணங்களைப்பற்றியும் எழுதியிருக்கிறார்கள். கருப்பைவாய் அடைபட்டுப்போனபடியாற் சிலதருணங்களில் வெட்டித்திறந்துவிடவேண்டிவந்ததென்றுஞ் சொல்லுகிறார்கள். பலவிதமான சோபங்கள், சலப்பைப்பிதுக்கம் அல்லது குடற்பிதுக்கம் யோனியுள் இறங்கி, பிறவிவாசலைத் தடக்கிக்கொள்வதும் உண்டு. ஆகிலும், இதுமெத்தஅபூருவம். காரியத்துக்குத்தக்கதாய்ப்பார்த்துத் தடக்கைவிலக்கிக்கொள்ளலாம். இவைகளைச் சிசுவின் சிரசுக்குமேலே மிதத்திவிடக்கூடுமாகில், பிரசவம் நன்றாய் முற்றும். அச்சோபங்களிலே நீர்ப்பொருமல் இருந்தால் ஏற்றகருவியினல்நீரைக் குற்றிவாங்கிவிடலாம். அல்லது சிசுவின்சிரசைக் குறைக்கவேண்டியதாய் வரும். பிரசவம் கூடியளவு தாய்க்குச் சேதமின்றி நிறைவேறும்படிக்கான உபாயங்கள் பண்ணவேணுமென்பதே நாம் சொல்லக்கூடிய ஒருபொதுவிதி.

௩௦து. பிறவிவாசலானது, அதால் இறங்குஞ் சிசுவிலும்பார்க்கச் சிறுத்து இசைவீனமாயிருப்பது.

இசைவீனஞ் சொற்பமாயிருந்தாற் பிரசவங் கஷ்டமாக முடிந்தாலும், அப்பிரசவம் வலியத்தானே நிறைவேறத்த

Digitized by Google

க்கது. இப்படியானவேளையிலே சிசுவின்சிரசு அதிகம் நெருங்குண்ணவேண்டியும், மட்டுக்குமிஞ்ச நெடுகிப் பிதுக்குண்ணவேண்டியும் வந்தாலும், அதற்கு யாதொரு மோசமும்வராது. இதைநினைந்துகொண்டு, கருவிகள் அவசியமாய்ப் பிரயோகிக்கவேண்டிய கோலங் காணுமளவும், கருவியென்று நினைக்கவும்படாது. இசைவீனமானது, ஸ்திரிகூபகம் சிறுத்திருப்பதினாலும், புச்சவென்பின் பொருத்து வளையாமல் முரணாய்ப்போனதினாலும், சிசுவின் அதிக பருமம் அல்லது குரூபத்தினாலும் உண்டாகும். சிசு செத்துப்போனால் அதின் உடம்பு அழுகுகையில் அதினின்று பொருமி எழும்பும் வாயுவினால் அவ்வுடம்பு வீங்க, இதினாலும் பிறவிநடைக்குத் தடையுண்டாகும். தசைப்பகுதியின் முரணுக்குச் செய்யும்படிசொல்லிய வைத்தியம்போலவே இசைவீனத்துக்குஞ் சொல்லுவோம். மருத்துவர் அதிக பொறுதியாய் இருந்து, சுரத்தை எழுப்புவதற்கான எதையும் விலக்கவேண்டியது. சிசுவின் சிரசு நீர்ப்பொருமலினால் பருத்து இருக்கிறதென்று நிதானம்பண்ணக்கூடிய இடங்களிலே, சிசு உயிராயிருக்கிறதென்று நம்பினவேளைகளிலே தாமசஞ்செய்வதுபோற்செய்யாமல், முந்தவேகருவிச் சகாயஞ்செய்து, தலையிற்கோத்திருக்கும் நீரைவாங்கும்படி சிரசைக்குற்றவேண்டும். இதினாற் பிரசவம் சற்றுவிரைவிலே முற்ற, ஸ்திரியானவள் மிகுவேதனை மோசங்களுக்கும் விலகி விடுவாள்.

## பிதுக்கித்தள்ளும் உறுப்புகளின் பெலத்தைக் குறைக்குங்காரணங்கள்.

க வது. கருப்பைமாந்தியம். கருப்பைஇழைகளின் சேட்டனத் தாழ்ச்சியினால், அல்லது எதுகாரணத்தினாலாவது உண்டாகும் உடம்பு மெலிவினால், கருப்பையானது சேட்டணமின்றி மாந்தியப்படும். கருப்பை அளவுக்குமிஞ்சி அதனமாய் விரிந்துவிட்டதினாலும், அதின் பரிப்பீளாகிய சவ்வுகள் அதிக தடிப்பாயிருப்பதினாலும், கருப்பை மாந்தியமாகுமென்றுஞ் சிலர் சொல்லுவரார்கள். பெலவீனத்தை வருவிக்கும் வியாதிகளின் முடிவிலே ஸ்திரிகளில் இவ்வகையான கருப்பைமாந்தியம் உண்டாகுமென்று நாம் எண்ணவேண்டியதாக வரும். ஆகிலும், கயம், சுரம்.

Digitized by Google

முதலிய வியாதிகளில் அழுந்தும் ஸ்திரிகள் சாகச் சில நாழிகைக்குமுன், யாதொரு அவலமின்றிப் பிரசவிக்கிறதும் உண்டு. மருத்துவருக்குக் கருப்பைமாந்தியம்போல் அலுப்புக்கொடுக்குங் காரியம் வேறொன்றுமில்லை. மருத்துவவைத்தியத்திலே, பொறுதியே எப்போதும் நல்ல துணையாம். பிரசவநடையானது சீக்கிரகெதியின்றிப் பதமையாயிருந்தாலும் ஸ்திரியைக் கண்ணாய்ப் பார்த்துக்கொண்டு, பெலவீனம் உண்டாகாமல் மெல்லிய உண்டி கொடுத்துத்தேற்றி மேலேவிளக்கிய விக்கினங்களை எல்லாம் ஒழித்துவிடுவதினால், கடைசியிலே பிரசவத்தை முற்றுவிப்பதற்குக் கருப்பைச்சேட்டனம் வெகுவாய்ப் போதுமானதாகவேயிருக்குமென்று காண்போம். சாந்தியான விரேசனங்களும் அபானவழியாய் மருந்துநீர் புகட்டுவதுமே இவ் வர்க்கத்துக்கு விசேஷமாய் உபயோகமானவைகள். பிரதானமாய் அபானவழியாய் மருந்துநீர் புகட்டுவதினாற் காரியத்தைமுடிக்கும் நோக்காடு கிளம்பும். அபின் சற்றே அத்னமாகக் கொடுப்பது உத்தமம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிக்கொடுத்தால் கருப்பையை முற்றாய் மாந்தியமாக்கி நோக்காடு கிளம்பாமற் பண்ணிப்போடும். தேவைக்கண்டாற் தசைப்பகுதி முரணுகுதலைப்பற்றி, நாம் ககo. பக்கத்திலே சொல்லிய ஆலோசனைப் பிரகாரஞ்செய்யவும்.

கருப்பை மாந்தியத்துக்கு எர்கற்று என்றமருந்து வாய்ப்பு. நோக்காட்டைச் சிலவேளையாகுதல் கிளர்த்துகிறதற்குத் தகுந்த மருந்து எர்கற்று என்று தற்காலத்திலே பெரும்பாலும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிலவேளை இம்மருந்து வாயாது. இது காலநீட்சிமுதலிய காரணங்களினாற் செயங்குன்றிச் சத்துக்குறைந்து போகிறதினால், அப்படி வாயாமற் போய்விடுகிறதென்று சொல்லுகிறார்கள். இதின் நயத்தைச் சோதித்தறியவேண்டுமாகில் பிரயோகிக்க வேண்டிய வேளையிலேயே இதைப் பொடிபண்ணிக்கொள்ளவும். இதற்குரிய சுத்தமணம் வீசுகிறதென்றுஞ் சக்குப் பூத்திருக்கவில்லையென்றுந் தெளிந்து கொள்ளவும். சில உடம்புகளிலே இதின் சத்துப்பலியாமலும் போய்விடுமானதால், மேற்சொல்லிய பக்குவமெல்லாஞ் சேர்ந்தவேளையிலேயும் வாயாமற்போம்.

எர்சற்று என்ற மருந்தைத் தொடுத்துவரும் பக்குவம்,

Digitized by Google

ஒரு சிறுக்கலசத்திலே ஒரு ஆளாக்குக்கொதி வெந்நீர்வா ர்த்து இதிலே அரைத்திரும் எர்கற் பொடியிட்டு அரைநா ழிகையளவுக்கு மூடிவைத்துப், பின்பு அக்கஷாயம் முற் றையும் அதிலிட்டபொடியில் மூன்றிலொருபங்கையுங் கொஞ்சம் பசுப்பாலிற் கலந்துகொடுக்கவும். இதிலே நய ங்காணுமற்போனல் அரைநாழிகையின்பின் திரும்பவும் அப்படியே கொடுக்கவும். இப்படி இரண்டுமுறை கொ டுத்ததினுலும் நோக்காடு கிழம்பாவிட்டால் மூன்ருமு றை கொடுப்பது புத்தியுமல்ல உபயோகமுமல்ல.

எர்கற் கொடுக்கத் தகாத தருணங்கள் இன்னின்னவெ ன்று தெளிவாக அறியவேண்டும். கருப்பைவாய் முற்றும் விரிந்தால் அன்றிக் கொடுக்கப்படாது. கூபகம் அந்தக்கு றைவாயும், தசைப்பகுதி முரணிப்பாயும் இருந்தாற் கொடு க்கப்படாது. கருப்பைவாய் விரியுமுன் பிரயோகித்தால் பன்னீர்க்குடம் மெத்தமுந்த உடைவதினுல் வரும்விக்கி னமோசங்கள் அதினுலும்வரும். கூபகம் அந்தக்குறைவா யும் தசைப்பாடு முரணிப்பாயும் இருக்கும்போது பிர யோகித்தால் கருப்பையை அல்லது தசைப்பாட்டைக் கி ழியப்பண்ணும். குறுக்குதயமாகி ஒழுங்குத்திருத்தம்பண் ணவேண்டிவரும் இடங்களிலாவது, வலியிலாவது, தலை யிடி, தலைக்கனைப்புமுதலிய கோலங்கொள்ளும்போதாவது எர்கற்றுப் பிரயோகிக்கப்படாது. குறுக்குதயத்திலே நோக்காட்டை அதிகரிப்பித்து அதிக அவலங்களை உண் டாக்கும், வலி, தலையிடி முதலியவைகளிலே ஏர்கற் பிர யோகிப்பது மோசமென்று இனி நாம் சொல்லப்போகி ற நியாயங்களால் விளங்கும். பிறவிவாசல்கள் நல்ல பக்கு வமாய்விரிந்து, கருப்பைவாய் நன்ருய்த் திறந்து, சிசுவின் சிரசு கூபகத்துள் இறங்கி, போதுமான இடவிசாலமிருந் து, சிசுவைப் பிதுக்கித்தள்ளுவதற்கு நோக்காட்டுக் குறை வன்றி வேறொரு குறைவும் இல்லாதிருக்கில், அப்பொழு துதான் முன்சொல்லிய முறையாய் ஏர்கற்றை விக்கினமி ல்லாமற் பிரயோகிக்கலாம்.

ஏர்கற்றை அதனமாய்ப் பிரயோகிக்கில் ஸ்திரிக்கு அபா யம்நேரிடும். மாருட்டம்உண்டுபடும்; நாடித்துடிப்புவிழு ந்துபோம்; கருப்பையைச் சுருங்கப்பண்ணுமல், அதி சு ழுத்தியையும் சுவாசக்குறுகுறுப்பையும் எழுப்பும். இத் தன்மையான குணங்களை விளைவிக்கக்கூடிய மருந்தாயி

Digitized by Google

ருப்பதினால், தலைக்கிறுதி, தலைக்கனப்பு முதலிய கோலங் கண்ட வேளைகளிலே இதைப்பிரயோகிப்பது அடாது.

ஏர்கற்றில் முதற்கண்டவிசேஷம்அதின் விஷக்குணம். அதைத் தின்றுவந்தால், கை கால் விரல்கள் அழுகிப்போம். ஆளையுங் கொன்றுபோடும். அதை மிருகங்களுக்குத் தின்னக்கொடுத்தால், அவைகளிலும் இப்படியே முடியும். ஏர்கற்றை அதனமாய்க்கொடுத்துவந்தபோது அதினாலே தசைப்பாடு செதிள்செதிளாய் உரிந்துபோன இரண்டு பிரசவ செய்திகளை நான் அறிவேன். அம்மருந்தைச் சிறுகமட்டாய்க்கொடுப்பது உத்தமமென்பதற்கு இதுவும் ஒரு நியாயமாய்க்காட்டலாம்.

கருப்பைமட்டுக்கு மிஞ்ச விரிவதினாலும் பன்னீர்க்குடத்தின் சவ்வுகள் அதிகதடிப்பாய்இருப்பதினாலுங் கருப்பைமாந்தியம் உண்டுபட்டால், நோக்காட்டு வேளையிலே ஓர் சலாகையினால் அல்லது நகத்தினாற் பன்னீர்க்குடத்தைப்பிட்டுவிடவும். அப்படிச் செய்யவேண்டிவருவது அரிது. பன்னீர் மெத்த முந்தப் பாய்வதினால் உண்டுபடும் தீங்குகள் இன்னின்னவென்று நாம்சொல்லியிருப்பது தெரியுமே; ஆதலால், இப்படிக் கருவிமுதலியவற்றைப் பிரயோகஞ் செய்வதிலே அதிக பேணரவாய் இருக்க வேண்டும்.

உ வது. பயம் கோபம் முதலியகுணங்கள். இக்குணங்கள் சில ஸ்திரிகளிலே அதிக பெலப்பாய் உறுத்துவதினாலே, நோக்காடு தடைபட்டு நின்றுபோவதுமுண்டு. ஆதலால் ஸ்திரியானவள் அமைவாகவும் கூடியளவு மனத்தாராளமாயும் இருக்கும்படி செய்யவேண்டியது.

௩ வது. நாபிக்கொடிக்குறுக்கம். இதினாலும், இத்துடனே சிசுவின்கழுத்தில் அக்கொடி சுற்றியிருப்பதினாலும், பிரசவம் சிலவேளை தடைபடும். ஆனாலும் அதிகங் குறுகியிருப்பது மெத்தஅரிது. சிலதருணங்களிற் சிரசு வெளிக்கிட்டவுடனே, நாபிக்கொடியைக் கட்டி கத்தரித்துவிடுவது அவசியமாயிருக்கும்.

௪ வது. கருப்பைச்சரிவு. இதினாலே பிரசவநடைக்கு நினையாப்பிரகாரம் வலு விக்கினம்நேரிடும். ஆகிலும், நன்றாய் மனஞ்செலுத்திப் பரிசோதனையுஞ்செய்துபார்த்தால் லகுவாய் இதை மட்டிட்டுக்கொள்ளலாம். கருப்பை பாரிச பக்கத்துக்குச் சரிந்திருக்கில், விரிவுகொண்ட கருப்

Digitized by Google

பைவாயின் ஒருவிளிம்பு கூபத்தின் நடுமையத்துக்குக் கிட்டத்தோன்ற, மற்றவிளிம்போ விரலுக்குஎட்டாமல் ஒரு பாரிசத்துக்கு விலகிப்போம். அந்நேரம், ஸ்திரியின் வயிற்றிலே, தடவிப்பார்த்தால், கருப்பைவாய் சரிந்திருப்பதற்கு எதிர்ப்பாரிசத்திலே கருப்பையின் அடி சரிந்திருப்பதாய்த்தோன்றும். முன்னும் பிள்ளைகள்பெற்றவர்களாய்த் துந்திவயிறுள்ளவர்களாயிருக்கும் ஸ்திரிகளிற்காண்கிறபடி கருப்பை முற்பக்கத்துக்குச் சரிந்திருக்கில் கருப்பைவாயின் முன்னருகு பீடிகையைத்தாவி அதிகம் பின்னுக்குத்தோன்ற, மற்றருகோ விரலுக்கெட்டாமற்போய்விடும். அப்பொழுது வயிற்றிலே தடவிப்பார்க்கில் கருப்பைஅடியானது கீழ்வயிற்றிலே நேரே முன்னுக்குத் தன்னிக்கொண்டு நிற்பதாய்த்தெரியும். இச்சரிவுகளை மாற்றி ஒழுங்கிலேவிடும்படிக்கு, கருப்பையானது தன்பாரத்தினாற்சரிந்து தானே ஒழுங்குப்படுவதற்கு ஏர்த்த மாதிரியாக ஸ்திரியைப் படுக்கப்பண்ணவும். வலப்பாரிசத்துக்குச் சரிவானால், ஸ்திரி இடப்பாரிசத்துக்கும், முற்பக்கத்துக்கானால் மல்லாந்தும் படுப்பது, பிரசவமானது சிலவேளை விரைவாய், லகுவிலே முற்றுவதற்கு ஏதுவாம்.

## கஷ்டபிரசவம், ௨ ம். வர்க்கம்.

### கருவிகள் பிரயோகித்தும், தாய்க்கும் பிள்ளைக்கும் யாதொரு சேதமின்றி முற்றுபவைகளாகிய கருவிச்சகாயப் பிரசவங்கள்.

முதலாம் வர்க்கத்திலே நாம்சொல்லிய வைத்தியமுறைகளால் நோக்காடு சித்தியாய் உண்டாகாமலிருப்பவைகளும், தேகக்கூருன வருத்தத்தின் கோலங்கள் தோன்றத் தொடங்குபவைகளுமாகிய சிலபிரசவங்களை இவ்வர்க்கத்தில் எடுத்துச் சிந்திப்போம்.

பிரசவம் இனித்தானாய் முற்றுமென்று நம்பக்கூடாது; கருவிச்சகாயஞ் செய்வதற்குத்தருணம் இது தானென்று நிச்சயம் பண்ணுவதும், சகாயஞ்செய்வதற்கேற்ற பக்குவ உபாயங்கள் இவையேயென்று அறுதியிடுவதும், ஆகிய இவ்விருகாரியமும் மருத்துவ வைத்தியத்திலே வெகுபிரயாசம். இவைகளுள், முதற்காரியத்தை நிச்சயம்பண்ணும்படி மருத்துவர் தாம் பராபரிக்க ஏற்பட்டிருக்கும் பிரசவத்திலே, ஸ்திரியானவள் அபாயஞ் சேதமின்றி வரு

Digitized by Google

த்தம் எவ்வளவுக்குச் சகித்துக்கொள்ளுவாள் என்று தம் புத்தியிலே தேர்ந்து தெளியவேண்டும். ஒரு ஸ்திரிக்குச் சகாயஞ்செய்யாமல் இரண்டு நாளளவுக்கு விட்டாலும், மோசமில்லை. பின்னொரு ஸ்திரிக்கோ சகாயஞ்செய்யாமல் இருபத்தைந்து நாழிகைஅளவுக்குமாத்திரம் விடலாம். ஆனதினால் சகாயஞ்செய்யவேண்டிய தருணத்துக்கு ஓர் பொது விதி சொல்லக்கூடாது. ஸ்திரியிலே மோசத்தைக் காட்டுங்குணங்களும் நிருவாகங்களும் இன்னின்னவென்று தொகையாய்மாத்திரஞ்சொல்லுவோம். மருத்துவரே தம்வித்தை அறிவினாலே இன்னபிரசவத்திலே இன்னின்ன குண நிருவாகங்கள் கண்டிருப்பதினால் இன்னமாதிரி நடக்கலாமென்று தெளிந்துகொள்ளவேண்டியது.

நாம் சுட்டிச்சொல்லிய சகாயோபாயங்கள் செய்தபின்பு சுரம்தோன்றினால் அல்லது நெடுக நின்றால், பிரதானமாய்ச் சுரம் சன்னிக்கோலங்கொண்டு நாடித்துடிப்பு விரைவும் உறுதியீனமுமாய் நாவிலே அழுக்குப்பூத்து, பிதற்றலும் ஆற்றியின்மையும் உழற்றலும் தேம்பலும் உண்டுபட்டால், காரியம் அனுகூலக்கேடாய் முடியும். முன்னமே நோயினாலாவது பலபிள்ளைகள் பெற்றதினாலாவது வேறு காரணங்களினாலாவது உடம்பிளைத்துப்போன ஸ்திரிகளிலே சுரம்தோன்றாமல் சிற்சிலவேளை பெலக்குறைவும் நாடிச் சோர்வும் முகக் குறுவலும் உண்டுபடும். இக்குணங்கள்கண்டால், உடனே சகாயஞ்செய்யவேண்டியது. வியாதியையெதிர்த்துச் சகிக்கப் பெலம் இல்லையென்று முகஞ்சொல்லும். முகத்தின்சீரைச் சொல்லால்விளக்கமுடியாது, அனுபவத்திலே கண்டவர்களுக்கு விளங்கும்.

கருப்பைவாய்விரிந்தபின்பு, சிசுவின்சிரசு அல்குல்முதலியவற்றில் உறுத்தாதிருக்கும்போது, யோனிமுதலியவைகளிலே தாபிதம் பற்றினதென்பதற்கு அடையாளமாகிய குலைப்பன், செங்கல்மங்கற் சளியுள்ளசத்தி, வயிற்றுநோ, நொய்வு, வாயுப்பொருமல், யோனியிற்சூடு, புண்பாடு, கருப்பையாலே கருஞ்சிவப்பானநாற்றப்பதார்த்தம்பெருசிதல், இவைகளைக் கண்டாலும் முன்சொல்லியபடி கருவிச் சகாயம் உடனேயே செய்யவேண்டியது.

பிரசவஞ் சிறிதுநேரம் அநுகூலமாய் நடந்தபின்பு, நோக்காடு ஒழிந்துபோய் அல்லது ஒழுங்குப்பிழைபட்டு, இத்துடன் மேற்சொல்லிய குணங்கள் ஏதேனுந் தலைப்பட்

டால் இது ஓர் துற்குறியாம். ஆனாலும் நோக்காடு குன்றின போதைக்கும், பிள்ளை பையப் பைய இறங்கிப் பிறக்கிறசாடைகண்டு, ஸ்திரியிலே பெலவீனந்தோன்றாதிருந்து, சுரம் அல்லது தாபிதகோலம் இல்லை என்பதற்குக் குறிகளாகிய சாந்தமான நித்திரையும் அமைதியான நாடித்துடிப்பும் கைக்கு மெல்லிதாய் நுகைந்து தோன்றும் வயிறும், குளிர்ந்தீரலித்த யோனியும், சிறுநீர்ச் சுத்தியும், விளங்கினால் மோசம்வருமென்று அஞ்சஇடமில்லை.

இனி, தாய்க்காவது பிள்ளைக்காவது சேதமில்லாமல் சாவணம் உற்கருசி என்னுங் கருவிகளைப் பிரயோகிக்கத் தகுந்த தருணங்கள் இன்னின்னவென்று சிந்தனைசெய்வோமாக.

இதின்பெயரிலே தென்மன்பண்டிதர் சொல்லியிருக்கும் உச்சிதமான விதிகளையே சொல்லுவோம். கருப்பைவாய் முற்றும்விரிந்து பன்னீர்க்குடம் உடைந்து, சிசுவின்காது விரலுக்கு எட்டத்தக்கதாய் வரமுன், இக்கருவிகளை ஒருபோதும் பிரயோகிக்கப்படாது. விடபமுந்தசைப்பாடும் நெகிழ்ந்திருக்க வேண்டும். சிராவணிக்குத் தடக்காக ஏதேனுஞ் சலவாகியில் அமர்த்தப்படாது. கருவிப்பிரயோகத்துக்குப் பக்குவமானநிலையத்திலே சிசுவின் சிரசுவந்து பதினைந்துநாழிகைசென்றாலன்றி, அதின் முன் கருவிகள் பிரயோகிக்கப்படாது. ஆகிலும் கருவிக்கானதருணம் இன்னதென்றும் மருந்துவர் தம் விவேகத்தாலேயே நிச்சயிக்கக வேண்டியது. பக்குவமான நிலையந்தெளிவது சிசுவின் காதை விரலினால் மட்டிட்டறிவதினாலே. சாவணம் அல்லது உற்கருசியை நாம் பெரும்பாலுந் தாமதமின்றிப் பிரயோகிக்கவேண்டிய சமயங்களாவன, கருப்பைமாந்தியம், சடுதியிலுண்டாகும் பெலவீனம், வலி, சிசுவின் சிரசுக்கும் ஸ்திரிகூபகத்துக்கு மிசைவீனமாகிய இவ்வகைக்குணங்கள் உண்டுபடுஞ் சமயங்களில், இக்கருவிகளைச் சில மருத்துவர் பிரயோகிப்பார்கள். மேற்பந்தையிலே தடக்கிருந்தால், நெடுஞ் சாவணம் பிரயோகிப்பார்கள்.

கருவிச்சகாயம் வேண்டியவைகளான சகல கருமங்களுக்கும் அடுத்ததான ஒரு எச்சரிக்கை. ஸ்திரிக்கு உற்றவர்களாயிருக்கும் பெயருக்குக் கருவியின்தன்மையையும்நோக்கத்தையும் விளக்கமுன், அவர்களை அறியாமல் ஒருபோ

Digitized by Google

துங் கருவி பிரயோகிக்கப்படாது. கூடுமாகில், வேறும் ஒரு மருத்துவருடைய ஆலோசனைபெற்றன்றிப் பிரயோகிக்கத்தகாது. அனுமதிபெருமலுஞ் சிலவேளை பிரயோகிக்கலாமாகிலும், அனுமதியைச் சொற்ப நியாய நிமித்தம் பெருமல் விடப்படாது.

## கஷ்டபிரசவம், ௩ம். வர்க்கம்.

*சிசுவின் பருமத்தைக்குறைக்க அல்லது பிறவிவாசலைப் பருப்பிக்க வேண்டிவரும் பிரசவங்கள்.*

கருவிச்சகாயம் அவசியம் செய்யவேண்டுமெனக்காட்டும் பொதுக்குணங்களையும், சாவணம் அல்லது உற்கரிசியைப் பிரயோகிக்கலாமென விளக்குங்குணங்களையும் மேலே விவரித்துச்சொன்னோம். இனி வேறுவகையானகருவிச்சகாயந் தேவையான்சமயங்கள் இன்னின்னவென்று பார்ப்போம்.

க வது. கூபகருபம், அல்லது கூபகபார்தையிலே தடக்காயிருக்குஞ் சோபம்.

உ வது. சிசுச்சிரசின் இசைவீனமான பருமை.

௩ வது. சாவணத்தை அல்லது உற்கரிசியைப் பிரயோகிக்கும் வேளையிலே, தசைப்பாட்டிலே சேதங்காணத்தக்க அளவாய், அத்தசைப்பாடு முரணித்தல் அல்லது தாபிதங்கொள்ளுதல்.

ச வது. சலப்பையிலே சிராவணிவிடுவது கூடாமையாய்ச் சலம் மறிபட்டதினிமித்தம் அப் பை சேதத்துக்கு இடமாகுதல்.

கூபகநெளிவுகள், குடிலாஸ்தி மராளாஸ்தி என்னும் வியாதிகள் அஸ்திசோபம் ஆகிய என்புத்திரட்சி, பிசகாய்ப்பொருந்திய முரிவு என்பவைகளினுலே உண்டுபடும்; பெரும்பாலுங் குடிலாஸ்தியினுலே உண்டுபட்டு, பலவிதங்களாயிருக்கும். கூபகத்தை அளக்கும்படி செய்திருக்கும் உபாயங்கள் இன்னின்னவென்றும் முன்னேசொல்லிய இவற்றின்குறைவுகளையும் விளக்கமாய்க் காட்டினோம். வாடிக்கைப்பட்டு வரும்பிரசவங்களிலே தோன்றுங் கூபகநெளிவு, இப்பொழுது நாம் பேசும் மூன்றும் வர்க்கத்திலேயே தீர்ப்பாய் அமையத்தக்கதாகமோசமுள்ளதல்ல; ஆதலால், அதைப்பற்றி ஒரு முடிப்புப்பண்ண

Digitized by Google

முன் சிலபலகாரியங்களை விசாரணைபண்ணி முடிக்கவேண்டியது. மேகனவென்புக்கும் பீடிகையென்புக்கும் இடையேயுள்ள விட்டத்தூரம் இரண்டேமுக்காலங்குலத்துக்கு அதனமாயிருந்தாற்றான், உயிர்ச்சிசு கூபகத்தால் இறங்கக்கூடுமென்பது ஆசுபாண் பண்டிதருடைய கருத்து. அதிகம் அகன்றிருந்த இடம் ஒன்றேமுக்கால் அங்குலமாத்திரமாய் இருந்த ஒருகூபகத்தாலே, சித்திரி அங்கூசம், என்றகருவிகளையிட்டு ஓர்சிசுவை அவர் இழுத்தெடுத்தாராம். அங்கூசம் என்னும் கொளுக்கிக்கருவி பிரயோகித்தே முற்பிரசவங்களில் ஒரு ஸ்திரியைபெறுவித்ததாகில் அக்கருவியையே இப்பொழுதும் அவளிற்பிரயோகிக்கலாமென்று முன்னறத் தீர்மானஞ்செய்வதற்கு ஓர்நியாயங் காணும். முற்பிரசவங்களில் அவள் கருவிப்பிரயோகமின்றி வலியவே பிள்ளைப்பெற்றவளாகில், இப்பொழுது கருவி பிரயோகிக்கலாமோவென்ற சந்தேகமுண்டாகும். சோபம், சலப்பைவிம்மல், தசைப்பாட்டு முரணிப்பு, வெப்புஉண்டுபட்டு, சாந்தமான உபாயங்களால் நீங்காதிருந்தாற் பிரசித்திரியென்ற கருவியையே பிரயோகிக்கவேண்டிவரும்.

சிசு செத்துவிட்டதென்பது நிச்சயமாகில், கருவி பிரயோகிக்க வேண்டுமென்று உடனேயே தீர்மானிக்கலாம் என்று அனேகர் நினைக்கிறார்கள். சிசு செத்துவிட்டதென்றறிந்தால் ஸ்திரிக்குச் சற்றாகிலும் சேதம் வராதபடிக்குக்கருவிப்பிரயோகஞ்செய்வதிலே தாமசம்பண்ணப்படாதாகிலும் சிசு செத்ததுதான் கருவிப்பிரயோகஞ் செய்வதற்கு நியாயம் என்று முடியாது. சிசுவின் சிரசு நீர்க்கோவைகொண்டாவது அழுகி நாற்றங்கொண்டாவது, மண்டையிலுள்ள எலும்புகள் விட்டிளகி மடிந்தாவது சந்தேகமின்றிச் சிசு இறந்ததெனக் காட்டுவதாயிருக்கில், உடனே சத்திரியைக் கொண்டு பிள்ளையை எடுக்கலாம். சிசு நிச்சயமாய்ச் செத்துவிட்டதென்பதற்கு இக்குறிகளையும் நாடித்துடிப்பில்லாமல் நாபிக்கொடி இறங்குவதையுந் தவிர வேறு குறிகளும் உண்டோவென்று நான் அறியேன். ஆதலால் நூல்களிலே சிற்சில வேளை எடுத்து விளக்கியிருக்குங் குறிகளை நாம் அதிகமாய்ச் சிந்தனை செய்வது அவசியமல்ல. இக்குறிகளுட் பிரதானமானவைகள் எவையென்னில்,

க. கர்ப்பகாலக் கடைசியிலே குலைப்பன் கூதல் உண்டுபடல்.

Digitized by Google

௨. அடிவயிற்றிலே குளிருஞ் சுரக்கனப்புமாய்த் தோன்றல்.

௩. சிசு உசும்பாமை.

௪. தனங்கள் சோர்ந்து சரிந்து பால்வற்றிப் போதல்.

௫. சிசுச்சிரசு சிலநாளாய் யோனியிலே கொழுவுண்டு கிடத்தல்.

௬. சிரசுதயமாய், யோனியாலே கருமலங்கழிதல்.

௭. நாறலான சளிமுதலிய பதார்த்தம் வெளிவருதல்.

இக்குறிகள் தோன்றும்போது சிசு செத்துவிட்டதென்று அதிகம் எண்ணக்கூடியதாயிருந்தும், தீர்க்கமான நிச்சயம் பண்ணிக்கொள்ளக்கூடாது. சிசுவின் இரத்தாசயச்சத்தங் கேட்டால்சிசுஉயிராயிருக்கிறதென்பது நிச்சயம். ஆனாலும், சிலவேளை சிசுவின் இரத்தாசயச் சத்தமிருந்தும் நன்றாய்ப் பயின்றவர்களும் தெளிந்துகொள்வது ஏலாமையால் சத்தங்கேளாதவேளைகளில் சிசு இறந்துபோயிற்றென்று அறுதியிடப்படாது. அணையராவமென்னுஞ் சத்தமானது சிசு இறந்தவுடனே எப்பொழுதும் ஒழிந்துபோகாதாகையால், அதினாலும் சிசு உயிராயிருக்கிறது அல்லது செத்துப்போனது என்று நிச்சயம்பண்ணக்கூடாது.

பிள்ளை இறந்துபோய்விட்டதோ என்று தெளிவதேஅவசியமான காரியம் என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படி எனக்குத் தோன்றவில்லை. ஸ்திரியினுடைய சீர் நிருவாகத்தினாலே கருவிப் பிரயோகத்துக்கு நியாயங் காணவேண்டியது.

நாம் மேலே விளக்கிய குறிகள் தோன்ற அவைகளாற் சிசு இறந்துபோயிற்றென்று நிச்சயம்பண்ணக் கூடிய சமயங்களிலன்றி, மற்றும்படி ஸ்திரியின் சீருக்குத் தக்கதாகவே இன்ன கருவி பிரயோகிக்கலாமென்று தீர்த்துக்கொள்ளவேண்டியது. ஆகிலும் ஸ்திரியையும் பத்திரம்பண்ணிச் சிசுவையுங் காத்துக்கொள்ளலாம். அல்லது சிசுவின் உருக்குலையாமற் பேணிக்கொள்ளலாமாகில் அத்தருணங்களிலேபுத்திமான் சிசுவை வதைக்குங் கருவிப் பிரயோகஞ் செய்யான்.

கருவி பிரயோகிக்குமுன் பிறருடைய ஆலோசனையையும் வினவவேண்டியதென்று நாம் சொல்லியபுத்தி கஷ்ட



Digitized by Google

பிரசவத்தின் மூன்றும் வர்க்கமாகிய இதற்கே அதிகந்தரு ந்தது.

மூன்றும் வர்க்கத்தைச் சேர்ந்தபிரசவங்களிலே நாம்செய்யவேண்டியதாய் வரக்கூடிய கருவிக் கிருத்தியங்கள் மூன்று, அவையாவன:

௧. சிசுவின் சிரசைக் குறைத்தல்.

௨. மேகனுனுசங்கியை வெட்டிப் பிரித்தல்.

௩. சராயுல கிருத்தியமாகிய கருப்பையைக்கீறித் திறத்தல்.

இம்மூன்று கிருத்தியங்களின் உபயோகத்தையும் இவற்றைச் செய்யும் முறையையும் வரும் அதிகாரத்தில் சொல்லுவோம்.

கஷ்டபிரசவங்களுக்குக்காரணம் ஏதாயிருந்தாலுஞ்சரி, கருப்பையானது நன்ருய் நிலைவரமாய்ச் சுருங்கும்படியும், அணையமானது கழன்று விழும்படியும் பார்த்துக்கொள்வதே அதிக முக்கியமானது. கருப்பை மாந்தியமாய் நோக்காடு அற்றுப்போனல், அம்மாந்தியஞ் சிசு வெளிக்கிட்ட பின்பு அதிகப்படும். தசைப்பாட்டு முரணிப்பினல் அல்லது கூபகச் சிறுமையினல் உண்டுபடுந் தசைவினலே, கருப்பை பெலங்குன்றிப் போனல் அதிக பிரயாசத்தினலே மறுபடி பெலம் ஏற்றவேண்டி வரும். இப்படி மாந்தியமான அல்லது பெலன்குன்றின கருப்பை சுருங்கும்படி சேட்டனங்கொள்ளப்பண்ணினலும், அதின் சுருக்கம் குறைவும் ஒழுங்கீனமுங் காரியத்துக்கு உதவாததுமாகவேயிருக்கும். குறைவேயாகில் இரத்தப்பெருக்கும், ஒழுங்கீனமாகில் உடுக்குச் சுருக்கமும், அணையமறியும் உண்டுபடும்.

கஷ்டபிரசவத்தால் உண்டுபடும் வேறொரு தாழ்ச்சி என்னவெனில், யோனியும் அல்குலும் தாபிதங்கொள்ளுதல், வயசு முற்றினபின் தலைப்பிள்ளைப் பெறும் ஸ்திரிகளிலேதான் மிகுதியாய் இப்படி உண்டுபடும். இதற்குவைத்தியம் அட்டைவிடுதலும் வெகு இடம் மூடத்தக்கதாய் உற்காரிகை என்ற பாப்பை இடுதலும்.

Digitized by Google

## கரு. அதிகாரம்.

### பிரசவ கருவிப்பிரயோகம்.

சாவணம். இக்கருவியின் வரலாற்றையும் இதின் பற்பல மாதிரிகளையும் பற்றி இங்கே விவரித்துச் சொல்வது அவசியமல்ல; மருத்துவ வைத்தியத்தைப் பற்றிய பாரிய நூல்களைப்பார்த்து விளங்கிக்கொள்ளலாம். பொதுவாய் வளங்கிவருஞ் சாவணத்திலுள்ள அலகு ஒவ்வொன்றும் இரணை வளைவுள்ளது. இதுவே அதிகம் உத்தமமானது. சாவணம் தனி வளைவுள்ளதும் இரணை வளைவுள்ளதுமாகப் பலபல மாதிரியாயிருக்கும். அவதானமாயும் விவேகமாயும் பிரயோகித்து வந்தால், இக்கருவியின் மாதிரி எப்படியிருந்தாலுங் காரிய சித்தி ஒரேதன்மையாயிருக்கும்.

கருவி பிரயோகிக்கும் வேளையிலே ஸ்திரியானவள் கால்களை மடக்கி இடந்து இரண்டு முக்காலியிலே பொறுக்கவைத்து, குண்டி கட்டிலின் விளிம்போடே ஏறிநிற்க மல்லாந்து படுத்துக்கொள்வதே மருத்துவனுக்கு அதிக வசதியும் அவளுக்கு அதிக பேணரவுமாயிருக்கும். இப்படிப்படுத்தால் ஸ்திரிக்கு மானபங்கமாயிருக்குமென்று தடைசொல்லுவார்கள். ஆனாலும் அற்றைக் கூச்சத்தினிமித்தம் பெரிய நயங்களைத் தோற்றுவிடுவது தப்பிதம். கருவியினாற் சிசுவைப் பிரித்தெடுக்கும்போது சலப்பையிலே சலம் முட்டியிருந்தால், சலப்பை வெடித்துப்போகவுங் கூடியது; அல்லது இறந்தை உண்டுபட்டு கதசுடி என்னும் ஓடுவும் உண்டுபடக் கூடியது; ஆதலால் சிராவணி விட்டுச் சல சுத்தியும், அபான வழியாய்த் தண்ணீர் புகட்டி மலசுத்தியும் முதலே செய்துகொள்ளவேண்டும். கஷ்டபிரசவத்திலே சலஞ் சிறிதுநேரம் உண்டாகாமல் நின்று, பிள்ளை பிறந்த பின்பு நன்றாய் ஊறி அடிப்பதும் உண்டு.

சலசுத்திமுதலிய பக்குவங்கள் முடிந்தபின், கட்டிலுக்கருகே இருந்துகொண்டு, சாவணத்தின் ஒரு அலகை எடுத்து நகச்சூடான வெந்நீரிற் தோய்த்து, பசுவெண்ணெய்

Digitized by Google

பிரசவத்தின் மூன்றும் வர்க்கமாகிய இதற்கே அதிகந்தகுந்தது.

மூன்றும் வர்க்கத்தைச் சேர்ந்தபிரசவங்களிலே நாம்செய்யவேண்டியதாய் வரக்கூடிய கருவிக் கிருத்தியங்கள் மூன்று, அவையாவன:

க. சிசுவின் சிரசைக் குறைத்தல்.

உ. மேகனுனுசங்கியை வெட்டிப் பிரித்தல்.

ஙு. சராயுல கிருத்தியமாகிய கருப்பையைக்கீறித் திறத்தல்.

இம்மூன்று கிருத்தியங்களின் உபயோகத்தையும் இவற்றைச் செய்யும் முறையையும் வரும் அதிகாரத்தில் சொல்லுவோம்.

கஷ்டபிரசவங்களுக்குக்காரணம் ஏதாயிருந்தாலுஞ்சரி, கருப்பையானது நன்ருய் நிலைவரமாய்ச் சுருங்கும்படியும், அணையமானது கழன்று விழும்படியும் பார்த்துக்கொள்வதே அதிக முக்கியமானது. கருப்பை மாந்தியமாய் நோக்காடு அற்றுப்போனல், அம்மாந்தியஞ் சிசு வெளிக்கிட்ட பின்பு அதிகப்படும். தசைப்பாட்டு முரணிப்பினல் அல்லது கூபகச் சிறுமையினல் உண்டுபடுந் தகைவினலே, கருப்பை பெலங்குன்றிப் போனல் அதிக பிரயாசத்தினலே மறுபடி பெலம் ஏற்றவேண்டி வரும். இப்படி மாந்தியமான அல்லது பெலன்குன்றின கருப்பை சுருங்கும்படி சேட்டனங்கொள்ளப்பண்ணினலும், அதின் சுருக்கம் குறைவும் ஒழுங்கீனமுங் காரியத்துக்கு உதவாததுமாகவேயிருக்கும். குறைவேயாகில் இரத்தப்பெருக்கும், ஒழுங்கீனமாகில் உடுக்குச் சுருக்கமும், அணையமறியும் உண்டுபடும்.

கஷ்டபிரசவத்தால் உண்டுபடும் வேருெரு தாழ்ச்சி என்னவெனில், யோனியும் அல்குலும் தாபிதங்கொள்ளுதல், வயசு முற்றினபின் தலைப்பிள்ளைப் பெறும் ஸ்திரிகளிலேதான் மிகுதியாய் இப்படி உண்டுபடும். இதற்குவைத்தியம் அட்டைவிடுதலும் வெகு இடம் மூடத்தக்கதாய் உற்காரிகை என்ற பாப்பை இடுதலும்.

Digitized by Google

# கரு. அதிகாரம்.

## பிரசவ கருவிப்பிரயோகம்.

*சாவணம்.* இக்கருவியின் வரலாற்றையும் இதின் பற்பல மாதிரிகளையும் பற்றி இங்கே விவரித்துச் சொல்வது அவசியமல்ல; மருத்துவ வைத்தியத்தைப் பற்றிய பாரிய நூல்களைப்பார்த்து விளங்கிக்கொள்ளலாம். பொதுவாய் வழங்கிவருஞ் சாவணத்திலுள்ள அலகு ஒவ்வொன்றும் இரணை வளைவுள்ளது. இதுவே அதிகம் உத்தமமானது. சாவணம் தனி வளைவுள்ளதும் இரணை வளைவுள்ளதுமாகப் பலபல மாதிரியாயிருக்கும். அவதானமாயும் விவேகமாயும் பிரயோகித்து வந்தால், இக்கருவியின் மாதிரி எப்படியிருந்தாலுங் காரிய சித்தி ஒரேதன்மையாயிருக்கும்.

கருவி பிரயோகிக்கும் வேளையிலே ஸ்திரியானவள் கால்களை மடக்கி இடந்து இரண்டு முக்காலியிலே பொறுக்கவைத்து, குண்டி கட்டிலின் விளிம்போடே ஏறிநிற்க மல்லாந்து படுத்துக்கொள்வதே மருத்துவளுக்கு அதிக வசதியும் அவளுக்கு அதிக பேணரவுமாயிருக்கும். இப்படிப்படுத்தால் ஸ்திரிக்கு மானபங்கமாயிருக்குமென்று தடைசொல்லுவார்கள். ஆனாலும் அற்றைக் கூச்சத்தினிமித்தம் பெரிய நயங்களைத் தோற்றுவிடுவது தப்பிதம். கருவியினாற் சிசுவைப் பிரித்தெடுக்கும்போது சலப்பையிலே சலம் முட்டியிருந்தால், சலப்பை வெடித்துப்போகவுங் கூடியது; அல்லது இறந்தை உண்டுபட்டு கதசுடி என்னும் ஓடுவும் உண்டுபடக் கூடியது; ஆதலால் சிராவணி விட்டுச் சல சுத்தியும், அபான வழியாய்த் தண்ணீர் புகட்டி மலசுத்தியும் முதலே செய்துகொள்ளவேண்டும். கஷ்டபிரசவத்திலே சலஞ் சிறிதுநேரம் உண்டாகாமல் நின்று, பிள்ளை பிறந்த பின்பு நன்றாய் ஊறி அடிப்பதும் உண்டு.

சலசுத்திமுதலிய பக்குவங்கள் முடிந்தபின், கட்டிலுக்கருகே இருந்துகொண்டு, சாவணத்தின் ஒரு அலகை எடுத்து நகச்சூடான வெந்நீரிற் தோய்த்து, பசுவெண்ணெய்

Digitized by Google

தடவி, இடதுகையிற்பிடித்துக்கொண்டு வலதுதர்ச்சனிவிரலை மேகனவென்புக்கும் சிசுச் சிரசுக்கும் இடையே விட்டு சிசுவின்' காதைத் தடவிப்பார்க்கவும். காதைத் தடவிப்பார்க்கையிலே இடதுகையிற் பிடித்திருந்த அலகை அத் தர்ச்சனிவிரலுக்கும் சிசுச் சிரசுக்குமிடையே, காது மட்டுக்கும் வர மெல்லெனவாகவிட்டு, சிரசுக்கு அண்ணிதாக நுனி ஏறிச் சாவணத்தின் கவிவு சிசுத்தலையில்சரியாய்ப்படியுமட்டும் சற்றே ஆய்த்து ஆய்த்து ஏற்றவும். சாவண அலகு சிசுக் காதுக்கு அப்பாற் சென்றபின்பு அதற்கு விரலின் உதவியில்லையாதலால், மிகுந்த அவதானமாயிருந்து ஸ்திரியிலே ஏதும் வருத்தம் அல்லது தடக்குக் கண்டால், கருவியைச் சற்றேவெளியே இழுத்திளக்கிக்கொள்ளவும். இதைக் கவனியாமற் பெலபந்தமாய் ஒருபோதுங்கருவியைச் செலுத்தப்படாது. முதலாம் அலகைச் சரிவர ஏற்றிவைத்து அதை வழுவவிடாமற் பிடித்துக்கொள்ளும்படி ஒரு ஆளிடஞ் சொல்லிவிட்டு, பின்பு இடதுதர்ச்சனி விரலை விடபத்துக்கும் சிசுச்சிரசுக்கும் இடையே விட்டு முதல் அலகு செலுத்தப்பட்ட பிரகாரமே மிகுந்த அவதானமாய் விரல் அணைவிலே இரண்டாம் அலகைச் செலுத்தி முதல் அலகுக்கு நேரெதிரேயிருக்கும்படி ஏற்றிவைக்கவும்.* பின்பு இரண்டாம் அலகு நிற்கிற இடத்துக்கு முதல் அலகை இழுத்துவந்து இடையிலே ரோமம், தசை முதலியதேதாவது அகப்படாமற் பார்த்துக்கொண்டு பிடிகளின் பூட்டுகிற பக்கங்கள் சரிவர எதிரே நிற்கத்தக்கதாய்ப் பிடிகளை ஒன்றுக்கொன்று குறுக்கேபிடித்து லகுவாய் அவிழ்க்கக்கூடிய உருவுதடம்போட்டுப் பிடிகளைக் கட்டவும். சாவணத்தின் அலகுகள் சிசுவின் காதுகள் மேலும் அவைகளின் நுனிகள் அதின் மோவாயிலும் நிற்கத்தக்கதாய்ச் சாவணத்தைச் சரிவரப் பிடித்தால் அதின் பிடிகள் ஒன்றுக்கொன்று அரை அல்லது முக்கால் அங்குல இடைவிலே வந்து நிற்கும். இதற்கு அதன தூரத்திலே நின்றால் சாவணநுனிகள் ஏறவேண்டியளவுக்கேறவில்லையென்றும், அதனங் கிட்டநின்றால் அலகுகள் சிசுச்சிரசை

* சிசுவின் தலை மேற்பக்தையில்இருக்கையில் இங்கே சொல்லியிருக்கிறவிதமாக வெகுவாக அந்தந்த அலகைப் பிறவிவாசலின் அந்தந்தப் பக்கத்துக்கு நேராய் விடவும். ஆனாலும் எப்பக்கமாய் விட்டாலும் சாவணத்தின் அலகு சிசுவின் காதை மூடி, அதின் உச்சிக்கும் மோவாய்க்கும் நேரே கிடக்கத்தக்கதாய் விடவேண்டியதவசியம்.

Digitized by Google

சரிவர இடுக்கிக்கொள்ளவில்லையென்றும் தெளிவாய்வி ளங்கும்.

நோக்காடு தோன்றி நடக்கும்வேளை காத்திருந்துதான் சாவணத்தால் இழுக்கவேண்டியது. நோக்காடு முற்றும் நின்றுவிட்டாலோ, மருத்துவர் இடையாற்றி விட்டு விட்டு இழுக்கவேண்டியது. பெரும்பாலும் சாவணத்தை விடவே நோக்காடு தோன்றும். அன்னேரம் முதற் சற்றும் இழுக்கப்பாராமல் மெல்லெனவும் உறுதியுமாய்ச் சாவணத்தின்பிடியை விடபபக்கத்தால் மேகனத்தைத் தாவத் திருப்பவும். நோக்காடு மறுபடி தோன்றும்போது அல்லது நோக்காடில்லாவிட்டால் தகுந்த இடையாற்றி விட்டு அவ்விதமாகவே பிடிகளை முன்னிருந்த நிலையிலே மறுபடி கொண்டுவந்து விடலாம். இப்படிப் பின்னுக்கும் முன்னுக்கும் மெல்லென அசைத்தசைத்துப்பிடிகள் நிற்கும் பக்கத்தை நோக்கியே படிப்படியாய்ச் சற்றுக்கூட்டி இழுத்துப் பார்க்கவும். எப்பொழுதும்ஒரு அலகுக்கு நேரே மற்ற அலகு தாவிச் செல்லவே மாறி மாறி அசைத்திழுக்கவும். சிரசுஇறங்கிப் பீடிகைக் கவிகைக்குள் திரும்பும்போது அலகுகள் வளம்மாறித் திரும்பும். ஆதலால், முன்னுக்கும் பின்னுக்கும் அசைத்திழுத்த மாதிரியைவிட்டு, தொடைக்குந் தொடைக்குமாய் அசைத்திழுக்கவேண்டும். இப்படி வலியவே வளம்மாறும்படியாக, இழுவைக்கிழுவை இடையாற்றிவிட்டு அந்நேரம் பிடிகளைத் தளரப்பிடித்துக்கொள்ளவேண்டும். சாவணத்தால் இழுத்துக்கொண்டிருக்கையில்,யோனியானது ஓர்வளைவான குழலென்று நினைத்துக்கொண்டு ஒரேநேராய் இழாமல் அதின் வளைவுக்கு இசைவாக இழுத்துக் காரியத்தை முடிக்கவும்.

ஏற்படும் பிரசவத்திலுள்ள வில்லங்கங்களுக்குத்தக்கதாகவே இழுத்தெடுக்கவேண்டிய காலமும் வித்தியாசப்படும். சுறுக்குப்பண்ணவேண்டுமென நினைந்து சேதத்தை விளைவிக்கப்படாது. அவதானத் தாழ்ச்சியாய்க் கருவி பிரயோகிப்பதினால், விடபஞ்சிலவேளை மோசப்படுவதும் உண்டு. ஆனபடியால் விடபந் தாங்கலைப்பற்றி அதிக விழிப்பாயிருக்கவும். சிரசு வெளியில் இழுபட்டபின், ஒழிந்த உறுப்பு முதலியவைகள் வலியவே பிறக்கும். அ

Digitized by Google

ப்படி முற்றாதிருந்தால், உடலையும் இழுத்துவிடவேண்டி வரும்.

கிரமப்பிரசவ விகற்பங்களிலேயுஞ் சாவணம் பிரயோகிக்கவேண்டிவருமெனில், மேலே காட்டிய பிரகாரம் சிசுவின்காதுகளுக்கு மேலே, உச்சிக்கும் மோவாய்க்கும் நேரே இடுக்கியிழுக்கவும்.*

உற்கருசி. இக்கருவி அதிக சாதாவாக இருக்கில் சாவணத்திலே பூட்டொழிந்த ஒரு அலகு மாதிரியாகவும் அதிலும்பார்க்கச் சற்று வளைவாகவும் இருக்கும். உற்கருசியைவிடும் முறை சாவணத்தின்முதலலகுக்குச் சொன்னமுறைபோலவே இருக்கும். சிசுச்சிரசினதும் முகத்தினதும் பக்கத்தில் அவ்வலகு நிற்கும் பிரகாரமாகவே இதுவும் நிற்கும். உற்கருசியை இப்படிவிட்டபின்பு வலது கையினால் அதின் பிடியை வழுவாமற் பிடித்துக்கொண்டு, இடதுகையை நடுவிலே கீழே உற்கருசிக்குப்பொறுப்பாக வைத்து, தாயிலே கருவி சற்றும் உறுத்தாதபடி அவதானத்தோடே சிசுவைக் கிளப்பிக் கிளப்பிச் சற்றே இழுத்துப் பார்க்கவும்.

சாவணத்தாற்போலவே, உற்கருசியாலும் இடையாற்றி நேரம்விட்டு, கூடுமாகில் நோக்காட்டுவேளைகளிற்றான் இழுத்தெடுக்கவேண்டியது. சிரசுஇறங்கிப் பீடிகைக்கவிகையுள் முகந்திரும்பினபின்பு, முற்பக்கத்தை நோக்கிநின்ற கருவியும் ஸ்திரியின் தொடைப்பக்கத்தை நோக்கித் திரும்பும்.

சாவணம் உற்கருசி என்னுங் கருவிகளுள் எது நயம் என்பதைப்பற்றி அதிக தர்க்கம் உண்டாயிற்று. அதிலேதெளிந்தறிந்த பிரமாணங்களாவன, ௧. சாதுரிய சாமார்த்தியமுள்ள மருத்துவர் அவ்விரண்டினுள் எதையேனுந் தருணத்துக்குத்தக்கதாய்ப் பிரயோகிக்கலாம். இதினால் மோச

---

* தபிளின் பட்டணத்திலுள்ள பிரசவசாலையிலே எழுநூற்றிருபத்தெட்டுப் பிரசவங்களுள் ஒன்றிலேதான் கிளாக்பண்டிதர் சாவணம் பிரயோகிக்கவேண்டிய அவசியங்கண்டார். தமது சொந்த வைத்தியத்திலோ ஆயிரத்துள் ஒன்றிலேதான் சாவணம் பிரயோகிக்கும் அவசியம் வருமென்று உத்தேசிக்கிறார். வெல்லேசிலிப் பிரசவசாலையிலும் சாவணப்பிரயோகம்வேண்டிய பிரசவங்கள் இப்பிரமாணமாய்த்தான் இருக்கும். ௨௯௪௭ பிரசவங்களுள் இருபத்தொரு பிரசவங்களிலேதான் மெரிமன் என்பவர் சாவணம் பிரயோகித்தார். பிளாண்டு என்பவர் பரிகரித்த, ௧௮௯௭. பிரசவங்களுள் ஒன்பதிலேமாத்திரம் சாவணப்பிரயோகம்வேண்டியிருந்தது. பாரிசு நகரத்து மாதவேணத்தா என்ற சாலையிலே, ௨௦, ௧௫௱. பிரசவங்களுள் தொண்ணூற்றாறிலே சாவணம் பிரயோகிக்கப்பட்டது.

Digitized by Google

ம்வராது. உ. சிலவேளை உற்கருசியிலும்பார்க்கச் சாவணம் உறுதியாய் இடுக்கியிழுக்கும். ௩. உற்கருசியை முற்பட மறைவாயும் பிரயோகிக்கக் கூடியதாயிருப்பதால், அதை அவப்பிரயோகம்பண்ணுவதான கெடும்பும் வருமாதலால், மருத்துவர் அக்கருவியுடனேபயில்வது புத்தியல்ல.

௩௮௰. குண்டியுதயம் அல்லது பதோதயத்திற் சிற்சிலவேளையன்றி மற்றும்படி தற்காலத்தில் மருத்துவ பரீட்சையிலே நாடாவழங்குவதில்லை.

சிரசுதொளைத்தல். சாவண உற்கருசிகள் பிரயோகிப்பதற்குமுன் ஸ்திரி மலசலசுத்திசெய்து இன்னமாதிரி படுக்கவேண்டியதென்று நாம் மேலே சொல்லிய விதிகளே இதற்கும் அமையும். இத்தொழிற்குவேண்டிய கருவிகள் சித்திரகத்தரிகையும் அங்கூசமும். சித்திரியானது நெடும்பிடிகளுங் குறிய அலகுகளும் உடையதாயும் வெளி இரண்டருகும் வாய்த்தாரை உள்ளதாயும் நுனி ஈட்டிபோற் கூர் முனை கொண்டதாயுமிருக்கும் ஓர்வகைக் கத்தரிகை.

அங்கூசமானது ஒரு தலைப்பு கூர் நுனியுள்ள கொளுக்கியுள்ளதாயும், மற்றத் தலைப்பு கைப்பிடியுள்ளதாயும், உருக்கில் செய்யப்படும் ஒரு பிடிமுள நீளங்கொண்ட கருவி.

இக்கருவிகளை நகச்சூடான வெந்நீரிற் தோய்த்துக் கனற்றிக் கைக்கெட்டத்தக்க வசதியான ஒரு இடத்திலே வைத்துக்கொண்டு, மருத்துவர் ஸ்திரிக்கு முற்பக்கமாய்அமைவாகத் திடமாயிருந்து, இடதுகையின் இரண்டுமூன்றுவிரலையோனியுள் விட்டுச் சிரசின் உதயமாகும் பகுதியிலே வைத்து, விரற்கிடையே தலைமயிரை இடுக்கிக் கிள்ளி இதினுலே தம் கைக்கும் சிரசுக்கும் இடையிலே யாதொரு தடக்கில்லையென்று தெளியவும். அப்பொழுது ஸ்திரியின் பாரிச பக்கத்திலே நிற்கும் உதவியாள், கருப்பை உறுதியாய் நிற்கும்படி வயிற்றில் அமர்த்த, சித்திரியின் நுனியானது சிரசுமட்டுக்கு வருமளவும் மருத்துவர் தம் விரல்களின் அணைவிலே ஏறச்செலுத்திக், கருவி சிரசுமட்டுக்கும் வந்தவுடனே, விரல் இரண்டை அதின்நுனிக்கு அருகிலே அணைவாகக்கொடுத்து, அரையுருட்சியாய்க் கருவியை உருட்டித் தலைமண்டையைத்தொளைக்கவும். சிசு உயிராயிருந்தால், சிரசாலே இரத்தம் கொஞ்சமதனமாய்ப் பாயும். ஆனாலும் பெரும்பாலுஞ் சிசுசெத்துப்போய் இருக்கிறபடியால், இரத்தம்பாய்வது அரிது.

Digitized by Google

மண்டைதொளைபட்டவுடனே, கருவிக்குத் தடக்கில்லாமல் இருக்கும். அப்போது கருவியிலுள்ள தடையமானது எலும்பிலேவந்து முட்டுமளவும் கருவியை வழுவாமல் உள்ளேதள்ளி, பின்பு, பிடிகளிலொன்றை நாம் பிடித்துக்கொண்டு மற்றப்பிடியை முற்றும் இடக்கும்படி துணையாளிஇடஞ்சொல்லவும். இதின்பின்பு பிடிகளை மறுபடியொடுக்கிக்கொண்டு கருவியைத்திருப்பி வேறொருவழுத்துக்குப் பிடிகளைஇடந்து, இப்படியோர் புள்ளடித்தவ்வுபோடவும். தவ்விடும்படி கருவியின்பிடிகளை இடக்கும்போது, அதின்பிடிகள் யோனி காயப்படத்தக்கதாய் தொளையைவிட்டு வெளியே கக்கப்பார்க்கும் ஆனதால், கருவியின்தடையங்கள் என்புடனே அண்டிநிற்கும்படி வழுவாமற் பிடித்துக்கொள்ளவேண்டும். புள்ளடித் தவ்விட்டபின்பு, சித்திரி தடையத்துக்கு இப்பாலும் உள்ளே மூளையிலேறும்படிதள்ளி, அதை நாலுபக்கத்துக்குஞ் சுற்றிச் சுழற்றி மூளையை நன்றாய் நசித்துக் கலக்கிவிடவும். சிரசின்பருமத்தைக் குறைக்கும்படியும், சிசு உயிருடனே பிறந்துவிடாமல் இறக்கும்படியும் மறந்துவிடாமல் மூளையை நன்றாய் நசித்துக் கலக்கவும். சிசு உயிருடனேபிறந்து அந்தக் கண்ணிறாவி பார்க்கப்படாமலிருந்த கருமங்களுஞ் சிற்சில உண்டு.

தொளைத்தவுடனே பிள்ளைப்பேற்றை முற்றுவியாமல், சிரசெலும்புகள் கூம்பி ஒடுங்கப் பத்துப் பதினைந்து நாழிகைக்குப் பொறுத்திருத்தல் உத்தமமென்று சிலர் சொல்லுகிறார்கள். கூபகமானது அதிக குரூபமாய் இருக்குமிடங்களிலன்றி மற்றும்படி தாமசம்பண்ணுவதினாற் பிரயோசனமில்லை. ஸ்திரிக்கு மனத்தேம்பலும் உண்டுபடும். மூளையை நன்றாய்க் கலக்கியபின்பு, சித்திரியைக் கழற்றியெடுத்து உலைந்த என்புத்துண்டுகளை விரல்களால் இடுக்கி வெளியில் ஒதுக்கி, கிழிந்த சிரசுத்தோல்விளிம்புகளை உள்ளே தொளையுள் மடித்துவிட்டு, அங்கூசம் என்ற கருவியை இடதுவிரல்களின் அணைவிலே சிரசின்தொளைவழியாய் மூளைக்குள்விடவும். அதன்மேல் இக்கருவியின் நுனியைக்கூடியளவு சிரசின் அடிக்கு அண்ணிதாய் எலும்பிலே நிறுத்திக்கொண்டு, இழுத்தெடுக்கத்தொடங்கவும். நோக்காடு இருக்குமாகில், இடையாற்றிவிட்டு நோக்காட்டு வேளையிலேயே சுணக்கமில்லா

Digitized by Google

மல் இழுக்கவும்; இழுக்கும்போது கருவி வழுவினால், ஸ்திரீயின் யோனியைக் கிழித்துப்போடாமல் நமது கையிலே தாவத்தக்கதாய், கருவியின் நுனிக்கெதிரே சிசுச் சிரசின்மேல் நமது இடக்கைவிரல்களை வைத்துக்கொள்ளவேண்டும். அன்றியும் கருவி வழுவினால் திடீரெனப் பொறியாதபடி கட்டிலின்மேல் நமது முழங்கையை ஊன்றிக்கொண்டு அவதானமாய்க் கருவியைப் பாவிக்கவும். காரியத்துக்குத் தக்கதாகவே பெலன்கூட்டி அல்லது குறைத்து இழுக்கவும். சிசுச்சிரசு இயல்பிலே இறங்கவேண்டிய வழத்துக்கே கருவியை வழுவாமற்பிரயோகித்து இழுப்பது முக்கியமாய் அவதானிக்க வேணடியகாரியம். சிலவேளை தடக்கை அகற்றமுன்னே வெகு மாச்சறபடவேண்டிவரும்; தடக்கொழிந்தபின்னே, பிள்ளைப்பெறுவித்தல் சுறுக்கிலே முற்றுவதுண்டு.*

கூபகம் அதிகநெளிவாயிருந்தால், சிரசென்புகள் துண்டந்துண்டமாய் வெளியில்வரும். அதற்குப்பின்பு நெஞ்சைத்தொளைத்து, அதற்குள்ளேயும் வயிற்றுக்குள்ளேயும் இருக்கும் குடல் முதலியவைகளை இழுத்தெடுக்க வேண்டியும் வரும். இவ்வகையாகச் செய்கையிலே, வெகு மோசஞ்சம்பவிப்பதுண்டு. தகர்ந்தவிலாவெலும்புகள் வந்து யோனியில் உறுத்திச் சேதஞ்செய்வதுண்டு; எவ்வளவு எச்சரிக்கையாயிருந்தாலும் இதை எப்போதும் விலக்கமுடியாது. அங்கூசத்திலும் பார்க்க அதிகவிசேஷமானதாயிருக்கும்படி தேவிசு என்றபண்டிதரும் பிறரும் சாவணங்கள் நூதனமாய்ச் செய்திருக்கிறார்கள்; இக்கருவிகளை அனுகூலமாய்ப் பிரயோகிக்கலாம்போலே; ஆகிலும், அங்கூசமே நான் ஏற்பட்ட கருமங்களை முற்றுவிப்பதற்கு உவப்பானதாயிருந்தது; யாதொருமோசம் அதினால் விளைந்ததுமில்லை.

அங்கூசகிருத்தியம் அல்லது சாவணகிருத்தியம்முடிந்தபின்பு, சலமறிப்புஞ் சலச்சிறுப்பும் உண்டாகாதபடி நாம்

* தபிலின் பட்டணத்திலுள்ள பிரசவசாலையிலே, ௨௦௮. பிரசவங்களுள் ஒன்றிலே தான் கிளாக்பண்டிதர் சித்திரிபிரயோகிக்கவேண்டிவந்தது. வெல்லேசிலிசாலையிலே, ௧௮௪௨௰. வருஷம் ௪௨௯ கருமங்களுள் இரண்டிலும், ௧௮௪௪ம். வருஷம் ௧௧௭. பிரசவங்களுள் ஒன்றிலும், சித்திரி பிரயோகித்ததாய்க் கணக்கிலேகண்டது. மேரிமன் என்பவர் எழுதியிருக்கும் ௨௯௪௭. பிரசவங்களுள் ஒன்பதிலும், பிளாண்டு என்பவர் எழுதியிருக்கும், ௧௮௯௭. பிரசவங்களுள்எட்டிலும், மாதணைத்தாஎன்ற சாலையிலே ௨௦௧௬௭. பிரசவங்களுட் பதினாறிலுமே, சித்திரி பிரயோகிக்கவேண்டிவந்தது.

Digitized by Google

விளிப்பாயிருக்கவேண்டும். அபின்சேர்ந்த மருந்துகொடுத்து, நாம் இனிச்சொல்லப்போகிற பரிபக்குவ நுட்பங்களிலெல்லாம் அதிக கட்டாயமாய் இருப்பதேபுத்தி.

மேகனனுசங்கி வெட்டிப்பிரித்தல், சிசுத்தலைதொளைத்தல், கருப்பையை வெட்டித்திறத்தல்என்னும், இந்த இரண்டுசெயலுக்கும் பதிலாக மேகனனுசங்கியை வெட்டிப்பிரிக்கலாமென்று, ௧௭௬௮ம். வரு பாரிசுபட்டணத்திலுள்ள சீம்கா என்ற பண்டிதர்விளம்பினர். இது செய்யும் முறை; சலவாகியுட் சிராவணிவிட்டுக்கொண்டு, மேகனத்திலே மேலிருந்து கீழுக்கு மேகனச்சந்தியின் கீழருகுக்குக் காலங்குலத்துக்குட்படவரும்வரைக்கும் அம்மேகனத்தின்தோல்முதலியவைகளையும்அனுசங்கியையும்கத்தியாற்பிளந்து பிரிக்கவும். பின்பு ஸ்திரியின்தொடைகளை இடந்து எலும்புகளை அகல ஒதுக்கித் தள்ளிவிடவும்; மேகனனுசங்கியை ஒருஅங்குலத்துக்கு அதனப்படப் பிரித்தால் பீடிகைச்சந்தனுசங்கிகள் கிழியும்; அப்படியாகில் மரணம்நேரிடும். அதிக குரூபங்கொண்டதாய்க் கருப்பை வெட்டித்திறத்தலை வேண்டிநிற்கும் கூபகத்திலே ஒருஅங்குலத்துக்கு அதனப்படப் பிரிப்பதினால் யாதொரு பெரும்பயன் முற்றுவதும் இல்லை. ஆகையால் மேகனம் வெட்டிப்பிரித்தல் கருப்பை வெட்டித்திறத்தலுக்குப் பதிலாய்நிற்கவும்மாட்டாது. அதிக வில்லங்கமான பிரசவங்களிலே, மேகனம் வெட்டிப்பிரித்தல் சிசுத்தலை தொளைத்தல் என்னும் இக்கிருத்தியங்களும் செய்யலாமென்று சிம்மன்சு என்பவர் சொல்லியிருக்கிறார். ஆகிலும் கருப்பை வெட்டித்திறக்கில் சிசுவாகுதல் தப்பிப்பிழைத்துக்கொள்ளுமாதலால் இருவரையும் வதைக்கும் அக்கிருத்தியங்களிலும்பார்க்கக் கருப்பை வெட்டித்திறத்தலே நலம். சத்திரி அங்கூசம் என்னுங் கருவிகளாலே கருமத்தை முற்றுவிக்கக் கூடியதாயிருக்க, இதைவிட்டு மேகனனுசங்கியை வெட்டிப்பிரிக்கலாமென்பது பைத்தியமென்று தற்காலத்திலே தோன்றுகிறது.

கருப்பைவெட்டித்திறத்தல். சித்திரியாலே சிரசைத்தொளைத்துக் கூடியளவு சிசுவின்பருமத்தைக் குறைத்தபோதிலும், அதை இழுத்தெடுத்துக்கொள்ளக் கூடாதளவாய்க் கூபகம் அதிககுரூபமாய் ஒடுங்கி இருக்குமாகில் அப்பாற் செய்யக்கூடியது கருப்பை வெட்டித்திறத்தல்தான். அதி

Digitized by Google

கம் அகன்றிருந்த இடம் ஒன்றேமுக்கால் அங்குலம் மாத்திரமாய் இருந்த ஒரு கூபகத்தாலே அங்கூசமென்ற கருவியை இட்டு ஓர் சிசுவை ஆசுபாண்பண்டிதர் இழுத்தெடுத்தார் என விளங்குகிறது. ஆகையால் கூபகம், இவ்வளவைக்குக் குறைந்திருந்தாற்றான் கருப்பை வெட்டித்திறக்கவேண்டியது. இப்படிக்குறைந்திருக்கும் வேளையிலே கருத்தரிப்பது அபூருவமானபடியால், கருப்பை வெட்டித்திறத்தலும் மெத்த அபூருவம்.

கருப்பை வெட்டித்திறக்கும்முறை. கவுரரேகையை அல்லது பிறைரேகையை ஆறங்குலநீளத்துக்குப்பிளந்துபிரித்துக் கருப்பையை வெளியாக்கிக்கொண்டு இரத்தக் குழல்களைக் கட்டிப் பத்திரம் பண்ணினதின்பின், சிசுவைவெளியில்எடுக்கத்தக்கதாய்க் கருப்பையின் பித்தியைப் பிளந்துபிரித்து, இப்பிளப்புக்கூடே கையைவிட்டு பன்னீர்க்குடச்சவ்வுகளைப் பிய்த்து, பிள்ளையையும் பின்பு அணையத்தையும் விரைவிலே சாதுரியமாய்ப் பெயர்த்தெடுக்கவும். அவ்வேளையிலே, குடல்கள் துன்னித்தள்ளாதபடி உதவியாளர் உதரப்பித்தியைக் கருப்பையில் அணையஅமர்த்தி அவதானமாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டியது. கருப்பை சுருங்காதிருந்தால் கையைஅதனுள்ளிட்டுஅருட்டிவிடவும். கருப்பையிற்காயந் தன்னிலே வலியஒன்றும்படிவிட்டு, உதரபித்திகளின் வெட்டுக்காயத்துக்கோ இழைப்பிடித்து இசைவுபற்றப்போடவும். கருப்பை வெட்டித்திறக்கத்தொடங்கமுன் சலப்பையிற் சிறுநீர் ஒழிவித்துக் காதை வைத்து அணையமிருக்கிறநிலையத்தை தெளிந்துகொள்ளப்பார்க்கவும். தெளிந்துகொண்டால் அணையத்திலே தாவாமல் வெட்டவும்.

பின்னிட்ட சில வருஷங்களிலே கருப்பை வெட்டித்திறத்தலை வெகுமுறையிலே வாய்ப்பாக நடத்தியிருக்கிறார்கள். கயில் நகரத்து மிகாலிசுஎன்பவர் ஒரு ஸ்திரியிலேயே ஐந்துதரமும், பில்தெல்வியாநகரத்துக் கிப்சன்பண்டிதர் வேறுஸ்திரிகளிலே இரண்டுதரமும், நூயாக்பட்டினத்துக்கொவ்மன்பண்டிதர்ஒருமுறையும் நடத்தியிருக்கிறார்கள். யுரோப்பு அமெரிக்கா என்னுந்தேசங்களிலுள்ள மருத்துவரும் நடத்தியிருக்கிறார்கள். இதைப்பற்றிமுன்னிருந்தபயங்கரங்கள் குறைந்து பிள்ளைபெறுவிக்கிறதற்கு வழங்கிவரும் உபாயங்களுள் இதுவும் ஒன்றெனச் சிந்திக்கிறார்

Digitized by Google

கள். வேறு உபாயங்கள் ஒன்றாலும் வாயாமற் காரியம் கைகடந்து போகிறதென்று காணும்போது, குருட்டுவாய்ப்பிலே செய்யுங் கிருத்தியமாயல்ல.

சிலமருத்துவருக்கு இக்கிருத்தியம் வாய்க்கவந்தது எப்படியெனில், ஸ்திரியிலே பெலங்குன்றிப் போகமுன்னும், பிரசவநோக்காடுகள் நெடுகநிற்பதினாலேனும், பிறவிவாசலாற் பிள்ளையை இழுத்தெடுக்க வலிங்கரமாய் நெடுநேரம் கையளைவதினாலேனும், தேகமானது அழற்சிகொள்ள முன்னும் அவர்கள் சற்று முந்திக் காரியம்நடத்தினதினாற்றான். இப்படிச் சற்றுமுந்தத்தொடங்கிச் சாதுரிய சாமர்த்தியமாய்க் காரியத்தைநடத்தினால் கருப்பை வெட்டித்திறத்தல் ஒருமட்டுக்கு வாய்க்குமென்று தற்காலத்தில் இருக்கும் மருத்துவர் தமது அனுபவத்தால் நிச்சயம்பண்ணி இருக்கிறார்கள். இது சாமர்த்தியமில்லாத சத்திரீகன் ஆய்ந்தோய்ந்துபாராமற் செய்யப்படாததான மிகப் பயங்கரமான கிருத்தியந்தான். ஆய்ந்து அளவிட்டுச் சாதுரியமாய் நடத்தினாலோ உதவாததென்று விருதாவிலே குறைகூறப்படாததும் அசாத்திய கருமங்களுக்குமாத்திரமே அமையாததுமாய், பிராணனைத் தப்புவித்தற்கான பக்குவ உபாயமாகமுடியும். ஸ்திரியிலே ஒருதரங் கருப்பைவெட்டித் திறக்கும்போது, பயங்கரமானஅக்கிருத்தியத்தை மறுதரமும் அவளிலே நடத்தவேண்டிவராமல் விலக்கும்படி சினைப்பாதைகளை நறுக்கி ஸ்திரியை மலடாக்கலாமோ என்பதைப்பற்றிப் பரீட்சைபண்ணவேண்டியிருக்கிறது.

ஒருஸ்திரியிலே சிசுவின்சிரசைத் தொளைத்தே பலதரமும் பிள்ளைப்பெறுவிக்கச் சம்பவித்தால் இப்படி முறைக்குமுறை சிசுவை வதையாமல் விலக்கும்படி ஏதேன் உபாயஞ்செய்யவேண்டி வருகின்றது. அப்படியான கருமங்களிலே கூபகத்தால் இறங்கத்தக்களவு சிறிதாயிருக்கும் பருவத்திலே சிசுவை முன்னேறப் பெறுவிக்கலாமென்று சொல்லுகிறார்கள். இவ்விதமான செய்கை ஸ்திரிக்கு மோசத்தை விளைவிக்கக் கூடியதாயும், அதிக அவசியங் கண்டாலன்றி மற்றும்படி அடாததாயும், இராச கட்டளைக்குக் குற்றமானதாயும் இருப்பதினால் எடுத்தபாட்டிலே செய்துபோடப்படாது.

இதைச் செய்யும்முறை. கூரிய நுனியுள்ள சலாகைக் கருவியினாற் பன்னீர்க்குடத்தைக் குற்றி பன்னீரைவடிய

Digitized by Google

விடவும். இதுகாரியத்திலே அறியவேண்டிய உபயோக மான விதிகளை மெரிமன்பண்டிதர் பிரசித்தம்செய்திருக்கி றார். அவைகளின் தாற்பரியங்களை நாம் இங்கே சொல் லுவோம்.

கவது. சிசு பிராணசேதமின்றித் தப்பிக்கொள்ளவேண் டில் ஏழாம் மாசத்துக்குமுன், பெறுவிக்கப்படாது.

உவது. சிசு வளரக்கூடிய பருமைக்கு வளர்ந்தால் ஸ்தி ரீ அதை உயிராய்ப் பெற்றுக்கொள்ளமாட்டாள் என்பதை ப் போதிய அனுபவத்தால் அறிந்தாலன்றி மற்றும்படி கு றைமாசத்திற் பெறுவிக்கப்படாது.

ஙவது. ஸ்திரி பிணியில்லாதவளாயிருக்கவேண்டியது.

சவது. உதயமானது பிசகாயிருந்தால், இச்செய்கையை ப்பற்றிச் சந்தேகமுண்டாகும்.

ருவது. சுரந்தோன்றுதபடி, காரியத்துக்கிணங்கிய பக் குவங்களிலே அதிக கட்டாயமாயிருக்கவேண்டும்.

சுவது. பிள்ளைக்கு, மூலைத்தாய் ஒருத்தி ஆயத்தமாயிரு க்கவேண்டியது.

எவது. கூடியளவெல்லாம் பிறருடைய ஆலோசனைகே ட்டுத் தெளிந்தாலன்றிச் செய்யப்படாது.

ரஞ்சுபோதமென்ற மருத்துவர் எர்கற்றுக்கஷாயத்தி லே நாலைந்துமுறை கொடுத்துப் பின்புதான் பன்னீர்க்கு டத்தைக் குற்றுவார். இப்படி எர்கற்றுக்கொடுத்துப்பெ றுவித்துவந்தபோது கருப்பைவாய் மென்மைகொண்டு சுற் றேவிரியும் என்றும், சிசுக்கள் செத்துப்பிறப்பது குறைவு என்றுங் கண்டார்.

குறைமாசத்திலே பிள்ளைபெறுவிக்கும் வேறொருமு றை, பன்னீர்க்குடச்சவ்வை கருப்பைவாயைச் சூழஇரண் டொரு அங்குலத்துக்குள்ளே பிரித்துக் கருப்பைவாயை ப்பெரும்பாலும் அடைத்திருப்பதாகிய சளித்தடக்கை அ கற்றிவிடவும். பன்னீர்பாய்ந்ததின்பின் நாபிக்கொடியி லும் பிள்ளையிலுங் கருப்பை அமர்த்தி உறுத்துவதினால் உ ண்டுபடுஞ் சிசுப் பிராண மோசத்தையும் இம்முறையா னது விலக்குவதாய் இருப்பதினாற், பன்னீர்க்குடச்சவ் வை உடனேயே குற்றுவதிலும்பார்க்க இதுவே உத்தம ம். ஆனாலும் இம்முறை வாயாமற்போய்ப் பன்னீர்க்கு டச்சவ்வைக் குற்றவேண்டி வந்துவிட்டால் முன்னமே எர்கற்றுக்கஷாயத்திலே இரண்டொருமுறை கொடுப்பது

Digitized by Google

நல்ல வைத்தியமாகமுற்றும். கருப்பைவாயிலே சுபஞ்சத்திரிஏற்றிவைத்து யோனியை அடைத்துவிடுவது உத்தமமென்று, வெல்போவும் வேறுபிறருஞ்சுமருத்துவர்களுஞ் சொல்லுகிறார்கள். சரிமாசப் பிரசவங்களிற்பார்க்க இயற்கையாயேனுஞ் செயற்கையாயேனும் சம்பவிக்கும் குறைமாசப் பிரசவங்களிற் குறுக்குதையங்காண்பது மெத்த அதிகம். செயற்கையாய்ச் சம்பவித்த குறைமாசப்பிரசவங்கள் முப்பத்துநாலுள் பதினைந்து உதயப்பிசகு என்று மெரிமன்பண்டிதர் கண்டார். நாற்பத்தொரு பிரசவங்களுள், பதினாலு பிசகுஎன்று ரஞ்சுபோதஞ்சொல்லுகிறார். நூற்றிருபத்திரண்டு பிரசவங்களுள், ஐம்பத்தாறு பிசகுஎன்று துபாயி என்பவர் சொல்லுகிறார்.

குறைமாசத்திலே சம்பவித்த நாற்பத்தாறு பிரசவங்களிலே, தாய்மார் நாற்பத்தாறுபேரும் பிழைத்துக்கொண்டார்கள் என்றும், பிள்ளைகளுட் பதினாறு பிழைத்து வளரக்கூடியதாய் இருந்தனவென்றும், ஐந்து உயிராய்ப்பிறந்து கொஞ்சநேரத்தின்பின் இறந்துவிட்டனவென்றும் மெரிமன்பண்டிதர் சொல்லுகிறார். குறைமாசத்திற் பிறந்த நாற்பத்தாறு குழந்தைகளிலே நாற்பத்திரண்டு உயிராய்ப்பிறந்தனவென்று அமில்தன் என்பவர் சொல்லுகிறார். குறைமாசத்திற்பிறந்த நாற்பத்தொரு பிள்ளைகளிலே இருபத்துமூன்று உயிராய்ப் பிறந்தனவென்று ரஞ்சுபோதஞ் சொல்லுகிறார்.

Digitized by Google

## கச. அதிகாரம்.

### கிரமாதீதபிரசவம்.

சிசுவினது சிரசு உதயமாகாமல் வேறேதேனுருபகுதி உதயமாகில் கிரமாதீதமென்று சொல்வது. இதில் இரண்டுவர்க்கம் உண்டு. க வது. குண்டியுதயம் அல்லது அதக்காய உதயம். உ வது. தோளுதயம் அல்லது உற்காய உதயம்.

முதுகு, வயிறு, பாரிசங்கள் இவையும் உதயமாமென்று ஆசிரியர் சொல்லியிருக்கிறார்கள். சரிமாசத்திலே இவை உதயமாகில், இரண்டாம்வர்க்கத்துக்குச் சொல்லப் போகிற முறை ஒழுங்குகளே இவைகளுக்கும் அமையும்.

பிரசவம் கிரமாதீதமாக நடக்குமென்று சிசு உசும்பும் மாதிரி, வயிற்றின்கோலம், முதற்பாதத்தின் தாமதநடை, பன்னீர்க்குடம் முந்தஉடைதல், இவைமுதலிய பலஅடையாளங்களினாலே தெளிந்துகொள்ளலாமென்கிறார்கள். ஆகிலும் யோனிவழியாய்ப் பரிசோதனைசெய்தே நிச்சயம்பண்ணக்கூடியது. பிரசவமுகனையிலே பரிசோதனைசெய்யும்போது, சிரசுதயமல்லவென்று துணியக்கூடியதாயிருந்தாலும், வேறெந்த உறுப்பு உதயமாகுமென்று திட்டமாய் அந்நேரம் சொல்லிக்கொள்வது ஏலாது. ஆதலால் அன்னேரந்தொடுத்து, பிரசவமானது சற்று அதிகநடைகொண்டு, நாம்தெளியவேண்டிய நிச்சயம் தோன்றும்வரைக்கும், அவதானமாய்க் காத்திருப்பதும், தருணத்திலே வேண்டிய சகாயஞ்செய்வதும் நம்மில் விழுந்தகடன்.

உதயமாகும்பகுதிகள் இன்னவென்று அறியுங் குறிகள்.

சிரசு. உரப்பினாலுங் கரேகைகளினாலும் உச்சிகளினாலும், சிரசு இதுவென்றுதெளியலாம்.

முகம். நெற்றியினாலும், கண் வாய் மூக்கினாலும், பிரதானமாய் நாவினாலும், குண்டியல்லவென்று முகத்தைத்தெளியலாம். இவ்வுதையங்கள் இரண்டையும்பற்றி முன்னே சொன்னோம்.

குண்டி. திரட்சிகொண்டு மிருதுவாய் விரலுக்குநெகிழ்வதினாலும், இடையே ஓடியிருக்கும் பிளப்பினாலும் அபா

Digitized by Google

னத்தினாலும், பிரதானமாய் ஆண்பிள்ளைகளிலே சனனஉறுப்புகளினாலும், கருமலக்கழிவினாலும், குண்டி இதுவென்று மட்டுப்பிடிக்கலாம். முதலிலே அவதானக்குறைவாய் விரைவிலே பரிசோதிக்கில், ஆசனக்கணுகூபகத்துள் நெருங்கி இதின்தோல் இறுகிவிம்மிநிற்கையிலே, விரல் அதிலேபட்டு அக்கணுவைச் சிரசு என்றெண்ணி மோசம் போவதும் உண்டு.

தோள். குண்டியிலுஞ் சிறுத்திருப்பதினாலும், கக்கம் விலாஎன்பு காறையென்பு தோட்பட்டைகளினாலும், தொடைகளிலும் பிரகண்டங்களாகிய பின்கைகள் சிறுத்து அதிகம் அசையக்கூடியனவாயிருப்பதினாலும், தோள்நிதானம்பண்ணலாம்.

பதம், அஸ்தம். கையிலும்பார்க்கப் பருமையும் நீளமுமாய் குதியேறினதாய் விரல்கள் குறுத்து மட்டமாய் காற்பெருவிரல் கைப்பெருவிரல்போல் மற்றவிரல்களிலிருந்து பிரிந்து அதிகம் தள்ளக்கூடாமையாய் இருப்பதினாலே, பதத்தை அஸ்தத்துக்கு விகற்பித்துத் தெளியலாம்.

முழங்கை, முழங்கால். பிரகண்டமாகிய பின்னங்கையும் முன்னங்கையுஞ் சிறுத்துக் கூர்கொண்டு இருப்பதினால், முழங்கையை முழங்காலுக்கு விகற்பித்து அறியலாம்.

ஏட்டிலே வரைந்திருக்கும்போதும் தொட்டிலிலே அமைதியாய்க் கிடக்கும் குழந்தையைத் தடவிப் பார்க்கும்போதும், இவ்வடையாளங்கள் வகுவாய்த் தோன்றுந்தான்; சிசு கருப்பையுள் இருக்கும்போதோ இச்சம்பிரதாயம் முடியாது. பழகினவர்களையுஞ் சிலவேளை வேய்த்துப்போடும். தருணம்வாய்க்கும் வேளைகளிலே உயிராயிருக்கிற அல்லது செத்தபிள்ளைகளின் பலபல அங்கங்களையும் தடவிப்பயின்று, இப்படிப் பரிசனைஅனுபவத்திற்றேறுவதினாலே நாம்பிழைப்படாமல் விலகிக்கொள்ளலாம். இப்படிப் பரிசனையினால் அடைந்த அனுபவத்தைச் சாதனைசெய்யவேண்டிவரும் வேளைகளிலே வேகமின்றி ஆராய்வாயும் சாந்தமாயுமே சாதிக்கவேண்டியது.

குண்டியுதயம். குண்டியுதயங்களிலேபிரசவம்முற்றுகிற முறையைப்பற்றிப்பூரணமாய், உஅம். பக்கத்திலே விளங்கப்பண்ணினோம். இவ்வகையான பிரசவமுகனையிலே இரண்டு விகற்பங்கள் உண்டுபடும்.

Digitized by Google

க. சிசுவின் முற்பக்கம் தாயின் முதுகுப் பக்கத்தைத் தாவி நிற்பது.

உ. சிசுவின் முற்பக்கம் தாயின் வயிற்றுப்பக்கத்தைத் தாவிநிற்பது. இதுவே அதிகம் அனுகூலத்தாழ்ச்சியானது. இந்த இரண்டாம் விகற்பத்திலே தொடங்கும் அநேகபிரசவங்கள் நடைகொண்டேறுகையில் கருப்பைச்சேட்டனத்தினுலே முதலாம் விகற்பமாய்த் திரும்பிவிடுமென்று, நாகேல்என்பவர் கண்டறிந்தவைகளாலே தீர்மானமாயிற்று. இரண்டாம் விகற்ப நிலையமாய்ப் பிள்ளைபிறப்பது அரிது; அப்படிவந்தால் செயற்கைச் சகாயம் வேண்டியதான விக்லங்கமும் சிலசிலவேளை நேரிடும்.

குண்டி உதயப்பிரசவத்தின் முதற்பாதத்தைக் கிரமப்பிரசவம்போலவே நடத்தவேண்டியது. சிசுவின் சனன உறுப்புகளிலே சேதங்காணுதபடி, மருத்துவர் பரிசோதனைசெய்யும்போது அதிக அவதானமாய் இருக்கவும். சகலகருமமும் வாய்ப்பாக நடக்குமேயாகில், கருப்பையேகுண்டியையுங் கால்களையும் மருத்துவருடைய சகாயமின்றி வெளியப் பிதுக்கித்தள்ளும்படிவிடவேண்டியது. விக்லங்கங்கண்டால், கஷ்டபிரசவ அதிகாரத்திற் சொல்லிய விதிகளின்படியே செய்யவும். நாபிமட்டும் பிள்ளைவெளிப்படமுன் பிரசவ நடையைச் சுறுக்குப்பண்ண வேண்டிவரும் பிரசவங்கள் மிகச்சொற்பம். மிகுதியான பிரசவங்களிலே நாபிவெளிப்படும் வரைக்கும் பிரசவநடை எவ்வளவு மெல்லெனவாக இருக்கின்றதோ தசைப்பாடும் அவ்வளவு பூரணமாய்விரிந்திளகும் நாபிக்கொடியில் அமர்த்தி உறுத்துவதினல் உண்டுபடுவதாகிய மோசத்துக்குஞ் சிசுவிலகிக்கொள்ளும். கூபகத்துள்ளே நாபி நன்றுய் இறங்கும்வரைக்கும், சிசு இப்படியான மோசத்துக்கு இடமாகாது. கூபகஅறையிலே சிரசு நன்றுய்ப் புகும்வரைக்கும், பெருமோசங்கள் சம்பவிக்கவும் மாட்டா. ஆகையால் அல்குலால் நாபிபுறப்படும்வரைக்கும், பிரசவநடையைச் சுறுக்குப்பண்ணுமல், சற்றொருமட்டுக்கு அதைத் தாமசஞ்செய்வது நலம் என்று எண்ணலாம்; ஆனாலும் நாபி புறப்பட்டவுடனே, கொடியிற் சிரசு அமர்த்திஉறுத்தல் கடினமாகும். ஆதலால் பிரசவத்தின் இப்பகுதியைக் கூடியளவு விரைவிலே முற்றுவிக்கவேண்டியது.

நாபிமட்டுக்கு உடல்வெளிப்பட்டபின்பு, கொடி இறி

Digitized by Google

னத்தினாலும், பிரதானமாய் ஆண்பிள்ளைகளிலே சனனஉறுப்புகளினாலும், கருமலக்கழிவினாலும், குண்டி இதுவென்று மட்டுப்பிடிக்கலாம். முதலிலே அவதானக்குறைவாய் விரைவிலே பரிசோதிக்கில், ஆசனக்கணுகூபகத்துள் நெருங்கி இதின்தோல் இறுகிவிம்மிநிற்கையிலே, விரல் அதிலேபட்டு அக்கணுவைச் சிரசு என்றெண்ணி மோசம் போவதும் உண்டு.

தோள். குண்டியிலுஞ் சிறுத்திருப்பதினாலும், கக்கம் விலாஎன்பு காறையென்பு தோட்பட்டைகளினாலும், தொடைகளிலும் பிரகண்டங்களாகிய பின்கைகள் சிறுத்து அதிகம் அசையக்கூடியனவாயிருப்பதினாலும், தோள்நிதானம்பண்ணலாம்.

பதம், அஸ்தம். கையிலும்பார்க்கப் பருமையும் நீளமுமாய் குதியேறினதாய் விரல்கள் குறுத்து மட்டமாய் காற்பெருவிரல் கைப்பெருவிரல்போல் மற்றவிரல்களிலிருந்து பிரித்து அதிகம் தள்ளக்கூடாமையாய் இருப்பதினாலே, பதத்தை அஸ்தத்துக்கு விகற்பித்துத் தெளியலாம்.

முழங்கை, முழங்கால். பிரகண்டமாகிய பின்னங்கையும் முன்னங்கையுஞ் சிறுத்துக் கூர்கொண்டு இருப்பதினால், முழங்கையை முழங்காலுக்கு விகற்பித்து அறியலாம்.

எட்டிலே வரைந்திருக்கும்போதும் தொட்டிலிலே அமைதியாய்க் கிடக்கும் குழந்தையைத் தடவிப் பார்க்கும்போதும், இவ்வடையாளங்கள் லகுவாய்த் தோன்றுந்தான்; சிசு கருப்பையுள் இருக்கும்போதோ இச்சம்பிரதாயம் முடியாது. பழகினவர்களையுஞ் சிலவேளை வேய்த்துப்போடும். தருணம்வாய்க்கும் வேளைகளிலே உயிராயிருக்கிற அல்லது செத்தபிள்ளைகளின் பலபல அங்கங்களையும் தடவிப்பயின்று, இப்படிப் பரிசனைஅனுபவத்திற்றேறுவதினாலே நாம்பிழைப்படாமல் விலகிக்கொள்ளலாம். இப்படிப் பரிசனையினால் அடைந்த அனுபவத்தைச் சாதனைசெய்யவேண்டிவரும் வேளைகளிலே வேகமின்றி ஆராய்வாயும் சாந்தமாயுமே சாதிக்கவேண்டியது.

குண்டியுதயம். குண்டியுதயங்களிலேபிரசவம்முற்றுகிற முறையைப்பற்றிப்பூரணமாய், உசம். பக்கத்திலே விளங்கப்பண்ணினோம். இவ்வகையான பிரசவமுகனையிலே இரண்டு விகற்பங்கள் உண்டுபடும்.

Digitized by Google

௧. சிசுவின் முற்பக்கம் தாயின் முதுகுப் பக்கத்தைத் தாவி கிற்பது.

௨. சிசுவின் முற்பக்கம் தாயின் வயிற்றுப்பக்கத்தைத் தாவிகிற்பது. இதுவே அதிகம் அனுகூலத்தாழ்ச்சியானது. இந்த இரண்டாம் விகற்பத்திலே தொடங்கும் அநேகபிரசவங்கள் நடைகொண்டேறுகையில் கருப்பைச்சேட்டனத்தினுலே முதலாம் விகற்பமாய்த் திரும்பிவிடுமென்று, நாகில்என்பவர் கண்டறிந்தவைகளாலே தீர்மானமாயிற்று. இரண்டாம் விகற்ப நிலையமாய்ப் பிள்ளைபிறப்பது அரிது; அப்படிவந்தால் செயற்கைச் சகாயம் வேண்டியதான வில்லங்கமும் சிலசிலவேளை நேரிடும்.

குண்டி உதயப்பிரசவத்தின் முதற்பாதத்தைக் கிரமப்பிரசவம்போலவே நடத்தவேண்டியது. சிசுவின் சனன உறுப்புகளிலே சேதங்காணுதபடி, மருத்துவர் பரிசோதனைசெய்யும்போது அதிக அவதானமாய் இருக்கவும். சகலகருமமும் வாய்ப்பாக நடக்குமேயாகில், கருப்பையேகுண்டியையுங் கால்களையும் மருத்துவருடைய சகாயமின்றி வலியப் பிதுக்கித்தள்ளும்படிவிடவேண்டியது. வில்லங்கங்கண்டால், கஷ்டபிரசவ அதிகாரத்திற் சொல்லிய விதிகளின்படியே செய்யவும். நாபிமட்டும் பிள்ளைவெளிப்படமுன் பிரசவ நடையைச் சுறுக்குப்பண்ண வேண்டிவரும் பிரசவங்கள் மிகச்சொற்பம். மிகுதியான பிரசவங்களிலே நாபிவெளிப்படும் வரைக்கும் பிரசவநடை எவ்வளவு மெல்லெனவாக இருக்கின்றதோ தசைப்பாடும் அவ்வளவு பூரணமாய்விரிந்திளகும் நாபிக்கொடியில் அமர்த்தி உறுத்துவதினுல் உண்டுபடுவதாகிய மோசத்துக்குஞ் சிசுவிலகிக் கொள்ளும். கூபகத்துள்ளே நாபி நன்ருய் இறங்கும்வரைக்கும், சிசு இப்படியான மோசத்துக்கு இடமாகாது. கூபகஅறையிலே சிரசு நன்ருய்ப் புகும்வரைக்கும், பெருமோசங்கள் சம்பவிக்கவும் மாட்டா. ஆகையால் அல்குலால் நாபிபுறப்படும்வரைக்கும், பிரசவநடையைச் சுறுக்குப்பண்ணுமல், சற்றொருமட்டுக்கு அதைத் தாமசஞ்செய்வது நலம் என்று எண்ணலாம்; ஆனுலும் நாபி புறப்பட்டவுடனே, கொடியிற் சிரசு அமர்த்திஉறுத்தல் கடினமாகும். ஆதலால் பிரசவத்தின் இப்பகுதியைக் கூடியளவு விரைவிலே முற்றுவிக்கவேண்டியது.

நாபிமட்டுக்கு உடல்வெளிப்பட்டபின்பு, கொடி இழி

Digitized by Google

வுண்ணுதபடி, கொடியை மெல்லெனச் சற்றே வெளியே இழுக்கவேண்டும். கொடியிலே துடிப்புக்கண்டால், வலியவேபிரசவம் நடக்கும்படி இன்னும்விடலாம். கால்கள் அல்லது கைகள் வெளிப்படுவதிலே வில்லங்கங்கண்டால், அவை விடபத்தைத்தட்டிச் சேதம்பண்ணவிடாதபடி அவதானமாய் அவற்றைக் கீழேயிறக்கிவிடவேண்டியது. கைகளைக் கீழே இறக்கிவிடும்படி தர்ச்சனி விரலைச் சிசு முழங்கைஒவ்வொன்றினதும் இடுக்குக்குள்ளே விட்டுவிட்டு,மெல்லெனக்கீழே நெஞ்சால் இறங்க முன்னங்கையை இடந்துவிடவும். கால்களிலே பிடித்திழுத்தாலன்றிக் கைகளை இப்படிக்கீழே இறக்கிவிடவேண்டி மெத்தவராது. கருப்பைச்சேட்டணத்தாலேயே சிசுப் பிதுக்குண்டுவெளிக்கிட்டால், கைகள்தாம் இயல்பிலே இருக்கவேண்டியபடி நெஞ்சிலே மடங்கி அணைந்திருக்கும்; பிள்ளையைப்பிடித்திழுத்தாற்ருன், கைகள் சிரசுப்பக்கத்துக்கு நீட்டுண்டு, பிரசவத்துக்குக் கடு விக்கினம் உண்டாக்கும்.

சிலவேளை உடல் வெளிப்பட்டவுடனே கிரமப்பிரசவத்திற்போல, முகம் பீடிகைக்கவிகையுள் திரும்பிச் சிரசு விரைவிலே வெளிக்கிடும். சிரசு வெளிக்கிடாமல், நாபிக்கொடியுந் துடிப்பற்றுப்போமேயாகில், சிசு சுவாசமில்லாமற் சாகாதபடி சிரசை விரைவாக வெளிக்கிடுத்தவேண்டியது.

சிரசை வெளிக்கிடுத்தும் முறை. வலது கைவிரல் இரண்டை, சிசுவின் பின்னங் கழுத்துக்குச் சற்றே அணைவாக இட்டுப் பிடரியைச்சற்றே கிளப்பிக்கொண்டு அந்நேரமே இடதுகைவிரல் இரண்டை வாய்க்கு அடுத்தாற்போல மேலே சிசுமுகத்திலிட்டு முகத்தைத் தாழ்க்கவும். இப்படிச்செய்வதினுல் இறங்கவேண்டியவளத்துக்குத் தலைவரும். நமது விரல் அணைவாலே காற்று சிசுவின்வாய்க்கும் மூச்சுப்பைக்கும் செல்லுகிறதற்கும் ஓர் இடைவும் உண்டுபடும். சிரசின் மிகுதியானபகுதி யோனியுள்ளிருக்கவே சிற்சிலவேளை சிசு மூச்சுவிட்டதும் உண்டு. மேலேசொல்லியபடி முகத்தைத் தாழ்ப்பதினுல் வெகுவாகச் சிரசைச் சுறுக்காய் வெளிக்கிழுத்துக்கொள்ளலாம். ஆகிலும் சிசுவுக்குப் பிராணசேதமான தாமசம் உண்டுபடுவதும் உண்டு. சிலவேளை உடல் வெளிக்கிட்டபின், சிரசைத் தொலைக்கவேண்டியுஞ் சம்பவிக்கும். அவ்வேளை

Digitized by Google

களிலே, சித்திரியைச் சிசுவின் காதுக்குப் பிறகே சிரசிலே ஏற்றலாம். சிரசை இழுத்தெடுக்கும்போது ஸ்திரியின் விடபத்தை அவதானமாய்ப் பேணிக்கொள்ளவும்.

நாபிக்கொடியிலே துடிப்புச் சோர்ந்து, சிசுவுக்கும் கடு மோசம் விளையப்போகிறதாய்த் தோன்றிச் சிரசும்வெளிக்கிடாமல், அதிகந் தாமசமாயிருக்கில், உடனேயே சாவணமேனும் உற்கருசியேனும் பிரயோகிக்கவேண்டியது. பதோதயம் அல்லது குண்டிஉதயப்பிரசவங்களிலே, சாவணம் அவசியங்கண்டால் உடனேயே பிரயோகிக்கத்தக்கதாய்,கையுடனே எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டியது. ஐந்துநிமிஷம் பிந்திப்பிறந்தால், சிசு பிராணசேதமாய்ப்போகும்; ஐந்து நிமிஷம் முந்திப்பிறந்தால், பிராணன் தப்பிவிடும்.

சிரசு புறப்படும் வரைக்குஞ் சிசுவின்வயிறு தாயின் முன்பக்கத்துககே தாவிக்கொண்டு திரும்பாமல் நின்றுவிட்டால்,மோவாயானது மேகனத்தவரிலே கொளுவுண்டு சற்று வில்லங்கம் உண்டுபடும். அப்பொழுது ஒரு சீலைத்துண்டினுற் சிசுவின் உடலை அணைத்துப் பிடித்துக்கொண்டு சிரசின் நெடுவிட்டமானது மேற்பந்தையின் சாய்விட்டத்துள் இறங்கத்தக்கதாய், மெல்லெனவாகச் சிசுக் கழுத்தில் உருளைபெயராதபடி அவ்வுடலைச் சற்றே திருப்பிவிடவும்.

பதோதயம். குண்டி உதயப்பிரசவத்தைப் போலேயே இதையும் நடத்தவேண்டியது. அதிலேகண்டவிகற்பங்கள் இதிலும் உண்டுபடும். பருத்த பெரிய குண்டிமுதல் வெளிக்கிட்டுதேயாகிற் சிரசு வெளிக்கிடுவதற்கு வாசல் அகவித்திருக்கும். கால்கள் முதல்வெளிக்கிட்டாலோ, வாசல் மெல்ல மெல்ல ஆப்பினுற்போல் விரிய, இதினுற் சிரசு சுறுக்கு வெளிப்படுவது பிரயாசமானபடியால், பிள்ளை சுவாசிக்கத் தொடங்கமுன் நாபிக்கொடி அபாயமாய் அமர்த்துண்டு பதோதயப் பிரசவத்திலே சிசுவுக்குப் பிராணசேதம் பலமுறையும் நேரிடும். சிசுவின் உடலானது கூடியளவு மெல்லெனவாக வலியப்பிதுக்குண்ணும்படி விடுவதும், நாபிக்கொடி வழியாக இரத்தம் பரம்பிக்கொண்டிருக்கும் வரைக்குஞ் சிரசை ஒன்றுஞ்செய்யாமல் விடுவதுமே, சிரசு கடைசியில் விரைவாய் வெளிக்கிடுவதற்கு உத்தம உபாயம். நேரம் உண்டேயாகில், நோக்காட்டுவேளையிலேயே சிரஸ்ச இழுத்தெடுக்கப்பார்க்கவேண்டியது.

Digitized by Google

ஆனாலும் நாபிக்கொடியில் துடிப்பு அற்றொழிந்துபோவதி னாலே சிசுசாகிறது போற் கண்டால், தாமசமின்றி உடனேயே சாவணம் பிரயோகிக்கவும்.*

தோளுதயம், உற்காயஉதயம். குண்டியுதயத்தில் நடத்தியவைத்தியங்களுக்கு முற்றும் வித்தியாசமான வைத்தியம் இதில் நடக்கும். அதிலே இடையளவு ஆகாதென விலக்கியிருப்பது போல இதிலே இடையளவு வேண்டுமென விதித்திருக்கிறார்கள். இவ்வகையான பிரசவங்கள் நடக்கும் ஒழுங்கையும் சிலசில வேளை சிசுவுடல் மடிந்து வளியப் பிறந்து சகாயங்காட்டும் முறையையும் பற்றி, ௨௦ம். பக்கத்திலே விளக்கியிருக்கிறோம். ஆனாலும் சிசு முதிர்ந்துவிட்டால், அப்படி வலியப் பிறக்குமென்று நம்பிக்கொள்ளக்கூடாது. சகாயஞ் செய்வது நமது கடன். கருப்பையுள் கையை விடுவதும், பாதங்களை அல்லது கால்களைப் பிடித்துக் கையல்லது தோளிருந்தவிடத்திலே யோனியுள் இறக்கிவிடுவதுமே இதற்கு எற்ற வைத்தியம் என்பார்கள். இச்செய்கையைத்தான் திருப்புதல் என்று சொல்வது. அந்தந்தக் கருமத்துக்குத் தக்கதாய் நாம் செய்வதை விகற்பிக்கவேண்டிவரும். சிலது லகுவாயும், சிலது மாய்ச்சலாயும் முற்றும். கருப்பைவாய் நன்றாக விரிந்ததாயும், பன்னீர்க்குடம் உடையாமல் அல்லது சற்று முன்னிதாய் உடைந்ததாயும், வலுபிதுக்கு நோக்காடு இன்னுந் தோன்றாததாயுமிருக்கும் பருவத்தில் வைத்தியஞ் செய்தால், காரியம் அனுகூலமாம். இத்தறுவாய் வாய்த்தால் உடனேயே சிசுவைச் திருப்பிவிட வேண்டியது.

சிசுத்திருப்பும் முறை.

௧௨௯. பக்கத்திலே சொல்லியிருக்கும் முறையாய் ஸ்திரியைப் படுக்கப்பண்ணி மருத்துவர் அவளுக்கு மூற்பக்கமாயிருந்துகொண்டு, தமக்கு வசதியானபடி வலதுகைக்காவது இடதுகைக்காவது உள்ளங்கையொழிந்த இடமெங்கும் எண்ணெய்தடவி, உள்ளங்கை சிசுவின் அவயவங்களை நன்றாய்ப் பிடிக்கத்தக்கதாய்க் கூடியளவு அதைமாத்திரஞ் சற்றும் எண்ணெயில்லாமல் வைத்து இப்பக்குவங்கள்முடிந்தபின்பு விரல்களைக் கூம்பக் குவித்து யோனியுள்

* வெல்வெசிவிசாலையிலே, ௧௮௧௨-ம். ௧௮௪௧-ம். ஆண்டுகளில் சம்பவித்த ௮௯. பிரசவங்களிலே, நாற்பத்திரண்டுக்கு ஒன்றுவீதமாய் அதக்காய உதயங்கள் இருபது. குண்டிஉதய, பதோதயப் பிரசவங்களிலே வெகுசிசுக்கள் செத்துப்பிறந்தன.

Digitized by Google

மெல்லமெல்ல விடவும். கைமொத்தி அல்குல் வாசலுள் ஏறுமட்டும் ஸ்திரிக்குச் சற்று வருத்தங்காட்டுமானபடியால், அதிக அவதானமாயிடவேண்டியது. விரல்கள் கருப்பைவாயை எட்டினபின், சிசுக் கைதூங்கி நின்றால், அதினைவிலேஅல்லது சிசுத் தோளணைவிலே சிசுவுடலின் முற்பக்கத்தை நாட விரற்கூம்பைக் கருப்பைவாயுட் செலுத்தவும். உடலின் முற்பக்கத்திலேயே சிசுக்கால்கள்இருக்கும். இப்படி விடும்போது பன்னீர்க்குடம் உடையாதிருந்தால், அதை நாமே உடைத்துப்போடுவோம். பின்பு நமது கைக்குளசு கருப்பைவாயை அடைக்க இதினால் பன்னீர்வெளியே வடியாமலிருக்கில், நமது கையால்ஆராய்ந்து கால்களை லேசிலே தடவிப் பிடிப்பதற்கு அப்பன்னீர் உதவியாகும். கால்களை ஆராயும்போது வேகமின்றி அமைதியும் ஒழுங்குமாய் சிசு நிலையம் இன்னமாதிரியிருக்குமென்பதிலே மனதை ஊன்றிக் காரியத்தை முடிக்கவேண்டும். நோக்காடு தோன்றினால் அந்நேரங்கையை அசையாமல் விட்டு விரல் முளிகள் புடைத்துநின்றாற் கருப்பைக்கு அபாயம் நேரிடுமாதலால் விரல்களை விரித்துச் சிசுவுடல்மேல் வைத்துக்கொள்ளவும். நமது கைநுறண்டுமேயாகிற் சற்றுநேரம் ஆறியிருக்கலாம். சற்றுத் தாமசம்பண்ணுவதினாற் காரியம் சித்தியாகாமற்போவதில்லை. நோக்காடுகள் வலுப்புக்கொண்டு கருப்பை பெலமாய்க் கையிலுறுத்துமேயாகில், கால்களைத் தடவிப்பிடிப்பதற்குப் பலதரம் ஆராயாமல், அமைதியும் வள்ளிதுமாய் ஒருதரம் ஆராய்ந்துபார்க்கவும். இதிலே வாயாதுபோனால் நோக்காட்டைத் தடுக்கும்படி கோலத்துக்குத் தக்கதாய்ப் பின்னாற் சொல்லப்படும் மருந்துகளைப் பிரயோகிக்கவும். இதன்பின்பு கருப்பை நுகைந்து அமைவாகும். காலாலே பிரசவம் லகுவாக முற்றும். கால்களைப் பிடிக்கிறபோது கவலைக்குறைச்சலினாற் காலொன்றுங் கையொன்றுமாய் மாறிப்பிடியாமலும், அல்லது இரட்டைப்பிள்ளைகளிலே ஒன்றின் ஒருகாலையும் மற்றதின் ஒருகாலையுங் கூட்டிப்பிடியாதபடிக்கும் அமைவுஞ் சாந்தமுமாய் ஆலோசித்துத் தெளிந்துகொண்டு,பின்பு மெல்லென ஆய்த்தாய்த்துக் கருப்பையால் அவற்றை இழுக்கவும்.

இதன்மேல் இதையும் பதோதயப் பிரசவமாய்க் கண்டு, தகுந்த வைத்தியம்பண்ணவும். கால் கீழே இறங்கினவு

Digitized by Google

டனே சிலர் அதில் ஒரு நாடாக்கட்டிவிடுவார்கள். கால் மறுபடி உள்ளுக்கு இழுவுண்பதில்லை, ஆதலால் இப்படிக் கட்டுவதிலே காரியமில்லை. சிலவேளை காலிரண்டையும் அல்லதுஒன்றை இழுத்திறக்கிவிடும்போது, தோள்மிதவாமல் நிற்பதும் உண்டு. அவ்வேளையிலே எண்ணெய் தடவிய ஒரு நாடாவைக் காலொன்றிலே பூட்டி ஒரு கையாற் பிடித்துக்கொண்டு, மற்றக் கையின் இரு விரல்களைச் சிசுவின் கக்கத்திலே கொளுவித் தோளை மிதத்திவிடவும். கால்களை இறக்கிவிடாமல், இவைக்குப்பதிலாய் முழங்கால்களை இறக்கிவிடுவது உத்தமம் என்று தபிளின் பட்டணத்திலுள்ள பிறீன்பண்டிதர் சொல்லுகிறார். முழங்கால்களை லகுவாய் ஆராய்ந்து பிடிக்கலாந்தான். வேறுசிலமருத்துவர் ஒருகாலை மாத்திரம் இறக்கிவிட்டால் அப்பிரசவகருமம் கிட்டமுட்ட குண்டியுதயத்துக்குச் சமானமாயிருக்குமென்றும், சிசு உயிராய்ப்பிறத்தலும் அதற்கிசையவே அதனப்படுமென்றும் எண்ணி ஒருகாலைமாத்திரம் இறக்கிவிடுவது உத்தமமென்று நினைக்கிறார்கள்.

கைஉதையமாகும் பிரசவங்களிலே முதன் முதல் ஏற்படில் புதுப்பழக்க மருத்துவர் சற்றுக் கைபடிந்த மருத்துவர்களின் ஆலோசனையை விஞவிச் செய்வதே தமக்கு நயமென்று காண்பார். சிசுவின் உதயஞ் சங்கட்டமாயிருக்கிறது, ஆதலால் சிசு பிராணமோசத்துக்கும் இடமாகும் என்பதை ஸ்திரியின் உற்றவர்களுக்கு என்ன இருந்தபோதிலும் அறிவித்துப்போட வேண்டியது. மருத்துவர் கால்களைத் தடவி ஆராயும்போது, ஸ்திரிக்குப் பக்கத்திலே ஒரு உதவிஆள் இருந்துகொண்டு தன்கை இரண்டாலும் கருப்பைத் திரளையை மெல்ல உறுதியாய்ப் பிடித்துக் கூபகத்துள் இறக்கி அமர்த்திவிட்டால், இதினால் சிசுத் திருப்புதலுக்கு அதிக லேசுகாணும். கால்களைஆராய்ந்து பிடித்து இழுக்கத் தொடங்கும்போது, உதவியாளுஞ்சற்றதனமாய்க் கருப்பையை அமர்த்தி இறக்கலாம். கால்களைக் கீழே இறக்கிவிடும்போது, குதிங்கால்கள் ஸ்திரிக்கு முற்பக்கமாய் உதயமாஞற்ருன் உடலுஞ் சிரசும்அதிகவாய்ப்பான வளமாய் வெளிப்படுமாதலால், குதிங்கால்களை முற்பக்க உதயமாக்கிவிடும்படி அதிக சாக்கிரதையாய் இருக்கவேண்டும். இதுகாரியத்திலே மருத்துவரே உதயங்காட்டிவிடவேண்டியிருப்பதால், அதிக வாய்ப்பான

Digitized by Google

வளமாய் அவர் திருப்பி விடுவாராக. சிசுவின் குதிங்கால்கள் தாயின் முதுகுப்பக்கத்துக்கு நிற்கச் சிசு இறங்குமேயாகில், அதின்மோவாய் மேகனத்தவரிலே கொழுவுண்டு பிரசவத்தில் வெகு சங்கடம்நேரிடும்.

இவ்வகையான பிரசவங்களிலே சிலவேளை கருப்பைவாய் அதிகம் விரியாமற் பன்னீர்க்குடம் முந்தஉடைந்துபோவதும்உண்டு. இப்படியானதருணங்களிலேஸ்திரியை நெடுஞ்சாணேயே படுக்கப்பண்ணி, இதினாற்பன்னீர்முற்றும்வெளியில் வடிந்துபோகாமற் தடுத்துக்கொண்டால், சிசுவைத் திருப்பும்போது கருப்பையில் இன்னும் பன்னீர் இருக்கிறதினால் நமது கிருத்தியமும் சற்று லேசாய் முற்றும். பன்னீர்க்குடம் முந்தஉடைந்தபோதிலும், அத்துடனே வலு பிதுக்குநோக்காடுகள் தோன்றாவிட்டால் கருப்பைவாய் இன்னும் அதனமாய்விரிய இடம் உண்டென்றெண்ணிச் சற்றே பொறுத்துப்பார்க்கலாம். நோக்காடு வலுவாயிருந்தால் அதைக் குறைக்கும்படிக்கானஉபாயங்கள்செய்யவும். ஸ்திரியிலே இரத்தம் மிஞ்சியிருந்தால் இரத்தம்வாங்கவும். இதுபுத்தியல்லவென்று கண்டால் அல்லது இது வாயாமற்போனால், லாடணத்திலே சற்றதனமாக ஒருமுறை கொடுத்து, நோக்காடு குறையாதுபோகில் மறுபடியும் இரண்டொரு நாழிகையின்பின் அப்படிக் கொடுக்கவும். இந்த இரண்டுஉபாயங்களாலும், அல்லது இவற்றுள் ஒன்றினாலே நோக்காடு குறைந்து கைபோகத்தக்க அளவாய் கருப்பைவாய் நுகைந்துவிடும். இத்தருணங்களிலேஅதிகசாவதானமாயே சகலகாரியத்தையுஞ் செய்யவேண்டியது. சிலவேளை தாத்தர் அந்திமோனி என்ற மருந்தைக் காற்கிறேன் அரைக்கிறேன் அளவுக்குக் கொடுத்தால் கருப்பை சற்றுவிரைவிலே தளர்ச்சிகொள்ளும். இரத்தம் வாங்குகிறதிலும் இம்மருந்துகொடுப்பது பெரும்பாலும் நலம். அபானவழியாய்ச் சாந்திசெய்யும் மருந்துபுகட்டுகிலும் அப்படியே ஆகும்; மலஞ்சுத்தியாம். அபானவழியாய்ச்செலுத்தும் மருந்து தாரங்கொண்டதாய் இருக்கப்படாது. இருந்தால் கருப்பையை அருட்டி அதிக நோக்காட்டைக்கிளப்பும். எவ்வகையான பிரசவகிருத்தியத்தையுஞ் செய்யமுன், மலசலசுத்திசெய்துகொள்ள வேண்டியது. சலம் மறிபட்டதோ அல்லவோவென்று ஐயமிருந்தால் சிராவணிவிட்டுச் சுத்திசெய்யவும்.

Digitized by Google

அனுகூலத்தாழ்ச்சியான சில பிரசவங்களிலே, நமது வைத்தியத்தினால் நோக்காடுகளைத் தடுத்துக்கொள்ள எலாமற்போம். நாம் போய் ஸ்திரியைக் காணுமுன், சிசு கூபகத்திலே கொளுவி இறுகும், அல்லது கூபகம் நெளிவு கொண்டிருக்கும். இப்படியிருந்தால், சிசு திரும்புதற்கு விக்கினமுண்டாகும். அவ்வேளைகளிலே சிசுவுடல் மடிந்து வலியப் பிறக்குமோ என்றதைக் காத்திருக்கவேண்டும், அல்லது சிசுவின் நெஞ்சைத் தொளைத்துக் குடல் முதலியவைகளை எடுத்துப் பெறுவிக்கவேண்டும். உடல் மடிந்து பிறக்கவிடில், ஸ்திரியின் பெலத்தையும், உதயக்கோலமிருக்குஞ் சாடையிலே பிரசவம் முற்றுமோ அல்லவோ என்பதையும் முதலே தேர்ந்துகொள்ளவேண்டும். தோளானது மேகனத்தை அணைந்து முற்பக்கமாய்வெளிக்கிட்டுப், பாரிசம்படிப்படியே அதிகமதிகம்இறங்குவதைக் கண்டால், உடல் மடிந்து பிறக்குமென்று நம்பலாம். இப்படிவலியப்பிறப்பது எலாதிருக்கும்போலேயாகில் குடலை எடுத்துப்போடுவதினாலே, சிசுவுடல் லகுவாய் விரைவிலே மடிவதற்கு இடமுண்டாகும். மேலும்உடலையே முதல் இழுத்துப்போடுவதற்கு அனுசாராக உடலைவிட்டுச் சிரசைப் பிரிப்பது உத்தமமென்று சிலர் சொன்னாலும், முன் காட்டிய கிருத்தியமே அதிக சேமமுங் காரியத்துக்கு உபயோகமுமாயிருக்கிறது.

கர்ப்பிணியாய் எட்டாம்மாசஞ் செல்லமுன் திருப்பிவிடவேண்டி வராது; ஏழாம் மாசத்துக்கு முன் அப்படிச் செய்வதும் அடாது. சிசுவின் பருமை மிகச் சிறிதாயிருப்பதினால், உடல் மடிவு ஏழாம் மாச வரையிலே வலிய உண்டுபடுவதுமுண்டு. ஆறும் மாசமளவிலே இப்படி ஒரு பிள்ளை உயிருடன் பிறந்ததும் நான் அறிவேன்.*

* வெல்லெசிலிசாலையிலே, கஅகசம், கஅசசம் ஆண்டுகளிலே உத்தானவுதயப்பிரசவங்கள்நாலு சம்பவித்தன. இத்தொகை உகo. பிரசவங்களுக்கு ஒன்று. இப்பிரசவங்களிலேபெருவாய் பிள்ளைகள் பிராணசேதமாய்ப் போயின.

Digitized by Google

# கரு. அதிகாரம்.

## விபரீதபிரசவம்.

நன்ருெடொன்று சம்பந்தமுஞ் சமானமும் இல்லாதவைகளும், முதன் மூன்றுவகுப்புகளுள் அமையாதவைகளுமாகிய பிரசவங்களெல்லாம் விபரீதபிரசவம் என்னும் வகுப்பில்அடங்கும். இவ்வகுப்பில் ஐந்துவர்க்கம் உண்டு.

கவது. இரத்தப்பெருக்கு அல்லது பெரும்பாடு. உவது. வலி. ௩வது. பலபிள்ளை. சவது. நாபிக்கொடிமுன்னிறங்குதல். ருவது. கருப்பை அல்லது யோனிகிழிதல்.

### கம். வர்க்கம், இரத்தப்பெருக்கு.

கருத்தரித்தநாள்முதற் பிரசவம் முற்றுப்பெறுங்காலம்வரைக்கும் பற்பலகாரணங்களாலும் பெரும்பாடு உண்டுபட இடமுண்டு. இரத்தப்பெருக்கை நாலு விகற்பங்களாய் வகுத்துச் சிந்திப்போம்.

க. கருத்தரித்தநாள்முதல் ஆறும் மாசமுடிவுவரைக்கும் உண்டுபடும் இரத்தப்பெருக்கு. இது வெகுவாய்க்கருவழிதலுடன் நடக்கும்.

உ. ஏழாம்மாசந் தொடுத்துப் பிள்ளைபிறக்கும்வரைக்கும் உண்டுபடும் இரத்தப்பெருக்கு.

௩. பிள்ளைபிறந்தபின் அீணயம்வெளிப்படமுன், உண்டுபடும் இரத்தப்பெருக்கு.

ச. அீணயம் விழுந்தபின் உண்டுபடும் இரத்தப்பெருக்கு.

இவ்விகற்பங்களைச் சிந்திக்கமுன் கருப்பை இரத்தப்பெருக்குக்கு வைத்தியஞ்செய்வதிலே நாம் கொள்ளவேண்டிய பிரதானநோக்கங்கள் இன்னின்னவென்று துலக்கமாய் வகுத்து மனசில் அமைத்துக்கொள்வது நலம்.

முதலாவது. இரத்தப்பெருக்கின் எவ்விகற்பத்துக்கும் பொதுலட்சணமாய் அமையக்கூடிய கெதிகொண்ட நாடித்துடிப்பைச் சாக்கியாக்கவேண்டும் என்பதை நன்ருய் நினைந்துகொள்ளவேண்டியது.

இரண்டாவது. இரத்தப்பெருக்கைத் தடுக்கும் விசேஷகாரணமாகிய, கருப்பைப்பேசிஇழைகள்சுருங்குவதையும்


Digitized by Google

இதுபற்றி அவ்விழைகளுக்கிடையே செல்லும் இரத்தக்குழல்கள் நெருங்கி ஒடுங்குவதையும், பார்த்துக்கொள்ளவேண்டியது. இரத்தப்பெருக்குக்கு வைத்தியஞ்செய்யும்போது இந்த இரண்டுலட்சணங்களையுமே அவதானித்துக்கொள்வது அவசியம்.

முதலாம் விகற்பம். ஆறுமாசஞ்செல்லமுன் கருப்பையின் உள்ளுடன் கழன்றுவிழுந்தால், இதைக்கருவழிவு என்பார்கள். ஆறும் மாசத்தின்பின் சரிமாசமாகமுன் அப்படிக் கழன்றுபோனால் அபூரணபிரசவமென்பார்கள். கருவழிவு உண்டுபட்டால், இரத்தம் இறைக்கும். இரத்தம் இறைப்பதே முக்கியமான அவக்குணமாயிருப்பதினால் இது இரத்தப்பெருக்கென்ற வர்க்கத்துள் அடங்கும். இது எக்குலத்திலுள்ள ஸ்திரிகளுக்குள்ளும் சிற்சிலவேளை சம்பவிக்கும்.

கருவழிவுக்குப் பற்பலகாரணங்கள் உண்டு. இரத்தக்கனப்பு, கருப்பை முதலியவைகளில் உண்டாகும் இரத்தச்சுரப்பு, சனனஉறுப்புகளின் பெலவீனம், உடம்புப்பெலவீனம், கருப்பையில்வியாதி, கருவில்நோய், கருமரணம், ஸ்திரிதேகத்திலே சற்றே உபதஞ்சம்என்னும் கிரந்திச்சாடை; இவைகளிற் சில, பல, அடியீட்டுக்காரணங்களாகும். சில ஸ்திரிகளிலே கருத்தரித்தபின் ஒருபருவம் வந்தவுடனே கருவழிவது வழக்கமாய்க்கொள்வதுண்டு. இதை விளக்குவதற்குச் சம்பிரதாயமாய்ச் சொல்லும் நியாயம் என்னவெனில், கருப்பையானது முற்றாபிதம்பற்றிச் சிறிதிடங்களில் அயலான உறுப்புகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆகையால் அது ஒருமட்டுக்கன்றி அதனமாய் விரிந்துகொள்ள ஏலாது, அப்பருவத்திலே கருவழிவுண்டாம் என்பதே.

கருவழிவுக்குக் கிளர்ச்சிக்காரணம். தேகத்திலே அல்லது மனதிலே சடுதியாய்த் திடுக்காட்டை அல்லது கலக்கத்தை விளைவிப்பனவாகிய அடி காயம் முதலிய இடையூறுகள், வாடிக்கைக்கு மிஞ்சிய சரீர அப்பியாசம், கருப்பை இடம்மாறல் கடுஞ்சினம் முதலிய மனவிகாரமும், கடினமான இருமல், வலிங்கரமான விரேசனம், அபின் இதரங்கொடுப்பதுமுதலியவைகளே. வாயவிய இதரந்தின்ற கர்ப்பிணிகள் கருவழியாமற் போவதரிது. உபதஞ்சம் என்ற வியாதி கர்ப்பிணியில் காணும்போது வாயவிய மரு

Digitized by Google

ந்துகொடுப்பதேயன்றி மற்றும்படி ஒருபோதுங் கொடுக்கப்படாது. அபின் அதிக அளவாக அல்லது நாட்படக் கொடுப்பது சிசு நாசமடைவதற்குக் காரணமாகும். ஆகையால் இம் மருந்தைக் கொடுப்பதில் அவதானம்வேண்டும்.

ஒரு ஸ்திரியிலே கருவழிவதாயிருக்கில் சிறிதுநாளுக்கு முன் இடுப்பிலுங் கருப்பைச் சூழலிலுங் கனப்பும் பெலவீனமுந் தோன்றிக், கீழ்வயிறு முதுகு தொடைகள்வழியே தெண்டல் நோ பரந்து,சிலவேளை சலம்முடுக்கல் தோன்றும். உண்டுபட்டிருந்த காலை வாந்தியானது திடீரென நின்றுவிட்டால், கருவழிவுக்கு அது ஓர் நிச்சய முற்குறியாம். இக்குணங்களுடனே அல்லது இவைகளுக்கடுத்தாற்போலே, யோனியாலே உதிரக்கழிவும் உண்டாம். இது உறைந்துவிடுவதால் உதிரமேயென்றும் நீட்டுநீரல்லவென்றும் விளங்கும். உதிரப்பெருக்கானது பெரும்பாலும் சடுதியாயும், ஸ்திரியிலே மிகுந்த பெலவீனம் உண்டாகத்தக்க அளவாயும் இருக்கும். சற்றதிகப்பாடாய்ப் பெருகினுற் கருவழிவைத் தடுப்பது அரிது. கருவழியத்தக்கதாய் கருப்பையிலிருந்து அது பிரியாமலிருக்க இரத்தம் அதிகமாய்ப் பெருகுவதேயில்லை. ஆதலால் புத்தியாய் வைத்தியஞ் செய்யும்போது சிலவேளைகளிற் கருவழிவைத் தடுக்கக்கூடியதாயிருந்தும், காரியம் வெகுவாய் அசாத்தியமாயே இருக்கும்.

சிலரிலே சொற்ப வருத்தத்துடனே சுறுக்கெனக் கருவிழுந்துபோவதும் உண்டு. சிலரிலோ கரு முற்றும் விழுமட்டும் இரத்தமும் ஓயாமல் இறைத்துக்கொண்டு சிலநாளாய் நிற்பதும் உண்டு. இப்படி நாட்பட்டநிற்குஞ் சமையங்களிற் கரு முற்றும் விழுந்துவிட்டதோ என்பதை நாம் அறியவேண்டியது மெத்த அவசரம். ஆகையால் விழுகிற கட்டிகளைப் பத்திரம்பண்ணிவைத்து அவதானமாய்ப் பரிசோதிக்கவும். அக்கட்டிகளைத் தண்ணீருளிட்டுச் சற்றே கருத்தாய்ப் பிட்டுப்பார்க்கில் கருவானது தெளிந்த நீரிலே மிதப்பதாகிய சிசுவை உள்ளுடனுகக்கொண்டு ஓர் சவ்வுப்பைபோல ஒளியாய்த் தோன்றும். மிக இளமையான கருக்களிலே சிசுவானது நுங்குச்சாடையாயிருப்பதால் பன்னீரிலே லகுவாய்க் கரைந்து கண்ணுக்குந் தோன்றுமற் போகக்கூடும். கருவின் உறுப்புக்களுள் ஒன்றுகிய பலாயிதம் அல்லது சிசு, சிலவேளை தனியவிழு

Digitized by Google

வதும் உண்டு. உறைந்த இரத்தத்தின் பேசிசம் சிற்சில வேளை பலாயிதச் சவ்வுபோலே தோன்றுமாதலால் பலாயிதம் இதுவென்று தெளிவதிலே பிழைபட்டுப் போகவும் வரும். கர்ப்பிணியான அன்னியநாட்களிலே கருவழிந்தால் சிசு மிகச் சிறிதாயிருப்பதினால், அதைத் தெளிவாய்க்கண்டுகொள்வது ஏலாமற்போம்.*

கருவழிவுக்கு வைத்தியஞ் செய்யும்போது நாம் கொள்ளவேண்டிய நோக்கங்கள் மூன்று.

கம். நோக்கம். கருவழியப்போகிறதென்ற அவக்கோலங் கண்டால் அக்கருவழிவை விலக்குவது. சிலரிலே கருவழிவுண்டாகாமல், விலக்கும்படி ஏற்ற தருணத்திலே நாம் சகாயஞ் செய்யத்தக்கதாய் முன் சொல்லிய ஆரம்ப குணங்கள் துலக்கமாக நெடுகிநிற்கும். இவ்வகையான கருமங்களிலே ஸ்திரியின் நிலைவரத்தையும், அந்நேரந் தோற்றுஞ் சர்வாங்க குணங்களையுங் கண்டு, இவைகளுக்கு இசையவே கருவழிவைத் தடுக்கும் வைத்தியங்கள் செய்ய வேண்டியது. சிலரிலோ இரத்தப் பெருக்கும், கரு விழுதலும், இடுப்புநோ முதலியவைகளும் ஒருமிக்க உண்டுபடும். பெரும்பாலும் சற்றே சுரக்கிளர்ச்சியும் உண்டாம். இது அதிகரித்து நாடித் துடிப்பு விரைவுகொண்டு வருத்தமுங் கடினப்பட்டால், இளம் பராயமான இரத்தக்கனப்புள்ள ஸ்திரிகளுக்கு இரத்தம் வாங்குவதினாலே, சிலவேளை அதிக நயங்காணும். இக்குணங்கள் கண்டாற்றான் இரத்தம்வாங்குவது புத்தி. குணங்களுக்குத் தக்கதாய் அளவுபடுத்தி இரத்தம் வாங்கவேண்டியது. இரத்தக் கனப்புடனே மலக்கட்டும் ஓங்காளமுமுண்டுபட்டு நாவிலே ஆடையும் பூத்திருக்கும். சிலரிலே தலையிடியுங் கூதிர் குலைப்பனும் உண்டாகும். இக்குணங்கள் கண்டாற் பேதியுப்பு முதலிய குளிர்த்தியான லவணவிரேசனங் கொடுப்பது அவசியம். தண்ணீர் அபானவழியாய் நன்றாய்ப் புகட்டினால் மலசுத்தியாய் அடிவயிற்றிற்குக் குளிர்மையும் நோக்காட்டுக்குச் சாந்தியுமாம்.

* முன்செய்த ஒரு அடாதகாரியத்தை மறைக்கவாவது பணலாபத்துக்காகவாவது சிலர் அறியாமையுள்ளவர்களாய் அல்லது கொடியவர்களாய்ச் சிசுவின் சீவனை வதைக்கக் கூசுகிறார்களில்லை. வளர்ந்தவர்களுடைய சீவன் எவ்வளவு அருமையோ சிசுவின் சீவனும் அவ்வளவு அருமையாகவேயிருக்கிறது. எவ்வளவு சிறிதானாலும், சிசுவானது மனுஷகுலத்திற் சேர்ந்தது, ஆதலால் அதைக் கொன்றாலும் வளர்ந்தவனைக் கொன்றாலும் குற்றம் ஒரேசரியாயிருக்கும். சிசு வதைசெய்வோரைத் தேவசாபம் காத்துநிற்கின்றது என்று நிரேசியென்னும் பண்டிதர் வெகு உறுதியாகச் சொல்லுகிறார்.

Digitized by Google

இரத்தக்கனப்புக்குரிய குணங்களின்றி, நோக்காடுகளி னிமித்தமே ஸ்திரி மிக வருந்துவதாகிய கருவழிவு நேரிடு ம் சில கருமங்களில் மலம் நன்றாய் வலியக் கழலுமேயா கில், அல்லது மெல்லிய விரேசனங் கொடுத்து மலசுத்தி செய்தபின்பு, அபின்கொடுத்தால் அதிக நயங்காணும். ஒருமுறையிலே முப்பதுசொட்டு லாடனமேனும் ஒருஅ பின்குளிகையேனுங் கொடுக்கலாம். அல்லது அரை அவு ன்சு கர்ப்பூரநீரத்திற் கலந்து ஐந்தாறுதுள்ளி லாடனம் இர ண்டுமூன்று நாழிகைக்கொருமுறை கொடுக்கலாம். மூ ன்று ஐந்து கிறேன் அபின்சேர்ந்த இரண்டொரு அவுன்சு தண்ணீர் அபானவழியாய்ப் புகட்டுவது இதிலும் உத்தம ம். இரத்தம் வாங்குவதிலும் பார்க்க இப்பிரயோகமே பெ ரும்பாலும் செய்யவேண்டிவரும். கருமம் என்ன வாயிருந் தபோதிலும் நாடித்துடிப்பைச் சாந்திசெய்து குளிர்மையா னகூடத்திலே ஆறுதலாய்ப் படுத்துக்கொண்டு குளிர்த்தி யான குடிப்பனவுகள் பருகவேண்டியது. மேலும், இர த்தம் வலிய வடிந்து மேலிலே சூடுங்கண்டால், தண்ணீரி லே அல்லது காடிகலந்த நீரிலே சீலைதோய்த்துப் பிளிந்து அச்சீலையை அல்குலிற் போடவும். கருவழிவை விலக குவதற்கான தாயம் வாய்த்ததேயாகில், நாம் மேலே சொ ல்லிய பக்குவங்களையெல்லாம் சாக்கிரதையாய்ச் செய்ய வேண்டியது.

நாம் ஏற்படும் ஒரு கருமத்திலே கருவழிவை விலக்கிக் கொள்ளக்கூடியதாயிருக்கிறதோவென்பதைத் தீர்மானிப் பது பிரயாசம். இதற்கு உபயோகமான குறிப்புகளாவன; கரு அழியப்போகிறதேயாகில், நோக்காடுகள் அதிகங் க டினப்பட்டு வரவர இடையாற்றிநேரங் குறைந்து கருக் கீழிறங்குங் கோலங்கொள்ளும். அப்பொழுது அசண் டையாய் விடாமல் யோனிவழியாகப் பரிசோதிக்கவே ண்டியது. அப்படிப் பரிசோதிக்கும்பொழுது கருப்பை க்கழுந்து மென்மைகொண்டு கருப்பைவாய் விரிந்து நோ க்காட்டுவேளையிலே சவ்வாகிய பன்னீர்க்குடம் துன்னிப் பிதுங்கும். இதுவே வழுவாத அறிகுறியாம். வசாவென் றநீர் யோனியாலே நன்றாய்ப் பாய்ந்தபோதிலும் பன்னீர் க்குடம் வெடியாமல் இருப்பதுண்டுதான். பன்னீர்பாய்ந் தாலோ கருவழிவை விலக்குவது முற்றாய்ஏலாது.. சிசுச் செத்துவிட்டதென்பதைக் காட்டுங் குணங்களுந் தோன்

Digitized by Google

றினல், அல்லது ஏதேனொரு அடியீட்டுக் காரணத்தினல் விசேஷமாய்க் கருவழியும் வாடிக்கை பற்றிக் கருவழிவுக்கானகுணங்கள் தோன்றினல் கருவழிவைத் தடுத்துக் கொள்ளுந் தாயங் குறைந்துபோம். ஆனாலும் இவை யாதேனொருகாயம் இடையூறுபற்றித் திடீரெனத்தோன்றி, முன்னே ஸ்திரீயிலே கருவழிவு ஒருபோதும் உண்டுபடாதிருக்கில், நோக்காடுகள் ஒழுங்காய்வந்து கருப்பைவாய் விரிந்து சவ்வு துன்னிப் பிதுங்கினபோதிலும், சிசுவைப்பற்றிச் சஞ்சலங்கொள்ள வேண்டியதில்லை.

உம். நோக்கம், கருவழிவில் நேரிடும் அபாயங்களுக்கு ஸ்திரீயைத் தப்புவிப்பது. இதற்கு அமைதி நெடுஞ்சாணைக்கிடை, குளிர்த்தியான விரேசனம் முதலிய பக்குவங்கள் அவசரம். இவைகளைப்பற்றி முதலாம் நோக்கத்திற் சொல்லிய பொது விதிகளே இங்கும் அமையும். இந்த இரண்டாம் நோக்கத்துக்குச் சார்பாய் சில மருத்துவர் ஏர்கற்றைக்கொடுப்பார்கள். ஆனாலும் இதினல் யாதொரு நயம் விளைந்ததாக நான் கண்டதில்லை.

நாம் முன்னே விதந்துரைத்த உபாயங்களை வழுவாமல் அனுசரித்துவந்தால், காரியம் சித்தியாம். அப்பால் ஒன்றும் வேண்டியதாய் வராது. ஆனாலும் இரத்தப்பெருக்கு அதிகமாகி அல்குலிலும் மேகனத்திலும் போட்ட தண்ணீர்ச்சீலையிலே தடுபடாமற்போனல் அடைப்பம்வைக்கவேண்டியது. கருப்பை அறை இரத்தப்பெருக்கைக் கொள்ளத்தக்க அளவு பெரிதாகாமல் இருக்கும் முன்மாசங்களிலே கருவழிவுண்டுபட்டால், அடைப்பம்வைப்பது உத்தமம்.

அடைப்பம் வைக்கும் முறை. மெல்லிய புடைவைத் துணிகளை எடுத்து எண்ணெய்யிற்தோய்த்துத் துணிதுணியாக முதற்துண்டைக் கருப்பைவாயிற் படச்செருகி, மற்றதை இதனேடிறுகத் திணித்து, இப்படி ஒவ்வொன்ருய் யோனியுட்செருகி நிறைத்து அடைக்கவும். இதனற் சற்றேஅருட்சியுண்டுபட்டுக் கருப்பைநோக்காடுங்கிளம்பும். அடைப்பதினல் வரும் நயங்களுள் இதுவும் ஒன்று. இவ்வடைப்பம் யோனியுள் ஒருநாள் வரையில் இருக்கலாம். இதினல் இரத்தக்கட்டிகள் அழுகி மோசம் உண்டாக்குவதில்லை. உதிரப்பெருக்கு மறிபடாமலிருக்கவே அடைப்பத்தை எடுத்துப்போடவேண்டிவந்தால் புதுஅடைப்ப

Digitized by Google

ம்வைக்கவும். அடைப்பம் சலவாகியிலே உறுத்தி அதின் வழியாய்ச் சலம்போகாமல் மறித்துப்போடாதபடி, அதை அவதானமாய்ப் பிரயோகிக்கவும்.

சிலவேளைசராயுகம் அல்லது அணையம் மாத்திரம் கருப்பையுள் இருக்க, சிசுவிழுவதுமுண்டு. இப்படிச்சராயுகம் அல்லது அணையம் விழாமல் இருப்பதினால், கருப்பை சுருங்கிக்கொள்ளமாட்டாமல் இருக்க அதின் இரத்தக்குழல்கள் வாய்திறந்தபடியே இருந்ததினாற், கடினமான உதிரப்பெருக்குகள் கருவழிந்தசமயங்களிலே உண்டுபட்டதை நான்கண்டிருக்கிறேன். இக்கருமங்களுக்கு ஸ்திரியிலே பெலவீனம்தோன்றமுன்னும், விரல்களால் எனும், அணையக்கொளுவியினாலேனும், இழுத்தெடுக்கும்படி பலதரம் மாச்சற்படமுன்னும் எர்கற்றுக்கொடுக்கவேண்டியது. சுணக்கமில்லாமல் ஏற்றதருணத்திலே அதைக்கொடுத்தால், மருத்துவரின் அபேட்சைக்கு மெத்தமாறாய்முடியாது. இரத்தக்குறைவினாலே தேகந்தேம்பி யாதொரு மருந்து செயங்கொள்ளத்தக்கதாய் சீவசேட்டைகாட்ட ஏலாமற்போகுமளவுக்கும் எர்கற்றைக் கொடாமல் விடுவதுதான் அது சிலகருமங்களிலே வாயாமற்போவதற்கு நியாயம்.

கருத்தரித்து ஆறுமாசஞ்செல்லமுன், கருப்பையுட் கைவிடப்படாதென்பது வழுவாத ஒருவிதியாயிருந்துஞ், சிலவேளை இரண்டொருவிரலை விட்டுப்பார்த்தால், கருப்பைவாயிற் செருகிக்கொண்டு இடக்காய் இருந்த பதார்த்தம் விரலுக்குத் தட்டும். அந்தவிரலாற்கொழுவி இழுத்தவுடனே இரத்தப்பெருக்குப் பெரும்பாலும் ஒளிந்துபோம். அல்லது கருப்பையுள் விரல்களை இட்டளைந்து விலங்கப்படுத்தாதபடி அணையக்கொளுவியென்னுங் கருவியை அதிகசாதுரியமாய்ப் பிரயோகித்து அணையசராயுகங்களை லகுவாய் எடுக்கலாம். இக்கருவி ஒருதலைப்புவளைந்து, மழுங்கலான நுனியுள்ள சிறுக்கொளுவிபோலிருக்கும் ஒருபெலப்பான கம்பித்துண்டு. சிலரிலே இரத்தம் வடிந்துபோகாதிருந்தும், கருப்பைவாயிலே அணையம்வந்து செருகிக்கிடப்பதினால் அவலமான வாந்தியும், ஓங்காளமும் உண்டுபடுவதுண்டு. அந்த இடக்கினை எடுத்துவிட்டால், உடனேயே நல்ல சகாயங்காணும்.

கருத்தரித்துச் சற்றுப் பின்னிட்டபருவத்திலே கருவழிவுண்டுபட்டால், அணையத்தைக்கழற்றி எடுக்கும்படி நா

Digitized by Google

ம் என்ன உபாயஞ் செய்தபோதிலும், அது சிறிதுகாளாய்க்கழலாமல் ஒட்டிக்கொண்டிருந்து, சிலவேளை அழுகலும் நாற்றமுமான பதார்த்தத்தைக் கழிவித்து, கருப்பையைஅழற்றி சுரத்தையும் பிராணசேதத்தையும் வருவிப்பதுமுண்டு. இப்படி ஒட்டிமறிந்திருக்கும் அளையத்தைக்கழற்றுவதற்கு சற்றேசுள்ளாப்பான விரேசனங்கொடுக்கலாம், அல்லது பேதிக்கும்படி அபானவழியாய் மருந்துபுகட்டலாம். யோனியால் கழிகிறபதார்த்தம் நாற்றமாயிருந்தால், தண்ணீர்புகட்டி, அல்குல் யோனிமுதலியவைகளை நன்றாய்க் கழுவிப் புனிதஞ்செய்துகொள்ளவேண்டியது.

கருவழியும்போது ஸ்திரிகளிலிருந்து வடியும் இரத்தம் மிகுதி. இதினுற் தேகமானது சிலவேளை அதிகந் தேம்பிப்போவதாயிருந்தும், ஐந்தாம் மாசஞ்செல்லமுன், இதினிமித்தமாய்ச் சாவருவது அரிது.

கூம். நோக்கம், முன் பலதரமுங் கருவழிந்துபோன ஸ்திரிகளிலே இனி அப்படிச் சம்பவியாமல் விலக்குவது. கருமத்துக்குத்தக்கதாய் இதற்குவைத்தியம்மிகவித்தியாசப்படும். கூடுமேயாகில் முந்தினதருணங்களிலே கருவழிவுகளைவிளைவித்த காரணங்கள் இன்னின்னவெனத் தெளிந்து, ஏற்ற உபாயங்களால் அவற்றை விலக்கவேண்டியது. ஸ்திரியை நல்ல சுவாத்தியமுள்ளவளாக்குவதே செய்யவேண்டிய பிரதான செய்கை. இரத்தக் கனப்புள்ள ஸ்திரிகளுக்கு வேண்டிய பக்குவம், விரேசனமும், தேகமுயற்சியும், மெல்லிய உண்டி முதலியவுமாம். பெலவீனமுள்ள ஸ்திரிகளுக்கு, பெலன்கொடுக்கும் மருந்துகள், குளிர்தோயம், போஷண உண்டி, நற்காற்று, மனோசஞ்சலவிகாரவிலக்கு முதலியன. சில ஸ்திரிகளிலே கருத்தரித்து ஒரு பக்குவம் வந்தவுடனே கருவழிந்துபோவது வழக்கம். அப்பருவத்துக்குச் சிறிதுநாள் முன்னும் பின்னும் பூரண ஆற்றியாக ஸ்திரி நெடுஞ்சாளையே படுத்துக்கொண்டால், சிலவேளை கருவழியாமல் தப்பிக்கொள்ளவுங்கூடும்; ஆகிலும், கருவழிவதிலும் பார்க்க, இப்படிக்கட்டுப்பாடாய்ப் படுத்துக்கொள்வதினுலே ஸ்திரியின் தேகசுவாத்தியத்துக்கு உண்டாகுஞ் சேதம் அதிக கேடாயும்வரக்கூடும். ஆனபடியால் இப்பக்குவத்திலே புத்தியும் அவதானமும் வேண்டியது.

Digitized by Google

தந்தையில் அல்லது தாயிலே உபதஞ்சமாகிய கிரந்திக்க ள்ளமிருப்பதே பலதரமுங் கருவழிதற்கு வாடிக்கையான ஓர்காரணம். இக்காரணந்தெளிந்தால், வைத்தியஞ் செய்ய வேண்டிய முறையுந் துலக்கமாம். ஆனுலும் உபதஞ்சக் கள்ளம் மிகுதியாய்த் தோன்றுமல் இருக்கும். சுவாத்திய முள்ளவர்களாய் விளங்கும் புருஷனும் ஸ்திரியும் விவாக ஞ் செய்த பின், ஸ்திரி கருவழிவாள், அல்லது குறைமாச ங்களிலே மூன்று நாலு சாபிள்ளைப் பெறுவாள். இதை விலக்கச் சகல வைத்தியமுஞ் செய்த பின் உயிர்ப்பிள்ளை ஒன்று பிறக்கும். பிறந்து சிலநாளின் பின் அந்தப் பிள் ளையிலே உபதஞ்சக்குறிகள் தெளிவுறத்தோன்றும், ஆகவே ஸ்திரி புருஷரின் காரியமுந் தெளிந்தாயிற்று. இதற்குமு ன் உபதஞ்சமாகிய பிரமேகக் குணங்களுள் ஒன்றுகுதல் ஸ்திரியிலே கண்டிராது. விவாகஞ்செய்யச் சில வருஷத் துக்குமுன்தொடுத்துப்புருஷனிலும் அப்படிஒன்றும் கண் டதில்லை. சிலரிலோ கருவழிவுகளுஞ்சாபிள்ளைகளும்உப தஞ்சமுள்ள உயிர்ப்பிள்ளைகளும் கெடுகவரும். தந்தையி ல் அல்லது தாயில் ஆருக்கு அவ்வியாதி உண்டெனத் தெ ளிந்து, அந்த ஆளுக்கு இதரம் பக்குவமாகக் கொடுப்பதே கருவழிதலை நீக்கும் முறை.

இவ்வகையான கருமங்களுக்கு வைத்தியஞ் செய்வதி லே மருத்துவர் அதியூகியாயிருந்து, ஸ்திரி புருஷர்களுக் குள்ளே சண்டை சள்ளுக்களை உண்டாக்காதபடி விலக்கி க்கொள்ளவும். வியாதி எப்படியுண்டானதென்று கிரகிப் பது மிகு தொல்லையும் வெட்கமுமாயிருக்கும். மகா சாது ரியமாய்ச் சமாளித்தறிந்துகொள்ளவும்.

இரண்டாம் விகற்பம். ஏழாம்மாசந்தொடங்கிப் பிரசவ ம்வரைக்கும் நிகளும் உதிரப்பெருக்கு. இது கருப்பையை விட்டு, அிணையத்தின்ஒருபங்குகழன்றுபோவதினுல், உண் டுபட்டு, பிரிந்து கழன்ற இடவிசாலத்துக்குத் தக்கதாய், இதின் அளவும் விகற்பித்திருக்கும். இவ்விரண்டாம் விக ற்பத்திலே இரண்டுவிதம் உண்டு.

க ம். விதம். இடையூறுன உதிரப்பெருக்கு. இது அிணை யத்தைக் கருப்பையின் உட்பக்கத்துடன் இயல்பிலேதொ டுத்திருப்பனவாகிய இரத்தக் குழல்கள் இடையூறுய்க்கிழி ந்துபோவதினுல் உண்டுபடும். இது விழுதல், அடி, மிகு முயற்சி முதலியவைகளாற் சம்பவிக்கும். சில வேளை

Digitized by Google

இதின் காரணந் தோன்றாமலும் இருக்கும். இவ்வித இரத்தப் பெருக்கிலே அணையம் முற்றும் அல்லது கொஞ்சம்பிரிந்து கழலும். சில கருமங்களிலே, அணையத்தின் நடுப்பகுதி மாத்திரம் பிரிந்து கழன்றுபோக, கருப்பையிலே, பிராண சேதம் உண்டாகத்தக்க அளவு இப்பிரிவு வழியாய் உதிரப் பெருக்கு உண்டாகும். கழலாமல் கருப்பையுடன் ஒன்றியிருக்கும் அணைய விளிம்பாலோ, இரத்தம் வராது; வந்தாலும் சொற்பமாய்ப் பொசியும். இடையூறான இரத்தப்பெருக்கு, கர்ப்பிணியான பின் மாசங்கள் எவற்றிலும் வரும். நோக்காடு கண்டால் கருப்பை இழைகள் சுருங்கும். இதினால் இரத்தக்குழல்கள் நெருங்கி ஒடுங்க, இரத்தப் பெருக்குங் குறைந்துபோவதேயன்றிக் கூடாது.

கருப்பைக்குள்ளே அடைபட்டதாய் இரத்தம் பெருகுகிறதில்லையென்று நாம் நிச்சயம்பண்ணுவது ஏலாதபடியால், ஸ்திரியின் தேகத்திலே விளங்கிய கோலத்தைக் கண்டே அபாயம் நேரிடுமோவென்று அறுதிபண்ண வேண்டியது. பின் மாசங்களில் கருப்பையிலுள்ள இரத்தக்குழல்கள் மெத்தப்பருத்திருப்பதினாலே அவைகளின்வாயால் இரத்தம் பறிவது சடிதியாதலால் அது கொஞ்ச அளவாக மாத்திரம் பறிந்தாலும் முன்மாசங்களிற்பார்க்க பின் மாசங்களிலே ஸ்திரியில் அதிகங் கேட்கும்.

இரத்தப்பெருக்குச் சொற்பமாயிருந்தால் நாடித்துடிப்பைச் சாந்தியாக்குவதற்கு அனுசாரென்று நாம் முன், கசக. ம். பக்கத்திற் சொல்லிய பக்குவங்களுள் இரத்தம்வாங்கலொழிந்த மற்றவைகளையெல்லாம் முகனையிலே செய்யலாம். அவை வாயாதுபோனால், அல்லது முதலிலேயே இரத்தப்பெருக்கு அதிகப்பட்டிருந்தால் கருப்பைவாயின் சீரையும் உதயத்தையுந் தெளியும்படி பரிசோதனை செய்ய வேண்டியது. உதிரப்பெருக்கிருந்து நடைகொண்டாலன்றி மற்றும்படி பரிசோதனைசெய்கில் உறைந்த இரத்தக் கட்டிகள் பிண்டு இரத்தப்பெருக்கு உண்டாமானபடியாலும், கருப்பை கூபகத்துக்குள் இன்னும் இறங்காதிருப்பதாகிய ஏழாம் எட்டாம் மாசத்திலே நாம் அறியவேண்டிய செய்தியை விரற்பரிசோதனையினால் அறிந்துகொள்வது ஏலாதானபடியாலும், இரத்தப்பெருக்கானது அதிகமாய் நடைகொள்ளாதவேளையிலே பரிசோதனைசெய்யும்

Digitized by Google

படி முன்னிடுவதுபுத்தியல்ல. இப்படி வைத்தியம்பண்ணினபின்னும் இரத்தப்பெருக்கு நெடுகிநின்றால், கருப்பை இழைகளைச்சுருக்கி, இதினால் இரத்தக்குழல்களை நெருக்கியொடுக்குவதற்கு அனுசாரானவைத்தியஞ் செய்யவும். சிரசு அல்லது குண்டி உதயமாகிறதெனத்தெளிந்தால், விரலின்நகத்தால்அல்லது சலாகைக்கருவியினால் பன்னீர்க்குடத்தைப்பிட்டு, பன்னீர் வடியவிடவும். இப்படிச் செய்தபின், வெகுவாய் நோக்காடுகள்கிளம்பி இரத்தப்பெருக்கைத்தடுக்கும். தடாவிட்டால், அல்லது தடுக்கப்பெலம்போதாதிருந்தால், நோக்காடுகளைக் கிளர்த்த அல்லது உரப்படுத்த ஏர்கற்றுக்கஷாயத்திலே இரண்டொருமுறை கொடுத்து அடிவயிற்றிலேமெல்லெனவாக ஊன்றவும்.

முற்காலத்திலே இடையூறான இரத்தப்பெருக்குக் கண்டால், சிசுவைத்திருப்பிக் காலாற் பெறுவிப்பதே பெரும்பாலும் வழங்கிவந்த வைத்தியம். கூடுமேயாகில் கருப்பையுட் கையிட்டலைதலை என்றும் விலக்கிக்கொள்ளவேண்டியது. பன்னீர்க்குடம் உடைந்த பின், கருப்பை முற்றும் மாந்தியமாயிருந்தாலன்றிக் கையளைவுவேண்டியதுமில்லை. உதையங் குறுக்குப்பாடாயிருந்தாலோ, கையளைவுக்கு அதுவே நியாயமாம்.

பிரசவம் நடைகொண்டு செல்லுமேயாகில், பிள்ளைபிறந்தபின் கருப்பையைப் பூரணமாய்ச் சுருங்கப்பண்ணுவதற்கேற்ற எச்சரிக்கையுடன் இருந்து பிரசவம் வலியவே முற்றும்படி விடவேண்டும். பிரசவிக்கமுன் உதரகவளிகை இடுவது உத்தமமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனாலும் கையால்அமர்த்துகிறதிலே அதிக நம்பிக்கைவைக்கலாம். உதரகவளிகையிட்டால் வயிற்றிலே கைவைத்து அமர்த்துவதற்கு அது ஒரு தடக்காகும்.

உம். விதம். விலக்கேலாதஇரத்தப்பெருக்கு. அணையமானதுவாடிக்கைக்குமாறாகக்கருப்பைக்கழுந்திலேகீழேதொடுக்கப்பட்டிருக்கில், கருப்பைக்கழுந்து விரியவேண்டிவரும்போது அணையத்திலுள்ள இரத்தக்குழல்கள் கிழிய, இதினால் இரத்தம் வடியவேண்டியே வருமாதலால், இதற்கு விலக்கேலாத இரத்தப்பெருக்கு என்று பெயர். அணையத்தின் நடு அல்லது அதின் விளிம்பிலொருபங்கு கருப்பை வாயில் ஒட்டி ஒன்றியிருப்பதும் உண்டு. இப்படியாகில் கருப்பைக் கழுந்துவிரியும் பருவமாகிய ஏழாம்

Digitized by Google

எட்டாம் மாசத்திலே இரத்தப்பெருக்கு உண்டுபட்டு, காலத்துக்குக்காலம் வைத்திய உபாயங்களினால் மறிபட்டு, மறுபடியும் வந்து, பிரசவகாலத்துக்கு அண்ணிதாய் அல்லது நெடுநாள் முன்னிதாய்க் கடினமும் மோசமுமான இரத்தப்பெருக்கு உண்டுபடும். இதற்கு உடனேயே வைத்தியசகாயஞ்செய்யவேண்டியது.

இவ்விருவிதமான இரத்தப் பெருக்குகளையும் விகற்பித்தறியும்முறை. விலக்கேலாத இரத்தப் பெருக்கிலே கருப்பைக் கழுந்து விரியும்போது இரத்தக் குழல்கள் அதனமாய்க் கிழிவதினால் நோக்காட்டுவேளையிலே, இரத்தப்பெருக்கு அதிகப்படும். இடையூறான இரத்தப்பெருக்கிலோ வாய்திறந்திருப்பனவாகிய இரத்தக்குழல்களைக் கருப்பை இழைகள் அமர்த்த, இதினால் நோக்காட்டு வேளையிலே இரத்தப்பெருக்குக்குறையும். அணையம் உதயமாகிறது, அல்லது கருப்பைவாய்க்குக்கிட்ட ஏதேனொரு பக்கத்திலேயிருக்கிறது என்று யோனிவழியாய்ப் பரிசோதனை செய்து தெளிந்து கொள்ளவேண்டியது. அணையம் [கூஉம். பக்கத்தில் விளக்கியபடி] விரலுக்குத்தோன்றும். தருணம்வாய்க்கும்போதெல்லாம் மருத்துவமாணாக்கர் அணையத்தைத்தொட்டுத் தடவிப் பரிசித்து நன்றாய்ப் பழகிக்கொள்வார்களேயாகில், கொஞ்சக்காலத்திலே நல்லபரிசனைஅடைவார்கள். எழுத்திலே பேச்சிலே அதை விளக்கிக்கொள்வது முடியாத காரியம்.

அணையம் உதையமாகும் பிரசவத்தில் கூடியளவு விரைவாக ஸ்திரியைப் பெறுவித்து அணையத்தை முற்றாய்க் கழற்றியெடுக்கவேண்டியது. ஆகையால் காரியம் இவ்வகையாயிருக்கிறதென்று கண்டால் நாம் அதைக்காத்திருந்து கருப்பைவாய் விரிந்து அல்லது விரியத்தக்கதாய் நுகைந்து இருக்கும் வேளையிலே, நமது கையைவிட்டுச் சிசுவைத்திருப்பிக் காலாற்பெறுவிக்கலாம். பிரசவப்பருவத்துக்கு நெடுநேரம்முந்தி இரத்தப்பெருக்குத் தொடங்கிவிட்டால், அப்பருவம் வரும் வரைக்கும் ஆத்திரமும் அலுப்புமாய் இருந்தாலுங், கொஞ்ச நேரம் பொறுத்திருக்க வேண்டும். ஸ்திரிக்கு அவதானமாய்க் காவலிருந்து, இரத்தப்பெருக்கைத் தடுக்கும் வைத்தியங்களைச் செய்து, இவைகளுக்கு வாயாமற்போனால் அடைப்பம்வைக்கவேண்டும். அடைப்பமானது இரத்தஇறைப்பைத் தடுத்துக் கருப்பை

Digitized by Google

வாய் விரைவிலே விரியும்படி அருட்டுதற்கேற்ற உபாய மெனக்கண்டேன்.

அடைப்பம்வைத்திருந்தால், கருப்பைக்குள் இரத்தப் பெருக்கிருக்குமென்று சிலர் குற்றஞ்சொல்லுவார்கள்; ஆனாலும், யோனியிலே அடைப்பம் நன்றாய் மேவியிருந்தால், இரத்தப்பெருக்கிருக்கும்போலத்தோன்றவில்லை. ஏனெனில் கருப்பைக்கழுந்தை முற்றும் மேவியிருக்கும் அணையந்தானே உள்வளத்துக்கு நல்ல அடைப்பமாயிருக்கும். ஆகிலும் அடைப்பம் பிரயோகிக்கும்போது ஸ்திரியின் தேகத்திலே இரத்தப்பெருக்கினால் விளையுங் குறிகளை நுட்பமாய்க் கவனிக்க வேண்டியது. உள்ளே யாதொரு இரத்தப்பெருக்குண்டோ என்பதை அலைகளைக்கொண்டு தருணத்திலே அறியலாம். ஸ்திரியிலே பெலவிறுதி காணுதிருந்தால் கருப்பைவாய் சற்றேவிரியும்வரைக்கும்பொறுத்திருக்கலாம். பெலவீனங்கண்டால், கருப்பைவாய் முதலியனவிரியாதிருந்தும், வேண்டியஅளவு நெகிழ்ந்திருக்கின்றனவென அறிந்தவுடனே ஸ்திரி தேம்பிப்போகமுன் சகாயஞ்செய்வது நமதுகடன். இரத்தம் அதிகமாய்ப் பெருகிவிட்டால், யோனிமுதலியன இளகியிருக்கும்போலே. ஆகையால் இப்படிப்பட்ட சமயங்களில் தாமதமின்றி உடனே சகாயஞ்செய்யவேண்டியது.

இப்படிப்பட்ட கருமங்களிலே சகாயஞ்செய்யும் படி கசுO ம். பக்கத்திலே நாம் சொல்லியிருக்கும் முறையாய் அவதானத்தோடே மெல்லெனக் கையைவிட்டுக் கருப்பைவாய் மட்டில் வந்தவுடனே, அணையத்துக்கூடாலே அல்லது அருகாலே கையைக் கருப்பை அறையுள் ஏற்றவும். இப்படிச்செய்கையில் மருத்துவர் பதகளியாமல் அமைதியுந் தைரியமுமாயிருப்பதே தகும். பெரும்பாலும் இரத்தப்பெருக்கு அதிகரித்து அவருடைய கையணைவிலே இரத்தந் தாரைதாரையாகக் கொப்பளிக்கும். ஏங்கிக் கெடிமண்டித் தமதுகையை ஒருநிமிஷத்துக்கு எடுத்துப்போடுவாரேயாகில் ஸ்திரி பிராணசேதமாவாள். ஆனாலுந் துணிந்து உறுதியாகக் கையை ஏற்றி, கைக்குளசு முன்னங்கை இவையில் ஒன்றைக் கருப்பைவாய்க்குள் ஓர் அடைப்பமாய்வைத்துக்கொள்வாரேயாகில் இரத்தப்பெருக்கு உடனேமறிபடும். அதின்பின்பு மனசிலே ஆலோசனைபண்ணிக்கொண்டு சிசுக்கால்களை ஆராய்வாய்த் தடவிப் பிடி



Digitized by Google

த்து யோனியுள் இறக்கிவிடவும். அப்பால் இரத்தப்பெருக்கு அரிது. ஒழிந்த பிரசவச்செய்கையைக் காலாலே பிறக்குங்கருமம் போல முற்றுவிக்கவும். அணையம் பெரும்பாலும் யோனியுட்கழன்றுபோய்க்கிடக்கும். சிலவேளை எனது கையணைவிலே, சிசுக்கால்களோடே அல்குலால் வெளிக்கிட்டுவந்ததையும் நான் கண்டேன். இதற்குப்பின்பு கருப்பையைச் சுருங்கப்பண்ணுவதிலே, அதிக கவனம் வேண்டியது. இக்கிருத்தியவேளையிலே, வேண்டியதென்று கண்டால் பிறண்டியாவது வேறுதீவனமருந்தாவது கொடுத்து ஸ்திரியைத் தேற்றவும்.

அணையத்தின் ஒருஅருகுமாத்திரங் கருப்பைவாயில்ஒட்டியிருக்குமாகில் சிசுத்திருப்புதல் சிலவேளை அவசியமாயிராது.* அந்த அருகுக்கு மேலே சிரசுதயமாகிறதெனத் தெளிந்தால் பன்னீர்க்குடத்தை உடைக்க, சிரசு இதினுல் இறங்கி, இறைக்கும் இரத்தக்குழல்களை அமர்த்த, அப்பால் யாதொரு மோசம்வராது. செய்யவேண்டியது இன்னதென்று தீர்மானிப்பது மிகுதியும் பிரயாசம். கருப்பையுட் கையளையாமல் விட்டுவிட்டால் உத்தமந்தான். ஆனுலும் எதுசெய்வோம் என்று சந்தேகங்கொள்ளும்வேளையிலே சிசுத்திருப்புதல் திறமென்று எனக்குத்தோன்றுகிறது. சிலவேளை அணையம் கழன்று வலுநோக்காட்டு வேளையிலே கருப்பைவாய்க்குட் தள்ளுண்டு இரத்தப்பெருக்கைத் தடுத்து, சிசுபிறக்கமுன் யோனியால் முற்றுங் கழன்றுவிடுவதும் உண்டு. இப்படி அணையம் கழன்று சிசு அதைக்கடந்து வெளிப்படும் வரைக்கும் யோனியின் பிற்பக்கத்திலே கிடந்த ஒருகருமத்தை நான் அறிவேன். ஆகிலும் இவ்வகையாக வருவது அரிது. இவற்றைக்கொண்டு யாதொரு வைத்தியமுறையை நிறுத்தலாகாது.

## ௩ம். விகற்பம், பிள்ளைபிறந்தபின்னும் அணையம்வெளிப்படமுன்னும் நிகழும் இரத்தப்பெருக்கு.

கிரமப்பிரசவத்தில் பிள்ளைபிறந்தபின் வைத்தியஞ்செய்

* ௧௮௩௨. ௧௮௩௩. ஆண்டுகளில், வெல்லெசிலிசாலையிலே அணைய உதயமான பிரசவங்கள் நூற்றறுபத்தேழுக்கு ஒன்று. பிள்ளைகள் பெரும்பாலும் இறந்தேபோயின. இரத்தம் அதிகம் வடிந்துபோனல் பத்தியபாகத்தில் ஸ்திரி மிகுந்தபத்திரமாயிருக்கவேண்டியது. இப்படியானபிரசவத்தின்பின், ஸ்திரியின்கால் அதைத்து வீங்குவதும் உண்டென்று டெரிமன் பண்டிதர் சொல்லுகிருர்.

Digitized by Google

வதைப்பற்றி, ௪௦ ம். அதிகாரத்தின்கடைசியில் நாம்சொல் லியமுறைகளை வழுவாமற்செய்வதே இவ்விகற்பத்தில்வரு ம்இரத்தப்பெருக்கை விலக்குவதற்கேற்ற நிதானமானஉபா யம். கருப்பை பூரணமாயும் நிலைவரமாயுஞ் சுருங்கும்ப டிக்கான பக்குவம் பண்ணிக்கொள்வதே இதிலுள்ள சூட் சம். இது வாய்க்குமேயாகில் இரத்தப்பெருக்கைத் தடுக் க அல்லது அணையத்தைக் கழற்ற வைத்தியஞ்செய்ய வே ண்டி வராது.

இவ்விகற்பத்தில் அடங்கும் பிரசவம் பலபேதமாய்நட க்கும். உதாரணமாக, பிரசவமுடிவிலே நாடித்துடிப்பு வி ரைவுகொள்ளுஞ் சில ஸ்திரிகளிலே, பிள்ளைபிறந்தவுட னே இரத்தப்பெருக்குண்டாய் ஒருமுறையிலே குபீரெ னக்கொப்பளித்து, சடிதியாய் மூர்ச்சனையுண்டாக்கும். சிலரிலே பிள்ளைபிறந்தபின் இரத்தம் மெல்லமெல்ல வடி ந்து, கடைசியாய் மூர்ச்சனையாவது மிகுந்த பெலவீன மாவது உண்டுபடும். வேறுசிலரிலே கருப்பை சிறிதுநே ரம் நன்றாய்ச் சுருங்கிக்கொண்டு நின்றுவிட்டு மறுபடிநெ கிழ்ந்து கடினமாய் இரத்தப்பெருக்கிறைக்கும்.

இக்கருமங்களில்எல்லாம் நாம் முன்னே, கசுடும். பக்க த்திற் சொல்லிய இரண்டிலட்சணங்களையும் முற்றுவிப்ப தே நமது வைத்தியத்தின் நோக்கமாயிருக்கவேண்டியது. கருப்பைச் சுருக்கத்தை எழுப்பும்படி அடி வயிற்றிலே மெல்லப்பிசைந்து ஊன்றலாம். நாடித்துடிப்பைச் சாந் தியாக்கும்படி ஸ்திரி நன்றாய் நெடுஞ்சாணையே தலைக்கு த்தலையணையிடாமல் படுத்துக்கொள்ளப்பண்ணிப் பிரசவ கூடத்திலே சுத்தமானகாற்று உலாவிக் குளிர்மையாக்கு ம்படி செய்யவும். குளிர்மையானது நாடித்துடிப்பைச் சாந்திசெய்து, கருப்பையைச் சுருங்கப்பண்ணுமாதலால், இந்த இருநோக்கத்தையும் முற்றுவிக்கும்படி அல்குலுக் கும் அடிவயிற்றுக்குந் தண்ணீர்ச்சீலை போடவும். நன் றாய்க் குளிர்ந்த தண்ணீரிலே கையைத்தோய்த்துச் சடிதி யாய் ஸ்திரியின் அடிவயிற்றிலே வைக்கில், அல்லது தண்ணீர் அள்ளி எறிகில், கருப்பை சுருங்குவதற்கு அது வாய்ப்பாகும். தண்ணீர்ச்சீலை முதலிய குளிர்மையிலே வாயாதிருந்தால் ஒருகுடந்தண்ணீர் சற்றுயரத்திலேபிடித் து அடிவயிற்றிலே விழுந்து அறைக்கும்படி சிறுதாரையா க ஊற்றினால்மிகுதியாய் நயங்காணும். பீர்ச்சாங்குழலால்

Digitized by Google

கருப்பைக்குள் குளிர்ந்த தண்ணீரைச்செலுத்துகிறது கை கண்ட உபாயம். இவ்வுபாயங்களிலே இரத்தப்பெருக்குத் தடைபடாதிருந்தால் நோக்காட்டைக் கிளப்பும் பொருட்டாகவும், முற்றாய் அல்லது கொஞ்சமாய்க் கழன்றுகிடந்து கருப்பையைப் பூரணமாய்ச் சுருங்காமற் தடுத்து, இரத்தக்குழல்களைத் திறந்தபடியே இருக்கப்பண்ணும் அணையத்தை எடுக்கும்பொருட்டாகவும், ஆற்றாப்பட்சம் கருப்பையுள் நமது கையை விடவேண்டியது. இரத்தப்பெருக்கின் இவ்விகற்பத்துக்கு அப்பால் வைத்தியஞ்செய்யும்முறையை, நாம் இப்பொழுது சொல்லப்போகிற அணையமறி வைத்தியங்களோடே சொல்லுவோம்.

அணையமறி. இது கருப்பை சுருங்காமல்விடுவதினாலும், உடுக்குச்சுருக்கத்தை உண்டாக்குவதான கருப்பையிழைகளின் ஒழுங்கீனமான சுருக்கத்தினாலும், அணையமானது வியாதியினால் கருப்பையின் உட்பித்தியிலே ஒட்டிக்கிடத்தலினாலும் உண்டாகக்கூடியது.

முன்னே நாம் சொல்லிய முறையாய்ப் பிரசவத்தை நடத்தினால் முதல் இருகாரணங்களினால் வில்லங்கங்காண்பதரிது: பிள்ளையைச்சுறுக்குப்பண்ணிப் பெறுவிப்பதினாலே, கருப்பை சுருங்கப்பண்ணும் இயல்பான அருட்சிப்பொருளாகிய சிசுவுடல் கருப்பையைவிட்டு முந்தவே அகன்றுவிடும். ஆதலால் கருப்பை வெறுமையாயும், சுருக்கத்தை இயக்கும் ஏதுவில்லாமலும்இருக்கும். இதினாலும், கருப்பையின் உள்ளுடன்கள் அதினின்று அதிவிரைவாகப் பிதுக்கப்படுகிறதினாலும், கருப்பை சுருங்காமல் நின்றுவிடும். மேலும் பிரசவம் மிகுந்த அலுப்பாயிருக்குமாகில், கருப்பையிழைகள் சுருங்க ஏலாமற் தொய்ந்துபோம். நோக்காடு மறுபடி தொடங்குமுன், கருப்பை சற்றே ஆறவேண்டியதாதலால் சுருங்காமல் நின்றுவிடும்.

நாபிக்கொடியில் இழுத்துச் சராயுகத்தை எடுக்கும்படி புத்தியீனமாய் முயலுவதினால் எண்ணியகருமமும் வாயாமல், கருப்பைக்கழுந்தின் இழைகள் அழன்று, ஒழுங்கீனமான சுருக்கம் உண்டுபட்டு, இதினால் அணையமும் மறிபடும். இவ்வகையான சுருக்கத்திலே, இடையே கருப்பைக்கழுந்து சுருங்கிநிற்க, மேலே கருப்பை சுருங்காமல் ஓர் அறையுமாய்க் கீழேயோனி மற்ற அறையுமாயிருக்கு

Digitized by Google

*உகூ. படம்.



மாதலால் இதற்கு உடுக்குச்சுருக்கம் என்றுபேர். சிலவேளைகருப்பைவாய்விரிந்திருக்க, கருப்பைப் பித்தியின்ஒருபகுதி சுருங்கி அணையத்தைக் கருப்பையின் ஒரு மூலைக்குள்ளே மறித்துக்கொள்ளும். அணையமானது வியாதியினுல் கருப்பையின் உட்பித்தியிலே ஒட்டிக்கொள்ளாதபடி, நம்மால் விலக்கமுடியாது.

பிரசவம் வாடிக்கையாய் நடந்தால், சராயுகம்விழாமல் ஐந்தாறு நாழிகைக்குத் தாமதித்தாலுங் கிலேசமில்லை. ஆனாலும் இரத்தம்பெருகினுல், அல்லது அதனநேரத்துக்குச்சாரயுகம் மறிபட்டுமுன்னேசொல்லிய ஊன்றல் முதலியவைகளிலே எடுபடாவிட்டால், கை விடலாம். ஆனாலும் எர்கற்றுச் சிலவேளைவாய்த்துப்போமானதால், கைவிடுமுன் எர்கற்றுக்கஷாயங்கொடுத்துப்பார்க்கவும். கசக்ம். பக்கத்திற் சொல்லியமுறையாக மருத்துவர் கையை உள்ளே விட்டு, அவர் கை செல்வதற்கு ஒருஅணைவாக உதவியாள் அடிவயிற்றிலே மெல்லெனவாய் அமர்த்த, மற்றக்கையாலே நாபிக்கொடியைப் பேணரவாய் அறுந்துபோகாதபடி சற்றேயிழுத்துக்கொள்ளவும். நாபிக்கொடி அறுந்தால்,கைக்கு அணைவில்லாத வில்லங்கம் உண்டுபடும்.

அனேகபிரசவங்களிலே அணையம் கருப்பையாலே சற்றுகப் பிதுங்குண்டுபோய் அதின் அருகிற் கொஞ்சம் கருப்பைவாயிலே கெட்டியாய்க் கொழுவிக்கொண்டிருக்கும். சிலவேளை முற்றுங் கழன்று கருப்பையின் உள்ளேகிடக்கும். எங்கேயிருந்தபோதிலுங் கை உள்ளுக்கு விட்டதினுல் உண்டுபடும் அருட்சியினுற் கையும் அணையமும் வலுபிதுக்காய்த் தள்ளுண்டுவரும்.

கருப்பை மாந்தியமாகி இரத்தப்பெருக்கிருந்தால், நாம் சற்றே நோக்காடு எழுப்பும் வரைக்கும், கையை வெளியில் இழுக்கப்படாது. சிலவேளை கையாற் கருப்பையின் உட்பக்கத்தை அருட்டியும், மற்றக்கையால் அடிவயிற்றி

* பிள்ளை பிறந்து கொடி யோனியில் கிடந்து உடுக்குப்போன்ற சுருக்கினுல் கருப்பையின் ஒரு மூலைக்குள் அணையம் மறைந்திருக்கிறபாவனை.

Digitized by Google

ற் பிசைக்குன்றியும், அல்லது உதவியாளைக்கொண்டு ஊன்றுவித்தும், ரோக்காட்டைஎழுப்பவேண்டிவரும். வியாதிகாரணமாய் அணையம் ஒட்டியிருந்தால், காபிக்கொடிமூட்டிலிருந்து விரல்களைவிரித்து, அணைய அருகைத் தேடிப்பிடித்து அணையத்துக்குங் கருப்பைப் பித்திக்கும் இடையே சூட்சமாய்ச்செருகி, அணையத்தை அவதானமாய் முற்றும் விடுவித்துக் கழற்றி எடுக்கவும்.

உடுக்குச் சுருக்கமிருந்தால், சுருங்கிய கருப்பைக்கழுந்துக்குள்ளே கையை விரல்விரலாய்விட்டு அணையத்தை இழுத்தெடுக்கத்தக்கதாய் அதைஅகலித்து விரியப்பண்ணிவிடவும். சிலவேளை இதுசெய்து முடிக்க வெகுநேரம்பிடிக்கும். கருப்பையிழைகளின் பெலத்தைவருத்தமாய் அனுபவித்தறியாதவர், அவைஅவ்வளவு கையை நெரித்துறுத்துமோ என்று நம்பார். பிரசவத்தின் கடைசி ஒழுங்காயும் அவசியமற்ற கையளைவில்லாமலும் நடக்குமேயாகில், அணையமறி மிகச் சொற்பமாய்ச் சம்பவிக்கும்.

*உஎம். படம்.



சம். விகற்பம். அணையம் விழுந்தபின் காணும் இரத்தப் பெருக்கு.

சிலரிலே கருப்பை சுருங்குங்கோலங் கொள்ளுமுன், சராயுகத்தை அதிக சுறுக்காய் எடுப்பதினால்,இவ்விகற்பமான இரத்தப்பெருக்கு உண்டுபடும். வேறுசிலரிலே கருப்பையானது மிகுந்தவிரைவாக வலிய அணையத்தைப் பிதுக்கித்தள்ளினபின் கருப்பைநெகிழ்ந்து விரிவதினால் உண்டுபடும். முதற்சொல்லிய காரணத்தைச் செய்யாதொழிவதினாலும், கருப்பைநெகிழ்ச்சியை ஊன்றல் உதரகவளிகை முதலியவற்றால் விலக்குவதினாலும், நாடித்துடிப்பு அமரிக்கையாகும்படிபிரசவத்தின்பின்புநெடுஞ்சாணையே ஸ்திரியை ஆற்றியாகப் படுக்கப்பண்ணுவதினாலும், இவ்விகற்பமான இரத்தப்பெருக்கைத் தடுக்கலாம்.

* அணையம் மறிபட்டிருக்க, யோனிவழியாகக் கருப்பைக்குள் கையைவிட்டு அதைஎடுக்கும்பாவனை.

இப்படி நாம் எச்சரிக்கையாயிருந்தபோதிலும், இரத்தப்பெருக்கு உண்டுபடுமேயாகில் வயிற்றில் ஊன்றியும் அமர்த்தியும் அல்குல் முதலியவற்றில் தண்ணீர்ச்சீலைபோட்டும்,வயிற்றிலே நீர்த்தாரை சொரிந்தும் எர்கற்றுக்கஷாயங்கொடுத்தும் இவ்வுபாயங்களால் கருப்பைச் சுருக்கத்தை உண்டாக்கியே இரத்தப்பெருக்கைத் தடுக்கவேண்டியது. கருப்பை நிலைவரமாய்ச் சுருங்கும்படி செய்தபின் அடிவயிற்றிலே இறுக்கமாக உதரகவளிகைஇடவேண்டியது.

உதரகவளிகையிட்டது திறமில்லாதிருந்தால் சிலரிலே இரத்தப்பெருக்கு வெளியே சற்றுந் தோன்றாமல் கருப்பையினுள் வடிந்துகொண்டிருக்கும். அப்படியாகில் ஸ்திரியின் உதடுகள் வெளிறி நாடித்துடிப்பு விரைவும் சோர்வுமாய் ஸ்திரியிலே ஆற்றியீனமான அந்தரிப்புக் கண்டு கைகளை எறிந்து வெளிச்சம்வேணும் காற்றுவேணுமென்று பரிதாபங்கொள்ளுமட்டும், காரியம் எவ்வகையாய் நடக்கிறதென்பது நமக்கு விளங்காது. மருத்துவரும் ஸ்திரியைவிட்டுப் போயிருக்க, அவரை மறுபடி அழைக்குமுன் காரியம் இவ்வளவிலே வந்துவிடக்கூடியது. அவர் வந்து வயிற்றிலே கை வைத்துப்பார்க்கும்போது கருப்பையுள் இரத்தங் கட்டியிருப்பதினால் அது அதைப்பாயிருக்க; இதினாலேதான் அக்குணங்கள் தோன்றின என்று காண்பார். அமர்த்தி ஊன்றுவதினாலே கருப்பை சுருங்கி இரத்தக் கட்டிகளை வெளியிலொதுக்கும்படி அதை அருட்டலாம். உடனே அப்படி முற்றாதிருந்தால், தாமசமில்லாமல் முன்சொல்லிய உபாயங்கள் எவற்றினாலுங்கருப்பைச்சுருக்கம் உண்டாக்கவேண்டியது.

மேலே நாம் சொல்லிய விதமாய் மோசமான பெலவீனங்கண்டால் உயிர்ப்புத் தரு மருந்துகள் கொடுத்து ஸ்திரியைத் தேற்றவேண்டியது. ஒரு சிறு கரண்டி பிறண்டியில் அல்லது சாராயத்திலே ஐந்து தொடுத்துப் பத்துத்துளிவரைக்கும் லாடனங் கலந்து ஸ்திரியிலே தேற்றங் காணும்வரைக்கும் நாழிகைக்கொருக்காற் கொடுத்துவரலாம். இவ்வகையான தருணங்களிலே அற்பமாகிலுந் தலையை மிதத்தினால் மோசமான அறிவுகேடும் பிராணசேதமுஞ் சம்பவிப்பது உண்டானபடியால் நெடுஞ்சாணையே நல்லாற்றியாய்ப் படுத்துக்கொள்ள வேண்டியது. ஸ்திரியிலே பெலவீனமானது சற்றுக் கடினமாய் நின்றும் பின்பு மாறு.

Digitized by Google

ம். ஒரு ஸ்திரியிலே அறிவுகேடு வேகம் மாறிமாறி அறுப துநாழிகைமட்டுக்கு நின்றதும் நான் அறிவேன். கடை சியிலே அவள் பிழைத்துக்கொண்டாள்.

தேம்பல் உண்டுபடப்போகிறதென்று அஞ்சுகிறவேளை களிலே திவனமாய் மிகச்சொற்பஅபின் கொடுப்பதேயன் றிமற்றும்படி இரத்தப்பெருக்கின் வைத்தியத்திலே நான் அபின் பிரயோகம்பண்ணினதில்லை. ஆனாலும் சிற்சில கி ருத்தியங்களுக்கு உதவியாகக் கருப்பையை நெகிழ்விக்கு ம்படி அதிகமாய் அபின்கொடுக்கலாம்.

கருப்பை உள்வளம் புறவளமாதல்.

இது இரத்தப் பெருக்குடனே சற்றுச் சம்பந்தமானதா யிருப்பதினால் இங்கே இதைப்பற்றிச் சொல்லுவோம். நோக்காடு மட்டுக்கு மிஞ்சிவிட்டால் வலியவே வளம்புர ண்டுபோவதும் உண்டு. ஆனாலும் அணையத்தைத் தகாத விதமாய்க் கழற்றி எடுப்பதினாலே மிகுதியாக அப்படியா வது. வளம்புரண்டுஅன்னியநாளாயிருக்குமாகில் கருப்பை யை ஒரு கழலை என்று எண்ணவரும். ஆனாலும் புரண்டி ருக்குங் கருப்பையை அவதானமாய்ப் பரிசோதித்துப்பா ர்த்தால் அதிகசுரணையும், மெத்த அலையாமையும், அப்ப குதியிலுண்டாகும் கழலைக்குரியகாம்பு இதில் இல்லாமை யும், அருகாலே மேலாய் விரலைவிடும் போது கருப்பை மடிப்பிலே விரல் தடக்குண்பதும் தோன்றும். அணையம் வெகுவாய் கருப்பையுடன் ஒட்டியிருந்து இரத்தம் மிகு தியாய் வடிந்துகொண்டிருக்கும். வளம் புரண்டு நெடு நாளாய்விடுமாகில் கருப்பையைக் கருப்பையிறங்கலென் றுதடுமாறவுங்கூடியது. ஆனாலும் கீழ் வளத்திலே கருப் பைவாய் இல்லாமையினாலே கருப்பையிறங்கல்அல்லவெ ன்று தெளியலாம்.

கருப்பைவளம் புரண்டுபோனால் உடனேயே முன்னி ருந்தபடி திருப்பிவிடவேண்டும். கொஞ்சநேரம்சென்றா ல், திருப்புதல் ஏலாததாய்முடியும். திருப்பிவைக்கும்மு றையாவது, கையில் எண்ணெய்தடவிக்கொண்டு, விரல்க ளைப்பொற்றிக் கருப்பை அடியின்கீழ்விட்டுக் கருப்பை முன்னிருந்த படியாய் வருமட்டும் மேலே மிதத்திக்கொ ண்டுபோய்விட்டு அது நன்றாய்ச் சுருங்கிப் பிதுக்கும் வரைக்கும் கையை இழுத்தெடுக்கப்படாது. கருப்பையை த் திருப்பிவைக்கமுன்னே அணையத்தைக் கழற்றியெடுத்

துப்போட்டால் நாம் செய்யவேண்டியதை நிறைவேற்ற முன் சடிதியிலே மோசமான இரத்தப்பெருக்கு உண்டாகக்கூடியதாதலால் அணையத்தைக் கழற்ருமல் கருப்பையைத் திருப்பிவிடுவது உத்தமமென்று சிலர்சொல்லுகிறுர்கள். அணையத்தைக் கழற்றியெடுத்தபின் அன்றி அதற்கு முன் கருப்பையைத் திருப்பிவைக்கக்கூடாமல் இருந்த ஒரு கருமத்தைப்பற்றி மெரிமன்பண்டிதர் சொல்லுகிறுர்.

Digitized by Google

## கக௬ம். அதிகாரம்.

### விபரீதபிரசவம், உம். வற்கம்; வலி.

*பிரசவத்திலே வலியுண்டுபடுதல் அரிதாயிருந்தும், உண்டுபட்டாலோ வெகுவாக மிகமோசமாகமுடியும். பிரசவம் தொடங்கமுன்னுவது, நடைபெறும்போதாவது, பூரணமாய் நிறைவேறினபின்னுவது வலிதோன்றும். தலையிலே இரத்தம்மிஞ்சுவது என்று விளக்குவனவாகிய தலையிடி பிடரிநோ, தலைச்சுழற்சி, மயக்கம், முகச்சுரப்பு, தலைவிறைப்பு, கைவிறைப்பு முதலிய ஆரம்பக் குணங்கள்கண்டு, வலி உண்டுபடுவதும் உண்டு. சிலவேளை திடீரென இருந்தாற்போல் உண்டாவதும் உண்டு. தலையிடிமுதலிய குணமின்றி மேல்வயிற்றில்மாத்திரம் நொந்துகொண்டிருந்து, எழெட்டு நாழிகையின்பின் சடிதியிலே வலி உண்டுபட்டுப் பிராணசேதமாய் முடிந்த ஒரு கருமம் நான்கண்டிருக்கிறேன்.*

*பிரசவவலியின் குணங்கள் குதிரைவலி என்னும்நோயின்குணங்களுக்கே அதிகம்நெருங்கிய சமானமுடையன. முகமானது அதிக திருக்கலாய் வெளுவெளுத்துப்போம். அல்லதுநீலம்பாரித்துஅதைத்துப்போம். கைகால்கள்வலிங்கரமாய்க் குறண்டி முரணிப்பாய்விடும். வலியினதுவேகத்தினுல் யாதொரு அணைவில்லாமற் பாரிசபக்கத்துக்குக்கிடந்த ஒரு ஸ்திரியை நான் அறிவேன். நாக்குவெளியிலே புறப்பட்டு வலிவேளையிலே பல்லுக்கிடையேஅகப்பட்டுக் கடியுண்டு, வாயாலே நுரைநுரையாய்த் துப்பல்தள்ள அதிலே இரத்தங் கலந்துவரும். மூச்சு நுரைத்துப் பல்லுக்கூடாய்ச் செல்லுகையில் தொண்டையிற் கறகறப்பும்கிஸ்என்ற இரைச்சலுந் தோன்றும். ஸ்திரியிலே சற்றும் அறிவிராது. வலி தணிந்தபின்னோ, அதிசுழுத்தியென்னும் அயர்ந்த நித்திரை உண்டாய் குறுகுறுப்பென்ற சத்தத்துடன் மூச்சுங்கண்டு சிறிதுநேரம்நின்று, மறுபடியும் வலி வேகமாய் எழும்பாதிருந்தால் ஸ்திரியிலே சற்று அறிவு வந்து, தலையிடிக்கிறது கைகால்நோகிறது என்று*

Digitized by Google

சொல்லுவாள். முகம் தூக்கமும் மந்தமுமாய், குரல்வேறுபட்டுக் கரகரப்பாய்விடும். சிலரிலே நாடித்துடிப்பு விரைவும் பெலப்பும், சிலரிலே சோர்புமாய் விடும்; வலி வரமுன்னே மிகுதியாய் மெல்லெனவாக நடக்கும். வலி அதிகரித்து நடைகொள்ளுமேயாகில், வலிகளுக்கு இடையாற்றியில் அறிவு மெத்த இராமல், கடைசியிலே அறிவு கொஞ்சம் வெளியாமற் போய்விடும்.

சிலகாலங்களிலே வலியானது பலருக்கும் ஒருமிக்கவருவதும் உண்டு. புழுக்கமானகாலத்திலே மின்னல் முழக்கங்களுக்குமுன், பலமுறையும் வலி உண்டுபடுகிறதென்று ரஞ்சுபோதம் பண்டிதர் கண்டார்.

இவ்வியாதியின்உற்பத்தி இன்னதென்றுநன்ருய் விளங்கவில்லை. பிரேதசோதனையினாலும் இன்னும் நிதானமாய் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை. சிலரிலே பிறவிவாசல் விரியும் வேதனையினால் உண்டுபடும் சிரோத்தாபம் இரத்தக்கனப்புடனும் வயிற்றில் அசீரணமுதலிய சுவாத்தியகீனத்துடனுங் கலந்தும்வரும் ஒருவியாதி என விளங்குகிறது. வேறு சிலரிலே மூளையைப்பற்றிய வியாதியிலே தொட்டதாய் இருக்கின்றது.

வியாதியின் உற்பத்தி இன்னதென்று விளங்காமையால், அதின் வைத்தியத்திலுந் தீர்க்கம் இல்லை என்றே எண்ண வேண்டும். இரத்தம் எடுப்பதே அதிகம் வாய்த்து வரும் உபாயம். ஆகிலும் இரத்தம் எடுப்பதால் எல்லாருக்கும் நயங்காணுது. ஸ்திரியானவள் இரத்தக்கனப்பும் பெலமும் உள்ளவளாய் நாடித் துடிப்பு விரைவுந் துள்ளுமாய் அல்லது நிறைவும் மெல்லெனவுமாய் இருக்கில் இரத்தம் எடுக்கத்தான் வேண்டியது. அரை நாழி முக்கால் நாழியளவுக்கு நிறைபாச்சலாகக் கையில் இரத்தம் எடுக்கலாம். இதிலே நயங்கண்டு, இரத்தத்திலே வெண்சிவப்பான ஆடை படர்ந்து தாபிதத்தைக் குறிக்குமானல், காரிய சகாயத்துக்கு வேண்டிய மட்டுக்கு இரத்தம் எடுத்து வரலாம். அந்நேரமே தலை மயிரை முற்றும் சிரைத்து, தண்ணீர்ச் சீலை முதலிய குளிர்மையிடலாம். ஸ்திரியானவள் இரத்தக் கனப்பின்றிப் பெலவீனமுஞ் சராயிகை என்ற கோலம் உடையவளாய், நாடித் துடிப்புச் சோர்வும் விரைவுமாயிருந்தால், இரத்தம் எடுப்பதிலே அதிகம் நம்பிக்கை காணுது. ஆகிலும், கொஞ்சமாய் இரத்தம் எடுத்துப் பார்ப்பது நல்லது. அந்

த இரத்தத்தின் மாதிரியைப் பார்த்தால், இன்னும் இரத்தம் எடுக்கலாமோ அல்லவோ என்பது தெளிவாகும். சந்தேகமான கருமத்திலே, இரத்தம் எடுக்கலாமென்ற பட்சத்துக்குத் தான் நான் உடம்படுவேன்.

மலசுத்தி ஆகாமலிருக்கப் பிரசவ வலி சகாயப்பட்டதை நான் கண்டதில்லை. மலமோ அதிக அழுகல்கொண்டேயிருக்கும். ஆகையால், சுள்ளாப்பான விரேசனங்கொடுப்பது அவசியம். நேர்வாளத் தைலத்திலே இரண்டொரு துளி எடுத்துப் பசுவெண்ணெய்யுடன் அல்லது சீனியுடன் கலந்து நாவின்மேல தடவி விட்டால் அது உள்ளேயிறங்கி நன்றாய்ப் பேதிக்கும். அத்தோடு தர்ப்பன்தீனிலே ஒரு அவுன்சு எடுத்து, உப்புப்போட்ட கஞ்சித்தெளிவிலே கால்நாழியுடன் கலந்து ஓர் விரேசனமாக அபான வழியாய்ப் புகட்டவும். வலிவேளையிலே சற்றுயரத்திலே பிடித்துக்கொண்டு தலையிலே தாரையாய் விழும்படி, ஒரு குடத்தாலே தண்ணீர் சொரியவும். சற்று நேரத்துக்குத் தாரையாய்த் தலையிலே கொஞ்சம் அதைப்பாய் விழும்படி, தண்ணீர் சொரிய இதினால் மூளையின் இரத்த ஓட்டம் ஒழுங்குப்படும். குடிவெறியிலே உயிர்மாண்டுபோன ஒருவனைக் கண்டு, அவனுடைய தலையிலே தாரையாய் விழும்படி தண்ணீர் சொரிவித்து, பத்து நிமிஷத்திலே அறிவு தெளிவித்தேன். அங்கவிகிர்திபோன்ற வலிகளிலே, நீர்த்தாரை சொரிதல் இரத்தமெடுத்தலுக்கு இரண்டாவதான வைத்தியமாகும். ஓங்காளம் உண்டாகத்தக்கதாய் தாத்தர் அந்திமோனி கொடுப்பது உத்தமமென்று தற்காலத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதினாலும் நயங்கண்டுதென்று எண்ணுகிறேன்.

மேற்சொல்லிய வைத்தியங்கள் சகல விகற்பமான பிரசவவலிகளுக்கும் அமையும். பிரசவ வேளையில் அல்லது முன்னிதாய் வலி உண்டுபட்டால் பெறுவிக்கலாமோ அல்லவோ என்ற சந்தேகம் உண்டாம். காரியத்தின் நிருவாகத்துக்குத் தக்கதாகவே இதற்கு உத்தரமும் வரும். ஸ்திரியிலே பிரசவந் தொடங்கிச் சாவணம் பிரயோகிக்கக்கூடிய மட்டிலே வந்து விட்டால் பெறுவிப்பது புத்திதான். ஆகிலும் பிரசவம் இம்மட்டுக்கும் நடந்தேறாமல் கருப்பைவாய் முரணிப்பாயிருக்கும் பொழுது சிசுத்திருப்புதல் சிரசு தொளைத்தல் முதலிய கிருத்தியங்களைச் செய்யப்படாது.

Digitized by Google

செய்தால் கருப்பைவாய் கிழிந்து வலி அதிகரிக்கத் தக்க தாய் அழற்சியுண்டாம்.

வலி வரும் வேளைகளிலே ஸ்திரிக்கு விளங்காமல் பிள்ளைப்பேறு நடப்பதும் உண்டு. ஆகையால் நாம் பராகண்டிதமாய் இருக்கும்போதே சிசுப் பிறந்து மோசப்பட்டுப் போகாமல், பிரசவநடை இம்மட்டில் வந்துவிட்டதென்பதைக் குறித்துக்கொள்ளும்படி பலதரமும் யோனி வழியாய்ப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது.

சகல உபாயங்களிலும் வாயாமல் கை கடந்த கருமமாய் நடக்குமேயாகில், ஸ்திரியானவள் பிள்ளைப்பெருமற் சாக விடுவதிலும் பார்க்கச் சிசுச்சிரசைத் தொளைத் திழுப்பது உத்தமம். ஆனாலும் கடைசியிலே வலி சுகப்பட்டு நாழிகைகளும் நாட்களுஞ் செல்ல முன் பிரசவங் தொடங்காமலும் இருக்குமானபடியாலும், பிரசவம் முற்றினபோதிலும் வலி பிராண சேதம் விளைவிப்பதுமுண்டானபடியாலும் சிரசைத்தொளைக்கத் தொடங்குவது மனசுக்கு வருத்தமானசெய்கை.

வலியானது நரம்புமண்டலத்திலுண்டுபடும் அழற்சியினாலே தோன்றும் எனச் சிலர் நினைத்து, இக்கருத்துக்கிசையவே அவ்வியாதிக்கு எப்பொழுதும் அபின் சேர்த்த மருந்துகொடுத்து வருகிறார்கள். இக்கருத்தும் வைத்தியமும் வழுவேயாம். இரத்தமெடுத்தலைப் பற்றியும் இவ்வண்ணமாகவே முன்சொன்னோம். அனேககருமங்களிலே இரத்தம் எடுப்பதேமுற்றும் அவசியமாயிருந்தும், சில கருமங்களில் அபின் மருந்தே நன்றாய்ச் சித்திக்கும். சில வேளை ஒரு கருமத்திலே இரண்டு வைத்தியங்களையுஞ் செய்து நயங் காண்பதும் உண்டு. ஸ்திரியிலே சோர்பும் பெலவீனமுங்கண்டு நாடித்துடிப்பு விரைவும் உறுதிக் கேடுமாய்,சினப்பு முதலிய அழற்சிக்குணம் மேலிட்டு, எடுத்த இரத்தத்தில் வெள்ளாடை படராவிட்டால் அபின் கொடுக்கலாம். முதலே இரத்தமெடுத்ததிலே சகாயங்கண்டு வியாதி சற்றுத்தணியுமாகில், அபின்சேர்த்த மருந்துண்பதினாலே தேகஞ்சாந்தியாகி அதிக நயங்காணும். ஸ்திரியானவள் தின்று விழுங்கக்கூடியதாய் இருந்தால் தோவர்சூரணங் கொடுப்பது நல்லது. இதினால் தலைக்குஆற்றியாக இரத்தம் தோற்பரப்பை நாடிப்பெருகும். அபானவழியாய் அபின் மருந்தைச் செலுத்துவது உத்தமம் என்றுகண்டால், லா



Digitized by Google

டனம் சேர்ந்த பாயுரியம் வசதி. இடையாற்றிநேரம் அதிகப்பட்டு வேகநேரங் குறைந்துவந்தால், வியாதியின் மும்முரம் தணிகிறது எனத் தெளிந்துகொண்டு, நாம்செய்யும் வைத்தியத்தின் கடுமையையுஞ் சற்றேதணித்து, முன்செய்தமுறைபோலவே மட்டாய் நடத்தி, அவசியங்கண்டால் பிடரியிலுந் தலையிலுங் கொப்புளப்பற்றுப்போடலாம். வியாதி சகாயங்கண்டுவருகையில் இடைக்கிடை சிராவணி விட்டுச் சலம் இறக்கவேண்டிவரும்.

மிருதியாய்வியாதிமுற்றாக நீங்கிவருதல் சுறுக்கின்றி மெல்லெனவாய் நடக்கும். மூளையானது கலக்கந்தெளிந்து சுவாத்தியமாய்த் தனது தொழிலைத்தொடங்கமுன்,நெடுநாட்செல்லும். சிலவேளை இவ்வியாதி பைத்தியமாயும்முடியும். வியாதிவேளையிலே அநேக ஸ்திரிகளுக்கு யாதொரு அறிவும் இராது. இதுவுமன்றி வியாதியின்குணம் சற்றுந் தோன்றாமல் இருக்கும்போது ஸ்திரிமுகதாவில் நடந்தகாரியங்கள் தன் ஞாபகத்தில் சற்றாகிலுமில்லாமற்போன கருமமும் நான் அறிவேன்.*

பிரசவித்தவுடனே உண்டாகுஞ் சடிதியானமரணத்தைப்பற்றி இங்கே சுருக்கமாய்ச் சொல்லுவோம். சிலவேளை, இது என்னகாரணமாய் உண்டுபட்டதென்று சொல்லக்கூடாது. ஸ்திரியானவள் யாதொருவிசேஷமான சம்பவமின்றிப் பிரசவம் முற்றும் வரைக்குஞ் சுவாத்தியமாய் இருக்கிறாள். கொஞ்சநேரத்தாலே திடீரென உடம்பு அசைந்தவுடனே அல்லது எதும் குடிக்கும்படி தலையைமிதத்தினவுடனே, அல்லது மலசுத்திசெய்யும்படிக்கான சச்சடிவேளையிலே அறிவுகெட்டு உடனே இறந்துபோகிறாள். பிரசவத்துக்குச் சிலநாட்களின்பின்பும் அபூருவமாய் இப்படிநடப்பதுண்டு.

இவ்வியாதியின் உற்பத்தி இன்னதென்று விளங்கவில்லை. வயிற்றின் உள்ளுடனுக்கு உறுதியாய் அமர்த்தியிருந்த கருமுதலிய அணைவுகள் சடிதியில் எடுபடுவதினாலே தான் இது உண்டுபடுகிறதாய்த் தோன்றுகிறது. பிரசவம் சுகமாய் நடந்து முற்றினபின் முப்பது நாழிகைக்கு

* பிரசவகருமங்களிலே வலி இத்தனைக்கொன்று எனச்சொல்லிக்கொள்வது பிரயாசம். வெல்லெசிலிசாலையிலே, ௧௮௪௨. ஆண்டு ஒன்றாகுதல் இல்லை. ௧௮௪௧. ஆண்டிலே மூன்றுகருமங்கள் சம்பவித்தன. இம்மூன்றில் ஒன்று பிள்ளைப்பெறமுன்னம், ஒன்று பிள்ளைப்பெறும்வேளையில், ஒன்று பிள்ளைப்பெற்றபின். பிந்தின இரண்டிலும் ஸ்திரிகள் பிழைத்துக்கொண்டார்கள், முந்தினதொன்றிலே பிராணசேதமநேரிட்டது.

Digitized by Google

ள்ளே அங்கவிகிர்தியென்றநோய் உண்டுபட்டு ஸ்திரியிலே அயர்தியானதூக்கங்கண்டு, பின்பு அருளாதபடி துயின்றுவிட்ட ஒரு கருமம் நான்அறிவேன். பிரேதசோதனை பண்ணினபொழுது, மூளையின்கட்சத்திலே உறைந்த இரத்தமும் மூளையின்அடியிலே அதிக வசாநீருந் தோன்றின.

இப்படிச்சடிதியான கருமங்களிலே வைத்தியஞ்செய்துகொள்வதற்குத் தருணங் கிடைப்பது அபூருவமானபடியால் வைத்தியத்தைப்பற்றிப் பேசுவதும் அவசியமல்லவென்றேமுடியும். மோசமான அறிவுகேட்டைக்கண்டால் உயிர்ப்புத்தரும்மருந்துகளாகிய அம்மோனியா, ஈதர் பிறண்டி இவைகளில் ஒன்றைப் பிரயோகிக்கவேண்டியது. ஸ்திரியிலே சற்றுவெளிப்புக்கண்டால் தேற்றுகிற மெல்லிய உண்டி கொஞ்சமாய்க்கொடுத்து, சிலநாளாய்ச் சற்றும் அசையாமலும் பேதிகாணாமலும் விலக்கிக்கொள்ள வேண்டியது.

இப்படியான சடிதி இடையூறுகள் சிலவேளை சம்பவிக்கின்றனவென்று நாம் அறிந்திருப்பதினால், பிள்ளைப்பெற்றவளுக்கு வைத்தியஞ்செய்வதிலே வயிற்றுக்கு அணைவாகக் கவளிகையிடுதல், நெடுஞ்சாணையே பூரணஆற்றியும் அமைதியுமாய்ப் படுத்தல் முதலிய சிற்சில விசேஷங்களைப்பற்றி அதிககருத்தாய் இருக்கவேண்டியது. புதுப்பழக்கமான மருத்துவர் தம்மனசிலே இவ்வகையான கருத்துகளை நன்றாய்அழுத்திச் சாதிக்கவேண்டியது.

Digitized by Google

## கஎம். அதிகாரம்.

## விபரீதபிரசவம், மூன்றும்வர்க்கம். பலபிள்ளைகளுடன் நிகழும் பிரசவம்.

இவ்விகற்பமான பிரசவம் ஊருக்குத் தக்கதாய் விகற்பப்படும். பாரிசுபட்டணத்து மாதனைத்தா என்னுஞ் சாலையிலே, கஙஉ. கருமங்களுள் ஒன்று இரட்டைப் பிள்ளையென்றும், உ0ஙுஎ. கருமங்களுள் இரண்டு முற்றைப்பிள்ளையென்றும், பாய்வின் மருத்துவி சொல்லியிருக்கிறாள். தபிளின்பட்டணத்துப் பிரசவசாலையிலே, கூ0. கருமங்களுள் ஒன்று இரட்டைப்பிள்ளையென்றும், சஙு00. கருமங்களுள் ஒவ்வொன்று முற்றைப்பிள்ளையும் காற்றைப்பிள்ளையும் என்றும் விளங்குகிறது. வெல்லெசிலிசாலையிலே அறுபத்துநாலுக்கு ஒன்று இரட்டைப்பிள்ளை.

யோனிவழியாய்ப் பரிசோதனைசெய்யும்போது இரண்டுமூன்று பிள்ளைகளின் வித்தியாசமான உறுப்புகளை அயிர்த்துக்கொள்ளுஞ் சொற்பமாய்வருஞ் சிலபிரசவங்களிலே, அல்லது காதைவைத்து உற்றுக்கேட்பதினாலே இரண்டு சிசு இரத்தாசயத்துடிப்புச் சத்தத்தை முன்னே தெளிந்துகொண்டவேளையிலே அன்றி, மற்றும்படி முதற்பிள்ளை பிறக்கும்வரைக்கும் கருப்பையிலே இரண்டாம் மூன்றும் பிள்ளையும் இருக்கிறதோஎன்று நிச்சயம் பண்ணுவது எலாது. ஆகையால் முதலாம்பிள்ளையின் பிரசவத்தை, காரியத்துக்குத்தக்க அவசியங்கண்டபடி சகாயஞ்செய்துஞ் செய்யாமலும், தனிப்பிள்ளைப் பிரசவத்தைப்பற்றி முன்னே கூறிய விதங்களுக்கிணங்கவே, வாடிக்கையானமாதிரியாய் முற்றுவிக்கவேண்டியது. முதலாம்பிள்ளைபிறந்தபின்பு முன்னே நாம் விதித்திருக்கும்முறையாய் வயிற்றிலே கைவைத்துப்பார்க்கும்போது, கருப்பைப் பருமைசொற்பமாய்க்குறைந்திருக்கிறதெனக் காண்போம்; இதினால் வேறுபிள்ளையும்இருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். பரிசோதனையினாலே இரண்டாம் பிள்ளையின் பன்னீர்க்குடமும் அதின் உதயமும் விரலுக்கு விளங்கும். முதலாம்பிள்ளை பெற்றுச் சிலநிமிஷஞ்சென்றபின் நோக்காடு மறுபடியுங் கிளம்பி, பிறவிவாசல்கள் முதலே நன்றாய் விரிந்திருப்பதினால், பிரசவத்துக்குப் பிசகான உதயத்தினால் யாதொரு

Digitized by Google

நடக்குக் காணுதிருக்குமாகில், இரண்டாம் பிரசவம் அதிசீக்கிரத்திலே முற்றும். ஆகிலும் சிலவேளை, இரண்டாம் பிள்ளைப்பேற்றைச் சகாயஞ்செய்து விரைவாக முற்றுவியாவிட்டால், முதலாம்பிள்ளைபிறந்து சிலநாழிகை நட்கள்சென்றுதான் இரண்டாம் பிள்ளைபிறக்கும். நாம் சகாயஞ்செய்யத்துணிவது எப்பொழுதென்று ஓர்விதி எளிதிலே சொல்லவும் ஏலாது; ஏதேனொரு விக்கினம் நேரிட்டாலன்றி மற்றும்படி சுறுக்குப்பண்ணவேண்டிய அவசியமுமில்லை.

முதலாம்பேறு முற்றியபின்பு உதரகவளிகையிட்டு மட்டாய்இறுக்கி முதலாம்பேற்றின் நிருவாகத்துக்கும் ஸ்திரியின் சீருக்குந் தக்கதாய் கருப்பையின் களை இளைப்புத்தெளியும்படி போதியநேரம்விட்டே, இரண்டாம்பிள்ளையின் பன்னீர்க்குடத்தை உடைப்பதுபுத்தி. உடைத்தபின்பு நோக்காடு கிளம்பாதிருந்தால், எர்கற்றுக் கஷாயங்கொடுக்கவும். இவ்வுபாயங்களிலே வாய்க்கவில்லை என்று கண்டாலன்றி, கிரமப்பிரசவமாகிற் கைவிட்டவேளையமுயலப்படாது. இரண்டாம்பிள்ளை குறுக்குதையமாகிறதைக்கண்டால் அல்லதுதாய்க்கு அபாயம்விளைவிப்பனவாகிய வலி இரத்தப்பெருக்கு அறிவுகேடு மூர்ச்சனைமுதலிய அவக்குணங்கள் உண்டுபட்டால் உடனேகையையிட்டுச் சிசுவைத்திருப்பிவிடவும். தனிப்பிள்ளைப் பிரசவங்களிலே சாவணம் பிரயோகிக்கவேண்டியதற்கான குறிகள் இங்கேயுங் கண்டால், இரண்டாம் பிள்ளையையும் சாவணம் பிரயோகித்துப் பெறுவிக்கலாம். முதலாம் பிள்ளைப் பிரசவம் அலுப்பும் மாய்ச்சலுமாய் அல்லது மருத்துவசகாயத்தால் முற்றினதாயிருந்தால், இரண்டாவதைச் சுறுக்குப்பண்ணுவது விவேகமாய் முடியும். சுருங்கச் சொல்லுகில், தனிப்பிள்ளைப் பிரசவத்திலே செய்யவேண்டிய சகாயங்களைப்பற்றிச் சொல்லிய விதிகளே, பல பிள்ளைப் பேற்றில் செய்யுஞ் சகாயங்களுக்கும் பெரும்பாலும் அமையும்.

சிசுக்கள் இரண்டிருந்தும் அனேகமுற்றை அணையம் ஒன்றாயிருப்பதினாலும், வெவ்வேறாய் இரண்டு அணையமிருந்தபோதிலும் கருப்பையிலே இரண்டாஞ் சிசுஇருக்கும்போது முதல் அணையத்தை எடுத்தால் சுருங்கத் தொடங்காத கருப்பையிலே இரத்தப்பெருக்குண்டுபடுமானதினாலும், இரண்டு பிள்ளைகளும் பிறந்தாலன்றி அதற்குமுன் அணையத்

Digitized by Google

தை எடுக்க முயலப்படாது. பிள்ளைகள் பிறந்தபின் தனிப் பிரசவ கருமத்திற் சொல்லிய முறைப்படியே சராயுகத்தை வெளியில் எடுக்கவும். சராயுகத்தை நாமாய்ப் பிரித்து எடுக்கவேண்டிவந்தால்மேலேசொல்லிய நியாயத்தினால்இரண்டு சராயுகங்களையும் ஒருமிக்கவே எடுக்கவேண்டியது.

இரண்டாம் சிசுவும் இருக்கிறதென்று அறிந்தால் ஸ்திரியானவள் எம்பலிப்புக்கொள்ளக் கருப்பை அப்பாற் சுருங்குவதற்கு விக்கினம் நேரிட ஏதுவாம். ஆதலால் ஸ்திரிக்கு இக்காரியம் விளங்காமற் கூடியளவு மறைந்திருப்பதே நல்லது. இரட்டைப் பிள்ளைப் பிரசவத்துக்கு உரிய விதிகள் முற்றை நாற்மைப்பிள்ளைப் பிரசவங்களுக்கும்அமையும். சிசுக்களின் தொகைக்குத்தக்கதாய் அவைகளின் பருமையுங் குறைந்து பிரசவமும் லகுவாய் முற்றுமென்று எண்ணலாம்.

# கஅம். அதிகாரம்.

## விபரீதபிரசவம். சம். வர்க்கம், நாபிக்கொடிஉதயம்.

சிசுவிலுள்ள பகுதி ஏதேனும் உதையமாயிருக்க அவ்வுதையத்தைக் கடந்து நாபிக்கொடி வெளிப்பட்டுவருவதாதலால் இதை நாபிக்கொடியிறங்கலென்றுஞ் சொல்லலாம். இப்படியானவேளையிலே நாபிக்கொடியானது அமர்த்துண்டுசிசு சுவாசிக்கத்தொடங்குமுன் அக் கொடிவழியாற் சுவறும்இரத்த ஓட்டந் தடையுண்டு சிசுவிலும் பிராணமோசம் விளைவதே இதிலுண்டுபடும் அவலம். நாபிக்கொடியிலே நாடித்துடிப்பு அற்றுப்போனதினால் சிசு செத்துப்போயிற்றென்று விளங்கிக்கொண்டாலும் கொடியிறங்கியுந் தாய்க்கு மோசம்வராதாதலால் நாம் கிருத்திய சகாயஞ்செய்யத் துணியவேண்டியதில்லை. கொடியிலே துடிப்பிருந்தால், அமர்த்திலே உண்டுபடும் மோசத்தை விலக்கப்பார்க்கவேண்டியது. ஆகிலும் விலக்கிக்கொள்வது பிரயாசம்.

நோக்காட்டுவேளையிலே உதயமாகும் பகுதி இறங்கி யோனியுள் முட்டி நிற்குமட்டும், அதற்குமேலே நாபிக்கொடியை ஏற்றித்தள்ளி அது மறுபடியும் விழாதபடி பிடித்துக்கொண்டிருப்பதுதான் இதற்கு நாம் செய்யக்கூடிய உபாயம். கூடுமாகில் சிசுவின் அவயவம் ஒன்றிலே அதைக்கொழுவிவிடுவது உத்தமமென்று சிலர்சொல்லுகிறார்கள். ஒரு பையில் அதை அடைத்து மேலே தள்ளிவிடலாம் என்றும் அது விழாமல் மேலே நிற்கும்படி கீழே அணைவாகச் சுபஞ்சு செருகிவிடலாம் என்றும், சிலர்சொல்லுகிறார்கள். இவ்வுபாயங்களிலே தாய்க்கு மோசம் வருவியாத எவ்வுபாயத்தையுஞ் செய்து பார்க்கலாம்.*

நாபிக்கொடி உதயமாகும் பிரசவங்களிலே சிசுத் திருப்பி அல்லது சாவணம் பிரயோகித்துப்பெறுவிக்கலாம் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். ஆகிலும், தமது கருத்தின்படி பிறர் செய்ய அபிப்பிராயங்கொண்டல்லவென்பதே எனது அபேட்சை. கருப்பைச் சேட்டணத்தால் இயல்பிலே உண்டுபடும் அமர்த்தினும் பார்க்க, அவர் சொல்லிய ஈருபாயங்களுள் எதைச் செய்வதிலும் அமர்த்து அதிகப்பட்டு மோசமும் அதனப்படுமென்று பரீட்சையிலே குறைவான மருத்துவருக்குந் துலக்கமாய் விளங்குமே.

* கஅகஉம்.கஅககம். ஆண்டுகளிலே வெல்லெசிலிசாலையிலே நாபிக்கொடி உதயம், அககக்கு. இரண்டு.

Digitized by Google

## கசும். அதிகாரம்.

### விபரீதபிரசவம். ஐந்தாம் வர்க்கம். கருப்பையாவது யோனியாவது கிழிதல்.

இதுவே பிரசவங்களில் சம்பவிக்கும் பிராணநாசமான கடும்மோசம். அனேக பிள்ளைகள் பெறப்பெற பலதரமும் விரிந்திசிந்து கருப்பைப் பித்தியானது உறுதியற்று மெலிந்திருக்கும் ஸ்திரிகளிலே மிகுதியாய் இது உண்டுபடும். கூபகம் குரூபமாயிருக்கும்போதும் பிரதானமாய் குரூபமான பீடிகை முனைப்பு அல்லது வேறொருகூரிய என்பு முனைப்பு இருக்கும்போதும், கருப்பை இவற்றில் உறுத்தி அழுந்துமெனிற் சேதப்படும். பிசகான உதயத்திலே சிசுவின் அவயவங்கள் துன்னிக்கிடந்து உறுத்துவதினாலுங் கிழியும். சிசுத் திருப்பும்போது மருத்துவரின் கைபட்டுங் கிழியும்.

அலுப்பும் அவலமுமான பிரசவங்களிலே இவ்விடையூறு பெரும்பாலும் நடக்கும். ஆகிலும் அதிகம் அவலமில்லாத பிரசவங்களிலும் சிலகர்ப்பிணிகளிலே சரிமாசம்வர முன்னம் சம்பவித்ததுமுண்டு. ஆதலால் அனேகரிலே முற்படவே கருப்பை வியாதிகொண்டிருப்பது தான் அதுகிழிந்துபோவதற்கு நியாயமாகும்போலே.

பிரசவவேளையிலே இவ்விடையூறு சம்பவிக்கில் இதின் குணங்கள் மெத்தத் தெளிவாகத் தோன்றும். கடினமான நோக்காடு திடீரென நின்றுவிடும், ஏதோ உள்ளே இளகிப் பிரிகிறதாக அந்நேரம் ஸ்திரிக்கு விளங்கும், உதயப்பகுதியானது கூபகத்துள் இறுகிச் செருகுண்டிராவிட்டால் கைவிரலுக்கு எட்டாமல் மேலே ஏகிவிடும், அந்நேரம் வயிற்றிலே தடவிப்பார்த்தால் சிசுவின் அவயவங்கள் தோன்றுவதும் உண்டு, யோனியாலே இரத்தம் வடியும். சற்று நேரமானபின் நாடித்துடிப்புவிரைவுஞ்சோர்வுந் தளப்பமுமாய்சுவாசித்தல்வில்லங்கமுமாய்குளிர்வேர்வைகண்டுமிகு தேம்பலுங் களைப்பும் பெலவீனமுந் தோன்றும். கிழியுஞ் சமையத்திலேசிலவேளை இரைப்பையிலுள்ள இரைப்பற்று வெளியில் உவட்டும். சற்றுநேரத்தின்பின்புசெங்கல் மங்க

Digitized by Google

லான சலிப்பற்று உவாந்தியாம். கருப்பை கிழிய நோக்காடும் முற்றாய் நின்றுவிடும்.*

கருப்பைக் கழுத்து பீடிகையென்பின் முனைப்பில் அண்டுகிற இடத்திலே அல்லது கழுத்தும் யோனியும் ஒன்றுகிற இடத்திலே பெரும்பாலும் கருப்பை குறுக்குப்பாடாய்க் கிழியும். கழுத்தும் யோனியும் ஒன்றுகிற இடத்திலே கிழிந்தால், பெரும்பாலும் கருப்பை யோனி இரண்டும்கிழியும். கருப்பையின் அடிப்பகுதியிலுங் கிழிவுண்டுபடும்.

கூடியளவுவிரைவிலே ஸ்திரியைப்பெறுவிப்பதே, பெரும்பாலும் இக்கருமங்களிற் செய்து வரும் வைத்தியம். சிரசுதயமாய் பின்பு மேலே ஏகாதிருந்தால், காரியத்துக்குத் தக்கதாய் ஏது புத்தியென்று தோன்றுமோ அதின்படி சாவணமேனுஞ் சித்திரியேனும் பிரயோகித்துப் பெறுவிக்கலாம். சிசுவுடம்புகிழிவுக்கூடேவழுவிக்கொஞ்சஅளவுக்குமாத்திரம் வயிற்றுக்குள் நழுவியிருக்குமெனில், கையை விட்டுச் சிசுவைத் திருப்பிக் காலாற் பெறுவிக்கவும். சிசுவுடம்பு கருப்பையை விட்டுவிலகி முற்றும் கிழிவுக் கூடாக வயிற்றுக்குட் போனால், யோனி வழியாய்ப் பெறுவிக்க முயலாமல், வயிற்றைக் கீறிப் பிள்ளையை எடுக்கவும். சிலரோ பெறுவிக்க முயலப்படாது என்றும், அது கிடந்து கரைந்து சீழாய்த் தாயின் வயிற்றுப்பக்கத்துக் கூடாகச் சொற்பம் சொற்பமாய்க் கழன்று வெளிக்கிடவிடவும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். பரிதாபமானசெய்திதான். இவைக்குள் மற்றதினும் பார்க்க இதுநல்ல வைத்தியமென்று நான் துணிய மாட்டேன்.†

காரியம் இருக்குஞ்சீருக்குத் தக்கதாய் அப்பால் வைத்தியஞ் செய்யவும். சில நாழிகைக்குள்ளே ஸ்திரியானவள்

* இக்குணங்களெல்லாம் உண்டாகாமலிருக்கவே கருப்பை கிழிவதும் உண்டு. கடினமும் வீங்கவாய் அதிகரிக்கிறதுமான தேமபலேடன் ) வேறொரு குணமுந் தோன்றாமல், கஅசகு. ஆண்டு நாயாச்பட்டினத்திலே ஓர்கருமத்தில் மருத்துவர் கூடத்திலிருந்தபோது தான் கருபபை கிழிந்துபோயிற்றென நம்பவேண்டியிருந்தும் அக்கருமத்தின் சீரும் மரணத்தின் காரணமும் பிரேதசோதனையில் விளங்கினவேயன்றி அதற்கு முன் அயிர்த்துக் கொள்ள ஏலவில்லை.

† கருப்பை கிழிந்துபோன இரண்டு ஸ்திரிகளிலே பிரேத சோதனை செய்தபோது கருப்பையாலே விலகி அதற்குப் புறம்பாய் வயிற்றுக்குள்ளே சிசு நழுவி வந்துவிட அதை மறுபடி இழுத்துப் பெறுவிக்க முயல்வது கடும்பிரயாசமும் மோசமுமாய் முடியுமெனநான் கண்டேன். அவ்விருகருமங்களிலேயும் மரணத்தின் பின் கருப்பை நன்றாய்ச் சுருங்கி, இதினால்கிழிவும் மெத்தக் குறுகியிருந்தது. ஆனதினால் கிழிவுக்கூடாக மறுபடியும் சிசுவை இழுக்கும்படி முயன்றால் கிழிவை அதனமாய் அகலித்து விட வேண்டிய மோசமாய் முடியும்.

Digitized by Google

வாடித் தேம்பி இறந்து விடுவாள். இதற்குத் தப்பினுல் பரியந்திரதபம் என்னும்வெப்புநோய் உண்டுபடும். இவைகளைப்பற்றியே அஞ்சவேண்டியது. ஸ்திரியிலே சற்றே பிரதி சேட்டனம் அல்லது உயிர்ப்புக் காணும் வரைக்கும் அது கிளம்புதற்கான மருந்துகள் கொடுக்க வேண்டியிருக்கும். அப்பால் குணத்துக்குத்தக்க வைத்தியஞ் செய்யவும். இப்பரியந்திரதபமானது தோஷக்குணங்களோடு கூட, ஸ்திரியானவள் மிகச் சோர்ந்து, இரத்தம் வாங்கிஞற் சகிக்கமாட்டாள். வயிற்றிலே அட்டை இட்டு அதிகமாய் அபின் கொடுப்பது அல்லது கலமலும் அபினும் கலந்து கொடுப்பதே, வேறு உபாயங்களிலும் பார்க்க வாய்ப்பாகும். அபான வழியாய்ச் சுகபேதியாக மருந்து செலுத்துவதேயன்றி விரேசன மருந்துகள் யாதொன்றுங்கொடுக்கப்படாது.

ஸ்திரி தப்பிக்கொள்வதற்கு இடம் மிகச் சொற்பம். பிழைத்துத் தப்பிவிட்ட கருமங்களும் உண்டு. நம்பிக்கை தோன்றியிருக்கும் வரைக்கும் மனஞ் சலியாமல் தெண்டிக்க வேண்டும். எக்கச்சக்கமாய்ச் சாவணம் பிரயோகிப்பதினுலே வெகு முறையும் யோனி கிழிவுண்டு போவதென்று நான் நம்புகிறேன்.

சலமறிப்பை நீக்கும்படி சுத்தி செய்வியாமல் உதவியாள் அசண்டையாய் இருப்பதினுல், அதனமாய் விம்மியிருக்கும் சலப்பை பிரசவவேளையிலே வெடித்துப்போவது உண்டென்றுஞ் சொல்லுகிறுர்கள். பெரும்பாலும் சலப்பைக்கு நேரிடுஞ் சேதத்திஞலே அது வெப்புக்கொள்ள இதினுல் ஒரு பகுதி அழுகிச் சவ்வாய் விழச்சலப்பையையும் யோனியையும் ஒன்றப்பண்ணும் ஒடு உண்டுபடும். சலப்பை வெடிப்பதினுல் உண்டாகும் பரியந்திரதபத்துக்கு ஸ்திரி தப்பிப் பிழைப்பது அபூருவம்.

பிரசவவேளையில் வயிற்றிலுள்ள பெரிய இரத்தக் குழல்கள் வெடித்துப்போமென்றும், ஈரல் முதலிய உள்ளுறுப்புகள் கிழிந்துபோமென்றும் எழுதியிருக்கிறுர்கள். இப்படியாகும் வேளையில் குணங்கள் துலக்கமாயிரா. பிரேதசோதனையினுலன்றி அதற்கு முன் வியாதியின்னதென்று தெளிதல்எலாமல் இருக்கும்; வைத்தியஞ் செய்யத்தருணமும் வாயாது; அதினுல் உபயோகமும் இராது. இப்படிப்பட்ட மோசஞ் சம்பவிப்பதும் அரிது.

Digitized by Google

## உ௦. அதிகாரம்.

### பிரசவஸ்திரிகளைப் பரிகரிக்கும் முறை.

இந்தக் காரியத்தை விளங்கிக்கொள்ளும்படி பிரசவித்த பின்பு ஸதிரியின் சீர் இயல்பின்படி இன்னவாயிருக்கும் என்று தெளிவாய் அறிய வேண்டியது.

கவது. சில நாழிகைகளாய் அவளுடைய வயிற்றிற் பேசிகள் முதலியன கடினமாய் இயங்கினதினால் சற்றே களைப்புண்டுபடும். உவது. அவளுடைய இரத்த ஓட்டம் அதி செதிகொண்டு இருக்கும். ௩வது. கருப்பையானது பெருந்திரளையாயிருந்து திடீரென்று சிறுவடிவமாய்ச் சுருங்குவதினால் வயிற்றுக்குடல்களிலும் இவற்றை மூடியிருக்கும் வயிற்றுப்பக்கங்களிலும் மிகுந்த வேறு பாடுதோன்றும். சவது. ஸ்திரி மனோ சஞ்சலத்தில் துயர்ந்துகொண்டவளாயிருப்பாள்.

சீர் நிருவாகம் இப்படி இருப்பதினால், தேகத்துக்கும் மனசுக்கும் ஆற்றி வேண்டியது. ஆதலால் ஸ்திரியானவள் நல்ல அமைதியாயிருந்துதூக்கங் கண்டால்நித்திரையுஞ் செய்யலாம். இரத்தஓட்டமும், வயிற்றுக் குடல்களும், நரம்புமண்டலமும் அன்னேரம் இருக்குஞ் சீரினால், சுரக்கோலந் தோன்றத்தக்கதாதலால் ஸ்திரி நெடுஞ்சாணையாய் கிடப்பதன்றி எழும்பி நிமிரவும் படாது. அதி உயிர்ப்புத் தரும் உண்டி பானங்கள் பரிமாறவும்படாது. ஸ்திரியின் இரைப்பையிலே இரைப்பற்று இல்லாமல் பசிகண்டால், கரையற் கஞ்சி கொஞ்சங் கொடுத்தால் நல்லது. இதினால் சீரண உறுப்புகள் தங்கள் தொழிலிலுடன்பட்டு வாயுப் பொருமலினால் உண்டுபடுஞ் சோலியும் நீங்கிப் போம். கவளிகைபோட்டிருக்கில் அணையம் வெளிப்பட்ட பின்பு அதைச் சற்றே இறுக்கிவிட வேண்டி வரும். ஸ்திரியானவள் படுத்திருக்குமிடம் ஈரலிப்பில்லாத வசதியான இடமாயிருக்கவும். காய்ந்த சிறுத்துகில் மடித்து அல்குலில்இடவும். இவ்வகையான பக்குவங்கள் முடிந்த பின்பு, ஐந்தாறு நாழிகைக்குப் பேராமற் பிரியாமல் அமைதியாய்ப் படுத்துக்கொள்ளும்படியும், பேரப்பிரிய வேண்

Digitized by Google

டிவந்தால் ஆளை நிமிர்த்தாமல்* அவதானமாய் அரக்கிக் கிடத்தும்படியுஞ் சொல்லி மருத்துவர் போய்விடலாம்.

முப்பது நாழிகைக்குள்ளே மறுபடி போய் ஸ்திரியைப் பார்த்து அவளுடைய நாவினதும் நாடித்துடிப்பினதுஞ் சீரைத் தெளிந்து கொள்ளவேண்டியது.† வயிற்றிலே ஏதும் நோ அல்லது நொய்வு இருக்கிறதோவென்றும், நித்திரை செய்ததோ, சலசுத்தியானதோ பின்னோக்காடு கடினமாயிருந்ததோ, துவாலை எப்படி என்றும் விசாரித்தறியவேண்டியது. காரியமெல்லாம் நேராய் நடக்குமாகில் பிரசவித்து அறுபது எழுபது நாழிகை செல்லமுன் ஒன்றுஞ் செய்ய வேண்டியதில்லை. அப்பால் மலசுத்தி காணாதிருந்தால் ஆமணக்கெண்ணெய்யிலே அல்லதுறூவாபிலே மெல்லியவிரேசனங்கொடுக்கலாம்; அல்லது அபானவழியாயத் தண்ணீர் புகட்டலாம்.

தீவனமில்லாத மெல்லிய போஷண உண்டிகள் கொடுக்கலாம். முதலிலே கரையற் கஞ்சி, சவ்வரிசிப் புற்கை, நெல்லரிசிப் புற்கை, இடியப்பம் சிறுகப் பரிமாறலாம். சுவாத்தியங்கண்டால், இரண்டு மூன்று நாளுக்குப் பின், மேற்சூடு முதலிய வெப்புக்குணங்களில்லாதிருந்தால், புற்கையுடன் மிளகுசாறு ஆணம் கொஞ்சங் கூட்டிக்கொடுக்கலாம். இதின்பின்பு படிப்படியாய் வழக்கமான உண்டிகள் கொடுக்கலாம். எப்போதும் தாகத்துக்குத் தக்கதாய், குளிர்ந்த தண்ணீர் குடிக்கக்கொடுக்கலாம்.

இரண்டு மூன்றுநாட்பொறுத்தன்றி ஸ்திரியானவள்படுக்கையை விட்டு நிமிர்ந்தெழும்பப்படாது. அதின்பின் எழும்பினாலும், படுக்கையை ஒழுங்குபடுத்துமளவுக்குந்தான். நிமிர்ந்தெழும்பாமல் நெடுஞ்சாணையே படுப்பதினால் இரத்தஓட்டமும் சாந்தமாகி, அந்நேரம் உண்டாகக்கூடிய கருப்பை இறங்கலும் வராமல் தடுபடும். பதினைந்துபதினாறுநாட்சென்றபின், ஸ்திரி வீட்டிலிருந்து வெளிக்கிட்டு

---

* பிரசவம்முற்றியபின் யோனிநெகிழ்ந்து முரணிப்பில்லாமலும், கருப்பை கனத்தும்பருத்தும் இருப்பதினால், கருப்பையைத்தாங்கிக்கொள்ள யோனியால் எலாதிருக்கும், ஆதலால் ஸ்திரியானவள் நெடுஞ்சாணையன்றி எழும்பிநிமிர்ந்தால் கருப்பை இறங்கல் என்னும் வியாதி உண்டாகக்கூடும்.

† பிரசவவேளையிலே ஏறிநின்ற உச்சத்தைவிட்டு நிமிஷமொன்றுக்கு எழுபது துடியாவிருக்குஞ் சரிமட்டான அளவிலே நாடித்துடிப்பு இறங்கிவிடும். ஆயினும சிரோத்தாப ஸ்திரிகளிலே நாடித்துடிப்பு இறங்காமல் விரைவாகவே சிலநாட்களுக்கு நடந்தும் இதினால் யாதொரு கேட்டை நான் காணவில்லை. இப்படிப்பட்ட கருமங்களை அவதானமாய்க் காத்திருக்கவேண்டியது.

Digitized by Google

உலாவலாம். இப்படி விதிக்குங் காலவரைவுகளையெல்லாம் மருத்துவர் தாம் பார்க்கிற கருமத்துக்குத் தக்கதாய்த் தேர்ந்து சற்றுப் புத்தியாய் யோசித்து நடத்திவர வேண்டியது. உதாரணமாய் கஞ்சித்தெளிவு கரையற்கஞ்சி முதலிய நீரவித்த உணவுகள் ஒருபோதும் இணங்காத ஸ்திரிகளுக்கு, முதலிலே தொடங்கிப் பெலப்பான உண்டி கொடுப்பது புத்தியென்று கண்டிருக்கிறேன். இப்படியான வைத்தியபேதங்களை அப்பியாசித்தறிவதே மருத்துவர் தமது தொழிலில் வல்லவராவதற்கு வேண்டிய விசேஷம்.

பிள்ளைப்பெற்றபின் ஸ்திரியின் தேகத்திலிருந்து துவாலை பால் என்னும் இரண்டு முக்கியமான நீர்பாயும். முதலிலே துவாலையானது, கருப்பை சுருங்கிச்சுருங்கி வருவதினாலே பருத்திருந்த இரத்தக்குழல்கள் நெக்குண்ண இவற்றிலிருந்து உறக்கப்படும் இரத்தமேயாம். இது சில நாளாய்ச் செந்நிறமாயிருந்து, பின்பு பசுமைசாய்ந்து வசா நீராகி, கடைசியாய் வெளிறிப் படிப்படியாய்க் குறைந்து ஏறக்குறைய மூன்று கிழமையளவிலே முற்றும் நின்றுவிடும். மற்றும் எந்த உறுப்புகளாலே பாயும் நீர் போல, சுரம் அல்லது தாபிதந்தோன்றும்போது, துவாலை மறிந்தாவது குறைந்தாவது நின்றுவிடும். இப்படியாவது சுரதாபிதக்குணங்களுக்கு நல்ல அறிகுறியாகும்.

துவாலை கூடித்திரளும்படியாக விட்டால், அது நாறி அழற்சிகொடுக்குமாதலால் துணையாளி பிரசவ ஸ்திரியின் புனிதத்தைப் பற்றி அதிகங் கருத்தாயிருக்கவேண்டியது. ஒவ்வொருநாளுந் தண்ணீரால் அல்குலைக்கழுவி, கூடுமேயாகில் கருப்பையில்பட யோனிவழியாய்த் தண்ணீரைச் செலுத்தவும்.

பத்துநாளுக்கு மேற்படத் துவாலை மிகுந்து நின்றால் ஏதேனும் வைத்தியஞ் செய்வது புத்தியென்று தினீஸ் பண்டிதர் சொல்லுகிறார். பத்துநாட்சென்றாலென்ன, இருபதுநாட்சென்றாலென்ன, துவாலை அதனப்பட்டு அவப்பயனை விளைவிக்குமெனில், வைத்தியஞ்செய்வது தகுந்தான். பெலவீனமுந் தளர்ச்சியும் பற்றியே பெரும்பாலுங் கடுந்துவாலை இறைப்பது. துவாலைக்கு அதிகம் ஒற்றுமையாயிருக்கும் வெகுநாளாய்ப்படும் வெள்ளை போலவே துவாலையிறைப்பிலேயும் பெலவீனமுங் கடுந்துவாலையும் ஒன்றையொன்று நிலைப்பிக்கும். இக்கருமங்களிலே உயிர்ப்புத் தரு



Digitized by Google

ம் மருந்துகளும் ஆகரியமிலமென்னும் மருந்துகளும் பிரயோகிக்கத் தகும். ஏழாம் அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் பக்குவமே அதியுத்தமம்.

சரிமாசத்தின் கடைசியிலும் சிலவேளை சற்றுமுந்தவும் பால் உண்டாகத் தொடங்கும். பிரசவவேளையிலும், பிரசவித்துச் சிலநாழிகைகளுக்குப் பின்னும், சுரக்கோலமிருக்குமாதலால், அந்நேரம் பால் உண்டாகாமல் விடுவதுண்டு. பிரசவித்து இரண்டு மூன்று நாட்சென்றால் அன்றிப் பால் தோன்றாதென்பதாய்ச் சனங்கள் பேசிக்கொள்வது தவறும் மோசமான பரிகரிப்பை விளைவிப்பதுமாம். இருபது முப்பது நாழிகைக்கு ஸ்திரியானவள் ஆறிச் சற்றே நித்திரைசெய்தபின், பிள்ளையை முலைக்கு அணைப்பது, தாய் பிள்ளை இருவருக்கும் பலனாய் முடியும். முதற்பால் மலமிளக்கக்கூடியதாயிருப்பதினால், கருமலஞ் சுத்தியாகும்படி பிள்ளையிற் சுவறவேண்டியது. பால் ஊற ஊற முலையால் எடுபட்டு வருமேயாகில் முலையிலே பால்கூடித் திரண்டிராது. இதினால் மூன்றாம் நாளில் வாடிக்கையாய்க் காணும் முலைவிம்மலும் சுரமும் உண்டாகா; ஆதலால் சனங்கள் பேசிக்கொள்ளும் விருதா மொழியும் பொருந்தாது. பால் உண்டாகவில்லையென்று தெளிவுறக் கண்டபோது, பிள்ளையை முலைக்கணைத்தால் பிள்ளை பலதரமும் பொச்சடித்து உறிஞ்ச உறிஞ்ச முலைக்காம்பு புண்பட்டு, பின்பு மெத்த வருத்தப்படுத்தும்.

துவாலைமறிவது அல்லது குறைவதுபோலவே, பாலுஞ் சுரத்தாலாவது தாபிதத்தாலாவது மறிந்து அல்லது குறைந்துவிட, இதின்சீரினாலே நாம் நடக்கிற வியாதியை அளவிடலாம். பிள்ளைக்குத் தானாய் முலைகொடுக்க ஸ்திரி எண்ணவிட்டால், நீரலித்த பதார்த்தங்கள் பரிமாறுவதை விட்டு, தாராளமாக மெல்லிய விரேசனங்கள் கொடுக்கவும். முலைகளிற் பால் சுரந்து வருத்தங் கண்டால் கொஞ்ச எண்ணெய் தடவி மெதுவாய் உரைஞ்சி விடவும்; அல்லது பாலைப் பிதுக்கி அல்லது வாயால் உறிஞ்சிக் கழற்றவும். அல்லது தனரேசகி என்னும் கருவியைப்பிரயோகித்து எடுக்கவும்.

பின்னேக்காடு. இது தலைப்பிள்ளைப்பேறுகளிலே சம்பவிப்பது மிகச்சொற்பம். மற்றப்பிள்ளைப் பேறுகளிலே மிகுதியாய் வரும். நேரத்துக்குநேரம் கருப்பையுட்கூ

Digitized by Google

டித் திரண்டுவரும் இரத்தக்கட்டியைக் கழற்றிப் பிதுக்கி விடும்படி, கருப்பையில் உண்டுபடுஞ் சுருக்கத்தினாலேயே பெரும்பாலும் பின்னோக்காடு உண்டுபடும். சிலவேளை மலக்கட்டினாலும் வரும்போலே. சிலரிலே பிள்ளைப் பெற்றநேரந்தொடங்கிச் சிலநாழிகைகளுக்கு நிற்கும். சிலரிலே பிள்ளைப்பெற்று முப்பது அறுபது எழுபதுநாழிகை செல்லமுன் தொடங்காது.

### பின்னோக்காட்டையும் பரியந்திரதபம் என்னும் நோவையும் விகற்பித்தறியும்விதம்.

பின்னோக்காட்டிலே அற்றைக்கற்றை இளக்கங்காணும். வயிற்றிலே ஊன்றிப் பார்த்தால் தாங்கக்கூடாமலிராது. துவாலையும் பாலும் ஒழுங்காய் உண்டுபட்டு நடக்கும். நாடித்துடிப்பு விரைவாக நடவாமல் விட்டுச் சுரமில்லையெனக் காட்டும். மூலைகொடுக்க முயன்றால் நோக்காட்டு வருத்தம் அதிகப்படும்.

இதற்கு அதிகம் வைத்தியம் வேண்டியதில்லை. கருப்பைச் சூழலிலே வயிற்றை மெதுவாய்ச் சற்றே உரைஞ்சி மெல்லிய விரேசனங்கொடுத்தால் நயங்காணும். பின்னோக்காடு கடினமாகி ஸ்திரியிலே உறக்கத்தைக் கெடுத்தால், வருத்தத்தைத் தணிக்கக் கர்ப்பூரநீரமாவது எட்டாம் அவிழ்தத்திற் சொல்லிய சூரணமாவது கொடுக்க வேண்டியது. ஆனாலும் கருப்பைக்குள்ளே இருந்துவிட்டால் மோசத்தை விளைவிக்கக்கூடியதாகிய இரத்தக்கட்டிகளைக் கழற்றும் நோக்கமாய் இன்னோக்காடுகள் இயல்பிலே உண்டுபடுவதாய் இருப்பதினால் மஸ்துள்ள மருந்துகள் கொடுத்து அவைகளைத் தடுக்காமல் பேணிக்கொள்வதே உத்தமம். அணையங் கழன்று விழுந்தவுடனே கருப்பையுள் தண்ணீர் புகட்டினால் இரத்தக்கட்டிகள் கரைந்து ஒரு முறையிலே கழன்று கழிந்துவிடும்; ஆதலால் பின்னோக்காடு மிகுதியாய்த் தோன்றாது.

பிரசவவேளையிலே நடக்கும் இடையூறுகள் சிலஉண்டு. இவ்விடையூறுகளிற் பலவற்றையும் பார்த்து வைத்தியஞ் செய்யவேண்டியவர் சத்திரிகளாகவே இருந்தும், மருத்துவரும் அவற்றை விளங்கிப் பிரசவம் முடிந்தபின் பார்க்க வேண்டியதாதலால், அவ்விடையூறுகளைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.

Digitized by Google

க. விடபங்கிழிதல். இதைப்பற்றி, கஎம். பக்கத்திலே சொல்லியிருக்கிறோம். கிழிவு சொற்பமாயிருந்தால் வைத்தியம் வேண்டியிராது. கிழிந்த இடத்தை நன்றாய்ப் புனிதம் பண்ணிக்கொள்ள வேண்டியது. தொடைகள் அகலியாமல் ஒன்றுக்கொன்று கிட்டநெருங்கி நின்றாற் கிழிவிளோரங்கள் ஒன்றி அண்டிநிற்குமாதலால், இழைப்பற்று அவசியமல்ல. கிழிவு அதிகமோசப்பாடாயிருந்தால் சத்திரீகன் பார்த்துக்கொள்ளவேண்டும்.

உ. யோனித்தாபிதம். அதிக வருத்தமானபிரசவத்தின் பின்பு அல்லது எளிதான பிரசவத்தின் பின்பு தானும், அதிகஞ் சுறுக்காகவேனும் நெடுக ஒரே இரையாகவேனும் ஸ்திரி எழும்பி நிமிர்ந்திருப்பதினாலே யோனியில் வெப்பும், கனற்பும், புண்பாடும் கண்டு, வருத்தமான சலமுடுக்கலும் உண்டாகும். வியாதி அதிகரிக்கில் சீழ்கொள்ளுதல் யோனிப்பக்கங்கள் ஒட்டியொன்றிவிடுதலாய் முடியக்கூடும். பிரசவவேளையிலே யோனிமுதலியன அதிகமாய் அழன்று வெப்புக்கொண்டால் இறந்தை என்ற அழுகல் உண்டுபட, சலப்பை அல்லது மலப்பையால் ஓடு பீறும்.

முகனையிலே தாபிதத்துக்கு வழக்கமான முறையாய் வைத்தியஞ்செய்யவும். ஸ்திரியை நெடுஞ்சானையே ஆற்றியாகப் படுக்கவிட்டு, வெந்நீர்ச்சீலை முதலியவற்றைப் போட்டு, சத்திரீகமுறைக்குரிய வைத்தியங்களையும் உற்சாகமாய் நடத்தவும். ஸ்திரியானவள் தளர்ந்து மெலிந்த தேகத்தை உடையவளாயிருந்தால் இறந்தை உண்டுபடுமென்றெண்ணி மகாவிழிப்பாய் இருக்கவேண்டும். சலப்பையிலே சிறுநீர்கூடக்கூடச் சிராவணிவிட்டுச் சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

தாபிதம் மும்முரமாகி இறந்தையும் உண்டுபட்டால், யோனிக்குழல் சுருங்காமலும் ஒட்டி ஒன்றாமலும் அடைபட்டுப்போகாமலும் விலக்கிக்கொள்ளும்படி, புண்ணாறுதல் முற்றுகிறவரையும் யோனிக்குநேரிடும் மோசத்தைவிலக்கும்படி அதிக சிந்தையாயும் இருக்கவேண்டும். இறந்தை உண்டுபட்ட முகனையிலே நாளொன்றுக்கு இரண்டுதரம் போதுமான பருமையுள்ள திரி யோனியிலிட்டு, பின்பு சுபஞ்சுத்திரி வைத்து வரவேண்டும். இவ்வகையான பக்குவங்களிலே அசட்டையாயிருந்ததினாலே யோனிப் பக்கங்கள் ஒட்டி ஒன்றிப்போனதென்றும், அக்கருமத்

Digitized by Google

-த்தைத் தாம் பார்த்தபோது யோனிக்குழல் மேவி அற்றுப் போயிற்றென்றும் மெச்சு பண்டிதர் சொல்லியிருக்கிறார். றன்றூல்வு என்பவர் கிருத்தியசகாயஞ்செய்து அவளைச் சுகப்படுத்தினார்.

௩. இதழ்க்கன்றல். கடுமையும் வலிங்கரமுமான பிரசவவேளையிலே ஏதேனும் இரத்தக்குழல் வெடித்து இதழ்களை இழைத்திருக்கும் தளர்ந்த தசைக்குள் இரத்தம்வடிய, இதினால் இதழ்கன்றிப்போம். சிலவேளை இதழானது திடீரென ஒரு தேங்காயளவுக்குப்பருத்து பிள்ளைப்பேற்றுக்குத் தடக்காம். தசையுள் வடியும் இரத்தம் உறையாமலிருந்தால்அதை வெளியில் எடுத்துப்போடவேண்டியது. இரத்தப்பெருக்கு உண்டாம் என்று அஞ்சவேண்டியதுமில்லை. யோனிக்கு அடைப்பஞ்செய்தால் அதுநின்றேவிடும். இரத்தம் உறைந்துவிட்டிருக்க, கன்றல் சொற்பமாயிருந்தால் அந்நேரத்து வருத்தம் அதிகமாயிராது; அது தானாய் வற்றிப்போம் என நம்பி வெட்டாமல் சும்மாய்விட்டுவிடலாம். கன்றல் அதிகமாயிருந்தாலோ இரண்டுநியாயங்களினால் வெட்டித்திறக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். முதலாவது அந்நேரத்திலே சகிக்கமுடியாத வருத்தம் மோசமான அவத்தையை விளைவிக்கும். இவ்வகையான கன்றலால் உண்டான வருத்தத்தினாலும் அழர்ச்சியினாலும் மாரூட்டம் உண்டாய் மரணமும் நேரிட்டதென்று எழுதியிருக்கிறார்கள். இரண்டாவது இதழ்களிலே கன்றியிருக்கும் அதிகமான இரத்தந் தானாய் வற்றிப்போமென்று நம்பக்கூடாது. தோழிலே சீழ்கொண்டு துவாரப்பீறல் ஒன்று உண்டுபடும். ஸ்திரியானவள் இவ்வளவு அவத்தையான வருத்தம் சகித்தபின் துவாரப்பீறல் உண்டுபடுமேயாகில், முதலிலேயே வெட்டித் திறந்தால் வரும் கேட்டினும் பார்க்க அது அபத்தமான கேடாகும். இரத்தக்கட்டிகள் கூடியளவு சுறுக்காய்க்கழன்று கழியும்படி வீங்கியிருக்கும் நீட்டளவுக்கு நன்றாய் வெட்டித்திறக்கவும். பின்பு இளஞ்சூடான அரிசிக்கழியிலே கள்ளுமண்டி சேர்த்துப் பிசைந்து இடவும்.

௪. சலமறிப்பு. சிரோத்தாபமென்னும் வெடுவெடுப்புக்குணமுள்ள ஸ்திரிகளிலே சிலவேளை சலமறிப்புக்காண்கிறது. சலப்பையிலே மறுபடி எழெட்டுநாளையிலே சலங்கழிக்குஞ் சுயபெலங் தோன்றும் வரைக்கும், நாளொன்று

Digitized by Google

க்கு இரண்டுதரம் சிராவணியிட்டுச் சலசுத்திசெய்யவேண்டியது. பிரசவத்தைப்பற்றிய அபாயங்களுக்கு ஸ்திரி தப்பின பின்னும், சலமறிப்பு நிலைப்படுமேயாகில் பெலன்தருமருந்துகள் பிரதானமாய் அயரசிதங்கள்கொடுத்து முதுகின்கீழ்ப்பகுதியிலே நடுப்பெறக் கொப்புளப்பற்று போடவேண்டியது.

௫. சலமொழுகல். இதுவும் பிரசவத்தின்பின் சிலவேளைகாண்கிறது. சலஉறுப்புகளிலே யாதொரு சேதமில்லாதிருந்தால் இது நெடுகிநிற்காது. சலமறிப்புக்குச் சொல்லிய வைத்தியமே இதற்கும் அமையும்.

௬. அரிசம். வியாதிகாரணமாய் அபானத்திலுள்ளமூளைகள் பிரசவவேளையிலே அமர்த்துண்ண, இதினால் வெப்பும் அதிக திரட்சியுமுண்டுபட்டு, பிரசவ ஸ்திரிகளுக்குமிக வருத்தமுஞ் சோலியும் உண்டாவதுமுண்டு. வெந்நீர்ச்சிலை இடுவதினால் சகாயங்காண்பதுண்டு; ஆகிலும், சிலவேளை அட்டையிடவேண்டியும் இருக்கும். ஐந்தாறு அட்டையிட்டு இவை கழன்றுவிழுந்தபின் சற்றேசூடான பாப்பை அல்லது வெந்நீர்ச்சீலையிட்டால், இரத்தப்பாய்வுக்கு உவப்பாகி அதிக சகாயமுங்காணும். வெப்புத்தணிந்தபின்பு, ஒன்பதாம் அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் பூச்சுமருந்தை இடவும்.

௭. முலைகொடுப்பதற்கான விக்கினங்கள். இவைகளுள் இரண்டேவிசேஷமுடையன. முதலாவது முலைக்காம்புக்குறுக்கம். இதுவே மெத்தக்கேடானது. முலைக்காம்பு முலையுள் அமர்ந்திருப்பதினால், பிள்ளையின் உதடுகள் கவ்விப்பிடிக்க ஒன்றும் இல்லாதிருக்கும். இப்படியிருந்தால் சூசுகரேசகி என்னுங் கருவியிட்டு அல்லது சற்று வளர்ந்த பிள்ளையை முலைக்கணைத்து, காம்பை நீட்டி உடனே குழந்தைதைக்கு முலைகொடுக்கவும். இரண்டாவது, முலைக்காம்பு புண்படல். சில ஸ்திரிகளின் முலைக்காம்பு மிகமிருதுவும் தோலுரிந்துபோகக் கூடியதுமாயிருக்கின்றது. பிரசவிக்குமுன்னே காரியமிப்படி என்று அறிந்தால், காற்றுப்படவிட்டுஞ் சாராயந் தடவியும், அவைகளைச் சற்று வன்மையாக்க வேண்டியது. புண்பாடு உண்டுபட்டால் அப்புண் மாறுவதற்கு இடமாய் சூசுகரட்சை என்னுங் கருவியை இடவும். இதினால், பிள்ளையின் வாய் காம்பில் அழுந்துவதை விலக்கிக் கொள்ளலாம். சூசுகரட்சை இட்டு

Digitized by Google

த்துடனே, க௦ம். ககம். அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் மருந்தில் ஒன்றை இடவும். சிலவேளை பிள்ளையின் வாயி லிருக்குங் கலிதட்சதப்புண் கிரந்திப்புண் காம்பிலே தொ ற்றிவிடவுங் கூடியது. அப்படியாகில் அதிக எச்சரிப்பா ய் அதைப் பார்த்து மாற்றவும். காடிக்காரத்தை முலைக்கா ம்பில் தடவினால் சிலவேளை நயங்காணும். ஆனாலும் சில ரிலே வெப்பு அதிகரிக்கக் கூடும். இம்மருந்தால் நயமோ நஷ்டமோ என முதலிலே தெளிந்து கொள்ள ஏலாதாகை யால், இவ்வைத்தியத்தில் சாவதானம் வேண்டியது.

Digitized by Google

## உகம். அதிகாரம்.

### பிரசவசுரம், அல்லது காயாசுவாதம்.

இதில் மூன்று விதம் உண்டு. க. தாபிதவிதம். உ. தோஷவிதம். ௩. கலவைவிதம்.

க. தாபிதவிதம். இதற்கும் பரியந்திரதபம் என்னும்நோய்க்கும் உள்ள வித்தியாசஞ் சொற்பம். நல்லதேகத்தையுடைய ஸ்திரிகளிலும் இது உண்டுபடும். இது கொள்ளைநோயாய்ப் பரம்புகையில் அக்காலத்தில் உண்டாகும் மற்றும் வியாதிகளும் சினப்புக்கொண்டு நடக்கும். இதின் காரணங்களாவன, குளிர்பிடித்தல், பிரசவவேளையிலே வயிற்றை அதனமாய்ப் பிசைதல், தீனிலே ஒழுங்கீனம், தொற்றுமாயிருக்கும்.

இதின்குணங்களாவன, பிரசவித்த இரண்டாம்மூன்றும் நாலாம்நாளிலே குலைப்பன் கூதல் உண்டுபடுதல். வயிற்றிலே அவதானமாய்த் தடவிப்பார்த்தால், கருப்பைச் சூழலிலே சற்றே நொய்வுதோன்றி, பின்பு அதிகப்பட்டு வயிறடங்கலும் பரம்புதல். வயிற்றுநோ இடைக்கிடை சினப்புக்கொண்டு சற்றுவேளையாகுதல் முற்றுந் தணியாமல், சிறிதுநேரத்தின்பின்வருத்தங்கடுமையாகும். போர்வைகூடச் சகிக்கப்படாத பாரமாய்த் தோன்றும். வயிறு தளரத்தக்கதாய் ஸ்திரியானவள் கால்களை முடக்கி மல்லாந்துபடுத்துக்கொண்டு, வயிற்றுக்குடல்களிலே அதைத்து நோகாமல் சற்று மேல்மூச்சாய்ச் சுவாசிப்பாள். குலைப்பன் கூதலின்பின், வெட்டும் மேற்சூடும் தாகமும் நெற்றியிலே கடியநோவும் உண்டுபடும். முகத்திலே பார்த்தால் அதிகம் உபாதியான வருத்தம் என்றது விளங்கும். நாடித்துடிப்பு விரைவாகிச் சிலவேளை நிறைவும் இடிப்புமாயிருக்கும். சிலவேளை வன்மையாய் விரலுக்கு எழிதாய் அமர்ந்துநில்லாது. நாக்குப் பெரும்பாலும் வெள்ளைபூர்த்து ஆடைபிடித்திருக்கும்; ஆனாலும் பலகோலங் கொள்வதுண்

Digitized by Google

௫. மலம் கழியாமல் இறுகி, சலஞ் சொற்பமாகி, பாலுந் துவாலையும் மறிந்துவிடும். வியாதியைத் தடுக்காமல்விட்டால், வயிறு மத்தளம்போலப் பொருமி, மலக்கழிச்சலும், கருமையான வாந்தியுங்கண்டு, நாடித்துடிப்பு விழுந்து, குறுமூச்சுக்கொண்டு, சிலவேளை நெஞ்சிலே வலுமுட்டு உண்டாய், வியாதியின் நாலாம்நாளிலே சிலவேளை இதற்குமுந்தப் பிராணசேதம்வரும்.

சிலவேளை முகனையிலே இவ்வியாதியைக் கடிய பின்னோக்காடென்றும், குடல் அழற்சியென்றும், வயிற்றிலுங் கருப்பையிலும் உண்டுபடுஞ் சராயிகைநோய் என்றும் மனந் தடுமாறக்கூடியது. இடையாற்றிநேரமில்லாமையினாலும், ஊன்றிப்பார்த்தால் நொய்வு இருப்பதினாலும், சுரக்கடுமையினாலும், பின்னோக்காடு அல்லவென்று விகற்பித்துத் தெளியலாம். குடல்களிலே பிசகுப்பட்டிருப்பதை விளக்கும் முற்குறிகளினாலும், ஊன்றிப் பார்த்தாற் கடுநொய்வு தோன்றாமையினாலும், குடல்அழற்சிஅல்லவென்று தெளிந்துகொள்ளலாம். உடம்பிலே நமது கை சருவமுன்னேயே ஸ்திரியானவள் உபாதியினீட்டம் அலறுவாள். ஆதலால் சராயிகைநோயோ என்ற சந்தேகமான சமயங்களிலே ஸ்திரியின் மனசுக்குச் சற்றே வினோதங்காட்டிக்கொண்டு அவளுடைய வயிற்றின் மேலே கையைச்சூதாய் வைத்து, படிப்படியாய் உரக்க ஊன்றிப் பார்த்தாலும், முதலிலே அவள் சகிக்க மாட்டாமல் அஞ்சி எங்கின ஊன்றலை லகுவாய்ச் சகித்துக் கொள்ளுவாளாகில், தாபிதமல்ல சராயிகை என்று தெளியலாம்.

தாபிதவிதத்தின் பிரேதசோதனையில் தோன்றுங் குறிகள் வாடிக்கையான பரியந்திரதபம் என்னும் வியாதியிலே தோன்றுங் குறிகளுக்குச் சமானமாகவேயிருக்கும். பிர்தானமாய்க் கருப்பையைச் சூழ்ந்திருக்கும் பரியந்திரசவ்வானது தடிப்பும் இரத்தக்குழற்கிளைப்புமாய்ப் பேசிசப்படலம் படர்ந்ததாயிருக்கும். வயிற்றுக் குடல்கள் சிலவேளை இப்பேசிசத்தினால் ஒருமிக்கப்பசையுண்டு அவைகளுக்கு இடையிலே மோர்நிறமான நீர்த்த சீழ் கக்குண்டு பேசிசக்கட்டிகள் அந்நீரிலே கலந்ததாயிருக்கும். சிலவேளை அவளிகையானது தாபிதங்கொள்ளும். குடல்களுக்குள்ளும் புறத்தியிலும் வாய்வு அதிகமாய்ப் பொருமியிருக்கும். நெஞ்சறையிலே சுவாசப்பைக்கு

Digitized by Google

ள்ளும் புறத்தியிலும் வசாகீர் கக்குண்டு கிடக்கும். சில வேளை பேசிசம் படலமாய்ப் பரவியிருக்கும்.

உ. தோஷவிதம். இச்சுரம் மெலிந்த தேகத்தையும் தேம்பிய மனசையும் உடையவர்களாய், சுவாத்தியவீனமான இடங்களில் வசித்து, கருப்பையில் இரத்தப்பெருக்கினுல் அல்லது கையளைவினுல் அவலப்பட்டவர்களாகிய ஸ்திரிகளிலேயே உண்டுபயும். இது கொள்ளைநோயாய் பரம்பும்போது சினப்பற்றசுரம் செந்நீநோய் வியாபதாபிதம் முதலிய பெலக்கேடுள்ள வியாதிகளோடுங் கூடிநடக்கும். சிலவேளை வைத்தியசாலைகளிலே இவ்வியாதிகள்போற் கடியகூறை செய்வதும் உண்டு.

இதின் குணங்கள் தாபிதவிதத்திற் போலத் துலக்கமல்ல. சொற்பா சொற்பமாய் நோவுண்டு. முகனையிலேயுங் கருப்பையின் மேல் உரப்பாக ஊன்றிப்பார்க்கும் வேளையில் அன்றி மற்றும்படி நொய்வு இருப்பதரிது. குலைப்பன் கூதலுடனே பெரும்பாலும் இவ்வியாதி தொடங்கினும், சிலவேளை இக்குணமும் நன்றாய் விளங்காது. நாடித்துடிப்பு விரைவுந் தளர்வுமாய், தாபிதவிதத்திலேயிருக்கிறதற்கு மாருய், சொற்ப அமர்த்துதலுக்கு நின்றுவிடும். உறக்கலின்மையும் பெலவீனமும் மிகுந்த சோர்வுமிருக்கும். இக்குணங்களெல்லாம் முகத்திலே நன்றாய் விளங்கும். முகனையிலே தொடுத்து ஸ்திரியின் முகத்திலே எம்பலிப்பானது தெளிவாய் விளங்கி, முகத்தைக் கண்டவுடனேயே வியாதி இன்னின்னதென்றுமட்டுக்கட்டிக் கொள்ளக் கூடியதாயும் இருக்கும். தேகத்திலே சூடிருப்பதரிது. வியாதியின் பின்னடியிலே தெள்ளுக்கடி போல் மேனி எங்குங் காணக்கூடும். சுவாசம் விரைவு கொள்ளும். துவாலையும் பாலும் மறிந்து விடும், அல்லது துவாலை குறைந்து நாறலாகும். கடைசியிலே மலக் கழிச்சல் உண்டுபடுவதுமுண்டு. சிலவேளை நாக்கு வழக்கம் போலச் சுத்தமாய் அல்லது நீலஞ்சாடிய வெள்ளாடைகொண்டதாய், அல்லது கருமை சார்ந்ததாயிருக்கும்.

ஸ்திரியானவள் விரைவிலே சோரச் சோர, வியாதிமே விட்டு, சில நாழிகைகளிலே அல்லது இழுகியிழுகி நின்று எறக்குறையப் பதினுலு நாளிலே பிராணசேதமாய் முடியும். சிலரிலே பிரசவத்துக்குச் சில நாளுக்கு முன்னே இவ்விதமான சுரம் உண்டாய்விட்டதென்றும், கஷ்

டபிரசவங் காரணமாகவே இது உண்டுபெட்டதென்றெண்ணிய அனேக கருமங்களிலே இதுவே கஷ்டபிரசவத்துக்குக் காரணம் என்றும் நம்ப இடமிருந்தது.

பிரேதசோதனையிலே தோன்றும் பழுதுகள் தாபித வித த்திற் கண்ட குறிகளுக்கு ஒருவாறு வித்தியாசமாயிருந்த போதிலும், அவைகள் ஒருவகையான தாபிதத்தால் விளைந்த பயனேயாம். வயிற்றுக்குள்ளே கக்குண்டிருக்கும் வசாநீரானது தாபித விதத்திற் போல் மிகுதியல்ல. அத்தோடே பேசிசம் மெத்தத் தோன்றாது. கக்குண்டிருக்கும் வசாநீர் செங்கல்மங்கலாய் அழுக்குக்கொண்டதாய்ச் சிலவேளை நெய்த்திவலையும் சீழுஞ் செறிந்ததாய் இருக்கும். குடல்களைச் சூழ்ந்து மூடுஞ் சவ்வுக்குள்ளடுத்ததாயிருக்கும் கண்ணறைகளிலும், கருப்பைச் சிறையின் பட்டுகளுக்கு இடையிலும், சிவப்படைசிய வசாநீர் அல்லது ஓர் தடித்தநீர் அதிகம் பொசிந்து கிடக்கும். இப்படியான வசாநீர் கருப்பை இழைகளுக்குள்ளும் மிகுதியாகக் கக்குண்டிருந்து, இதினால் கருப்பைப் பதார்த்தம் மென்மையாகி வேறுபட்டு அழுகின கோலங்கொண்டு இடைக்கிடை சீழ்கட்டினதாயிருக்கும். சிலவேளை கருப்பை உள்ளுறைப்படலம் துண்டந் துண்டமாய் மென்மையாகி கருமை நிறம் அல்லது சாம்பல் நிறந்தாவியிருக்கும். இவ்வகையான வேறுபாடுகள் சிலவேளை குடலிலுள்ள சவ்வுகளிலுந் தோன்றும். சிலவேளை சினைப்பைகள் பருத்துச் சீழ்ப்பைகளாகி, தொட்டால் தகர்ந்துபோகத்தக்கவாய் மெதுமெதுப்புக் கொண்டிருக்கும். சிலரிலே கருப்பையின் சோஷணிகளிலும் நாழங்களிலும் சீழ் நிறைந்திருக்கும். கருப்பைக்குத் தூரமாயிருக்கும் சுவாசப்பை பிளிகை நரல் பொருத்துகள் கண் மூளை முதலியவற்றிலேயும் சீழ்த்திரளைகளும் நிர்வியூடி என்னும் அழுகல் போன்ற வேறுபாடும் அநேரமே உண்டுபடும். பரிதாபமான இக்கருமங்களிலே தோன்றும் வியாதி பிரேதசோதனையிலே படுங் காயங்களைப் பற்றியாவது, தேசத்திலே செந்நீர்நோய் பரம்பிவருங் காலத்திலே பழுதுபட்ட உடம்புடைய நோயாளிகளிலே நடத்துஞ் சத்திரீக வைத்தியத்தினாலாவது உண்டுபடும் வியாபதாபிதத்துக்குச் சமானமாயிருக்கும்.

௩. கலவை விதம், உரப்பான தேகத்தை உடைய ஸ்திரிகளிலே மெலக்கேட்டுக்குச் சார்பாகுங் காலப்போங்

Digitized by Google

கான வேளையிலே இவ்வியாதி தோன்றும். இதிலே முன் சொல்லிய இருவிதச் சுரங்களுக்குரிய குணங்களும் கலந்து வரும். தாபித விதத்துக்குரிய அமராக்கடுமையுள்ள நாடித்துடிப்பு இல்லாமலும் ஒருவாறு நோவும் நொய்வுங் காணும். இரத்தம் வாங்கின பின்பு மிகுந்த பெலவிறுதியும் அற்ப சகாயமுங் காணும். இரத்தத்திலே தாபித விதத்துக்குரிய பேசிசப்படலமேனும், தோஷ விதத்துக்குரிய கலங்கியுறைவதரிதாகுங் குணமேனும் தோன்றாது. பரியந்திரமாகிய வயிற்றினுள்ளுறைச் சவ்வு தாபிதங்கொண்டிருக்கிறதென்றும் பிரேதசோதனை செய்யும்போது பெரும்பாலும் விளங்கும். ஆனாலும் தாபித விதத்துக்குரிய குடலொட்டி ஒன்றலாகிய குணமுமிராது. தோஷவிதத்துக்குரியனவாகிய வசாநீர் கக்கலும், கருப்பையோடு சேர்ந்த உறுப்புகளிலே வேறுபடுவதிற்கான சார்பும் பெரும்பாலும் மட்டாகத் தோன்றும்.

பிரசவசுரம் தொற்றோ தொற்றல்லவோ என்றதைப் பற்றிய வித்தியாசமான எண்ணங்களுண்டு. இவ்வகையான மற்றெந்த வினைவையும் போல் இதையும் அறுதியிட்டுக் கொள்வது மிகப் பிரயாசம். இன்னின்ன துணையாளியின் வழியாய் அல்லது மருத்துவர் வழியாய் இவ்வியாதி தோன்றினவாகிய அனேக கருமங்களைப்பற்றி எழுத்திலே வந்திருக்கிறபடியால், இதைப் பிறரிலே தொற்றுவியாதபடிக்கான அவதான எச்சரிப்புகள் இல்லாமல் ஆரேனும் இருப்பாரேயாகில் மிகவுங் குற்றவாளியென்று எண்ணவேண்டியது. பிரசவசுரங்கொண்ட ஸ்திரியைப் போய்ப்பார்த்தபின் மருத்துவர் தம்முடுப்பைக் களைந்து நன்றாய் மூழ்கிச் சுத்திசெய்து வேறு உடுப்புத் தரித்துக்கொள்ள வேண்டும். இவ்வியாதியில் அகப்பட்டு இறந்துபோனவர்களைப் பிரேதசோதனை செய்யும்படி மருத்துவர் எவருந் தாமாய்க் கைவிட்டுக் கொள்ளப்படாது. சகல எச்சரிப்புகளிலேயுஞ் சாவதானமாயிருந்தவிடத்திலும் தம் பரிகரிப்பின் கீழிருக்கும் அனேகரிலே இச்சுரமானது தாவித் தாக்குமேயாகில், மருத்துவர் சிறிது காலம் வைத்தியஞ் செய்யாமல் விட்டு, கூடுமேயாகில் தம் வீட்டையும் விட்டு விலகிச் சில காலம் அப்புறப்பட்டிருப்பதும் அவருடைய கடமையாம்.

Digitized by Google

பிரசவசுரத்துக்கு வைத்தியஞ் செய்யும் முறை சுரத்தின் விதத்துக்குத் தக்கதாய் வித்தியாசமாகும்.

தாபிதபிரசவசுரத்துக்கு

முகனையிலே வெப்பைப்போக்கும் வைத்தியமே செய்யவேண்டியிருக்கிறது. இரத்தம்வாங்குவதிலே அதிக சகாயங்காண இடமுண்டு. இரத்தஓட்டத்தின் மும்முரத்தைத் தணிக்கத்தக்களவாய்ப் பத்துத்தொடுத்து இருபது அவுன்சளவுக்கு இரத்தம் வாங்க வேண்டியது. அதிக வாய்ப்பாய் இரத்தம் வாங்கும்படி ஸ்திரியானவள் சரிந்துபடுத்து இருக்கையிலே நாளமொன்றிலே பெருந் துவாரம் இட்டு, இரத்தம் வெளியில் வடிவதுபற்றி நாடித்துடிப்பிலும் முகத்திலும் உண்டுபடும் வேறுபாடுகளை அவதானமாய்ப் பார்த்தறிந்து கொள்ளவேண்டியது. இவ்வியாதிக்காய் இரத்தமெடுக்கையிலே ஸ்திரியானவள் நிமிர்ந்திருப்பாளேயாகில், இரத்தம்வாங்குவதினாலன்றி இப்படியிருந்ததினாலேயே மூர்ச்சனை உண்டுபடுமென்றும், இரத்தம் எடுப்பதினால் விளையும் நயத்தைக் கெடுத்துப்போடுமென்றும் குசாக்கு பண்டிதர் சொல்வது மிகவுஞ் சரியே. முதலெடுத்த இரத்தத்தின் சாங்கத்தையும், அதினால் விளைந்த நலமிழப்பத்தையும் கண்டே, மறுபடியும் இரத்தமெடுக்கலாம் எடுக்கப்படாதென்று தீர்த்துக்கொள்வது. இரத்தத்தின் சாங்கமும், நாடித்துடிப்பு அமர்ந்துநிற்றல் அல்லது அமர்ந்து நில்லாமையும் செய்யவேண்டியவைத்தியம் இன்னதென்று தெளிவாகக்காட்டும். இரண்டாந்தரமும் இரத்தம் எடுக்கலாமோ என்றதைப் பற்றிய சமுசயமிருந்தால், வயிற்றிலே அட்டையிடலாம். இரத்தம் எடுக்கத் தகுமெனக் கண்டால் கூடியளவு வியாதியின் முகனையிலே அப்படிச்செய்யவேண்டியது. சற்றுநேரதல் காலதாமசம் பண்ணிப் பின்பு இரத்தம் வாங்கினால், பிரயோசனமுமின்றிக் கேடுமாய் முடியும். நாடித்துடிப்பு மட்டாக வன்றும் விரலுக்கு அமர்ந்துநில்லாமல் நடக்குமேயாகில், இதுவே இரத்தம்வாங்குவதற்குத் தகுந்த குறியாயிருப்பதினால், ஸ்திரியிலே பெலவீனம் ஒருவாறு இருந்தபோதைக்கும் இரத்தம் வாங்காமல் விடப்படாது.

இரத்தம்வாங்கினபின்பு நமது புத்திக்குத் தோன்றுகிறபடி அட்டையிட்டாலென்ன, இடாமல் விட்டாலென்ன, சகிக்கத்தக்க அளவு சூடானபதத்திலே, வயிறடங்கலுக்



Digitized by Google

தர்ப்பந்தீன் நனைத்தசீலையிடுவதினுல், அல்லது மெல்லிய சிறுசாக்கிலே தவிடுபோட்டு வெந்நீரிற் தோய்த்து வயிற்றிலிடுவதினுல், அல்லது வெந்நீர்ச்சீலை பிழிந்துபோடுவதினுல் அதிகலாபங்காணும்.* தர்ப்பந்தீன் இடுவதினுலே தொல்லையான வாயுப்பொருமலும் நீங்கிச் சிலவேளை மலசுத்திகளுங்கண்டு மிகுதியாய் அதிக நயந்தோன்றும். மலக்கட்டிருந்தால், அரைஅரை அவுன்சு தர்ப்பந்தீனும் ஆமணக்கெண்ணெய்யுங் கலந்து ஓர் சுள்ளாப்பான விரேசனமாகக் கொடுக்கவும். அல்லது பத்துக்கிறேன் சலப்பும், ஐந்துகிறேன் கலமலுஞ் சேர்த்து ஓர் குளிகை கொடுத்து, பின்பு பாயுரியம் புகட்டவும். கொடுத்த குளிகை சுறுக்கிலே செயங்காட்டாவிட்டால், கஙு ம். அவிழ்தத்திற் சொல்லிய கஷாய விரேசனத்திலும் கொடுக்கவும். உவட்டிப்பு இருந்தால் கஷாயத்துக்குப் பதிலாய், கஉ ம். அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் குழிகையைக்கொடுப்பது புத்தி. மலசுத்தி தாராளமானபின், விரேசன மருந்துகள் கொடுத்துக் குடலை அழற்றுவது புத்தியல்ல. இரத்தமெடுத்து, குடற்சுத்தியுங் கண்டபின்பு, நாம் நம்பிக்கைகொண்டு செய்யவேண்டிய மருந்துகள் கலமலும் அபினுந்தான். தேகத்திலே செயம்விளைவிக்குமளவும் ஐந்து நாழிகைக்கொருமுறை இரண்டு மூன்றுகிறேன் கலமல் கொடுத்துவரவும். இதினுல் வயிற்றுக்கழிச்சல்கண்டால், கலமலுடனே காற்கிறேனுக்குட்பட அபினுஞ்சேர்த்துக் கொடுக்கலாம். இராவிலே, தோவர் சூரணத்திற் பத்துக்கிறேன்அளவு கொடுத்தால் நித்திரையும் வரும் சகாயமுங்காணும். வாயிலே கேட்டுதாகில், காரியம் அனுகூலமாகவே முற்றும் எனத்தெளிந்துகொண்டு, வாயில் வெக்கையைச் சொற்பமாக நிலைப்பிக்கத்தக்கதாய் இதரத்தைக் குறைத்துக் கொடுத்துவர வேண்டியது.

வயிற்றில் உண்டாகும் வெப்பு நோய்களிலே பிரதானமாய் இவற்றின் தொடக்கத்திலே கொப்புளப்பற்றுகள் இட்டால்நோவையும்நொய்வையும் மறைத்துப்போடும். இப்

---

* தர்ப்பந்தீன இடும்படி, கம்பளித்துண்டொன்றெடுத்து, கொதிவெந்நீரிற்தோய்த்துப் பிழிந்து அதிலே இரண்டொருஅவுன்சு தர்ப்பந்தீன் வார்த்துத்தடவிஇடவும். இம்மருந்தால் எரிவுவருத்தம் உண்டாகக்கூடும் என்று ஸ்திரீக்கு அறிவித்து, வருத்தங் கடினப்பட்டால்அளுத்தத்தள்ளிப்போடச்சொல்லவேண்டும். இவைகளின் சூடு கெடுகோமிருக்குமபடி காலாருப் மடித்த வேஷ்டியினுல் திறமாய் மூடவும்.

படியே நமக்கு உத்தம வியாதிக்குறிகளாயிருக்கும் இவற்றையும் முற்றாய் ஒழித்துவிடுமாதலால் கொப்புளப்பற்றிடுவது என் புத்திக்கு நன்றாயிருக்கவில்லை. ஆகிலும் வியாதியின் முடிவிலே பெரும்பாலும் கொப்புளப்பற்றால் நயங்காணும்.

இவ்வியாதிக்கு கடும் பத்தியம் வேண்டும். வியாதி தணிந்தாலும், மறுபடியும் வரக்கூடிய சார்பு இருக்கிறபடியால் மறுதலையாதபடி மறித்துக்கொள்வதற்கான எச்சரிப்புகளிலே நிதார்த்தமாயிருப்பது அவசியம்.

தோஷப்பிரசவசுரத்துக்கு

வைத்தியஞ் செய்வதிலே இரத்தம்வாங்குவதினால் எப்போதும் மோசமே விளைந்து பிராண நாசமும் விரைவாகும். வைத்தியஞ் செய்வதிலே கட்டுப்படாத இவ்வியாதிக்கு அதிக நம்பிக்கைகொண்டு கொடுக்கக் கூடிய மருந்துகள், கலமலும், அபினும். ஸ்திரியானவள் நித்திரையாவது ஆற்றியாவது இன்றி அதிக உபாதிப்படுகிறதாயிருப்பதால், அவள் திறமாக நித்திரைகொள்ளுந் தனையும் அல்லது கலமல் வாயில் கேட்கும் வரைக்கும் எட்டுப் பத்து நாழிகைக்கொருமுறை ஒரு கிறேன் அபினும், இரண்டு நாலு கிறேன் கலமலுஞ் சேர்த்துக்கொடுத்துவரவும். சிற்சிலவித தோஷங் கூடிய வெப்புநோய்களிலே அபினால் அனுகூலங் கண்டிருக்கிறது. இவ்வியாதியிலேயும் அபின் தாராளமாய்ப் பிரயோகிக்கலாம் என்றதற்குச் சற்றே தைரியமுண்டு. குடலிலே மலக்கட்டிருந்தால் அல்லது குடல் இரை முதலியவற்றால் திணிந்திருந்தால், கூம். அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் றூவாப் பானீயம் போறபட்டதாய் மலத்தை இளக்குவதாய் மாத்திரம் இருக்கும் சொற்ப காங்கையான சுக விரேசனங் கொடுக்கவும். ககூம். அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் முறையாய்த் தர்ப்பந்தீன் கொடுத்தால் உத்தமம் என்று சிலர் சொல்லுகிறார்கள். சிலவேளை இம்மருந்து மலத்தை இளக்குகிறதல்லாமல் குடல்களுக்கும் சுவாத்தியங் கொடுக்கும். கடுமையான விரேசனமேதுங் கொடுத்தால் பெலவீனத்தை அதிகப்படுத்தி மிகுந்த சோலியான கழிச்சலையும் விரைவிலே வருவிக்கக் கூடுமாதலால், அப்படியான விரேசனங் கொடுப்பதைப்பற்றிச் சாவதானமாய் இருக்கவேண்டும். அவ்வகைக் கழிச்சல் கண்டால் கஞ்சித்தெளிவும் லாடனமுங் கலந்து

Digitized by Google

அபான வழியாய்ச் செலுத்தி அதைத் தடுத்துப் போடவேண்டியது. தர்ப்பன்றின் வெளிக்கு இடுவதினாலும் மிகுதியாய் நயங்காணலாம்.

பத்திய பாகம் முதலிய பரிகரிப்பைக் கருத்தாய் நடத்தவேண்டியது. காய்ந்ததும் காற்றுலாவத்தக்கதுமான ஓர் கூடத்திலே ஸ்திரி இருக்கவேண்டும். பெலத்துக்கு ஆதரவாயும் அந்நேரம் கொண்டிருக்கும் அசீரணம் தணியும் பக்குவமாயும் திராட்ச ரசத்தைத் தண்ணீரில் அல்லது அரோற்றுக் கஞ்சியில் கலந்து கொடுக்கவும். ஆறின கோழியாணங் குடித்துவந்தால் பெரும்பாலும் நன்றாய் இணங்கும். சகங்கண்டால் உயிர்ப்புத்தரும் மெல்லிய மருந்துகளும் சிலவேளை இனிநுங் கொடுத்து ஸ்திரியைச் சுகப்படுத்தி எழுப்பிக்கொள்ளவேண்டியது. வியாதி மறுதலையாதபடி எப்பொழுதும் விழிப்பாய்ப் பார்த்துக்கொள்ளவும்.

கலவைப் பிரசவ சுரத்துக்கு

வைத்தியம் முன்சொல்லிய இருவிதச் சுரத்துக்கும் கூடே அவதானமாய்ச் செய்யவேண்டியது. கலமதும் அபினுந்தான் நமக்கு முதல் நம்பிக்கை. இரத்தம் எடுப்பது நயமல்ல, ஆகிலும் அடிவயிற்றிலே பத்து இருபது அட்டை இடுவதினால் மிகு நலங்காண்பதும் உண்டு. நோவுக்குங் கொய்வுக்கும் தக்கதாகவும் இரத்தம் எடுத்ததினாலே ஸ்திரியில் விளங்குஞ் சிருக்குத்தக்கதாகவும் மறுபடியும் அட்டையிடலாம். ஸ்திரியின் உணர்ச்சிக்குப் பிரியமாயிருந்தால் வயிறடங்கலுந் தண்ணீர்ச்சீலை போடுதல் முதலிய குளிர்மைகளைச் செய்யலாம். இவைகளின் குளிர்மை குறையாதபடி அடிக்கடி மாற்றி மாற்றியும் போடலாம். கொஞ்சமாகத் தாத்தர்அந்திமோனி கொடுத்து ஸ்திரிக்கு உவட்டு உண்டுபண்ணிவிடவும்.

இவ்விதமான சுரங்கள் மூன்றுக்கும் வைத்தியஞ்செய்யும்பொழுது ஒருவிதம் மற்றொரு விதமாய்த் திரும்புமென்பதை அறிந்து பரிகரிப்பதேயன்றி வியாதியின் சுருபத்தைப்பற்றி நாம் எண்ணியிருந்த மனோசற்பனைப்படி பரிகரிக்கப்படாது. ஊரெங்கும் பரம்பும் நோய்களானவை நுண்ணிய விசாரணையில்லாதவர்க்குச் சிற்சில குணக் காட்சிமாத்திரத்திலே ஒன்றுபோல விளங்கும்; ஆராய்வாகத் தேர்ந்துபார்த்தால் பலபேதமாய்க் காணும். ஆதலால் முதலிலே அவ் வியாதிகளின் போங்கைத் தெளிந்தறியவேண்

Digitized by Google

டியதென்று சிதங்கம் பண்டிதர் சொல்லிய உத்தம ஆலோசனை இப்பொழுது நாம் சிந்திக்கும் வியாதிகளுக்கே அதிகம் உரியது.

கர்ப்பிணியாயிருக்குங் காலத்திலே தேக பெலத்தினால் தடைபட்டிருக்கக்கூடிய வியாதிக் காரணங்கள் பிரசவ ஸ்திரிக்கு நோய்களை உண்டாக்கக்கூடும். இக்காரணங்களுள் கர்ப்பகாலத்திலே சிக்குண்டிருக்கும் மலக்கட்டே பெரும்பாலுங் காணப்படுகிற காரணமாயிருக்கிறது.

இரத்தம் வாங்கப்பட்டதினாலாகிலும் வேறெவ்விதத்தினாலாகிலும் உண்டுபடுகிற தஞ்சக்கேடே அழற்சிக்கு ஏதுவாகும். மலக்கட்டினாலும், கஷ்டபிரசவம் இரத்தப்பெருக்கு முன்னுள்ள ஏதேனொரு வியாதி இவைகளில் ஒன்றினால் சீவ சத்திகள் குன்றி இருப்பதினாலும், ஸ்திரியிலே அழற்சி பலமுறையும் உண்டுபடும் என்பது லகுவாய் விளங்கும் உண்மை.

இவ்வகையான அழற்சியையும் அழற்சிச்சுரத்தையும், தாபிதத்தினின்றும் தாபிதசுரத்தினின்றும் விகற்பித்தறிவது வெகு பிரயாசம். இருவகையிலேயுங் குளிர்ப்பன்கூதலும், மேற்சூடும், நாடித்துடிப்பு விரைவும், வயிற்றிலே நோவும் நொய்வும் உண்டு. நாவிலே வெள்ளைபூத்துப் புடலமாயிருக்கும். தலையிடியுமுண்டு. குணங்களிலே இப்படிச் சமமாயிருப்பதுமன்றி இரத்தம் வாங்குதலினால் விளையும் பயனும் நம்மை ஏய்த்துப்போடக் கூடியதாயிருக்கின்றது. எப்படியெனில் சிலவேளை பிரசவித்த மூன்றாம் நாலாம் நாளிலே ஸ்திரியிலே கூதல்கண்டு பின்பு மேனியிற் சூடும் உண்டாகும். நிமிஷத்துக்கு நூற்றைம்பதுமுறை சற்றே புலமாய் நாடி துடிக்கும். தலையிலே கொதிப்பானநோ, வயிற்றில் ஊன்றினால் நொய்வு காணப்படும். இக்குணங்களைக்கண்டு பிரசவசுரம் என்று நிதானம்புண்ணிப் பதினாறவுன்சளவுக்கு இரத்தம்வாங்கத் தீர்மானிக்கிறோம். இரத்தமெடுக்கும்போது ஸ்திரியானவள் சற்று மயங்கி மறுபடி தெளிந்து, மேற்கண்டகுணங்களுமோ சிறிதுநேரத்துக்கு ஆச்சரியமாகத்தணிந்து, தலை வருத்தம் ஒழிந்து, வயிற்று நொய்வுங் குறைந்து, மேனிலே தாராளமாய் வேர்வையும் பரந்திருக்கும். சிலாக்கியமான இப்பயன்கள் எல்லாம் இரத்தம் வாங்குதலால் விளைந்ததென்றே தோன்றும். மறுநாளோ வியாதி அதிக கேடாயிருக்கும். வியாதியை நீக்க

இரண்டாந் தரமும் இரத்தம் வாங்குவது அவசியமெனத்தோன்றும். இரத்தம் எடுத்த பின் வியாதிக் குணங்கள் தணிந்து, சிலநாழிகையிற்பின்னே மறுபடி இரு மடங்காய்மும்முரங்கொள்ளும். மூன்றாந் தரமும் இரத்தமெடுத்தாலோ, கொஞ்ச இரத்தம்பறிந்தவுடனே ஸ்திரியானவள் தளர்ந்து தேம்பி இறந்துவிடுவாள்.

அழற்சிச் சுரத்தையும் தாபித சுரத்தையும் ஒன்றோடொன்று கலவாமல் விகற்பித்தறியக்கூடிய அறிகுறிகள். அழற்சிச் சுரமானது மிகுதியாய்ச் சடிதியிலே தொடங்கும். தலை நோவானது, விசேஷமாய் தலைக்கொதி நோவானது குளைப்பன் கூதல் கண்டவுடனேயே வரும். வயிற்று நோவினும் பார்க்கத் தலைநோ மிகு வருத்தமாயிருக்கும். நாடித் துடிப்பும் சுறுக்காய்க் கெதிகொண்டு, தாபிதபிரசவசுரத்திலும் வேறுபடுவதற்கு அதிக ஏதுவாய், நேரத்துக்கு நேரம் சகல குணங்களும் வேறுபடும். நாளில் இரண்டு மூன்று முறை ஸ்திரியிலே சகாயமும் அசாத்தியமுந்தோன்றும். இரத்தக் குறைவுபற்றிய பெலவீறுதியுங் காணப்பட்டுக் கலந்து நடக்குமேயாகில் படுக்கையை விட்டுத் தலையை நிமிர்த்தினால், தலை நோவுங் கொதியும் அதிகரிக்கும்.

அழற்சிச் சுரத்தில் நாக்கு வெள்ளைபூத்து, வயிறு மென்மையாய்ப் புடைத்துப் பூரித்து இருக்கும். வயிற்றில் நொய்வு தாபிதபிரசவசுரத்தைப்போல் முகனையிலே கருப்பையில்தோன்றி நில்லாமற் பலவிடத்துங் காணும். தாபிதசுரமானது மிகுதியாய்க்கரவுத்தனமாயே வரும். அழற்சிச் சுரத்திலோ குணங்கள் சடிதியிலே வெளிப்படையாய்த் தோன்றும்.

இக்குணங்களுள் சிலவேனும் பலவேனும் ஒரு நோயிடத்தில் விளங்கினால் குடலழற்சி என்று கருதலாம். சந்தேகமானால் மலக் கழிவின் சுயம்பான நிறத்தை மாற்றாதபடி அபான வழியாய்ச் சுத்த தண்ணீர் நன்றாய்ப் புகட்டவும். தாபித சுரமாயிருந்தாலென்ன, அழற்சிச் சுரமாயிருந்தாலென்ன, இவ்வகையான தண்ணீர் புகட்டுவது ஓர் நல்ல வைத்தியமாகும், வியாதிக்கு அறிகுறியுமாம். மலக் கழிவின் தன்மையைக் கண்டும், பெருங் குடல்கள் தாராளமாய் மலசுத்தியானதினால் வியாதிக் குணங்களில் விளங்கும் வேறுபாட்டைக் கண்டும், வியாதியின் சீரைப் பற்

றி நிதானஞ்செய்யலாம். காறலான கரிய பிழுக்கைகள் கழன்று, வயிற்றுக் கனப்புக் குறைந்து சற்றுச் சகாயமுங் கண்டால், மலம் முற்றாய்ச் சுத்தியாகும் வரைக்கும் இரத்தம் வாங்க நினைக்கப்படாது. மல சுத்தி செய்யும்படி ஆமணக்கெண்ணெய்யும் லாடனமுங் கலந்து கொடுக்கவும். அல்லது இரவிலே பத்துக்கிறேன் தோவர் சூரணமும், இருபதுகிறேன் பிளுப்பிலுஞ் சேர்த்துக் கொடுத்து, காலையிலே றூபாவும் மக்கினீசமும் சேர்த்துக் கொடுக்கவும். அல்லது ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும். இவ்வுபாயங்களுடனே அபான வழியாய்த் தண்ணீரும் புகட்டி வர, பூரணமாய் மலசுத்தியாகும். இதின் பின்பு குழிகையொன்றுக்கு ஒவ்வொரு கிறேன் அயசியாடிசும் கர்ப்பூரமும் சேர்த்துப் பலதரமும் பரிமாறிவருவது உத்தமம். இப்படியே குத்தொழிக்கும் மருந்துகள் பலவுங் கொள்ளலாம். சுவாத்தியமாய்ச் சீரணிக்கும் உணவுகளைப் புசித்து ஆற்றியாயிருக்கவும். இவ்விதமான நோய்களிலே அறிகுறி நிதானம்பண்ணுவது பிரயாசம். இதிலே பிழைபடாதிருந்தால், மருத்துவர் தமது வைத்தியத்திலேயும் பிழைபட்டுப்போகார்.

## உஉம். அதிகாரம்.

### சாதாரணசுரம், குருசுரம், பாற் சுரம்.

பிரசவஸ்திரிகளுக்கு மூளை நரம்புகளிலும், மற்றும் சில உறுப்புகளிலும் உண்டுபடும் அழற்சி காரணமாய் மூந்தின அதிகாரத்திற் சொல்லிய கொடிய சுரமேயன்றி வேறுஞ் சிலவகையான சுரங்களும் உண்டுபடக் கூடியதாயிருக்கும். அவற்றுள் மூன்று வகையான சுரங்களைப் பற்றிச் சொல்லுவோம்.

க வது. சாதாரணசுரம். இது அதிகவழக்கமாய்வரும். பிரசவித்து மூன்று நாலு நாளுக்குள் கடுங் கூதலுடனே இச்சுரம் பெரும்பாலுந் தோன்றும். இதிலே குளிர்ப்பாதம், காந்திப்பாதம், வேர்வைப்பாதமென மூன்று பாதம் உண்டு, இது ஒருமுறை மாத்திரம் உண்டுபட்டு அறுபது நாழிகையிலே நின்றுவிடும். கூதல் கடுமையாய் நெடுநேரம் நிற்பதுமுண்டு. காந்திப்பாதத்திலே தலையிடி பலமாயிருக்கும். வெளிச்சம் பார்க்க ஏலாது. நாடியிலே துடிப்புச் சுறுக்காயிருக்கிற பழுதேயன்றி மற்றொரு பழுதும் இராது. தாகம் மிகுதி. நாவில் வெள்ளை பூத்து ஆடை படர்ந்திருக்கும். சிலவேளை சொற்பமாக வயிற்று நொய்வு இருக்கும். மிகுதியாய் மலக்கட்டிருக்கும். மூன்றும் பாதத்தில் வேர்வை மிகுதியாகும். மற்றுங் குணங்கள் இரண்டாம்பாதம் போலிருந்து வரவரத் தணிந்து போம். ஸ்திரியானவள் உறங்கிச் சகாயமாய் விளிப்பாள். சிலருக்கோ சுரம் இவ்வளவு சுறுக்கிலே நின்றுவிடாமல் வரவரத் தணிந்து எட்டுப் பத்து நாளளவாய் இளுகிநிற்கக் கூடும். தாபித பிரசவசுரத்துக்குரிய நொய்வு இல்லாமையாலும், பாதங்கள் ஒழுங்காய் நடப்பதினாலும், மற்றும் குணபேதங்களினாலும் இதைப் பிரசவசுரத்தினின்று விகற்பித்தறிந்துகொள்ளலாம்.

இது உண்டாவதற்கு, உண்டிப்பிசகு குளிர்படல் முதலியவற்றாலே குடலிலும் ஈரலிலும் எழும்பும் அழற்சியே காரணமாம்.

இந்தச் சுரம் தகாத உண்டியினாலே உண்டுபட்டதென்று முகனையிலே அறிந்துகொண்டோமேயாகில், மிருது

வாய்ச் சத்திக்கும்படி இப்பிக்காக்குக் கொடுத்து வியாதியை ஆற்றலாம். பின்பு மூன்றுகிறேன் கலமலாவது ஐந்துகிறேன் கரையிரசபற்பமாவது, அரைக்கிறேன் தாத்தராந்திமோனியுடன் சேர்த்துக்கொடுக்கவும். கரு, ௨0. நாழிகைசென்றபின் பேதிகாணவிட்டால் நிலவாகைக் கஷாயமாவது றூவாப்பானியமாவது கொடுத்து விரேசனஞ்செய்வித்து குடல் ஈரல் இவைகளின் தொழில்களையும் ஒழுங்குப்படுத்தவேண்டியது.

ஸ்திரீக்குக் கூதல் உண்டுபட்டிருக்கும் வேளையில் சூடுகிளம்பிக் காந்திப்பாதமாகும்படி, சிறு சூடுள்ள குடிப்பனவுகள் கொடுத்து, கால்களுக்குச் சூடுபிடிக்கவேண்டியது. வேர்வைப் பாதத்திலே ஸ்திரீக்குச் சவுக்கியமான அளவுக்குமாத்திரமேயன்றி அதனமாய்ப் போர்வை ஆகாது. பிரசவ கூடத்திலே காற்றுத் தகுதியாய் வீசினாலும், ஸ்திரீயின் மேல் நேரே காற்று விழவிடப்படாது. தலையிடி கடினமாயிருந்தால் தலைக்கு, வயிற்றுநொய்வு சற்றே அதனமாயிருந்தால் வயிற்றுக்கு அட்டை விடவும். சுரம் ஒருமுறையிலே ஆறிப்போகாதிருந்தால் மலக்கழிவுகளைப் பார்த்து, காரமற்ற மெல்லிய உணவுகள் கற்பித்து, வயிற்றுக் குடல்களிலே சுவாத்திய சீரை வருவிக்கப் பார்க்கவேண்டியது. சிலருக்கு இச்சுரம் இருக்கையில் மலக்கழிச்சல் கண்டு வயிறு வீங்கி நொய்வுகொள்ளும். இதற்கு வாயு பேதத்திற்காக வேற்றிடம் போய்ச் சஞ்சரிக்க வேண்டும். கரையிரசபற்பம் போன்ற சாந்தியான இதரஞ்சேர்ந்த மருந்துகள் உண்ண வேண்டும். நாவிலே பூத்திருந்த ஆடையற்றுப் புளிதங்கொள்ளும்போது கலம்பாக்க கஷாயம் போன்ற மெல்லிய கைப்பு மருந்துகள் பரிமாறிவரவேண்டும்.

இச்சுரமிருக்கையில் பாலுந் தவாலையும் மறிபடாமல் நிற்பதுமுண்டு. வயிற்றிலே அல்லது தலையிலே தாபிதம் முதலிய குணங்கள் உண்டுபட்டால், அவைகளைக் குறிப்பாய்ப் பார்த்து நீக்கிக்கொள்ளவும்.

௨வது. குருசுரம். ஸ்திரீயிலே சாதாரணசுரம் உண்டுபடும்போது, காற்றுலாவ வசதியில்லாமல் புழுக்கமாயிருக்குங் கூடத்திலே அதனமாய்ப் புடைவைகளாற் போர்த்து அவளை வைத்துப் பக்குவகீனமாய்ப் பரிகரித்தால், சிலவேளை குரு என்னும் பருக்களுங் கூடத்தோன்றும்.

Digitized by Google

இவை சிறுபருக்களாய்ச் சாமை அரிசிபோலிருக்கும். பருக்களின் நுனியிலே செங்கல்மங்கலான நீர்காணும். பின்பு இந்தநீர் வெள்ளையாய் அல்லது மஞ்சணிறமாய்வி டும். இரண்டுமூன்றுநாளையிலே இப்பருக்கள் மடிந்து உதி ர்ந்துபோக, பின் ஒருபடை உண்டுபடுவதுமுண்டு. பரு க்கள் நெற்றியிலும் கழுத்திலும் மார்பிலும் முதலேதோன் றும், முகத்திலேதோன்றுவது அரிது. செங்குரு, வெண் குரு என்று இதிலே இருவகையுண்டென்றும், செங்கு ரு மற்றதிலும் சாந்தியானதென்றுஞ் சொல்லுவார்கள். பருக்கள் தோன்றமுன்னே தோல் முரணுகி அதிலே குரு ப்பிக்குங் காந்திதோன்றும். தோன்றினபின்பு வயிற்றுக் குடலிலும் பிசகுண்டு என்பதை விளக்கும் அறிகுறிகளா கிய வாய்ப்புண்ணும் நாக்கின் ஓரஞ் சிவந்திருக்கிறதுங் காணும், வேர்வையும் அதிகமாயிருக்கும். தமிழ்நாட்டி லே குருசுரம் மிகுதியாய் உண்டாகாது.

சாதாரணசுரத்துக்குச் சொல்லிய வைத்தியமே இதற்கு ம் அமையும். ஆனாலும் சாதாரணசுரத்திற்பார்க்க இதிலே பெரும்பாலும் அதிக பெலவீனமிருப்பதினால் இதுமாறி வருகையில், பெலப்புத்தரும் மருந்துகளாகிய கினீன் ஆக ரிமிலம் இவைகளில் கொடுக்கவேண்டிவரும். பிரசவத் துக்கு உரிமையல்லாதிருக்குங் குருசுரத்தைப்பற்றித் தெ ளிவாக விளங்கும்படி பொதுவாகடங்களிலே கண்டுகொ ள்ளவும்.

௩ வது. பாற்சுரம். ஸ்திரியிலே பால் மிகுதியாய் ஊறத் தொடங்கும்போது, சுரக்கோலமுஞ் சற்றே உண்டுபடும். ஸ்திரியானவள் முலைகொடுக்க மனமில்லாமல் விடுவதி னால் அல்லது பிள்ளையை முலைக்கணையாமல் தகுதியீன மாய்த் தாமசம்பண்ணிவைப்பதினால் பால்திரண்டு கூடி யிருக்குமேயாகில், சுரக்கோலம் சுரமாகவேமுற்றி, கூதல் உண்டுபட்டு, காந்திப்பாதமும் வேர்வைப்பாதமுந் தோ ன்றிச் சாதாரணசுரத்திற்சொல்லிய மற்றுங்குணங்களும் விளங்கும். இவற்றுடனே தனங்களுஞ் சுரந்து விம்மி அதிக வாதைகொள்ளும்.

இச்சுரத்தைத் தணிக்கும்படி சுள்ளாப்பான விரேசனங் கொடுக்கலாம். ஆனாலும் இடக்காயிருக்கும் பாற்சுரப்பை ஒழிவிப்பதே அதற்கேற்ற உபாயம். பாலை ஒழிவிக்கும் படிமுந்தவே பிள்ளைக்கு முலைகொடுக்கவேண்டியது. இது

Digitized by Google

முடியாவிட்டால், தனங்களுக்கு எண்ணெய்பூசி கையினாலே மெல்லெனத் தனங்களைத் தடவிப் பாலைப்போக்க வேண்டியது. அல்லது தனரேசகியென்னும் கருவியையிட்டுப் பாலைக்கழற்றிவிடவும். ஸ்திரியிலே முலைகொடுக்கும் எண்ணமில்லாதிருந்தால், தனரேசகி இடுவதினால் பால் ஊறிக்கொண்டு நிற்குமாதலால் அக்கருவியை இடப்படாது.

இச்சுரத்திலேயுள்ள பிரதான மோசம் முலையில் சீழ்க்கட்டிக்கொள்வதே. இது மிகுந்த வருத்தமுந் தொல்லையுமானவியாதி. பாற்சுரம் மும்முரமாயிருப்பதினால் முலைக்கட்டுங் கூடிநடக்குமென்று அஞ்ச இடங்கண்டால் தாத்தரந்திமோனி கொடுத்து ஸ்திரியில் உவட்டு உண்டாக்குவதே அதிக வாய்ப்பான வைத்தியம். உவட்டை எழுப்பி நிலைப்பிக்கும்படி தாத்தரந்திமோனியில் காற்கிறேன், அரைக்காற்கிறேன் இரண்டொரு நாழிகைக்கொருமுறை தண்ணீரிற்கலந்து கொடுத்துவரவும். ஸ்திரியானவள் முலைகொடுக்குங் கருத்தில்லாதிருந்தால், பால்ஊருமல் ஒழியும் வரைக்கும் இடைக்கிடை விரேசனங்களை கொடுத்துவரவேண்டும். அவளும் அமைதியாயிருக்கவேண்டும். முலைக்கட்டு உண்டாய்விட்டதேயாகில், சத்திரீகாசிரியர்கள் சொல்லிய பக்குவமுறையாய் மெல்லியசூடான வெந்நீர்ச்சீலை முதலியனவகளை இட்டுப் பழுக்கப்பண்ணவேண்டியது.

Digitized by Google

## ௨௫ம். அதிகாரம்.

### பிரசவகாலதைப்பு.

ஸ்திரிகளிலே வருத்தமான இவ்வியாதிவருகில் வெகுவாகப்பிரசவித்துப் பத்துநாளின்பின் பதினாறும் நாளுக்குள்ளே உண்டுபடும்; இதற்கு முந்த உண்டுபடுவதரிது. சிலவேளையோ, அதிகநாட்சென்றும் உண்டுபடும். தளர்ந்து மெலிந்த தேகத்தையுடைய ஸ்திரிகளையே இது மிகுதியாய்த் தாவும். இரத்தப்பெருக்கினால் அல்லது கருப்பையுட்கையளைவினால் அவதிப்பட்டவர்களாயும், முந்தவே கருப்பை அழற்சிவிளக்கும் அறிகுறிகள் கண்டிருந்தவர்களாயும்இருக்கும் ஸ்திரிகளிலே இது பெரும்பாலுந் தோன்றும்.

சுரக்குணங்கள் கண்டே இவ்வியாதி மிகுதியாய் வெளிப்படுவது. கூதல் உண்டாய் இதின் பின்பு காந்தியுந் தாகமுங் கண்டு, நா வெள்ளைபூத்து, நாடித்துடிப்பு பெலமாய், தலைபிடியுங்காணும். இக்குணங்கள் கண்டபின்பு, அரையின் மடிப்பு ஒன்றிலே அல்லது தொடையின் மேற்பக்கத்திலே அல்லது இதழிலே நோவும் முரணிப்பும்உண்டுபடும். அல்லது நோவு முழந்தாளில் அல்லது கெண்டைத்தசையில் முதல் விளங்கும். முதல் கண்ட இடத்திதினின்றே விரைவாக வீக்கந்தொடங்கி இரண்டொரு நாளையிலே கால் இரண்டத்தனையாய்ப் பருத்துவிடும்.

சகிக்கமுடியாத வருத்தம் உண்டாய் அற்பனாகுதல் ஆட்டியலைத்தால் வருத்தம் அதிகப்படும். கால் இறுகி முரானாய்ச்சுயநிறமாய் மினுமினுப்புக்கொண்டு, தொட்டூன்றிப்பார்த்தாற் குழிதோன்றாமல் நிரவியெழும். கையாலே தடவிப்பார்த்தால் தோலினுள் அனேக சிறுச்சிறுப் பள்ளங்கள் இருந்தாற்போல ஒப்ப செப்பமில்லாததாய்த் தோன்றும். சிலரிலே வீக்கம் மெல்லனவாய் நடந்து முழுப்பருமைக்கு வரச் சிலநாட் செல்லும். கால் முற்றும் வீங்கினபின்பு நோவின் மும்முரந் தணிந்தாலும் அதைச் சற்றாகுதல் அரக்க இயக்கப்பார்த்தால் நோ கடினமாயிருக்கும். ஸ்திரியானவள் காலை இயக்க அல்லது எதேன் செய்துகொள்ள எல்லாது. காலின் சூடு அதிகப்படும். காலை ஊன்றிப்பார்த்தால் அதிக நொய்வு தோன்றும். காலி

Digitized by Google

துள்ள பெரு நாளங்களின் அயலிலேதான் நொய்வு அதிகம் என்பார்கள். ஆகிலும் எப்போதும் அப்படித்தானென்று என்பரிசனைக்கு விளங்கவில்லை. இக்குணங்களோடே சுரம் அதிகம் இருக்கும். நாடித்துடிப்பு விரைவுந் தளர்வுமாய் நா வெள்ளை பூத்து முகம் வெளிறிப்போம். துவாலைமறிந்துவிடும் அல்லது குறைந்து நாறலாம். சலங் கலங்கலாகும். உறக்கமில்லாததினாலே ஸ்திரிக்கு மிகுந்த அவலமாயிருக்கும். கருமத்துக்குத் தக்கதாய் ஆறு எட்டு நாளிலே சுரக்குணங்கள் தணியத்தொடங்கும். அதைப்பும் மெல்லெனவாக முதற் தொடையாலும் பின்பு கெண்டைக்காலாலும் பின்பு காற்படத்தாலும்வடிந்துபோகும். வீக்கங் குறையக் குறைய நாளங்களும் சோஷணகிரந்திகளும் நெறிகளாகப் பருத்து உரத்தவைகளாய்த் தோன்றுவனவும் உண்டு. காலிலே ஊன்றிப்பார்த்தால் முன்னையிற்பார்க்கக் குழிந்துபோகும். ஸ்திரி மெலிவும் பெலவீனமுமாயே இருப்பாள். கால் கனமும் லேசாக வசையாமலும் விறைப்புமாயிருக்கும். இதை அரக்கிக்கொள்ள அவளால் ஏலாது. முதலிலே இவ்வியாதி காலொன்றிலும் இதழிலுமே தாக்கும். சிலவேளையோ மற்றக்காலிலுந் தாவும். மெல்லமெல்லவே தீர்ப்பான சுகங்காணும். ஸ்திரியானவள் நெடுநாட்பட்ட தேகக்கூறுன இசைவுபிசகினாலும், அல்லது அதைப்புக்கொண்ட காலிலே உண்டுபடும் கனத்த சீழ்க்கட்டுகளாலும், தேய்ந்து மெலிந்திருப்பதினால் இவ்வியாதி பிராணசேதமாய் முடிவதும் உண்டு.

பிரசவகாலதைப்பின் உற்பத்தி இன்னும் அதிக மறைவாயிருக்கும். தோலினுள் தாபிதங்கண்டு பேசிசம் என்னும் ஓர்வகையான உறைநீர் கக்குண்பதினாலே இவ்வியாதி உண்டாகிறதுபோலத் தோன்றுகிறது. ஆனாலும் தாபிதம் எழும்புகிறது எப்படியென்றும், பேசிசநீர் சொரியவேண்டியது என் என்றும், இன்னும் விளங்கவில்லை.

வியாதி கலப்பில்லாத தனிமையாயிருந்தால் காரியம் அனுகூலமாமென்பதே சொல்லக்கூடியதாயிருந்தும், மெல்லமெல்ல நெடுநாட்சென்றே பூரணசுகம்வரும்.

வியாதி மும்முரமாயிருக்கையில் தொடக்கத்திலே வெப்புஞ் சுரமுந் தணியத்தக்கதான வைத்தியஞ்செய்ய வேண்டியது. வியாதியினதும் ஸ்திரியினதுஞ் சீர்திறுவாகங்களைப் பார்க்கும்போது இரத்தங்குற்றிவாங்கப்படாதுஎன



Digitized by Google

த்தோன்றுகிறது. ஸ்திரி உரப்புள்ளவாய் நாடித்துடிப்பு பெலப்பாயிருந்தால், இரத்தம் எடுப்பதினால் நலங்காணக் கூடியதாயிருக்கும். ஆனாலும் அரையின் மடிப்பிலும், நோ பிரதானமாய்க் குடிகொண்டிருக்கும் இடங்களிலும் அட்டையிடுவதே பெரும்பாலும் உத்தமமென்று எண்ண இடமுண்டு. மூதல் பத்து அல்லது இருபது அட்டையிடலாம். பின்பு அவசியமென்று கண்டால், இத்தொகையிற்குறைத்து இட்டுக் கடிவாய்க்கு வெந்நீர்ச்சீலை இட்டால் இரத்தப்பாய்வு அதிகப்படும். வெந்நீர்ச்சீலையினாலேயே நயப்புங்காணும். சிற்சில அபூருவ கருமங்களிலே குளிர்ந்த தண்ணீர்ச்சீலை பிரயோகிப்பதால் மிகு நலங்காணும். ஸ்திரியின் உணர்ச்சி விருப்புக்குத்தக்கதாய் வெந்நீர் அல்லது தண்ணீர் வழங்கவேணும். சிலவேளை குடல்களில் மலக்கட்டிருப்பதினால் சாந்தியான மெல்லிய விரேசனங் கொடுக்கவேண்டியும் வரும். மெத்தப் பேதிக்கவேண்டாம். இராத்திரிகாலங்களிலே ஸ்திரியிலே அதிகமாய் உறக்கம் வராதானபடியால், படுக்கும்போது பத்துக்கிறேன் தோவர்சூரணமும் இரண்டுமூன்றுகிறேன் கலமலுஞ் சேர்த்துக்கொடுத்தால் நித்திரையுமுண்டாகி வியாதியும் நலப்படும். வாயிலே சற்றுக்கேட்கும்படி கலமலுடன் அந்திமோனிச்சூரணத்தையுஞ் சேர்த்துக்கொடுப்பது புத்தியென்று எண்ணுகிறேன். ஆனாலும் விரைவிலே வாயூறல் உண்டாக்குவது உத்தமம் என்று நான் சொல்லவில்லை. மலக்கட்டில்லாதிருந்தால், கலமலிலும் அந்திமோனிச்சூரணத்திலும் அரையரைக்கிறேன் எடுத்து இரண்டு மூன்று கிறேன் தோவர்சூரணத்துடன் சேர்த்து நாளொன்றுக்கு மூன்றுதரந் தின்றுவந்தால் போதும். பத்தியபாகம் வெப்பும் சுரமும்போக்கத்தக்கதாயிருக்கவும். ஸ்திரியானவள் நல்லாற்றியாயிருக்கவேண்டியது. தாபிதந் தணிந்தபின்பு, வேறுவிதமான வைத்தியஞ்செய்து உடம்பைப் பேணரவாய்த் தேற்றிக் கொள்ளவும். மெல்லிய உணவு பரிமாறி, வாயுபேதத்துக்கு வேற்றிடம்போய்ச் சஞ்சரித்து, அல்லது தாராளமாய்க் காற்றுலாவும் இடத்தில் வசித்து, சீரண உறுப்புக்களைத் தேற்றும்படி, மெல்லிய கைப்புகள் ஆகரியமிலங்கள் என்னும் மருந்துகளைப் பரிமாறிவரவும். அல்லது, கசம். அவிழ்தத்திற் சொல்லியிருக்கும் குடிநீர் பரிமாறலாம். இப்படி நடத்தும் வே

Digitized by Google

ளையிலே காலிலே தாபிதம் மறுபடி தோன்றுவதைக் கண்டால் அட்டைஇட்டே அதைத் தடுத்துப்போடவும். காலை ஆட்டி அலையாமலும் நிமிர்த்தாமலும் ஆற்றியாய் வைத்துக்கொள்ளவேண்டியது. கையினால் மெல்ல உரைஞ்சப் பொறுத்துக்கொள்ளக் கூடியதாய் வரும்போது அப்படிச் செய்வதால்நயங்காணும். உப்புவெந்நீரால் கழுவித்துடைப்பது நயம். சிலநாட்போனபின்பு காலுக்குவேலிதம் என்ற கச்சுச்சீலை சுற்றிக்கட்டலாம். அல்லது நாடாப்பற்றுப் போட்டிறுக்கிவிடலாம். கால் வெகுகாலத்துக்குப் பெலன்கெட்டதாய் இருந்துவிடக்கூடுமாதலால், நமதுவிவேகத்தைச் சாதித்தே வைத்திய உபாயங்கள் இயற்றவேண்டியது. காலில் எங்கேயாவது சீழ்க்கட்டுகள் உண்டு எனஅறிந்தால், அவ்விடத்தைவெட்டிச் சீழை நன்றாய்க் கழற்றிவிடவும். இவ்வியாதியில் சீழ் தோற்புரைநெடுகச்செறிந்து, முகைப்புக்கொள்ள மாட்டாதானபடியால் நன்றாய் வெட்டித்தான் விடவேண்டியிருக்கிறது. இவ்வகையான சீழ்க்கட்டுகள் தோஷச்சுரத்துடனே மிகுதியாய் நடக்கும். இதற்குத் திராட்சரசம், அபின், கர்ப்பூரம், கினீன், அம்மோனிய முதலிய இம்மருந்துகளே பெரும்பாலுங் கொடுக்கவேண்டிவரும்.

Digitized by Google

## உ௪ம். அதிகாரம்.

### பிரசவ பைத்தியம்.

இது பைத்தியம் விசாதம் என இருவிதமாகும். பிரச வித்த அன்னியநாட்களிலேதான் பெரும்பாலுந் தோன் றும். தன்பெலத்துக்குத் தகுந்த காலத்துக்கு அதனப்பட மூலேகொடுத்துவருவதினாலே ஸ்திரியானவள் தஞ்சக்கெ ட்டுப்போம் வேளையிலும், இதைப்போன்ற ஓர்வியாதி உண்டுபடுவதும் உண்டு. சிரோத்தாப ஸ்திரிகளாய், சஞ் சலம் விசனம் முதலிய காரணங்களால் மனங்கலங்கியி ருக்கும் ஸ்திரிகளிலேயே இவ்வியாதி அதிகமாய்த் தோன் றக்கூடியது. மாருட்டமாகிய மனப்பிராந்திதோன்றி நட க்கும் குடும்பங்களிலுள்ள ஸ்திரிகளிலே மிகுதியாய் இவ் வியாதி உண்டுபடுகிறதென்று கூச்சுபண்டிதர் சொல்லுகி ருர்.

இப்பிரபல ஆசிரியரது கருத்தின்படி பிரசவபைத்தியத் துக்குக்காரணம், சனனஉறுப்புத்தொழில்களுடன் காணு ம் சிரோத்தாபமேயாம். சில ஸ்திரிகள் சர்ப்பிணியாயிரு க்குங்காலத்திலே திடுக்கிட்டேங்கினவுடனே அது மனதி ல் உறைத்துறுத்தியிருக்கும். இதின் தாக்கம் பிரசவகால ம்வரைக்கும் அவர்களிலே இலேமறைகாய்போலிருந்து, பிரசவித்தபின்பு பிரசவபைத்தியமாய் வெளிப்படும். ஆத லால் கர்ப்பிணியாயிருக்குங்காலத்திலே திடுக்கிட்டேங்கி ஞற் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளவும்.

இவ்வியாதி சடிதியிலே உண்டாவதுமுண்டு. ஆகிலும் பெரும்பாலும் வியாதிதோன்றச் சிலநாளுக்குமுன் ஸ்தி ரியிலே மனஅழுந்சியும் வெடுவெடுப்பும் விளங்கி, குரல் மாறிக் கீச்சுக்குரலாய், கண்ணிலே மிலாந்திகொண்டு, அ ச்சமுங் கலக்கமுமான கோலங்கண்டு, நித்திரையுங் குழப் பமாய்விடும். அல்லது குழுவலும் கோட்டரவுங் கொ ண்டு, நாடித்துடிப்புச் சற்றுவிரைவாகி, சீரண உறுப்புக்க ளின் இசைவுபிசகை விளக்குவனவாய் நா ஆடைபூத்து, கண் மஞ்சணிறமாகி, மலமுங் கட்டிக்கொள்ளும்.

சீரணஉறுப்புகளின் இசைவு பிசகே பிரசவபைத்தியத் துக்கு அடியீட்டுக்காரணமென்பதற்குக் கூச்சாசிரியர் கா ட்டியிருக்குந் திருட்டாந்தம், முதலாம் பிரசவகாலத்தி

Digitized by Google

லே ஸ்திரியிலே செங்கண்மாரி கண்டது. பைத்தியமும் உண்டுபட்டது. இரண்டாம் பிரசவத்திலுஞ் சற்றே செங்கண்மாரி கண்டு பைத்தியமும் உண்டானது. மூன்றும் பிரசவகாலத்துக்குமுன் செங்கண்மாரி கடினமாய்க் கண்டபோது, பிரசவிக்கமுன்னேயே விரேசனங்கொடுத்து மாற்றிப்போட்டதினால் பைத்தியங்கொள்ளாமல் அம்முறை ஸ்திரி தப்பிக்கொண்டாள்.

மனத்தடுமாற்றம் பலவிகற்பமாயிருக்கும். ஒருவிகற்பத்திலே, ஸ்திரியில் மனோதிமிரமும் விசனமும் விளங்கும். பின்னொரு விகற்பத்திலே கட்டாயம்பண்ணி அடக்கிவைக்கவேண்டியளவாய் விசர்கொண்டு, ஓயாமற் பேச்சும் உலாவுமாய், நித்திரையுறக்கமில்லாமலிருப்பாள். அனேக கருமங்களிலே தற்கொலைசெய்துபோட வேண்டுமென்ற ஓர் மனச்சாய்வு இருக்கும். இவ்வியாதிக்குஞ் சனன உறுப்பின் அழற்சிக்குஞ் சம்பந்தமுண்டென்பது வியாதியின் தன்மையிலேயே மிகுதியாய் விளங்கும். சிந்தனையெல்லாஞ் சனனசேட்டைகளிலேயே செல்லும். நடையெல்லாம் மானபங்கம். பேச்செல்லாம் அம்மணம்.

தேகக்குணங்கள் மேலேசொல்லியவைகள்தாம். இவை இரைப்பையும், ஈரலும், குடலும் பிசகுபட்டிருக்கிறதெனக் குறிக்கும். நாடித்துடிப்புச் சற்று விரைவு பட்டாலும் மிகுதியல்ல. துரிதநடைகொண்டால் அதுமிக அனுகூலக்கேடான ஓர் அறிகுறியென்று கூச்சாசிரியர் சொல்லுகிறார். முகம் வெகுவாய் வெளிறியிருக்கும். பெரும்பாலும் மூளையிலே தாபிதமாவது, இரத்தம் மிஞ்சுதலாவது உண்டென்பதற்கான குறிகள் இராது.

பிரசவபைத்தியத்தை விகற்பித்துத் தெளிந்துகொள்ள வேண்டியவான மூன்றுவிதமான நரம்புமண்டலவியாதியுண்டு. க வது. மூளைத்தாபிதம். உ வது. தாபிதத்தலைவலி. ௩ வது. கம்பப்பைத்தியம்.

மூளைத்தாபிதத்திலே விளங்குவனவாகும் இரத்த துரிதலட்சணங்களாகி நிறைவுந் துள்ளுங் கடினமுமாகிய நாடித்துடிப்பும், காங்கையான வரண்டதோலும், சுரந்தமுகமும், தலையிலே கொதி நோவும் தலைச்சுழற்சியும் காதிரைச்சலும் தலையிற் சருவிய அதிஇரத்த மூலாவுதலை விளக்கும் மற்றுமிலட்சணங்களும், பிரசவபைத்தியத்திலே இல்லாததினால் பிரசவபைத்தியத்தையும் மூளைத்தாபிதத்தையு

Digitized by Google

ம், விகற்பித்தறியலாம். மூளைத்தாபிதம் மெத்தஅரிதாய் உண்டெபடும்வியாதி.

தாபிதத்தலைவலி சிலவேளை உண்டெபடுந்தான். ஆனாலும் மாரூட்டம்கூடிநடப்பதும் அரிது; மாரூட்டத்துடனே தொடங்குவதுமில்லை. தாபிதத்தலைவலியிலே மாரூட்டம் உண்டெபட்டால், எழுச்சியையும் கோவையுஞ் சுரத்தையும் பற்றித்தான் உண்டெபடும்.

கம்பப்பைத்தியம். இது பிரசவ ஸ்திரியில் உண்டெபடில் பிரசவபைத்தியத்தினும்பார்க்க முந்தவே பிரசவித்தபின் சில நாழிகையிலே இரண்டொரு நாளுக்குள்ளே உண்டெபடும். பிரசவபைத்தியமோ மூன்றும் நாளுக்கு முன் உண்டெபடுவது அரிது. இரண்டாம் கிழமையிலே தான் சிலவேளை தொடங்கும். பிரசவபைத்தியஞ் சிலவேளை சடிதியிலே தோன்றும். கம்பப்பைத்தியமோ அப்படியில்லை. கம்பப்பைத்தியத்தில் வேர்வை மெத்த மிகுதி. ஸ்திரி குடிகாரியோ அல்லவோ என்று அறிதல் வியாதியைத் தெளிந்துகொள்வதற்கு உதவியாகும். ஆனாலும் கர்ப்பிணியோவென்று விசாரித்தறிவதுபோல் இதையும் மருத்துவர் தம் எண்ணத்தை வெளிவிடாமல் உபாயமாய் அறிந்து தீர்க்கவேண்டியது.

பிரசவ பைத்தியத்துக்கு வைத்தியம் பெரும்பாலும் அனுகூலமாகும். ஆனாலும் சிலவேளை பிரதானமாய் நாடித்துடிப்பு விரைவுஞ் சோர்புமாய் நித்திரைஉறக்கமில்லாததாயிருக்கும் ஸ்திரிகளிலே பெலவிறுதி மிகுந்து கடைசியிலே பிராணசேதமாயும் முடியும். மனதிலே சருவிநின்ற பைத்தியமானது முற்றுஞ் சுகமாய்விடுமென்று நினைக்கிறதற்கு இடம் உண்டு. மற்றும் பிரசவங்களிலே பைத்தியம் மறுபடியும் வருமென்றதற்கான தாயங்கள் மிகுதியல்ல. ஆகிலும் பாரம்பரைச் சார்பினுல் உண்டாகும்பைத்தியத்தைப்பற்றி இப்படிப்பட்ட நம்பிக்கையில்லை. பாரம்பரையான பைத்தியம் பிரசவம் ஒவ்வொன்றிலுங் காணும். ஸ்திரியும் பிள்ளைகள் பெற்றுப்பெற்றுவந்தால் பிரசவபைத்தியம் தோன்றித்தோன்றிப் பாரம்பரைச் சார்பை எழுப்பிக் கடைசியாய் மாருத பைத்தியமாய் முடியும்.

பிரசவ பைத்தியத்தை நீக்கும்படிக்கான வைத்தியம் தேகத்துக்குரியதும் மனசுக்குரியதுமான இருமுறையாகும்.

க. தேகத்துக்குரிய வைத்தியம். நமது பக்குவோபாய

Digitized by Google

ங்களை அந்தந்தக் கருமத்தின் அவசரங்களுக்கு ஏற்றவாய் நடத்தும்படி மருந்து செய்வதிலே அதிநுட்பமான ஆராய்வுவேண்டியது. இரத்தம் எடுக்கவேண்டியதாய் வருவது மிகச் சொற்பம். மூளையிலே இரத்தம் மிஞ்சுதல், தாபிதங்கொள்ளுதல் இருக்குமென்பதற்குத் தெளிவான அறிகுறிகள் கண்டாலன்றி இரத்தம் எடுக்கவேண்டியதுமில்லை. இவ்வறிகுறிகள் ஒருமட்டுக்குக் கண்டவிடத்தும் கூடுமேயாகில், கையில் குத்தி இரத்தம்வாங்காமல் விட்டு நெறிகளுக்குச் சில அட்டைஇடுவது புத்தி. மலக்கட்டு மலகழிவுமுதலியவற்றை அந்தந்தக் கருமத்தின் சீர் நிருவாகத்துக்குத் தக்கதாய் அதிக கருத்தோடே பார்த்துக்கொள்ளவேண்டியது. நாக்கில் ஆடைபூத்து கண் மஞ்சளாடி சுவாசம் நாற்றங்கொண்டு இரைப்பையே அழற்சிக்கு உறையிடம் என விளக்கினால் மெல்லென உவாந்திக்க இப்பிக்காக்கிலே கொடுத்தால் நயம். இதின் பின் விரேசனங் கொடுக்கலாம். உவாந்திக்கிறது தகுதியல்லவென்று கண்டால், மலக்குடலாலே அதிகமாய் நீரடியாமல் மலத்தைக் கழற்றிவிடத்தக்கசீரான கரியபோளக்குளிகைமுதலிய விரேசனங்களில் ஒன்றை உடனே கொடுக்கலாம்.

ஸ்திரி நித்திரையின்றி அவதிப்படுவாளாதலால் நித்திரை உண்டாக்கும் மருந்துகள் கொடுக்கவேண்டியிருக்கிறது. அம்மருந்துகளே வியாதிக்கும் ஏற்றவைகள். இம்மருந்துகளைக் கொடுக்குமுன் இரத்தஓட்டத்தின்வேகத்தை தணித்தும் மெல்லிய விரேசனம் செய்தும் விடவும். அபின் கொடுக்கில் பிளக்திறப்பு என்ற மருந்தாய்கொடுப்பது உத்தமம். இம்மருந்திலே ஒருமுறைக்குப் பன்னிரண்டு துளிமட்டுக்குக் கொடுக்கவும். முதல்முறை கொடுத்தபின்பு உண்டுபடும் அமைதியை நிலைப்பிக்கும்படி அம்மருந்திலே சிறுகக் கொடுத்துவரலாம். ஸ்திரிக்கு உவட்டில்லையாகில் தோவர்சூரணமும் நயம். வேறு மருந்து கொடுக்கவேண்டிய அவசியமிருந்தால் அயசீயமஸ் அவலேகமும் கர்ப்பூரமும் எடுத்து ஒவ்வொன்றிலும் ஐந்துகிறேன் சேர்த்து, ஒருமுறைக்குக் கொடுக்கவும். வியாதியின் முடிவிலே இரத்தஓட்டம் முற்றாய்த் தணிந்தபின்பு ஸ்திரியினது சுவாத்தியத்தைத் தேற்றும்படியாய் மெல்லிய கைப்பு மருந்துகளும் ஆகரியமிலம் என்னும் மருந்துகளுங் கொடுக்கலாம்.

உண்டியானது ஒருமட்டுக்குப் போஷிக்கத்தக்கதாயும்,

Digitized by Google

ஆகவே கார்ப்பற்றதும்லேசாய்ச் சமிக்கக்கூடியதுமாய்ச் சிரண உறுப்புகளிலிருக்கும் இசைவுபிசகைச் சினப்பியாததுமாய், இருக்கவேண்டியது. நெடுநாள் மூலை கொடுத்துவந்ததினால் மெலிந்துபோன ஸ்திரிகளிலே இவ்வியாதி கண்டால், மூலைகொடுப்பதையும் பெலத்தை வீணிலே குறைப்பதாயிருக்கும் மற்றேதையும் அவதானமாய் விலக்கிவிடவேண்டியது.

உ. மனசுக்குரிய வைத்தியம். பைத்தியகாரரைப் பராபரித்துப் பழகினவர்களிடமே மனசுக்கு வைத்தியஞ் செய்யும்படி விடவேண்டியது. வியாதி கண்டபின் இவ்வகையான துணையாளி வசத்திலே ஸ்திரியை ஒப்பித்துக் கட்டாயமாய்க் காவல்பண்ணும்படி சொல்லித் தற்கொலைக்கனுசாரானயாதொரு கருவியாவது ஸ்திரியின் கையிலே அகப்படாதபடி விலக்கிப்போடவேண்டியது. வியாதி நெடுகுவதாயிருந்தால் பைத்தியத்துக்கே மருந்து செய்யும் வைத்தியன் வசத்திலே ஸ்திரியை ஒப்பித்துப்போடுவது புத்தியோ என்ற விசாரணைவரும். இதற்கு நாம் விதிசொல்வது ஏலாது. அப்படித் தொடங்குவதுஞ் செய்வதுங் காரியத்தின் சீருக்குத்தக்கதாயிருக்கும். ஸ்திரியானவள் இப்படி மாருட்டமாயிருக்கையில் தனது நாயகனுடனே சஞ்சாரம்பண்ணப்படாதென்று கூச்சாசிரியர் சொல்லுகிறார். இப்படிக் கட்டாயம்பண்ணுமல் நாயகனுடனே சஞ்சாரமாயிருந்த ஒரு கருமத்திலே சற்று நயங்கண்டதென்று நான் கேள்விப்பட்டேன்.

தடுக்கும் வைத்தியம். ஸ்திரியின் தேகக்கூறைப்பற்றியாவது பாரம்பரைச்சார்பைப் பற்றியாவது வேறு யாதொரு காரணம் பற்றியாவது பிரசவவைத்தியம் உண்டுபடுமென்றெண்ண இடங்கண்டால் அவ்வகையான எழுச்சிக்காரணங்களை விலக்கப் பார்க்கவேண்டியது. பிரசவத்துக்கு முன்னே பூரணமாக மலசுத்திசெய்து மலக்கழிவிலே அவக்கோலமான பழுதுபட்டிருந்தால் ஏற்றமுறையாக அதை நீக்கிக் கொள்ளவும். மனசிலே சிந்தனைகளை ஆசைகளைக் கிளப்பக்கூடியவான எதையுந்தடுத்து ஆற்றியின்மையாவது உறக்கமின்மையாவது தோன்றக் கண்டவுடனே நித்திரைதரும் அபின் முதலியவைகளும் கொடுத்து விலக்கவேண்டியது. பெலவிறுதியே பிரசவவைத்தியத்தை அதிகங் கிளப்புவதாயிருப்பதால், பெலவிறுதிகண்டவுடனே உட

Digitized by Google

ம்பைப் பெலப்பிக்கும் பக்குவஞ்செய்ய வேண்டும்.

பிரசவித்தபின் ஸ்திரி எந்நேரம் ஆரை எம்மட்டுக்குக் காணலாம் பேசலாம் என்று அதிக சாதுரியமாய் நிதானம் பண்ணிக் கொள்ளவும். காணப் பேசப்படாதென்று முழுதுந் தடுத்துக்கொண்டால் தனது மனசுப்பிசகின் சேட்டைகளுக்கு இரையாய் அகப்பட்டு வருந்துவாள். அன்றியும் பிரசவித்தவுடனே அல்லது தகாத தருணத்திலே உற்றவர்களை அவள்கண்டால், அவர்களுடனே பேசுவதினாலே மனம் எழுப்பப்பட்டு முற்றும் புரண்டு தடுமாறிப் போகும். இந்த இருவகை மோசங்களையும் எப்பொழுதுஞ் எளிதிலே விலக்கிக்கொள்ள ஏலாது. பிரசவித்த பின்பு கூடியளவு சுறுக்கென ஸ்திரியின் மனதைக் கிழப்பாமல் அதற்கு இன்பமான விநோதங்காட்டத் தகுந்தவர்களுடனே அவளைக் கண்டுபேச விடுவதினால் நாம் கொண்ட அபிப்பிராயத்தை இனிதாய் முடிக்கலாம். இன்பமான சிறுச்சிறுக் கதைகளைப்பற்றிய அமைதியான சம்பாஷணை பிராந்திகொண்ட ஸ்திரிகளின் வீண் எண்ணங்களைத் துரத்திப் புத்தியின் அதிகாரத்தை நிலைப்பிக்கிறதற்கு ஏற்ற உபாயமாம்.

கர்ப்பிணியாயிருக்கும் வேளையிலே மனைவாழ்க்கைக்குரிய வாடிக்கையான அன்றாட்டு வேலைகளிலே சற்றுக் களைக்கத்தக்கனவாய் ஸ்திரி வேலைப்பராக்காயிருப்பது உத்தமம். பாரம்பரைச் சார்பொன்று தவிர மற்றும்படி பிரசவைத்தியமுண்டுபடுமென்று எண்ணுவதற்கு இடங்கண்ட ஒரு கருமத்திலே ஸ்திரியானவள் தனது வீட்டுப் பராக்குவேலைகளிலே அதிக முயற்சியாயிருந்ததினாலே பைத்தியத்துக்குத் தப்பிக்கொண்டாள் என்று எண்ணுகிறேன்.

பிரசவவேளையிலே தீர்ப்பான மூளைத்தாபிதம் உண்டுபடுவதும் உண்டு. அப்படியுண்டுபட்டால் வைத்தியம் நாம் இப்பொழுது சொல்லியதற்கு மாறாய் வரும். பிரசவைத்தியத்திலே தேகத்தை ஆதரவுபண்ணிச் சாந்திசெய்வதே பெரும்பாலும் ஏற்றது. மூளைத்தாபிதத்திலோ நன்றாய் இரத்தம் எடுக்கவேண்டியது. இப்படிச்செய்தும் பலமுறையிலே வாயாமலும்போம். இவ்விரு வியாதியையும், விகற்பித்துத் தெளிந்து கொள்வது அவசியமாதலால், இவ்விடத்தில் ஓர் ஞாபகக் குறியாகக்கொண்டுவருகிறேன்.

Digitized by Google

# அவிழ்தம். FORMULÆ.

க.

கொள்

| | |
|---|---|
| பைகாபனேற்சோடா | கிறேன் முப்பத்திநாலு |
| எலுமிச்சம்பழச்சாறு | திறாம் ஆறு |
| தண்ணீர் | அவுன்சு எட்டு. |

சோடாவை அரைவாசித் தண்ணீரிலும், சாற்றை மற்ற அரைவாசியிலும் வெவ்வேறாய்க் கலந்து, மறுபடி இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து நுரைக்கிறபோதே குடிக்கவும்.

No. 1.

Take

| | |
|---|---|
| Bicarbonate of soda | grains thirty four |
| Juice of lime | drams six |
| Water | ounces eight. |

Dissolve the soda in half of the water and mix the lime juice with the other half separately. Then mix both together and drink while foaming.

உ.

கொள்

| | |
|---|---|
| அம்மோனியதண்ணீர் | திறாம் ஒன்று |
| கல்சீன்மக்னீசம் | திறாம் ஒன்று |
| கறுவாப்பட்டைநீர் | திறாம் ஒன்று |
| நல்லதண்ணீர் | அவுன்சு ஐந்து. |

கல. அரைஅவுன்சு ஒருமுறைக்குக் குடிக்கவும். நன்றாய் அடைத்துக்கொண்டு பரிமாறும்போதெல்லாம் கலக்கிவிடவும்.

No. 2.

Take

| | |
|---|---|
| Ammonia water | dram one |
| Calcined magnesia | dram one |
| Cinnamon water | dram one |
| Pure water | ounces five |

Mix. Dose, half an ounce. Shake when using. Keep close.

☞ இவ்வவிழ்தங்களிற் காணும் பேர்களில் மூன்றிலொரு பங்குபோல் இங்கிலிஷாய் வரும். தேவையான சரக்குகளை எந்தச் சீமை மருந்துக் கடையிலுங் கேட்டால் திராத்தமாய்க் கிடைக்கும்.

Digitized by Google

௩.

கொள்

| | |
|---|---|
| அலோஸ் ஆகிய கரியபோளம் | கிறேன் ஒன்று |
| றூவாப் ஆகிய வரியாத்து | கிறேன் நாலு |
| கஸ்தீல்சவுக்காரம் | கிறேன் இரண்டு. |

கல. இரண்டு குளிகைக்கு. இரண்டும் ஒரு முறைக்குச் சாப்படவும். ஓர் சுகபேதி.

No. 3.

Take

| | |
|---|---|
| Aloes | grain one |
| Rhubarb | grains four |
| Castile soap | grains two. |

Mix. Make two pills. Dose two pills. A laxative.

௪.

கொள்

| | |
|---|---|
| அயசீயமஸ் எக்ஸ்திராக் | திறாம் அரை |
| கம்பவுனெக்ஸ்திராக் கலசிந்த ஆகிய பேப்க்கொம்மட்டிக்கூட்டலேகம். | திறாம் ஒன்று |

கல. செய் குளிகை பதினைந்து. இரண்டு குளிகை சுகபேதியாம்.

No. 4.

Take

| | |
|---|---|
| Extract of hyosciamus | dram half |
| Compound extract of colocynth | dram one. |

Mix. Make fifteen pills. Dose two pills. A mild laxative.

௫.

அம்மோனியேதற்றிஞ்சவலீரியன், செய்முறை.

கொள்

| | |
|---|---|
| துவைத்த வலீரியன்வேர் | அவுஞ்சு ஐந்து |
| அறுமற்றிக்ஸ்பீறித்அம்மோனிய | நாழி ஒன்று. |

கல. ௰௪. நாளுக்கு ஊற அடைத்துவைத்து வடித்தெடு. திறாம் அரைதுவங்கி திறாம் இரண்டுவரைக்கும் ஒருமுறைக்குக் கொஞ்சத் தண்ணீரிற் கலந்து குடி.

Digitized by Google

## No. 5.

*Ammoniated Tincture of Valerian.*

Take

| | |
|---|---|
| Valerian root bruised | ounces five |
| Aromatic spirit of ammonia | pints two. |

Mix. Let it stand close stopped for fourteen days, then strain. Dose dram half to drams two in a little water.

௫.

கொள்

| | |
|---|---|
| றூவாப் ஆகிய வரியாத்துப்பொடி | கிறேன் இருபது |
| சல்வேற்பற்ருஷ் | கிறேன் இருபது |
| றூவாப்திஞ்ச | திறும் ஒன்று |
| கறுவாப்பட்டைநீர். | அவுஞ்சு ஒன்று. |

கல. ஒருமுறைக்குக் குடிக்கவும்.

## No. 6.

Take

| | |
|---|---|
| Rhubarb powder | |
| Sulphate of potash | grains twenty of each |
| Tincture of rhubarb | dram one |
| Cinnamon water | ounce one. |

Mix. Make a draught.

௬.

கொள்

| | |
|---|---|
| கொழும்புக்கிழங்குப்பொடி | திறும் இரண்டு |
| எலுமிச்சம்பழத்தின்தோற்சீவல் | திறும் ஒன்று |
| கொதிவெந்நீர் | நாழி அரை |

கல. ஆறுமளவுக்கு இயற்றை மூடி ஊறவிடவும். அவுஞ்சு இரண்டு ஒருமுறைக்கு நாளுக்கு இரண்டொரு முறை குடிக்கவும். ஒவ்வொரு முறையோடு இலிக்ஸலித்திரியல் துளி பத்துக் கலந்து கொள்ளலாம்.

## No. 7.

Take

| | |
|---|---|
| Columba bruised | drams two |
| Lime peel | dram one |
| Boiling water | pint one. |

Mix. Let stand till cold tightly covered. Dose ounces

Digitized by Google

two, once or twice a day, with each dose mingling Elixir vitriol drops ten.

அ.

கொள்

கர்ப்பூரம், விளாம்பிசின் அல்லது அறபிப்பிசின், கற்கண்டு மூன்றிலும் சரிபங்காக.

இவைகளை நன்றாய் அரைத்துத் தூளாக்கிச் சேர்த்துவிடு.

ஆறு கிறேன் ஒருமுறைக்குத் தின்னவும்.

No. 8.

Take

Camphor, Gum Arabic, Rock candy, each drams two.

Powder all finely and mix. Dose grains six.

க.

கொள்

| | |
|---|---|
| பூமத்தைத் தயிலம் | அவுஞ்சு ஒன்று |
| வங்கசீனி | கிறேன் பதினாறு. |

கல. கொஞ்சங் கொஞ்சமாய்ப் பூசிக்கொள்.

No. 9.

Take

| | |
|---|---|
| Strammonium ointment | ounce one |
| Acetate of lead | grains sixteen. |

Mix. Apply a little at a time.

க0.

கொள்

| | |
|---|---|
| சல்வேற்சிங்கு ஆகியவெள்ளைத்துத்தம் | கிறேன் எட்டு |
| தண்ணீர் | அவுஞ்சு ஒன்று. |

கல. ஒருநாளுக்கு மூன்று நாலு முறை வியாதியுள்ள இடத்தில் தடவி விடவும்.

No. 10.

Take

| | |
|---|---|
| Sulphate zinc | grains eight |
| Pure water | ounce one. |

Mix. Wet the sore Part after each nursing.

கக.

பிளக்குவாஷ், செய்முறை.

கொள்

| | |
|---|---|
| சுண்ணாம்புத் தண்ணீர் | அவுஞ்சு நாலு |
| கலமல் | கிறேன் பதினாறு. |

கல. பாலிக்கும்போதெல்லாம்கலக்கிக்கொள்ளவும்.



Digitized by Google

## No. 11.

### "*Black Wash.*"

Take

| | |
|---|---|
| Lime water | ounces four |
| Calomel | grains sixteen. |

Mix. Make a Lotion. Shake when used.

### ௧௨.

கொள்

| | |
|---|---|
| கம்பவுணெக்ஸ்திராக்கலசிந்து ஆகியபேப்க் கொம்மட்டிக்கூட்டவலேகம். | கிறேன் ஆறு |
| கலமல் | கிறேன் இரண்டு. |

கல. இரண்டு குளிகைக்கு. இரண்டு குளிகை ஒருமுறைக்கு. பேதிக்கும்.

## No. 12.

Take

| | |
|---|---|
| Compound extract of colocynth | grains six |
| Calomel | grains two. |

Mix. Make two pills. Dose two pills. A purge.

### ௧௩.

கொள்

| | |
|---|---|
| தர்பந்தீன் | திரும் ஆறு |
| சருவாப்பட்டைத்தண்ணீர் | திரும் ஆறு |
| இஞ்சிப்பாணி | திரும் ஒன்று. |

கல. ௨. ௩. நாழிகைக்கு ஒருமுறை முற்றாய்க் குடிப்பது.

## No. 13.

Take

| | |
|---|---|
| Oil of turpentine | drams six |
| Cinnamon water | drams six |
| Ginger syrup | dram one. |

Mix. Make a draught. To be taken once in two or three hours.

### ௧௪.

கொள்

| | |
|---|---|
| கஸ்கறிலகஷாயம் | அவுஞ்சு மூன்று |
| கர்ப்பூரத்தண்ணீர் | அவுஞ்சு மூன்று |
| காபனேற்சோடா | திரும் அரை |
| அறுமற்றிக்ஸ்பீறித்அம்மோனிய துளி முப்பது. | |

கல. ஒரு அவுஞ்சு நாளுக்கு மூன்றுமுறை குடிப்பது.

Digitized by Google

## No. 14.

Take

| | |
|---|---|
| Infusion of cascarilla | ounces three |
| Camphor water | ounces three |
| Carbonate of soda | dram half |
| Aromatic spirit of ammonia | drops thirty. |

Mix. Dose, ounce one thrice daily.

## ௧௫.

கொள்

| | |
|---|---|
| பேதியுப்பு | அவுஞ்சு ஒன்று |
| காய்ந்த நிலவாகையிலே | அவுஞ்சு ஒன்று |
| பொடிபண்ணிய சுக்கு | திறாம் ஒன்று |
| கொதிவெந்நீர் | நாழி அரை. |

சரக்கை வெந்நீரிற் போட்டு ஆறுந்தனையும் மூடிக்கொண்டு வடித்து அரைவாசியைச் சுகபேதியாகக் குடி. ௬. நாழிகைக்குள் பேதிகாணுவிட்டால் சேஷத்தையுங் குடி.

## No. 15.

Take

| | |
|---|---|
| Epsom salt | ounce one |
| Senna leaves dry | ounce one |
| Ginger root dry bruised | dram one |
| Boiling water | pint one. |

Upon the ingredients pour the water, cover close till cold, strain and take one half. If in six hours no purging, take the remainder

## ௧௬.

### சுண்ணும்புத்தண்ணீர், செய்முறை.

கொள்

| | |
|---|---|
| உடனேசுட்டசுண்ணும்பு கட்டியாக | அவுஞ்சு நாலு |
| நல்லதண்ணீர் | நாழிநாலு. |

சுண்ணும்பை ஓர்சட்டியிலிட்டு பூக்கத் தண்ணீரில் கொஞ்சத்தை அதில்விட்டு, பின்பு மிச்சமான தண்ணீரைவிட்டு நன்றாய்க்கலக்கி எட்டுநாழிகையளவுக்குச் சட்டியை மூடிவைக்கவும். பிறகு கலக்கிச் சீசாக்களில் வார்த்து அடைத்துவைக்கவும். பாவிக்கும்போது தண்ணீரைத் தெளித்து எடுக்கவும்.

Digitized by Google

## No. 16.

*Lime wate*

Take

Fresh burnt lime in lump ounces four
Pure water gallon one.

Slake the lime with a little of the water; then pour on the rest, stir well, cover and set aside for three hours. Pour off and put it in corked glass bottles. When used, decant off the clear fluid.

## கஎ.

அபின்கூட்டுண்டை.

கொள்

அபின், கர்ப்பூரம், கஸ்தில்சவுக்காரம் சரிபங்காக. நன்றாய்ச்சேர்த்துக் குளிகையாக்கவும். குத்துவருத்தத்துக்கு மூன்று ஆறு கிறேன் கொடுக்கவும். இது எப்போதும் ஈரப்பசுமைகொண்டிருக்கும்.

## No 17.

Take

Opium, camphor, castile soap, equal parts. Mix all together. Never dries.

## கஅ.

உவாட்ஸ் பிளுப் பில்.

கொள்

இதரம் கிறம் ஒன்று
றூவாப் ஆகிய வரியாத்துப் பொடி கிறம் ஒன்று.

இவைகளைக் குளிகையாக்கிறதற்கு வேண்டிய தண்ணீரை விட்டு, இதரம் வெயிலிலும் சற்றுந் தோன்றுவரைக்கும் வெகுநேரமாக நன்றாய் அரைத்துச் சேர்க்கவும். முப்பது குளிகைக்கு. ஒருமுறைக்கு ஒரு குளிகை.

## No. 18.

*Ward's Blue Pill.*

Take

Rhubarb powder, mercury, each one dram. Water enough to pill. Rub all together till no globules of mercury appear, even in a strong light. Make thirty pills. Dose one.

Digitized by Google

# மருத்துவ வைத்திய

# அகராதி.

---

அ, A. In. இல்லாமை. எதிர்மறைப்பொருளைத் தரும் ஓர் உபசர்க்கம்.

அகச்சந்துப்பதிவு, Internal iliac fossa. (அகம், சந்து காணை.) சந்தென்பினது அகப்பரப்பின் மேற்பக்கத்திலே சரிவாய்ப் பீடிகையென்பு பொருந்தும் இடத்திலுள்ள சொறிவும் பள்ளந் திட்டியுமான பரப்பொழிந்த அகப்பரப்பு.

அகம், Internum. உடம்பைச் சரிசரி பாதியான இருகூறாய்ப் பிரிக்கும் நடுவரியின் வலப்பக்கத்திலாவது இடப்பக்கத்திலாவது குறிக்கப்படும் இரண்டு இடங்களுள் நடுவரிக்குக் கிட்டவிருப்பது அகம் என்றும், இதற்குத் தள்ளி இருப்பது புறம் என்றும் சொல்லப்படும்.

அகல், Mons veneris. அரையின் முற்பக்கத்திலே நடுவாகத் தோன்றுந் தசைமேடு.

அங்கவிகிர்தி, Apoplexy. (அங்கம், உறுப்பு. விகிர்தி, வேறுபாடு. இ.ச; கo.) மூளையிலே அதனமாய் இரத்தஞ்சுரப்பதினாலெனிலும், மூளையிலுள்ள இரத்தக்குழல்கள் வெடித்து இரத்தம் மூளையிற் கலப்பதினாலெனிலும், சடிதியிலே சேட்டை செயலற்றுப்போக உண்டாகும் மூடுசன்னி.

அங்குட்டம், Thumb. கைப்பெருவிரல்.

அங்குசம், Crochet. (கூ.) ஒரு தலைப்புக்கொளுக்கியாய் மற்றத் தலைப்பு பிடியாய் கரு..அங்குல நீளமுள்ளதாயிருக்கும் வளைவான உருக்குக் கம்பியாலாகும் ஓர் கருவி. இதினாற் சிசுவைக் கொளுவி வெளியில் இழுப்பது.

அசீட, Acephalous. (அ. காணை. சீட சிரசு. அசகூ.) மூளையும் சிரசின் உச்சிப்பக்கமுமில்லாத.

அஸ்தம், Hand. (கூஎஉ.) கைக்குளசு தொடங்கி விரல் நுனி ஈருக இருக்கும் கைப்பகுதி.

---

☞ இவ்வகராதியிலே காணப்படும் இலக்கங்கள் அவைகளை அடுத்திருக்குஞ் சொற்கள் உவில்சன் என்பவர் செய்து இரண்டாந்தரம் அச்சிற் பதிப்பித்த சமஸ்கிரத இங்கிலிஷ் அகராதியின் பக்கங்களைக் காட்டும். (இ. ச.) என்னும் அட்சரங்கள் உவில்லியம்ஸ் என்பவர் செய்த இங்கிலிஷ் சமஸ்கிரத அகராதியிலிருந்து எடுக்கப்பட்ட சொற்களைக் குறிக்கும்.

Digitized by Google

அடி, Base. சலப்பை கருப்பை முதலியவற்றிலே அகலித்திருக்கும் அந்தம்.

அடியீடு, Predisposition. உடம்பிலே நோய் சருவுதற்கு ஏதுவாயிருக்கிற.

அடைப்பம், Plug. இரத்தம் வெளியில் பெருகாமல் தடுக்கும்படி அந்தந்த வாசலை அடைக்கும்பொருள்.

அணுதரிசனி, Microscope. பூதக்கண்ணாடி. நுண்ணிய பொருள்களைப் பார்த்து ஆராய்வு செய்வதற்கான கருவி.

அவணயமறி, Retention of the placenta. (அவணயம் காண. மறி மறிபட்டிருத்தல்.) அவணயமானது கழன்று விழவேண்டியபருவத்திலே விழாமற் கருப்பையுள் அல்லது யோனியுள் மறிபட்டுக்கிடப்பது.

அவணயம், Placenta. கருப்பையிலே சிசுவைச் சூழ்ந்திருக்கும் சவ்வுகளுக்கிடையே கருப்பையோடு அவணந்து தட்டை வடிவமாய் மெதுவாயிருக்கும் பொருள். இது நாபிக்கொடியினாலே சிசுவின் கொப்பூழுடன் தொடுக்கப்பட்டிருக்கும்.

அவணயராவம், Bruit placeentaire. (அவணயம் காண. ராவம் சத்தம்.) கர்ப்பிணியின் வயிற்றிலே காதுவைத்துப் பார்க்கும்போது வாயாற் சும்மா ஊதுஞ் சத்தம்போல் அவணயத்திலே கேட்குஞ் சத்தம்.

அண்டவாகி, Oviduct. (அண்டம் சினை. வாகி காண.) முட்டை இடும்பிராணியில் சினைப்பையிலிருந்து சினை முற்றி முட்டையாகச் செல்லும் பாதை.

அத, Hypo. sub. (உக.) கீழ் என்னும் பொருள்படச்சொல்லின் முதலில் வரும் ஓர் உபசர்க்கம்.

அதக்காயம், Lower extremity. (அத காண. காயம் உறுப்பு. உகஉ.) பாதம், கெண்டைக்கால், தொடை, இவைகள் அடங்கிய பகுதி இரண்டில் ஒன்று.

அதிசாரம், Diarrhea. (அதி மிகு. சாரம் கழிதல்.) கிராணி. வயிற்றுக்கழிச்சல். மலம் நீர்த்துமிகக் கழிதல்.

அதிசுழுத்தி, Coma. (அதி மிகு. சுழுத்தி ௬அ.) அயர்தியான கடுநித்திரைபோன்ற மோய்ப்பு.

அதோதரநாடி, Hypogastric artery. (அத, உதரம், நாடி காண.) அகச்சந்துநாடி. கருப்பை சலப்பை முதலிய உறுப்புகளுக்குப் பல சாகைகளாக விரிந்துசெல்வதாய்க் கீழ்வயிற்றினுள் பின்பக்கமாய்க் கிடக்கும் நாடி.

அத்திசோபம், Exostosis. (அத்தி எலும்பு. சோபம் திரணை.) எலும்பின் வெளிப்பரப்பிலே அல்லது உட்குழாயிலே உண்டுபடும் மொக்குள் காய் இவைபோன்ற எலும்பு வீக்கம்.

அந்தர்ச்சந்திமுருந்து, Interarticular cartilage. (அந்தர் உள். ச

Digitized by Google

ந்தி, முருந்து காண.) சரீரப்பொருத்துகளிற் சந்திக்கும் எலும்பு நுனிகளுக்கிடையேயுள்ள முருந்து.

அந்தித்தல், Insertion. ஒன்றை வேறென்றிலிட்டுப் பொருத்துதல்.

அந்திமோனி, Antimony. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) வெண்மையான ஓர்வகைலோகம். ஈயத்தை இதினுடன் கலந்து உருக்கி எழுத்தச்சைச் செய்வார்கள், இது கந்தகத்துடன் சேர்ந்து அஞ்சனக்கல்லாகும்,

அந்திமோனிச்சூரணம், Antimonial powder. (அந்திமோனி காண. சூரணம் தூள்.) அந்திமோனி சேர்ந்திருக்கும் ஓர்வெள்ளைப்பற்பம். மிகுதியாக இது சுரத்துக்கு மருந்து.

அந்திரம், Intestine. (௯௯.) குடல். வயிற்றிலே இரைப்பை தொடுத்து அபானவாசல் வரைக்கும் கிடக்குஞ் சவ்வுக்குழல்.

அபினிரசிதம், Opiate. (அபின், ரசிதம் காண்,) அபின் சேர்ந்த மருந்து,

அபின், Opium. அலின், கசகசாவிற் பொசியும் கருமைகொண்ட இறுகின சாறு. இதைத் தின்றால் மயக்கத்தை விளைவிக்கும். இம்மருந்துக்குக் குத்து வருத்தம் அடங்கிவிடும்; மலங் கட்டப்படும்,

அமிலதம், Oxygen. நம்மைச்சூழுங்காற்றில் ஐந்தில் ஒருபங்காகித் தீமூழுவதற்கும் சுவாசத்துக்கும் ஆதாரமுமாயிருக்கும் வாயு.

அமிலம், Acid. (௬௪.) புளிப்பு. மண், லோகம் இவைகளுடன் சேர்ந்து கலந்து உப்புவர்க்கங்களாகும் பொருள், உதாரணமாய் இரும்புடனே கந்தகாமிலஞ் சேர்ந்து கலந்தால் அன்னபேதி என்னும் உப்பாகும்.

அம்மோனிய, Ammonia. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) கடுங்காரமும் உருவொளியும் உடையதாய் வாயு மயமாயிருக்கும் ஓர்வகைச்சருச்சி. இதிலே அமிலங்கள் கலந்து உண்டுபடும் நவச்சாரம், நவச்சாரக் கிராவம் முதலிய வெள்ளையுப்புகளையும் நீர்களையும் வைத்தியத்தில் வழங்குவார்கள், (அமிலம், சருச்சி காண.)

அயசீயமஸ், Hyoscyamus. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) குராசாணியோமம், ஒருமருந்துப்பூடு. வைத்தியத்திலே இதைச் சாறுய்த்தான் வெகுவாய் வழங்குவது. இதற்குக் குத்து வருத்தம் மடங்கும். மலம் இளக்கமுஞ் சிலவேளை காணும்.

அயரசிதம், Iron preparation. (அயம் இரும்பு. ரசிதம் காண.) இரும்பு முக்கியமாய்ச் சேர்ந்திருக்கும் மருந்து.

அயில், Lancet. இரத்தங் குற்றி எடுக்கவும், கட்டு விப்புருதி

Digitized by Google

முதலியவைகளை வெட்டவும் வழங்கும் நுனியில் ஒடுக்கமும் இரண்டருகுங் கூர்கொண்ட ஓர் சிறுக்கத்தி.

அரிசம், Piles. (௭௨.) அபானவாசலில் உண்டுபட்டு சிற்சில சமயங்களில் இரத்தம் அல்லது சீழ்போசியும் முளைகள். இவை சிலவேளை உள்ளுக்கும் சிலவேளை புறத்திக்கும் மாத்திரம் இருக்கும்.

அர்ப்பணம், Application. (௭௪.) காயம் கட்டு புண் முதலியவற்றில் இடுவனவாகிய சேர்வை, பற்று முதலியவற்றுக்குப் பொதுப்பெயர்.

அலக்கால், Alcohol. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்) சாராயச்சத்து. தண்ணீரினும் பார்க்க மென்மையாய்க் காரங்கொண்டு தெளிந்த நீர்மயமாயிருக்குஞ் சாராயச்சாரம்.

அலோஸ், Aloes. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) கரியபோளம். இராசதாவளை, கற்றாழைகளின் சாறுவற்றி உண்டுபடும் காய்ச்சுக்கட்டிச் சாடைகொண்ட கசப்பான ஓர் சரக்கு. இது ஓர் விரேசன மருந்து.

அல்குல், Vulva. பேரிதழ்களுக்கு இடையிலுள்ள பிளப்பு. (பேரிதழ் காண.)

அல்குற்கவை, Fourchette. (அல்குல் காண.) பேரிதழ் பின்னுக்குப் பொருந்துவதாகிய கவரான இடம். (பேரிதழ் காண.)

அல்குற்றினவு, Pruritus pudendi. (அல்குல் காண. தினவு சொறிவு.) அல்குலில் உண்டுபடும் சொறிவு.

அவலேகம், Extract. (இ. ச; அக.) சாறு, சாரங்களை வற்றவைத்துப் பெரும்பாலும் மெழுகுபதத்தில் எடுக்கும் மருந்துவகை.

அவளிகை, Omentum. பரியந்திரச்சவ்வின் ஓர் மடிப்பு. இது வயிற்றின் பித்திக்குள்ளே குடல்களுக்கு முன்னாய்த் தூங்கும் நாலுபட்டான பெரிய சவ்வுத்திரை. (பரியந்திரம் காண.)

அவுன்சு, Ounce. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) எட்டுத் திரும்கொண்ட நிறை. (திரும் காண.)

அழற்சி, Irritation. யாதொரு உறுப்பு அல்லது பகுதி அழன்று இருப்பது. உதாரணமாய் புழுதி அல்லது எரிவண்டு கண்ணிலே பட்டவுடனே கண் அழற்சிகொள்ளும்.

அரோறூற், Arrow root. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) உணவுக்கேற்ற ஓர்வகை மாக்கிழங்கு.

அனாமிகை, Innominatum. (அ காண. நாமிகை பேருள்ளது.) சதுரங்கொண்டு தகட்டுவடிவமாய், வலச்சந்திலும் இடச்சந்திலும் இருக்கும் இரண்டு திருகலெலும்புகளில் ஒன்று.

அனு, Con. syn. உடன் என்னும்பொருள் பட வரும் ஓர் உபசர்க்கம்.

Digitized by Google

அனுகக்கினம், Anodyne. (அனுகம் வருத்தம். கினம் காண.) கோ முதலிய வருத்தந் தீர்க்கும் மருந்து.
அனுகுணச்சுரம், Sympathetic fever. (அனு கூட. குணம், சுரம் காண.) உடம்பின் சிற்சிலபகுதியில் உண்டுபடும் வியாதிபற்றிக் கிளம்புஞ் சுரம். உதாரணமாய் கை கால்களிலே பெருங்காயங்கள் புண்கள் இருந்தாற் சுரங் காணும்.
அனுசங்கி, Symphysis. (அனு கூட. சங்கி கூடுவது. அஅக.) ஒரு எலும்பு வேறொரு எலும்புடனே முருந்திடைப்பட்டு அசையாமல் ஒன்றியிருக்கும் பொருத்து.
அனுமுகித்தல், Anastomosis. (அனு கூட. முகம் வாய். விகுதி.) உடம்பிலுள்ள இரத்தக்குழல்கள் முதலியவற்றின் துவாரங்கள் ஒன்றோடொன்று சந்தித்துப்பொருந்துதல். இது பெரும்பாலும் குழல்களின் தலைப்பிலே காணலாம்.
அனுலேபனம், Fomentation. (இ. ச; ௬௫.) வெந்நீரிற் சீலை தோய்த்துப் பிளிந்து ஈரலிப்புஞ் சூடுங் காணும்படி உடம்பில் ஏதேனும் ஒரு பகுதியில் இடுதல்.
ஆகரி, Mineral. (௬௦உ.) கல் மண் உப்பு லோகம் இவை போலும் உபதாதாகிய வஸ்து.
ஆகரியமிலம், Mineral acid. (ஆகரி, அமிலம் காண.) ஆகரி வஸ்துக்களில் தோன்றும் அமிலம். உதாரணமாய் கந்தகம் என்னும் ஆகரியிலே கந்தகாமிலமும், வெடியுப்பு என்னும் ஆகரியிலே உருசகதாமிலமும், கறியுப்பு ஆகரியிலே நீரசாமளாமிலமும் தோன்றும். இம்மூன்றையுமே பெரும்பாலும் ஆகரியமிலம் என்பார்கள்.
ஆசமனீயம், Gargle. (௬௦௬.) வாய் தொண்டைகளை அலம்புவதற்கான மருத்து நீர்.
ஆசனக்கணு, Tuberosity of the Ischium. (ஆசனம் காண. கணு மொக்கு.) ஆசனவென்பின் கீழந்தத்திலிருக்கும் ஒருபெரிய மொக்குள். உட்காந்திருக்கும்போது உடம்பின் பாரம் முழுவதும் ஆசனக்கணுவிலே பொறுக்கும்.
ஆசனமுள், Spine of the Ischium. (ஆசனம் காண.) ஆசனவென்பினது பின்னோரத்திலே அகமாய்க் கீழ்நோக்கியிருக்கும் கூரான மெல்லிய முளை. (அசம் காண.)
ஆசனம், Ischium. அனுமிகையென்பிலே பின் சருவிக் கீழிருக்கும் பகுதி. உட்காந்திருக்கும்போது ஆள் இந்த என்பிலேதான் பொறுப்பாய் இருப்பது. (அனுமிகை காண.)
ஆந்திரிகம், Viscus. (கசச.) தலைமண்டைக்குள்ளேயும், நெஞ்சுக்குள்ளேயும், வயிற்றுக்குள்ளேயும் இருக்கும் உறுப்புகளின் பொதுப்பெயர். உதாரணமாய் மூளை, இரைப்பை, கருப்பை.
ஆழாக்கு, A gill. அரைக்கால் நாழி. (நாழி காண.)

Digitized by Google

ஆறையம், Cell of cellular tissue. (சகரு. வலை.) கண்ணறை. நுண்ணிய சிற்றறை.

ஆறையோதி, Cellular tissue. (ஆறையம், உதி காண.) கண்ணறையுள்ளதசைப்பதார்த்தம். இது உடம்பெங்குஞ் செறிந்து மிகுதியாய் எங்தெந்த உறுப்பிலுஞ் சேர்ந்திருக்கும்.

இசிவு, Elasticity. சமஸ்காரம். ஒரு பொருளை அமர்த்தி அல்லது வளைத்துப்போட்டுவிட மறுபடி முன்னிருந்த வண்ணமாய் வலிய வருந் தன்மை.

இடையளவு, Interferance. (இடை அளவு.) ஒரு காரியத்திலே இடையில் ஒருவர் போய்க் கையிடல்.

இதரம், Mercury. இரசம். வெள்ளி நிறமாய் நீர்மயமுள்ள லோகம்.

இந்திரம், Organ. கருவி. எந்தப் பிராணி தாவரத்திலும் நடைபெறுந்தொழில்களுள் ஏதாவதொன்றை நடத்தும் உறுப்பு. (தாவரம் காண.)

இபிகாக்கு, Ipecac. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) தென் அமரிக்காவில் உண்டாகும் ஓர் மருந்துப்பூண்டின்வேர். இதைச் சூரணம் கஷாயம் முதலிய பக்குவங்களாய் வழங்குவார்கள். இதினால் உவட்டு ஓங்காளம் உண்டுபடும்.

இயற்கை, Natural. இயல்பு. சுபாபம்.

இரிகம், Heart. (இ. ச; ஏ௦ரு.) இதயம். இரத்தாசயம். இருதயம்.

இலங்கனம், Fasting. (எகரு. உண்ணாமல் இருப்பதாகிய உபவாசம்.) நோயாளிக்கு விதிக்கப்பட்ட உபவாசம்.

இழை, Fiber. நூல். புரி.

இழைக்கச்சம், Band of fibers. (இழை காண. கச்சம் கயிறு.) பல இழைகள் ஒருங்கு கூடித் திரண்டிருக்கும் நாடாப்போன்ற தசை.

இறந்தை, Eschar. (இறந்துபோனது.) விப்புருதி சிலந்திப் புண் இவைபோல்வன பற்றி உடம்பின் உறுப்புகளில்அழுகி இறந்துபோன பகுதி.

ஈசம், Diminutive. சின்னஞ்சிறிது என்னும் பொருள் படவரும் ஓர் ஆரியச்சொல்.

ஈதர், Ether. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) தண்ணீர் நிறமான மெல்லிய மருந்து நீர். இது அலக்கால் என்னுஞ் சாராயமும் கந்தகாமிலமுங் கலந்து வடித்தெடுப்பது. (அலக்கால், கந்தகாமிலம் காண.)

உக்கிர, Malignant. (இ. ச.) கொடிய. சேதஞ்செய்கிறதற்கேதுவான. அசாத்தியமான.

உசும்பல், Quickening. கருப்பையில் இருக்குஞ் சிசு கர்ப்பிணி

Digitized by Google

க்கு முதன்முதற் தோன்றத்தக்கதாய் அசைதல் அல்லது துடித்தல்.

உச்சி, Fontanelle. குழந்தைகளின் தலையின்மேற்பக்கத்திலுள்ள மெதுவான் இடமிரண்டு. இவை முன்னுச்சி பின்னுச்சி என்னப்படும்.

உடுக்குச்சுருக்கம், Hour glass contraction. (உடுக்குப்போல் இடையிலே சுருங்கியிருப்பது.) க. பிரசவித்தவேளையிலே கருப்பையின் பித்தி ஏகத்துக்குச் சமமாய்ச் சுருங்காமல் அதிலொரு பகுதி மாத்திரம் சுருங்கிக் கருப்பையில் ஒருமூலையில் அணையத்தை மறிப்பது. உ. மேலே கருப்பைப்பகுதியும் கீழே யோனிப்பகுதியும் விரிந்து இரண்டறைகளாயிருக்க இவைக்கிடையிலே கருப்பைவாய் சுருங்கியிருப்பது.

உட்பரிப்பீள், Amnion. வெளிப்பரிப்பீளினுள் அடுத்திருக்கும் மெல்லிதும் உருவொளியுள்ளதும் அதிகம் உரப்பானதுமாய் கருப்பையுள் சிசுவைச் சூழுஞ் சவ்வு. (வெளிப்பரிப்பீள் காண.)

உதயம், Presentation. பிரசவத்திலே முதல் வெளிப்படுஞ் சிசுப்பகுதி.

உதரகவளிகை, Abdominal binder. (உதரம் காண. கவளிகை, உ0௪.) பிரசவித்தபின்பு ஸ்திரியின் வயிற்றைச் சுற்றிக்கட்டும் ஓர் இரட்டுச்சீலைத் துண்டு.

உதரம், Abdomen. (இ. ச.) வயிறு. இரைப்பை, ஈரல், குடல்கள், முதலியவற்றை அடக்கியிருக்கும் அறையான உடம்புப் பகுதி.

உதர்த்தம், Erysipelas. (௧௪௬.) செந்திநோய். ஓர் வகையான அக்கிக்கரப்பன். இது சிலவேளை காயத்தைப்பற்றியுஞ் சிலவேளை வலியவும் மேனியிலே உண்டுபட்டுச் சீக்கிரமாய்ப் பரக்கும். இதில் ஒருவகை கடுமைகொண்டு தோற்புரையிலே சீழ் பற்றும்.

உதி, Tissue. (உத நெய்வு. ௧௬௬. இ. ச.) உடம்பிலுள்ள எவ்வகையான பதார்த்தப்பின்னலுக்கும் பெயர். எந்த உறுப்பும் பல உதிகள் சேர்ந்துண்டாகும். உதாரணமாய் ஈரலில், நரம்பு நாடி நாளம் சோஷணி ஆறுயம் வசாசில்லி சிங்காணசில்லி இவைகளுள்ள உதிகள் ஏழும் கூடியிருக்கும்.

உதிரசலை, Hemorrhage. (உதிரம். சலை பெருகல்.) இரத்தப் பெருக்கு. இரத்த இறைப்பு.

உதிரநாட்டம், Afflux of blood. இரத்தம் ஓர் இடத்தை அல்லது உறுப்பை நோக்கி அதனமாய்ச் செல்லல்.

உத்தாபம், Irritability. (இ.ச.) அழற்சி எளிதாய்க் கொள்வதற்குத் தக்கதான நிலைமை.

Digitized by Google

உபசமனம், Sedative. (இ.ச.) அழற்சியையும் அழற்சிகோள்ளக்கூடியதன்மையையுஞ் சாந்தியாக்கி நோவைத் தணிக்கும் மருந்து.
உபதஞ்சம், Syphilis. (கருச.) ஓர்வகைப்பிரமேக வியாதி. இது மிகுதியாகச் சனன உறுப்புகளிலே உண்டுபட்டுத்தோற்றுந்தன்மையுள்ள முரணிப்பான புண். இப்புண்ணின் விஷம் உடம்பெங்கும் ஏறிச்செறிகிறதினுல் பல கொடியவருத்தங்களுக் கேதுவாகும். இது சந்ததியிலுந் தாக்கும்.
உருசகதம், Nitrogen. (இ.ச.) நாம் சுவாசிக்கும் வாயுவில் ஐந்தில் நாலுபங்காயுள்ள வாய்வு.
உருசகதாமிலம், Nitric acid. (உருசகதம், அமிலம் காண.) வெடியுப்பிலெடுக்கும் அமிலம். இது வைத்தியத்திலே வழங்கிவரும் மூவகையான ஆகரியமிலங்களுளொன்று. இது அதிகம் புளிப்பும் எரிவும் புகைவுங் கனப்புமுள்ள நீர்.
உற்கம், Erection. (உத் மேலே. கம் செல்லல்.) துன்னல். நிமிர்ச்சி. சுரந்துகிளம்பல்.
உற்கருசி, Vectis. (உத் மேலே. கருசி நிமிர்த்துவது.) மிண்டி. கிளப்பி. வில்லங்கமான பிரசவங்களிலே யோனி வழியாயிட்டுச் சிசுவைச் சேதமின்றிக் கிளப்பியிழுத்தெடுப்பதற்கு வழங்கும், கரு. அங்குல நீளமும் சொற்ப வளைவுமுள்ள ஓர் உருக்குக் கம்பிக் கருவி.
உற்காயம், Upper extremity. (உத் மேல். காயம் உறுப்பு.) கைவிரலின்நுனி தொடங்கித் தோள் வரைக்கும் இருக்கும் உடம்பின் பகுதியிரண்டில் ஒன்று.
உற்காரிகை, Poultice. கொதிப்புக்கொண்டிருக்கும் புண் கட்டு விப்புருதிமுதலியவைகளுக்குச் சாந்தியும் சுத்தமுமாக அணைத்திடுகிற புற்கை கழிப்பாப்பை இவைபோல்வன.
உற்கோதி, Erectile tissue. (உற்கம், உதி காண.) இயல்பிலே தானுய்த் துன்னுந்தன்மையுள்ள உதி.
எதிர்விட்டம், Opposing diameter. பந்தைகளால் இறங்குகையில் பந்தைகளின் பெருவிட்டங்களில் அணையுஞ் சிசு உறுப்பின் பெருவிட்டம் சிறிதோ பெரிதோவென விசாரிப்பதாகிய அளவை. (சிசு, பந்தை காண.)
ஏர்கற்று, Ergot. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) கோதுமை முதலிய தானிய மணிகளில் வியாதிகொண்டு கறுத்த நெடுமுளையாய்த் தோன்றும் பொருள். கருப்பையைச் சுருங்கப்பண்ணுவதற்கு இது விசேஷித்த மருந்து.
ஒருத்தலைவலி, Hemicrania. தலையின் வலப்பக்கத்திலாவது இடப்பக்கத்திலாவது மாத்திரம் வருத்துங் குத்து.
கக்கம், Armpit. (களஅ.) கமுக்கட்டு. பின்னங்கைநெஞ்சுடன் சந்திக்கும் இடத்திலே தோட்பொருத்தின்கீழ் இருக்கும் பள்ளமான இடம்.

Digitized by Google

கங்காளம், Skeleton. (கஎகூ.) முழுஎலும்பு. எலும்புக்கோவை.
கசேரு, Spine. முள்ளந்தண்டு. வீணாதண்டம். பிடரென்புதொடங்கிப் புச்சவென்பு வரைக்கும் இருக்கும் முள்ளென்புக்கோவை.
கசேருதூம்பு, Vertebral canal. (கசேரு, தூம்பு காண.) பிடரென்பு தொடங்கிப் புச்சவென்பு வரைக்குமுள்ள எலும்புக்கோவைக்கூடே செல்லும் பெரியபுரை. (புச்சம் காண.)
கஷாயம், Infusion. (உ௦ரு.) மருந்துப்பூண்டு முதலிய பதார்த்தங்களை நீரிற்கலந்து நெருப்பிலிடாமல் அவற்றின் சாரமிறக்குவது. இதில் தண்கஷாயம் வெங்கஷாயம் என இரண்டுவிதமுண்டு. (பாசனம் காண.)
கஷ்டபிரசவம், Difficult labor. (கஷ்டம் வில்லங்கம். பிரசவம் காண.) விக்கினமும் வில்லங்கமுமாய் வெகுநேரஞ் செல்வதாய் நிகழும் பிரசவம்.
கட்சகம், Cavity. (கஎஅ.) அறை. அந்தந்த உறுப்பிலேயுள்ள அறைவெளி.
கடு, Papilla. சவ்வு சூழ்ந்திருக்குஞ் சிலசில பரப்புகளின் மேற்படர்ந்திருக்கும் சிறுச்சிறுமுளை. உதாரணமாய் நாக்கின் மேற்பக்கத்திலே தோன்றும் முளைகள் .
கணு, Tuberosity. எலும்புகளிலே தோன்றும் மொக்குள்வடிவமான முளை.
கண்டரை, Aorta. (கஅசு.) இரத்தாசயத்தின் இடது பக்கத்திலிருக்கும் கீழ் அறையிலிருந்து கிளம்பும் மகா நாடி. இதிலிருந்தே செவ்விரத்த நாடிகள் எல்லாம் எழும்பிக் கிளைத்துப் படருகின்றன.
கந்தகாமிலம், Sulphuric acid. (அமிலம் காண.) கெந்தகத்தையும் வெடியுப்பையுங் கலந்து எரியிட்டு எடுக்கும் ஓர்வகை அமிலம்.
கபாலம், Cranium. (கஅஅ.) தலைமண்டை. மூளையை மூடிச்சூழ்ந்திருக்கும் எலும்புக்கூடு.
கபேவபல்சம், Copaiba balsam. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) கபேவ என்னும் மரத்தின் பட்டையாலே வடியுஞ் சுகந்தமான தெளிந்த செவ் வீணீர்.
கம்பப்பிரமை, Delirium tremens. (கம்பம் நடுக்கம். பிரமை மாருட்டம்.) உடம்பு நடுக்கத்துடனே நிகழும் மாருட்டம். இவ்வியாதி குடிவெறியிற் பழுத்தவர்களிலே மிகுதியாய் உண்டுபடும்.
கம்பப்பைத்தியம். (கம்பப்பிரமை காண.)
கரு, Embryo and appendages entire. விந்தின் அருட்சிபெற்ற சினை. (சினை காண.)



Digitized by Google

கருக்கமலம், Allantois. சிசுவுடன் தொடுத்திருக்குஞ் சிறுச்சவ்வுப்பை.

கருப்பை, Uterus. சராயு. பிறவி காலம் வரைக்கும் கருக் கிடப்பதற்கான பை.

கருப்பைக்கழுத்து, Neck of womb. ஓர் பருமுனை போன்றதாய் யோனிக்குள்ளே இறங்கியிருக்குங் கருப்பையின் ஒடுக்கமான கீழ்ப்பகுதி.

கருப்பைச்சிறை, Broad ligament of womb. (சிறை சிறகு.) கருப்பையுடன் வலமிடமாய்த் தொடுத்திருக்கும் இருபட்டுள்ள சிறகு போன்ற சவ்வு.

கருப்பைலதை, Round ligament of womb. (லதை கொடி.) கருப்பையின் மேலந்தத்திலிருந்து வலமிடமாய்க் கிளம்பிச் சென்று அகலிலே அந்திக்கப்பட்டிருக்கும் இரண்டுகொடி.

கருமலம், Meconium. (கரு, மலம்.) சிசு பிறந்தபின் முதன் முதற் கழியும் மலம்.

கரேகை, Suture. (க தலை. கஎஎ. ரேகை வரி.) தலைமண்டையிலே தோன்றும் பொருத்து வரி.

கர்க்கடம், Callipers. (கஃகூச. ஓர்வகைக் கவராசம்.) வளைந்த கால்களையுடைய கவராசக் கருவி. இதின் கால்களின் நுனியாற் பொருள்களைக் கவ்வி அவற்றின் விட்டம் முதலிய அளவைகளைக் குறிப்பது.

கர்ப்பதாடனம், Ballottement. (தாடனம் தட்டல். ௱எக.) கருப்பையின் கீழந்தமாகிய கழுத்திலே விரலாற் தட்டி எற்றல். உள்ளே சிசு இருக்குமாகில் எற்றினபின் மறுபடி சிசு விரலில் விழும் அதைப்புத் தோன்றும். கருத்தரித்திருக்கிறதென்பதற்கு இது ஓர் அறிகுறியாம்

கர்ப்பூரம், Camphor. (கஃகூஎ.) சிலமரங்களிலே வடியும் சுகந்தமும், வெண்மையும் லேசிலே நெருப்புப்பற்றி எரிவதுமான பிசின்.

கலமல், Calomel. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) வெண்மையும், பாரமுந் தண்ணீரில் கரையாத தன்மையுமுள்ள இதரபற்பம்.

கலம்பா, Calumba. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) கொழும்புக்கிழங்கு. கைப்பும் சற்று மஞ்சள்நிறமுமான ஓர்கிழங்கு. இது பலவிதமாய்ப் பக்குவம்பண்ணி வைத்தியத்தில் பிரயோகிப்பார்கள்.

கலிதட்சதம், Cancer. (கலித பொசிவு. உஅகூ. சதம் புண். உகூக.) ஓர் உக்கிரவியாதி. இது வருத்தமான வயிரித்த வீக்கமாய்த் தொடங்கிப் பின்பு புண்ணாய்ப் பீறி வெடித்து, நாற்றமான நீர்த்த கருஞ்சீழ்சிந்தி, அசாத்திய வியாதியாய்க் கடைசியிலே சீவமோசத்தையும் உண்டாக்கும்.

Digitized by Google

கவசம், Coat. எந்தெந்த உறுப்பிலுஞ் சூழ்ந்திருப்பதாய் விளங்குஞ் சவ்வுப் படலம்.
கவுரரேகை, Linea alba. (கவுர வெண்மை. ஙoங. ரேகை காண.) வயிற்றுப் பித்தியின் முன்பக்கத்தில் நடுவாக நெஞ்சாங்குழி துவங்கி மேகனவென்பு வரைக்கும் நேரே செல்லும் வெள்ளைவரி. இது தோல் உரித்த பின் தெரியும். (மேகனம் காண.) [கியிருக்கும் பகுதி.
கழுந்து, Cervix. சில உறுப்புக்களிலே கழுத்துப்போல் ஒடுங்
கனிட்டை, Little finger. (க அ கூ.) சின்னிவிரல். கைவிரல்களுள் ஈற்றிலிருக்கும் சின்ன விரல்.
காடகரேகை, Occipito parietal suture. (காடம், கரேகை காண.) தலையின் பிடரென்பும் பித்திகையென்புகளும் பொருந்தியிருக்கும் வரி. (பித்திகை காண.)
காடம், Occiput. (ஙoகூ.) பிடரியெலும்பு. பிடரென்பு.
காடி, Vinegar. வின்னூரி. கள்ளு முதலிய நீர்கள் புளித்துண்டாகும் புளிப்புக்கொண்ட நீர்.
காடிக்காரம், Nitrate of silver. உருசகதாமிலமும் வெள்ளியுஞ் சேர்ந்து உண்டுபடும் ஓர் உப்பு. (உருசகதாமிலம் காண.)
காண்டம், Body. ஒரு பொருளில் அல்லது உறுப்பிலே வடிவத்தினுலும் பருமையினுலும் முக்கியமான பகுதி.
காபனேற்சோட, Carbonate of soda. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) ஓர்வகையான வெண்சருச்சி மருந்து. இது நெய்தற்பூண்டுகளின் சாம்பலில் எடுப்பது. வெகுவாயோ கறியுப்பிலே கந்தகாமிலம் முதலியன சேர்த்துப் பக்குவம்பண்ணி எடுப்பது. (கந்தகாமிலம், சருச்சி காண.)
காறையென்பு, Clavicle. பூணூரவென்பு. நெஞ்சின் மேற்பகுதியிலே இடம் வலமாய்த் தோள்மூட்டுக்களிலே இசைத்திருக்கும் இரண்டு எலும்புகளில் ஒன்று.
கிரந்தி, Ganglion. சோஷணைக்குழல்களுடன் தொடுத்திருக்கும் சிறுச்சிறுத் திரட்சி. (சோஷணி காண.)
கிரமப்பிரசவம், Natural labor. (கிரம ஒழுங்கும் எளிதுமான. பிரசவம் காண.) சரிமாதம் நிறைவேறி சிசுவின் சிரசு உதயமாய் கருவிமுதலியன பிரயோகிக்கவேண்டாமல் அறுபது நாழிகைக்குள்ளே பிரசவம் முற்றி பிள்ளை உயிராய்ப் பிறப்பது.
கிரமாதீதபிரசவம், Preternatural labor. (கிரம ஒழுங்கும் எளிதுமான. அதீத கடந்த. பிரசவம் காண.) சிசுவின் சிரசு உதயமாகாமல் வேறேதுமொரு உறுப்பு உதயமாய்ப் பிறப்பது.
கிராகி, Narcotic. (இ. ச. ஙoகூ.) நித்திரை மஸ்து மயக்கங்கொள்ளும்படி செய்யும் மருந்து. நோ குத்து முதலிய வருத்தங்கள் தணியும்படி இவை சொற்ப அளவாய்க் கொடுப்பது மிகு வழக்கம்.

Digitized by Google

கிருட்டி, Spasm. வலி, குறண்டல், கெண்டையேறல் இவை போலுங் குணம்.

கிருட்டிக்கினம், Antispasmodic. (கிருட்டி, கினம் காண.) வலி குறண்டல் கெண்டையேறல் இவைபோலும் வருத்தங்களைத் தணித்துத் தீர்க்கும் மருந்து.

கிருத்தியம், Operation. process. (உசஅ.) செய்கை. யாதொரு கருமம் முற்றுவதாகிய செயல்.

கிலுத்தம், Wrist. மணிக்கட்டு. அஸ்தம் முன்னங்கையுடன் பொருந்தும் பொருத்து. இதில எட்டுச் சிறு எலும்புகள் உண்டு. (அஸ்தம் காண.)

கிலோமம், Bladder. (உகூo. இ.ச.) சலப்பை. கழியும் வரைக்கும் அமுரி வந்தடைவதற்கு அடிவயிற்றில் முன்பக்கமாயிருக்குஞ் சவ்வுப்பை.

கிலோமலம்பி, Urachus. (கிலோமம் காண. லம்பி தூக்குவது.) சலப்பையின் மேலந்தத்திலிருந்து கிளம்பி நாபிக்குள்ளே அந்திக்கப்பட்டிருக்குஞ் சவ்வு நூல்.

கிலோமேசம், Vesicle. (கிலோமம், ஈசம் காண.) உடம்பிற் பல பகுதிகளிலுமுள்ள நுண்ணிய சவ்வுப்பைகளில் ஒன்று.

கிளர்ச்சி, Excitement. எழுச்சி. இயல்பான அளவுக்கு மிஞ்சிய செயல். தேகப்பகுதிகளிலாவது மனசிலாவது கிளம்பும் அதி முயற்சி.

கிறீயசற்று, Kreasote.(தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) புகைத்தயிலம். புகைமணங்கொண்ட காரமான ஓர்வகைத்தயிலம்.

கிறேன், Grain. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ஓர் நிறையளவு. ஐம்பத்துமூன்றுகிறேன் ஒரு வராகன். ஆகவே ஒரு வராகனில் ஐம்பத்துமூன்றில் ஒரு பங்கு; அல்லது ஒரு ரூபாவில் நூற்றெண்பதில் ஒரு பங்கு

கினம், Anti. (கூகக. கொல்லல்.) நீக்குவது, தீர்ப்பது என்னும் பொருள்படவரும் ஓர் ஆரியச்சொல்.

கினீன், Quinine. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) தென்அமெரிக்காவிலுள்ள சிங்கோன என்னும் மரத்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படும் மென்மையான கைப்புள்ள வெண் சூரணம். இது முறைச்சுரத்துக்குக் கைகண்டமருந்து. இதில் முறைக்கு இரண்டொரு கிறேனாக நாள் இரண்டு நாலு முறை கொடுப்பது.

குகரணை, Pathology. (கு கெட்ட. கரணம் செயல்.) ரோகநிதானம். நோயின் குண விளக்கம்.

குகாநாளம், Vena cava. (குகா பெருந்துளாய். நாளம் காண.) இரத்தாசயத்தின் வலப்பக்கத்திலுள்ள மேலறையில்

Digitized by Google

அந்திகக்ப்பட்டிருக்கும் பெரிய காரிரத்தக் குழல்கள் இரண்டில் ஒன்று.

குக்கி, Stomach. (உஉரு. வயிறு.) இரைப்பை. அன்னசயம்.

குசமக்குழல், Vitelline pedicle. (குசம் சிவத்தக்கரு.) நாபிக்கிலோமேசம் என்னும் பையைச் சிசுவுடனே தொடுக்கும் மெல்லிய குழல். (நாபிக்கிலோமேசம் காண.)

குச்சுவாசம், Dyspnœa. (கு கெட்ட. சுவாசம் மூச்சு.) சிற்றிளைப்பு. வருத்தமாய் முட்டுப்பட்டுச் சுவாசிப்பது.

குடிலாஸ்தி, Rickets. (குடில் வளைவு. உஉகு. அஸ்தி எலும்பு.) உடம்பிலுள்ள எலும்புகள் வளைந்தும், சில பெருத்தும், மெட்டெலும்பின் அந்தங்கள் பருத்தும் உண்டுபடும் வியாதி. இதிலே வயிறு துன்னல் கொண்டு, சரீரவரட்சியும் பெலவிறுதியும் அசீரணமும் தினச்சுரமுங் காணும். வெதுவாய் இளம்பிராயத்திலே இவ்வியாதி உண்டுபடும்.

குணம், Symptom. குறி. நோய்கொண்டகாலத்திற் தேகத்திலுண்டாகுந் தன்மை அல்லது இலட்சணம்.

குதுவம், Follicle. (சிறு தோற்குப்பி உஉஅ.) தோலிலும் சிங்காணசில்லியிலும் பரந்திருக்குஞ் சின்னஞ் சிறிய பை. இது கடுகுபோற் சிறிதாய் அனேகமாகித் தோலினதும் சிங்காணசில்லியினதும் வெளிப்பரப்பிலே திறக்குந் துவாரமுள்ளதாய் அப்பரப்புகளை மெதுவாக்கும்படி ஏற்ற ஏற்ற நீர்வகைகளைக் கசிந்துகொண்டிருக்கும். (சிங்காணசில்லி காண.)

குந்தகத்தொளை, Obturator foramen. (குந்தகம் தடக்கு) அனுமிகைஎன்பின்கீழ்ப்பகுதியிலே முற்பக்கமாய் இருக்கும் பெருந்தொளை. இது குந்தகபந்தனம் என்னும் உரத்தசவ்வினால் அடைபட்டிருக்கும். (அனுமிகை காண.)

குருசுரம், Miliary fever. (குரு நுண்ணியபரு.) நுண்ணிய சிறுச்சிறுப் பருக்கள் மேலெங்கும் வீசி உண்டுபடும் சுரம். இப்பருக்கள் சுறுக்கிலே மடிந்து, செதிளாய் உதிர்ந்துபோம்.

குரூபம், Malformation. (உ௱உ.) அந்தசந்தக்கேடு.

குலோறுவாம், Chloroform. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) வருத்தந் தணிக்கும்படியும் அறிவுமயக்கம் உண்டாகும்படியும் வழங்கும் மருந்து. இது இனிதான வாசனையும் உருசியும் உடையதாய், மேனியிற் படஅமர்த்தி மூடிப் பிடித்தால் சற்றே எரிவுண்டாகத்தக்கதாய் விரைவிலேகுடிபோகத்தக்கதாய் பாரங்கொண்ட தண்ணீர் மயமான வஸ்து.

குவிச்சை, Tenesmus. (கு மலக்கழிவு. இச்சை விருப்பு.) அடிக்கடி மலம் கழியப்போகிறதுபோலே கடைக்குடலிலே தோன்றும் விருதா உணர்ச்சி. இது சிலவேளை குடலில் உண்டுபடும் வியாதியைப்பற்றிய குணமாம்.

குவிவு, Convexity. வெளிப்பக்கம் திரண்டு வளைந்த வடி

Digitized by Google

வம். உதாரணமாக ஒரு சிரட்டை புறத்தியில் குவிவாய், உள்ளுக்கு கவிந்ததாயிருக்கின்றது.

கூபகசோபம், Pelvic tumor. (கூபகம், சோபம் காண.) கூபகத்தினுள்ளே உண்டுபடுங் கழலை திரட்சி முதலிய வீக்கம்.

கூபகமானி, Pelvimeter. (கூபகம் காண. மானி அளக்குங்கருவி.) கூபகத்தின் விட்டம் முதலிய அளவைகளை அளந்தறியும் கருவி.

கூபகம், Pelvis. வல அனுமிகை, இட அனுமிகை, பீடிகை, புச்சம் என்னும் இந்நாலு எலும்புகளினாலும் சூழண்டு வயிற்றின் அடியிலிருக்கும் ஓர் குழியாம். (அனுமிகை, பீடிகை, புச்சம் காண.)

கேயம், Lacuna. (உஎரு. கேணி.) சிங்காணசில்லியிலே தோன்றுந் திரைவான மடிப்புப் பை. (சிங்காணசில்லி காண.)

கொப்புளப்பற்று, Blister. அக்கினிப்பிலேஸ்தர். மேனியில் கொப்புளங் கொள்ளும் படி இடும் பற்று.

கோபனம், Cicatrization. (இ.ச. மறைப்பு. உகூக.) புண், காயம் மாறிக்காய்ந்து தழும்பாதல்.

கோளம், Gland. (௱௦௪.) உமிழ்நீர், கண்ணீர், சிறுநீர் வேர்வை இவைபோன்ற அந்தந்த நீரைப் பொசியுந் தொழிலுக்கு உறையிடமாய், உடம்பிலேயுள்ள அந்தந்த உறுப்பு. இவ்வுறுப்புகள் பெரும்பாலுந் திரண்டவடிவமாயிருக்கும்.

கோளேசம், Glandule. (கோளம், ஈசம் காண.) மகா சிறிய கோளம்.

கோனியம், Conium. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ஒரு மருந்துப்பூண்டு. வெதுவாய் இதின் சாற்றை வற்றவைத்து மெழுதுபதத்தில் எடுத்து மருந்தாய் வழங்குவது. இம்மருந்துக்குக் குத்துவருத்தம் இவைபோல்வன சற்றே தணியும்.

சக, Con. Syn. உடன் என்னும் பொருள்பட வரும் ஓர் ஆரியச்சொல்.

சகவேதனி, Sympathetic nerve. (சக காண. வேதனி உணர்வது. அ௦கூ.) உடம்பின் உறுப்புகளுள் ஒன்றின் அனுபவம் மற்றவைகளிலுஞ் செறியும்படி உணர்விக்கும் நரம்புத்தொகுதி.

சடரம், Ventricle. (௱௯அ. வயிறு.) இரத்தாசயத்தின் கீழ்ப்பகுதியிலே இடம் வலமாய் இருக்கும் இரண்டு அறைகளில் ஒன்று.

சத்திரீகன், Surgeon. (சத்திரம் கத்தி.) இரணவைத்தியன். கத்தி முதலிய ஆயுதம் பிரயோகித்து வைத்தியஞ் செய்பவன்.

சந்தாசனக்கவை, Ilio ischiatic notch. (சந்து, ஆசனம் காண. கவை கவர்வெளி.) சந்தென்பும் ஆசனவென்புஞ் ச

Digitized by Google

ந்திக்கும் இடத்துக்கு அயலாயிருக்குங் கவர் வெளி.

**சந்தி**, Joint. (அஅகூ.) பொருத்து. எலும்புகள் ஒன்றுடனே ஒன்று சந்தித்திருக்கும் இடம்.

**சந்து**, Hip. Os Ilium. க வது. இடுப்பில் வலமிடமாயிருக்கும் பகுதி. உ வது. ஒக்கலையிலிருக்குந் தகட்டெலும்பு. இது அனுமிகை என்பில் அரைவாசிக்கதனப்படவிருக்கும் மேற்பகுதி. (அனுமிகை காண.)

**சந்துதோயம்**, Hip bath. (சந்து, தோயம் காண.) உடலின் கீழ்ப்பகுதியுந் தொடையின் மேற்பகுதியும் மாத்திரந் தோயும்படியாக வைக்கப்படுந் தண்ணீர் முதலியன.

**சமட்டி**, Rudiment. விரிந்து தோன்றுமல் நுண்ணிய சூக்குமமாய் இருப்பது.

**சராயிகை**, Hysteria. (சராயு கருப்பை.) மிகுதியாய் ஸ்திரிசனங்களிலே தோன்றுங் கருப்பைவியாதி பற்றிச் சில வேளை உண்டுபடும் விறைப்பு, அறிவுகேடு, மாருட்டம், தெண்டல் முதலிய குணங்கள் அமைந்த ஓர் வியாதி.

**சராயுகம்**, After birth. Secundines. (இ. ச.) சிசுப்பிறந்தபின் பிரசவிக்கவேண்டிய அணையம் முதலியன.

**சராயுலம்**, Cesarean section. (சராயு கருப்பை. லம் வெட்டல். எகரூ.) வயிற்றினுள்ளிருக்கும் சிசுவை வெளியில் எடுக்கும்படி வயிற்றுப்பக்கங்களையும் கருப்பையையுங் கீறித் திறத்தல்.

**சருச்சி**, Alkali. (இ. ச. கூஅ.) கள்ளி முதலிய நிலவிருட்சங்களினதும், கோட்டைமுதலிய நெய்தற்பூண்டுகளினதும் சாம்பலிலேயுங், கொம்பு எலும்பு முதலியவைகளிலேயும், எடுக்கும் வெண்மையான பலவகைச்சாரம். இது நாவுக்கு கார்ப்பாய் இருக்கும். மருந்துக்கு வழங்கிவருஞ் சருச்சி மூன்றுவகை, சோட, பற்றஷ், அம்மோனிய. (அம்மோனிய, சோட, பற்றஷ் காண.)

**சரோக**, Morbid. (இ. ச. கூ௦எ.) வியாதிகொண்டிருக்கும் தன்மை. வியாதிபற்றிய. வியாதிக்குரிய.

**சலசீடம்**, Hydrocephalus. (சலம் நீர். சீடம் சிரசு.) கபாலத்துள் உண்டுபடும் நீர்க்கோவை வியாதி.

**சலப்பு**, Jalap. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ஓர் மருந்துக் கொடி. இதின் கிழங்கைக் காயவைத்து இடித்து எடுக்குஞ் சூரணம். ஓர் விரேசன மருந்து.

**சலவாகி**, Urethra. (சலம் மூத்திரம். வாகி காண.) சலப்பையிலிருந்து சிறுநீர் வழிகொண்டு பாயுஞ் சவ்வுக்குழல்.

**சல**, Rhage. rhœa. பெருக்கு என்னும் பொருள்பட உபசர்க்கமாய் வழங்கும் ஓர் ஆரியச்சொல்.

**சல்லடை**, Sieve. அரிதட்டு. அரிப்பெட்டி.

Digitized by Google

சல்வேற்சிங்கு, Sulphate of zinc. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) வெள்ளைத் துத்தம். தத்தை அல்லது நாகமென்னும் லோகமும் கந்தகாமிலமுஞ் சேர்ந்து உண்டாகும் ஓர் உப்பு. இதில் பத்துக்கிறேன் கொடுத்தால் உவாந்திக்கும். (கந்தகாமிலம், தத்தை காண.)
சனனகிருத்தியம், Reproductive process. (சனனம் பிறப்பு. கிருத்தியம் காண.) செனிப்பிக்குந் தொழில்.
சாகை, Branch. (அஙகூ.) கிளை. கொம்பு.
சாந்தியான, Soothing. (அஙஅ.) கடுமையின்றி அமைவாய் இருக்குந் தன்மையுள்ள.
சாமளம், Chlorine. (பச்சை. அகூ௦.) நாற்றங்களைக் கெடுக்குஞ் சற்றே பச்சைநிறமுள்ள ஓர் வாயு. கறியுப்பில் கந்தகாமிலம் தெளிக்க இவ்வாயு உண்டாகும். (கந்தாமிலம் காண.)
சார்பு, Tendency. ஒரு கருமம் பின்னொன்றாய் முடிவதற்குச் சார்பாக முன்னமே கண்டிருக்கும் இயல்பு.
சாவணம், Forceps. பலவகையான குறடு. வில்லங்கங்காணும் கஷ்டபிரசவங்களிலே சிசுவை இடுக்கி வெளியில் எடுக்கும் ஆயுதம்.
சிங்காணசில்லி, Mucous membrane. (சிங்காணம் சளி. சில்லி காண.) வாய் நாசி குடல் முதலிய குழாயான உறுப்புகளின் உள்ளுறைச்சவ்வு.
சிசினம், Penis. (இ.ச. அசஎ.) ஆண்சனங்களிலிருக்கும் இலிங்கம். விந்து, அமுரி இவற்றைக் கழித்துவிடும் உறுப்பு.
சிசு, Fœtus. (அசஎ.) கருவுக்குள்ளிருக்கும் சீவி. (கரு காண.)
சிதகலிதை, Aphtha. (சிதம் வெண்மை. கலிதை போசியும் புண்.) வாயிலும் அல்குலிலுஞ்சிலவேளை குடல்களுள்ளும் உண்டுபடும் வெள்ளாடைபிடித்த சிறுச்சிறு அவியற் புண். (அல்குல் காண)
சித்திரி, Perforator. (சித்திரம் தொளைத்தல்.) யோனிவழியாய் இலகுவாய் வெளியில் இழுத்தெடுக்கும்படி சிசுவின் தலைமண்டை முதலியவற்றின் பருமை குறைப்பதற்குத் தொளைக்கும் ஈட்டிபோன்ற கூர்நுனிக்கருவி.
சிரவம், Auricle. (அகூக. காது.) இரத்தாசயத்தின் மேற்பகுதியிலே இடம் வலமாக இருக்கும் இரண்டறையில் ஒன்று.
சிராவணி, Catheter. சிறுநீரை வாங்கும்படி சலப்பையில் இடப்படும் குழற் கருவி. இது பெரும்பாலும் வெள்ளியிற் செய்ததாய் பெண்ணுக்கு ரு. கூ. அங்குலமும், ஆணுக்கு க௦. கஉ. அங்குலமும் நீளமுள்ளதாய் வளைவுகொண்டிருக்கும்.
சிரோத்தாப, Nervous. (சிரை நரம்பு. உத்தாபம் காண.) நரம்புமண்டலத்தின் அழற்சிபற்றிய. நரம்புகளில் அழற்சிகொ

Digitized by Google

ண்டிருக்கிற. உதாரணமாய் சிரோத்தாப தலைவலி. விரைவிலே லகுவாய்த் திருக்கிடுகிற, சினக்கிற, கிலேசங்கொள்ளுகிற ஆட்களை சிரோத்தாபிகள் என்பார்கள்.

சிலீபதம், Phlegmasia dolens. (அகூகூ.) பிரசவகாலதைப்பு. வேதனையாக தொடையுங் காலும் வீங்குவது. இது வெகுவாய்ப் பிரசவித்த அன்னிய நாட்களிலே ஸ்திரிகளில்உண்டுபட்டுச் சிலவேளை அதிகம் பெரிதாய் வீங்கும்.

சில்லி, Membrane. (கூஎகூ.) சவ்வு. விரிந்து வளைந்து இசிவனவாய் உடம்பிலே விளங்கும் பலவகையான படலப் பகுதி.

சிற்றிதழ், Nympha. அல்குலுக்கருகே பேரிதழ்களுக்கு அடுக்க உள்ளே வலமிடமாயிருக்கும இரண்டு சவ்வுமடிப்பு. (அல்குல், பேரிதழ் காண.)

சினை, Ovum. நாதம். கருவாகும்படி விந்தின் அருட்சிபெறமுன் சினைப்பையில் உண்டாகும் நுண்ணிய திரண்டபொருள். (கருகாண.)

சினைப்பாதை, Fallopian tube. (சினை காண.) சினைப்பைகளிலிருந்து கருப்பைக்குச் சினைசெல்லும்படி கருப்பையுடன் தொடுத்ததாய்வலமிடமாயிருக்கும் இரண்டு சவ்வுக்குழல்.

சினைப்பை, Ovary. (சினை, காண.) நாதாசயம. சினைகளிருக்கும் சவ்வுக்கூடு. இலுப்பைக்காயின் வடிவமும் அளவும் போலக் கருப்பைக்கு வலமிடமாயிருக்கும் இரண்டு உரப்பான சவ்வுப் பை.

சீனிலேகம், Confection. (சீனி சர்க்கரை. லேகம் நக்கி.) சீனி அதிகமாய்ச் சேர்ந்த லேகிய மருந்து.

சுபஞ்சு, Sponge. (இ. ச.) கடற்காளான். இது கடற்பார்களில் உண்டாகும் இசிவும் மெதுவும் நீருறிஞ்சுவதுமான ஒரு பொருள்.

சுமரி, Clitoris. (கூருஅ.) அல்குன்மணி. அல்குலின் முற்பக்கத்தில் அகலுக்குக் கீழே அடுக்க இருக்கும் ஓர் சிறு உறுப்பு. இதுவும் சிற்றிதழ்களுமே காமநுகர்ச்சிக்கு இடம்.

சுமுத்திரை, Standard. பொருள்கள் தத்தம் இனங்களுட் பூரணம் பெற்று விசேஷித்திருக்கும் நிலை.

சுரம், Fever. (கூருகூ.) காய்ச்சல். சோர்பும் நாடித்துடிப்பு விரைவும் மேனிச்சூடும் அமைந்த ஓர் வியாதி. இதிலே வெகுவாய்க் குளிர்ப்பாதம், காந்திப்பாதம், வேர்வைப்பாதம் என்னும் மூன்று பாதங்களுண்டு.

சுவாசம், Breath. (அகூஅ.) மூச்சு.

சுவாசரோதம், Suffocation. (இ. ச.) சுவாசதம்பனம். சுவாசந் தடைப்படுவதினல் மரிப்பது.

சூசுகம், Nipple. (கூகூப.) முலைக்காம்பு.

Digitized by Google

சூசுகரட்சை, Nipple shield. (சூசுகம் காண. ரட்சை காவல் செய்வது.) ஸ்திரிகளின் முலைக்காம்பு புண்பாடுகொண்டிருந்தால் பிள்ளையின் வாய் அதில் உறிஞ்சி அழுந்தாதபடி காம்புக்குக் காவலாய் மூடியிருக்கும் பொய்க்காம்பு.

சூசுகரேசகி, Nipple raiser. (சூசுகம், ரேசகி காண.) இழுத்து வாங்கிய முலைக்காம்பு குறுத்து அல்லது உள்ளுக்குப் பதிந்து மிதக்காதிருக்க அதை இழுத்து நீட்டும்படி பிரயோகிக்கும் கருவி. ஓர்வகைச் சூசுகரட்சை. (சூசுகரட்சை காண.)

சூலுடைமை, Pregnancy. (சூல் காண.) கர்ப்பிணியாய் இருக்கும் நிலை.

சூல், Embryo. கரு. (கரு காண.)

சேட்டனம், Action. (௲௬.) செயல். சேட்டை. தொழில்.

சேதனம், Section. (௲௲௫.) வெட்டல்.

சோடா, Soda (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) ஓர்வகையான சருச்சி. இது பலவிதமான உப்புகளைப் பிறப்பிக்கும் பொதுப்பொருள். உதாரணமாய் கறியுப்பு, வெண்காரம், இந்துப்பு. (சருச்சி காண.)

சோபம், Tumor. (இ, ச. அரு௮.) திரளை. திரண்டிருக்கும் வீக்கம். உதாரணமாய் கழலை, நெறி, காய்.

சோஷணி, Absorbent (சோஷணம் உறிஞ்சல். அரு௯.) உடம்பிலுள்ள எவ்வுறுப்புகளின் பதார்த்தத்திலுஞ் சொற்பமாய் எடுத்தெடுத்து இரத்தக் குழல்களிலே கழற்றிவிடுஞ் சிறுக்குழல்.

தசிரம், Vessel. (தசிரம் உட்டோளைப்பொருள். Rottler.) இரத்தம் முதலிய நீர்கள் உடம்பினுள் உலாவிப்பரக்குங் குழல்களின் பொதுப்பெயர்.

தஞ்சேசம், Petechia. (௲௯௪.) தெள்ளு, கொசுகு இவற்றின்கடிபோல மேனியில் வியாதிபற்றி உண்டுபடும் சிறுச்சிறுப் புள்ளி.

தத்தை, Zinc. (இ.ச.) நாகம். வெண்ணீலநிறமான ஓர்வகை லோகம். இது ஈயத்தினும்பார்க்கக் கருமை குறைந்து கடினம் அதிகமானதும் அடிக்க நொருங்குவதுமாயிருக்கிறது.

தந்துகி, Capillary vessel. நாடி, நாளம் இவைகளின் சின்னஞ்சிறிய கிளைகளின் துவாரங்களைத் தொடுக்கிறதாய் உடம்பின் எந்தப் பகுதியிலும் ஏராளமாய் உள்ள நுண்ணிய இரத்தக்குழல். (நாடி, நாளம் காண.)

தபம், Itis. தாபிதம் என்னும் பொருள்பட வரும் ஓர் ஆரியச் சொல். (தாபிதம் காண.)

தமனி, Bronchus. (ச௲அ) சுவாசஞ் செல்லும் பெருங் குழலின் கீழத் தலைப்பிலிருந்து சுவாசப் பைக்குள் கிளைத்தோடுஞ் சுவாசக் குழல்களின் பொதுப் பெயர்.

Digitized by Google

தர்ச்சனி, Index finger. (௱௬௯.) ஆட்காட்டி விரல். சுட்டு விரல்

தர்ப்பன்தீன், Turpentine. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) சரளம், சாலகம் முதலிய சில மரங்களிலிருந்து வடியும் வீணீரில் வடித்தெடுக்கும் ஓர்வகைத் தயிலம். இது தண்ணீர்மயமாய் வலு மணம் வீசுவதாய்த் திரி இல்லாதபடி லேசிலே பற்றி எரியக்கூடியதாய் இருக்கிறது.

தவளம், Albumen. (தவளம் வெண்மை.) உடம்பிலுள்ள பல நீர்களிலும் உறுப்புகளிலுஞ் சேர்ந்திருக்கும் ஓர் பதார்த்தம். கோழிமுட்டையின் வெள்ளைக்கருவிலே இப்பதார்த்தமே மிகுதி.

தனகோளம், Mammary gland. (தனம், கோளம் காண.) ஸ்திரிகளின் முலைகளுள் பாலுக்கு ஊற்றாக இருக்குந் திரண்ட உறுப்பு.

தனம், Mamma. (௬௪௮.) ஸ்திரிகளின் முலை.

தனரேசகி, Breast pump.(தனம், ரேசகி காண.) முலைக்காம்பில் அணைத்துப் பாலை வெளியில் உறிஞ்சி எடுக்குங் கருவி.

தனவழற்சி, Mammary irritation. (தனம், அழற்சி காண.) ஸ்திரிகளின் முலைகளிலே உண்டுபடும் அழற்சி.

தாத்தரந்திமோனி, Tartar emetic. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ஓர்வகையான உவாந்தித சூரணம். இது கந்தம் இன்றி வெண்மையாய் இருக்கும். இம் மருந்தில் ஒருகிறேன் உட்கொண்டால் வாந்தி உண்டாகும். சிலவேளை பேதியுங் காணும். (அந்திமோனி, கிறேன் காண.)

தாபிதக்கினம், Antiphlogistic. (தாபிதம், கினம் காண.) தாபிதத்தைத் தணித்துத் தீர்க்கும் மருந்து, பத்தியம் முதலிய ஏதும்.

தாபிதம், Inflammation. உடம்பின் ஓர் உறுப்பில் அல்லது பகுதியிலே தோன்றும் அழற்சிபற்றி அங்கங்கே உண்டுபடுஞ் சூடும், வருத்தமுஞ், சுரப்பும் அமைந்த நிலை. தாபிதம் உடம்பின் புறத்தியிலே இருந்தால் இக்குணங்களை லகுவிலே பார்த்தறியலாம். உள்ளுக்கிருந்தால் அந்தந்த உறுப்பின் தொழிற்பிசகினாலும் வருத்தத்தினாலும் விளங்கும். சிலவேளை கையால் ஊன்றி அல்லது தட்டிச் சோதிக்கும்போது நொய்வு தோன்றுவதினாலும் விளங்கும்.

தாவரம், Vegetable. (௬௫௨.) புல், பூண்டு, பாசி, செடி, விருட்சம் இவைபோல்வனவற்றின் பொதுப் பெயர்.

தாவராமிலம், Vegetable acid. (தாவரம், அமிலம் காண.)தாவரங்களிலிருந்து எடுக்கும் அமிலம்.

தாரை, Pupil of eye. கறுத்த விழியின் நடுவிலிருக்கும் கரும் புள்ளி. இது ஒளி உட்செல்வதற்கு ஒரு துவாரம்.

Digitized by Google

திரிபுஞ்சகம், Hermaphrodite. (திரி பெண். பும் ஆண். சகம் உடன்கூட்டம்.) கவது. ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும்கலந்து ஒருவகையேனும் நிரம்பாதிருக்கும் மனுப்பிறவி. உவது. ஒன்றிலேயே ஆணுறுப்பும் பெண்ணுறுப்பும் விளங்கும் புட்பமும் சிற்சில மிருகமும்.

திரும், Drachm. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) ஒரு ஆபாயின்டையிலே மூன்றில் ஒரு பங்கு கொண்ட நிறை.

தீபகம், Tonic. (இ. ச. சகக.) உடம்பிலுள்ள உறுப்புகளின் செயலைப் படிப்படியாக எழுப்பிப் பெலத்தைத் தருவதற்கு உபயோகமான மருந்து.

தீர்க்க, Chronic. (இ. ச.) பையப்பைய நடந்து நெடுநாளுக்கு நிற்கிற (தீவிர காண.)

தீவனம், Stimulant. (இ. ச. சகக.) உடம்பின் அல்லது யாதொரு உறுப்பின் தொழிலை எழுப்பி விரைவுபடுத்தும் மருந்து. இதின் செயம் பெரும்பாலும் கொஞ்ச நேரத்துக்குள்ளே நின்றுவிடும்.

தீவிர, Acute. (இ.ச.) விரைவான கெதியும் பெரும்பாலும் கடுமையுமாய் சிறிதுநாளுக்கு மாத்திரம் நிற்கிற. (தீர்க்க காண.)

துவர், Astringent. துவர்ப்பு. துவர்ப்பான சரக்குகள். உதாரணமாக கடுக்காய் மாயாக்காய் இவைபோல்வன.

தூம்பு, Canal. புரை. சொற்ப அகலங்கொண்டதாய் நெடுகி இருக்கும் உட்டோவளை.

தேயம், Dose. (இ. ச.) மருந்திலே ஒருமுறையில் எடுத்து வியாதிக்காரனுக்குக் கொடுக்கும் அளவு.

தொடைக்கணு, Trochanter. (கணு காண.) தொடை என்பினது மேற்றலைப்பிலே விளங்கும் குமிழுக்கு அடுக்க இருக்கும் பெருங் கணு.

தோயம், Bath. உடம்பு அல்லது யாதொரு அவயவந் தோய்வதற்கான தண்ணீர் ஆவி இவைபோல்வனவற்றின் பொதுப்பெயர்.

தோவர்சூரணம், Dover's powder. (தோவர் என்பது பிரபலமான ஒரு வைத்தியனின் பெயர்.) அபின் ஒருபங்கும் இபிகாக் ஒருபங்கும் சல்வேற்பற்றஷ் எட்டுப்பங்குஞ் சேர்ந்த ஓர் தூள். இதின்செயல் அபின்போலிருந்தும் தலையிலே அதிகமாய்த் தாக்காமல் தோலிலே செயங்காட்டி தோன்றுவேர்வையை அதிகப்படுத்தும். (இபிகாக்கு, பற்றஷ் காண.)

நரம்பு, Nerve. சினை. மூளையிலும் முள்ளந்தண்டுக்கொடியிலும் தொடுக்கப்பட்டு வெண்மையும் உரப்புங்கொண்டு உணர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் இடமாய் உடம்பெங்குங் கிளைத்து ஓடியிருக்குங் கோடி.

Digitized by Google

நரை-ரசபற்பம், Grey powder. Mercury with chalk. காபனேற் சுண்ணாம்பு ஐந்துபங்கும் இதரம் மூன்று பங்கும் அரைத்துச் சேர்த்த நரை நிறமான பொடிமருந்து.

நவிரம், Scalpel. சத்திர வைத்தியத்தில் வழங்கும் சற்றே நீண்ட நேரான அகலித்த கத்தி.

நவ்வுபரிகை, Fossa navicularis. (நவ்வு தோணி. ௪௮௯. பரிகை கிடங்கு. ௫௦௮.) அல்குலின் பின்னருகிலே பேரிதழ்கள் இரண்டும் பொருந்துமிடத்தினுள்ளே தோன்றும் ஒரு சிறுப் பதிவு. (அல்குல், பேரிதழ் காண.)

நாடாப்பற்று, Adhesive strap (நாடா, பற்று.) பற்றுச் சேர்வை தடவியிருக்கும் வார்போல் நீளமான சீலைத்துண்டு.

நாடி, Artery. இரத்தாசயத்திலிருந்து உடம்பின் எப்பகுதிக்குஞ் செவ்விரத்தம் பரம்பிச் செல்லுஞ் சவ்வுக் குழல்களின் பொதுப்பெயர்.

நாடிசரம், Ductus arteriosus. (நாடி காண. சரம் ௯௦௬.) கருப்பையிலிருக்குஞ் சிசுவினது கண்டரைநாடியையும் சுவாசப்பை நாடியையும் தொடுத்திருக்கும் ஒரு குறுநாடிக் குழல். (கண்டரை காண.)

நாபி, Navel. (௪௯௧.) உந்தி. கொப்பூழ்.

நாபிக்கிலோமேசம், Umbilical vesicle. (நாபி, கிலோமேசம் காண.) நாபிக்கொடி வழியாய்ச் சிசுவுடனே ஒரு சிறுக்குழலாலே தொடுக்கப்பட்டு பரிப்பீள்கள் இரண்டிற்குமிடையே இருக்கும் ஓர் சிறுப்பை. (உட்பரிப்பீள், சிசு, வெளிப்பரிப்பீள் காண.)

நாபிக்கொடி, Navel string. (நாபி காண.) சிசுவின் கொப்பூழையும் அணையத்தையுந் தொடுத்திருக்குங் கொடி. இக்கொடி நெடுகிலும் இரண்டு நாடியும் ஒரு நாளமும் புரிகொண்டு முறுகியிருக்கும். (அணையம், நாடி, நாளம் காண.)

நாபிமதியாந்திர, Omphalo mesenteric. (நாபி, மதியாந்திரம் காண.) கொப்பூழிலிருந்து மதியாந்திரச் சவ்வுக்குச் செல்லும் சில இரத்தக் குழல்களின் பெயர்.

நாரி, Loins. அரை. இடுப்பு. குண்டிக்கும் விலாவுக்கும் இடையே வலமிடமாயுள்ள கீழ் முதுகுப் பகுதி.

நாழி, Quart. படி. கொத்து.

நாளசரம், Ductus venosus. (நாளம் காண. சரம், ௯௦௬.) கருப்பையிலிருக்குஞ் சிசுவினது நாபிநாளத்தையுங் கீழ்க் குகாநாளத்தையும் தொடுப்பதாய் ஈரலின் கீழ்ப் பரப்பில் அணைந்திருக்கும் ஒரு குறுங் குழல். (குகாநாளம் காண.)

நாளம், Vein. உடம்பின் எப்பகுதியிலுமிருந்து காரிரத்தம் இரத்தாசயத்தை நோக்கிச் செல்லும் சவ்வுக் குழல்களின் பொதுப்பெயர்.

Digitized by Google

நிசாமனி, Stethescope. (சஎகூ.) உடம்பின் உறுப்புகளிலே உண்டாகுஞ் சத்தத்தைக் கேட்கிறதற்குப் பாவிக்குங் கருவி. இது நாலுவிரற் பருமைகொண்ட லேசான தடியிற் செய்த ஐந்தங்குல நீளமுள்ளதாய் நடுவே நெடுகச்சிறுத்துவாரமுள்ள தாய் இருதலைப்பும் விரிந்ததாயிருக்கும்.

நிணக்கோளம், Sebaceous gland. (நிணம் கொழுப்பு. கோளம் காண.) தோலிற் பரந்து அதை மெதுமை யாக்கும்படி ஒருவகையான நெய் கசியுஞ் சின்னஞ்சிறிய பை. இது கடுகு போற் சிறிதாய் அனேகமாகித் தோலின் வெளிப்பரப்பிலே திறக்குந் துவாரமுள்ளதாய் இருக்கும். இவை நுனிமூக்கிலும் தலையிலும் மிகுதி.

நிர்விழுடி, Disorganization. (இ. ச.) உடம்பிலுள்ள யாதோரு உறுப்பின் சீர்கெட்டு அதிலே அழுகல் உட்கல் இவைபோல்வன பிடித்தல்.

நிலவாகை, Senna. நிலப்பாகல். ஓர் மருந்துப்பூண்டு. இதின் இலையிலே உண்டாகுங் கஷாயம் ஓர் விரேசன மருந்தாம்.

நிவிர்த்திக்கிருத்தியம், Reparative process. (நிவிர்த்தி பழுதபட்டதைத் திருத்தம்பண்ணல். கிருத்தியம் காண.) வியாதி இடையூறு முதலியவற்றால் உடம்பில் உண்டுபடும் பழுதகளை அகற்றித் திருத்தமாக்குஞ் செய்கை.

நீரசாமளாமிலம், Hydrochloric acid. (நீரம் தண்ணீர். சாமளம், அமிலம் காண.) கடுங்காரமும் புளிப்புமுள்ளதாய் புகைக்கும் ஓர் மருந்து நீர். (ஆகரியமிலம் காண.)

நீரசோனம், Hydatid. (நீரம் தண்ணீர். சோனம் பை. கூருகூ.) உடம்புக்கு அன்னியமான பதார்த்தமாய்த் தண்ணீர் மயமான ஓர்வகை நீர் சுரந்திருக்கும் மெல்லிய சவ்வுப்பை.

நீரம், Liquor. (தண்ணீர்.) மருந்து கலந்திருக்கும் நீர்.

நுரைப்பானம், Effervescing draught. சோட முதலிய சருச்சி மருந்தும், எலுமிச்சம்பழச்சாறு முதலிய புளி மருந்துந் தண்ணீரிற் கலந்துவிடுவதினால் உண்டாகிப் பொங்கி நுரைக்கும் குடிப்பனவு. (சருச்சி, சோட காண.)

நோய்வு, Tenderness. ஊன்றினால் அமர்த்தினால் அல்லது தொட்டால் மாத்திரம் தெரியும் நோ.

பதோயம், Foot bath. (தோயம் காண.) கெண்டைக்காலுக்குக்கீழ்ப்படத் தோயும்படி இடப்படுந் தண்ணீர் முதலிய ஏதும்.

பதோதயம், Footling presentation. (பதம் கால். உதயம் காண.) பிறவியிலே சிசுக்கால் முதல் இறங்குதல்.

பந்தனம், Ligament. (இ. ச.) கட்டு. விசி. ஒரு எலும்பை வேறொரு எலும்புடனே தொடுத்துக் கட்டுவதாகிய நார் போன்ற உரத்த சவ்வு.

Digitized by Google

பந்தை, Strait. (இ. ச. வழி.) கூபகவாசல். இது மேற்பந்தை கீழ்ப்பந்தையென இரண்டு. (கூபகம் காண.)
பரிநாதம், Graafian vesicle. (பரி சூழ. நாதம் சினை.) சினைப்பைகளில் இருக்குஞ் சினைகளைச் சூழ்ந்திருக்கும் சிறுச் சிறுச்சவ்வுப் பை. (சினை, சினைப்பை காண.)
பரியந்திரதபம், Peritonitis. (பரியந்திரம், தபம் காண.) வயிற்றிலே உண்டுபடும் வருத்தமான வெப்பு நோய். பரியந்திரமே இதற்கு உறையிடம்.
பரியந்திரம், Peritoneum. (பரி சூழ. அந்திரம் காண.) வயிற்றினுள்ளிருக்குங் குடல், ஈரல் முதலியவைகளைச் சூழ்ந்து மூடி வயிற்றுப் பித்தியிலும் அணைந்து வசாநீர் போசியும் அழுத்தமான மெல்லிய சவ்வு. (வசா காண.)
பலாயிதம், Decidua. (ருகஅ. பெயர்ந்து போனது.) சூற்கருப்பையின் உட்பித்தியிலே ஒட்டி அண்டியிருக்குஞ் சவ்வு. இது உட்பலாயிதம், வெளிப்பலாயிதம் என இரண்டு பகுதியாய் பிள்ளை பிறக்கும்போது வெளியிலே விழும். (பித்தி காண.)
பற்றஷ், Potash. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) மரவுப்பு. சிற்சில தரைவிருட்சங்களின் சாம்பலிலே பக்குவம்பண்ணி எடுக்கும் வெள்ளைச் சருச்சி மருந்து. இது கட்டியாகவும் தூளாகவும் இருக்கும். (சருச்சி காண.)
பற்று, Plaster. சீலை, தோல் இவைபோல்வனவற்றிலே பரவிப்பூசி, காயம் புண் முதலியவைகளில் இடுந் தடித்த பசையோட்டான பலவகைச் சேர்வையின் பொதுப்பெயர்.
பன்னீர், Liquor amnii. கருப்பையிற் சிசுவைச் சூழ்ந்திருக்கும் உட்பரிப்பீழிலிருந்தூறிச் சிசுவை அமிழ்த்தி இருக்கும் ஒர் வகை நீர். (உட்பரிப்பீள், சிசு காண.)
பாசனம், Decoction. (ருஉக.) இலை, பட்டை, வேர் முதலிய ஏதமோன்றைத் தண்ணீரிலிட்டுக் கொதிப்பித்து இறக்கித் தெளித்து எடுக்கும் குடிநீர். (வெங்கஷாயங் காண.)
பாதம், Stage. நோயின் பருவம். சில வியாதிகளில் அந்தந்தக் குணந்தோன்றும் வேளையின் பொதுப்பெயர்.
பாயுரியம், Enema. (பாயுர் அபானவாசல்.) அபான வாசல் வழியாய் மருந்தாகப் புகட்டப்படும் பல வகையான நீர்ப் பதார்த்தம்.
பானீயம், Draught. (ருஉஎ.) பானம். ஒருக்காற் குடிக்கத்தக்க அளவான மருந்து நீர்.
பிதுக்கம், Hernia. குடல் முதலிய உறுப்பு அல்லது அதின் பகுதி தான் இருக்கவேண்டிய இடத்தை விட்டுப் பெயர்ந்து தன் அறையின் பித்திக்கு ஊடாய்ப் பிதுங்கித்துன்னல். (பித்தி காண.)
பித்தி, Wall. (கூஉ௦. சுவர்.) உடம்பிலுள்ள நெஞ்சு வயிறு குடல் முதலிய குழாயான உறுப்புகளிற் சூழ்ந்து மூடியிருக்கும் பகுதி.

Digitized by Google

இது தன்னுள்ளிருக்கும் அறைவெளிக்கு எல்லையான சுவ ராம்.

பித்திகை, Parietal bone. (சுஉ௦.) பித்திகையென்பு. தலையி லே வலமிடமாயிருக்கும் உட்பக்கமாய்க் கவிந்த அகன்ற இ ரண்டு தகட்டெலும்பு.

பித்திகைக்கரேகை, Interparietal suture. (பித்திகை, கரே கை காண.) தலையில் வலமிடமாயுள்ள பித்திகையென்பு களிரண்டும் ஒன்றுடனொன்று சந்திக்கும் இடத்திற் காணும் பொருத்து வரி.

பித்திகைப்புடைப்பு, Parietal protuberance. (பித்திகை கா ண.) பித்திகையென்பினது வெளிப்பரப்பின் நடுவிலே குவி ந்து சற்று முனைப்பாய்த் தோன்றும் பகுதி.

பிரகண்டம், Arm. (ருருஅ.) பின்னங்கை. தோளுக்கும் முழங் கைக்கும் இடையேயிருக்குங் கையின் பகுதி.

பிரசவம், Parturition. (ருஅக.) பிள்ளைப்பேறு. மகப்பெறல். கருப்பை தன்னுள்ளிருக்குஞ் சிசுவைப் பிதுக்கி வெளியிலே தள்ளிவிடுஞ் செயல்.

பிளக்குவாஷ், Blackwash. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) அரைக்கால் நாழி சுண்ணாம்புத் தண்ணீருடனே கலமல் ஒரு திரும் சேர்த்து உண்டாக்குங் கருமையான மரு ந்துநீர். (கலமல் திரும். காண.)

பிளக்திறப், Black drop. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொ ல்.) அபின் கலந்து பக்குவம் பண்ணிய ஓர்வகைப்பாணி. இதில் ஒரு துளி மூன்று துளி லாடனத்துக்குச் சரியானசத் துக்கொண்டது. (லாடனம் காண.)

பிளிகை, Spleen. (ருகூ௱.) மேல்வயிற்றின் இடப்பக்கத்திலே இரைப்பைக்கு அணைவாகப் பின்னுக்குச் சருவியிருக்கும் தி ரண்ட கரிய மெல்லிய உறுப்பு. சுரத்திலே இது பெருத்தா ற் காச்சற்கட்டியென்று பேசுவார்கள்.

பிளுப்பில், Blue pill. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ரோ சைப்பழங்களின் சதையிலே செய்யப்படுஞ் சீனிலேகத்து டனே இதரஞ்சேர்த்து நெடுநேரம் அரைத்து உண்டாக்கும் நீலக்குளிகை. இதிலே இதரம் மூன்றுக்கு ஒருபங்கு நிறை. (சீனிலேகம் காண.)

பிறண்டி, Brandy. (தமிழிற்பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) தி ராட்சரசத்திலே வடித்தெடுக்கப்படும் ஓர்வகையான சிவந் த சாராயம்.

பிறை, Hymen. அரணி. கன்னிமை கழியாதவர்களிலே யோ னிவாசலை மூடியிருக்கும் சவ்வு மடிப்பு.

பிறைரேகை, Linea semicircularis. (ரேகை வரி.) வயிற் றுப்பித்தியின் முன்பக்கத்திலே தொப்புளுக்குச் சற்றே த

ன்னி வலமிடமாய் நெஞ்சுதொடங்கி அடிவயிறு வரைக்குஞ் செல்லும் இரண்டு வளைந்த வெள்ளவரியில் ஒன்று. இவை தோல் உரித்தெடுத்தபின் தெரியும்.

பீடிகாசனவிசி, Sacro ischiatic ligament. (பீடிகை, ஆசனம், விசி காண.) வலமிடமாய் இவ்விரண்டாகப் பீடிகையென்பின் அருகிலிருந்து முன்சருவிஅகலித்து இறங்கி ஆசனவென்பினது கணுக்களுடனும் முட்களுடனும் அந்திக்கப்பட்டிருக்கும் நாலுநெடும் விசிகள்.

பீடிகாபுச்சவிசி, Sacro coccygeal ligament. (பீடிகை, புச்சம், விசி காண.) கூபகத்திலே பீடிகையென்புடனே புச்சவென்பைத் தொடுத்துக் கட்டியிருக்கும் விசி.

பீடிகை, Sacrum. (பொறுப்பான இடம்.) கூபகத்தின் பிற்பக்கத்தின் நடுவிலே முள்ளந்தண்டுக்குப் பொறுப்பாயிருக்கும் பல தொளைகளையுடைய வளைந்த எலும்பு. வாலுள்ள மிருகங்களுக்கு வால் தொடுத்திருப்பது இவ்வெலும்பிலேதான்.

பீடிகைக்கவிகை, Hollow of the Sacrum. (பீடிகை காண. கவிகை உள்வளைவு.) பீடிகையென்பின் முற்பக்கத்திலே நடுப்பெற விளங்கிய கவிவான பரப்பு.

பீடிகைச்சந்தனுசங்கி, Sacro iliac symphysis. (பீடிகை, சந்து, அனுசங்கி காண.) பீடிகை என்புக்குஞ் சக்தென்புக்கும், இடையிலுள்ள அனுசங்கியாகிய பொருத்துக்கள் இரண்டில் ஒன்று.

பீதகம், Corpus luteum. (ருகஅ. மஞ்சணிறமுள்ளது.) சூற்கொள்ளுங்காலத்திலே சினைப்பையிலிருக்குஞ் சினைபெயர்ந்து போய்விட, அதினிடத்தே வட்டித்த மஞ்சணிறமாய் இறுகினதாய்க் காலேயரைக்கால் அங்குல நீளமான விட்டம் உடையதாய்த் தோன்றிப் பிரசவத்தின் பின்பு மூன்று நாலு மாதம் வரைக்கும் இருக்கும் ஒரு பொருள்.

புகட்டல், Injection. நீர்ப்பதார்த்தங்களை அபானம் முதலிய வாசல்களால் ஏற்ற கருவி வழியாய் உட்செலுத்தல்.

புச்சம், Coccyx. (ருகூ. வால்.) பீடிகை நுனியிலே கூழை வால் போலே தொடுத்திருக்கும் நாலு சிறு எலும்புகளின் கோவை. வயசு முதிர இச்சிறு எலும்புகள் ஒன்றி ஒரு எலும்புபோலாய்விடும். (பீடிகை காண.)

புரணி, Integument. உடம்பை மூடுந் தோல் முதலியவைகள் சேர்ந்த சவ்வுப் போர்வை.

புராபர, Antero posterior. (புரம் முன். அபரம் பின்.) முன்னின்று பின்னுக்கு அல்லது பின்னின்று முன்னுக்கு நோய்ச் செல்லுகிற.

புறம், Externum. உடம்பை வல இட பாதியாகப் பிரிக்கும் நடுவரிக்குத் தள்ளியிருப்பது. (அகம் காண.)

Digitized by Google

பூரோதிரம், Plethora. (பூரம் நிறைவு. ௫௪௬. உதிரம் இரத்தம்.) உடம்பிலே இரத்தம் அதனப்பட்டு நிறைந்திருக்கும் நிலை.

பெலடனு, Belladonna. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) ஓர் மருந்துப்பூண்டு. வேகுவாய் இதின் சாற்றை வற்றவைத்து மெழுகு பதத்தில் எடுத்து மருந்தாய் வழங்குவார்கள். குத்து, வருத்தம் இவைகளைத் தணிக்க இம்மருந்திலே மூன்று கிறேன் ஒருமுறைக்குக் கொடுப்பார்கள். (கிறேன் காண.)

பேசி, Muscle. (௫௫௬.) பல வடிவமும் பல பருமையுங்கொண்டு மெதுவான இழைக்கூட்டமாய்ச் சிவப்புநிறமாய் ஏறக்குறைய ௬௦௦. அளவுக்கு உடம்பிலேயுள்ள தசை உறுப்புக்களில் ஒன்று. இவை சுருங்கிக் குறுகுவதினாலும் நெகிழ்ந்து நீளுவதினாலுமே உடம்பிலே காணும் அசைவு இயக்கம் எல்லாம் உண்டுபடும்.

பேசிசம், Fibrin. (பேசி, காண. சம் தோன்றியது.) உடம்பினது பேசியிலும் இரத்தத்திலும் பிரதான பகுதியாய் இருக்கும் உருசியும் மணமுமற்ற வெண்மையான வயிரித்த பதார்த்தம். இது ஈரலிப்பாயிருந்தால் இசிவுள்ளதும் காய்ந்திருந்தால் நொருங்குகிறதுமாயிருக்கின்றது. இரத்தம்உறையும்போது உண்டுபடும் இரத்தக்கட்டிகளிலே பேசிசம் என்ற பதார்த்தந்தான் அதிகமாயுள்ளது.

பேரிதழ், Greater labium. அல்குலுக்கு வலமிடமாயிருக்கும் தோலினல் மூடப்பட்ட இதழ்போன்ற இரண்டு தசைமடிப்புகளில் ஒன்று. (அல்குல் காண.)

போஷணம், Nutriment, Nutrition. (௫௫௪.) க வது. உடம்பை வளர்த்துப் போஷிப்பதற்கான பதார்த்தம். உ வது. சரீரத்தை வளர்க்குந் தொழில்.

மக்கினீசம், Magnesia. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) சுத்தவெள்ளையும் அதிகலேசுமுள்ள மணமற்ற மெல்லிய சருச்சிமருந்து. (சருச்சி காண.)

மண்டலம், System. (௬௬௬.) குறித்த ஒரே சம்பந்தமான தொழிலை முற்றுவிப்பதற்காய் இசைந்திருக்கும் பலவுறுப்புகளின்கூட்டம். உதாரணமாய்இரத்தச்சுற்றோட்டமாகியதொழிலை முற்றுவிக்கும் இரத்தாசயம், நாடி, நாளம், தந்துகிகளாகிய இவைகளை இரத்தமண்டலம் என்பார்கள்.

மதியாந்திரம், Mesentery. (மதியம் நடு. அந்திரம் காண.) வயிற்றினுள்ளிருக்கும் இருபட்டான திரைச்சவ்வு. இதின் பின்விளிம்பு மிகக் குறுகியதாய் வயிற்றினுள் பின்பக்கத்திலே புடைத்து மேடுகொண்டிருக்கும் முள்ளந்தண்டுப்பகுதியிலே இசைக்கப்பட்டு, முன்விளிம்போ அந்தரத்திலே தூங்கித் திரைவும் சுருக்குங்கொண்டு பன்னிரண்டு முழ நீளமுள்ளதா

Digitized by Google

யிருக்கும். சிறுக்குடல் சிக்குப்படாமல் அதிலே நெடுகக்கோ ளூவுண்டதாய் இருக்கின்றது.

மராளாஸ்தி, Mollities ossium. (மராள மெதுவான. அஸ்தி எலும்பு.) எலும்பிலே வயிரிப்பையும் பெலப்பையும் உண் டாக்குகிற சுண்ணும்புப்பகுதி குறைந்துபோவதினுல் எலும்பு கள் நாளாவிறுதியிலே கண்டபாட்டுக்கு வசைந்து வளைந்து போவதாய் மிக அரிதாய் வரும் மாருத வியாதி.

மலவாகி, Rectum. (வாகி காண.) கடைக்குடல். மலாந்திரத் திலே தங்கியிருந்து வரும் மலத்தைக் கழித்துவிடும்தடித்த சவ்வுக்குழல். இதின் கீழந்தத்திலே அபானவாசல் இருக் கும். (மலாந்திரம் காண.)

மலாந்திரம், Colon. (அந்திரம் காண.) பெருங்குடல். மலக்கு டல். இதின் ஒரு தலைப்புச் சிறுக்குடலின் முடிவிலே தொ டுக்கப்பட்டு அடிவயிற்றின் வலதுபக்கத்தில் நின்று கிளம் பி மேலே சென்று மடங்கி மேல்வயிற்றுக்குக் குறுக்கேபோ ய் இடதுபக்கத்தால் மடங்கி இறங்கி அடிவயிற்றின் இடது ப க்கத்திலே மலவாகியுடனே மற்றத்தலைப்பு அந்திக்கப்பட்டி ருக்கும். இது மூன்று முழ நீளமளவிருக்கும். (மலவாகி காண.)

மாந்தியம், Inaction. (இ. ச. கூருஎ.) இயக்கமின்றி மந்தமாயி ருக்கும் நிலை.

மாவிய, Morphia. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) அபின்சத்து. அபினிலே பக்குவம்பண்ணியெடுக்கும் சத்தா கிய மெல்லிய மாப்போன்ற மருந்து. இது அபினிலும் பார்க் க எட்டு மடங்கு பெலங்கொண்டது.

முருந்து, Cartilage. குருத்தெலும்பு. மிகுதியான எலும்புப்பொரு த்துகளுக்கிடையே இருந்து அவ்வெலும்புகளின் தலைப்புக ளை மூடியிருக்கும் வெண்மையும் இசிவுமான உரத்தபொருள்.

முளை, Process. இயல்பிலே எலும்பிலிருக்கும் புருவம் கணு மு தலியவைகளின் பொதுப்பெயர்.

முள்ளென்பு, Vertebra. கண்டகி. முள்ளந்தண்டுக்கோவையி லிருக்கும் தனித்தனி எலும்பு.

முறைச்சுரம், Intermittent fever. முறைக்காய்ச்சல். கூதல், கு லைப்பனுடனே தொடங்கி வேர்த்துவிடுவதாய் இடைவிட் டு நிகழுஞ் சுரம்.

மூர்ச்சனை, Syncope. (கூகூஎ.) அறிவுகேடு. சற்றுநேரத்துக் கு நாடித் துடிப்பு அறிவு உணர்ச்சி இயக்கம் என்பவைகள் தடைப்பட்டு நிற்றலாகிய தேகநிலைமை.

மேகனசந்துரேகை, Ilio pectineal line. (மேகனம், சந்து கா ண. ரேகை வரி.) மேகனவென்புகளிலுஞ் சந்தென்புக ளிலும் புருவமாய்த் தோன்றும் ஒருவரி. இப்புருவம் கூபகத் தின் மேற்பந்தைக்கு எல்லை. (கூபகம், பந்தை காண.)

Digitized by Google

மேகனத்தவர், Arch of the pubis. (மேகனம் காண. தவர் வில்.) மேகனவென்புகள் பொருந்தும் இடத்துக்குக்க கீழாய்த்தோன்றும் பெருங் கவர் வெளி.

மேகனம், Pubis. (கூஎச.) கூபகத்தின் முன்வளத்திலே வலமிடமாகக் கீழப் பக்கமாயிருக்கும் அனுமிகை-என்புகளின் பகுதி. (அனுமிகை, கூபகம் காண.)

மேகனுனுசந்தி, Symphysis Pubis. (மேகனம், அனுசந்தி காண.) மேகனவென்புகள் சந்திக்கும் பொருத்து.

மேரு, Axis. (இ. ச.) ஒருபொருளின் நெடுவிட்ட நேருக்கு நடுமையமாய்ச் செல்வதாகக்கோள்ளும் வரி.

மோவாய், Chin. சிவுகம். கீழதட்டுக்குக் கீழே புடைப்பாயிருக்கும் முகப்பகுதி.

யோனி, Vagina. (கூஅக.) அல்குலிலிருந்து கருப்பைக்குச்செல்லும் அற்ப வளைவான சவ்வுக் குழல். (அல்குல் காண.)

ரசம், Mercury. (கூகூஎ.) இதரமென்று சொல்லப்படும் லோகம். இது வெள்ளிநிறமாய் ஈயம்போற் பாரங்கொண்டதான நீர்த்த பதார்த்தம்.

ரசிதம், Preparation. (கூகூகூ.) செய்பாகம் பண்ணியெடுத்த பொருள். உதாரணமாய் இதரரசிதம், அபினிரசிதம்.

ரேசகி, Pump. (எ0கூ.) வாயு, நீர் முதலிய பதார்த்தங்களை இடம்விட்டுப் பெயர்த்து வாங்கும் குழற் கருவி. (உதாரணமாய் தனரேசகி காண.)

லசிகாசலை, Salivation. (லசிகா உமிழ்நீர். லை. சலை பெருக்கு.) அதிவாயூற்றல். அதியுமிழ்நீர் சொரிதல்.

லலாடகரேகை, Fronto parietal suture. (லலாடம் நெற்றி. கரேகை காண.) தலைமண்டையிலே பித்திகை-என்புகளுக்கும் நெற்றியென்புக்கும் இடையே விளங்கும் பொருத்து வரி.

லலாடவென்பு, Frontal bone. நெற்றியெலும்பு.

லாடனம், Laudanum. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ் சொல்.) அபின்நீர். ஒருநாழி சாராயத்திலே இரண்டரை அவுந்சு அபின்தூள் கலந்து செய்த கரிய மருத்து நீர்.

வசா, Serum. (எசகூ.) உடம்பிலுள்ள சில பகுதிகளுக்கு உறையாயிருக்கும் அந்தந்தத் சவ்வின்பரப்பிலிருந்து பொசியும் மெல்லிய தெளிந்த நீர். வாங்கின இரத்தத்திலே நீராய்த்தெளிந்துவருவதும் இது.

வஞ்சணக்குழி, Acetabulum. (வஞ்சணம் காண. எஉகூ.)தொடையென்புகளின் மேற்தமிழ் பூண்டிருப்பதாய் அனுமிகை என்புகளில் வலம் இடமாய் இருக்கும் வட்டித்த இரண்டு குழாய். (அனுமிகை காண.)

வஞ்சணம், Groin. (எஉகூ.) அரையின் முன்பக்கத்தில் அடி

Digitized by Google

வயிற்றிற்கும் தொடைக்குமிடையே வலமிடமாயுள்ள பதிவான இடம்.

வஞ்சணீய வளையம், Inguinal ring. (வஞ்சணம் காண.) வலமிடமாய் ஒன்றுக்கொன்று மூன்று அங்குல தூரத்தில் அடிவயிற்றின்முன் பித்தியிலேயுள்ள விரற் பருமையான வட்டித்த இரண்டு துவாரங்களில் ஒன்று. இவை இயல்பிலே தோலால் மூடப்பட்டு மறைந்திருக்கும். (பித்தி காண.)

வட்டிகைத்தொவளை, Foramen ovale of heart. சிசுவின் இரத்தாசயத்தை வலமிடமாய்ப் பிரிக்கும் சவ்விலுள்ள துவாரம். இது சிரவங்கள் இரண்டையும் ஒன்றப்பண்ணி சிசுப் பிறந்தபின்பு ஒடுங்கி அற்றுப்போய்விடும். (சிரவம் காண.)

வலயம், Areola. (எசக. வட்டமாய்ச் சூழ்ந்திருப்பது.) சில பருக்களிலும் முலைக்காம்பிலுஞ் சூழ்ந்து தோன்றும் வன்ன வளையம்.

வழும்பு, Vernix Caseosa. பிறக்கும்போது பிள்ளையின் மேனி முற்றுந் தவண்டிருக்கும் வெண்மையான பசை வஸ்து.

வன்னைசை, Tendon. (எசரு.) பெரும்பாலும் பேசியின் தலைப்பிலே தொடுத்திருக்கும் வயிரமுள்ள நார்போன்ற வெள்ளை வஸ்து. இது விசாலங்கொண்டதாயும் திரண்டு கொடி போன்றதாயும் நாடாப் போன்றதாயும் பலவிதமாயிருக்கும்.

வாசி. Ferent. (எருஎ.) கொண்டுபோவது என்னும் பொருள்படவரும் ஓர்ஆரியச்சொல்.

விசாதம், Melancholy. (இ. ச. எகூஉ.) மனக் கோட்டமுஞ் சஞ்சலமுங்கூடி நடக்கும் ஓர்வகைப் பிராந்தியான புத்திமாருட்டம்.

விசி, Ligament. கட்டு. பந்தனம். (பந்தனம் காண.)

விடபம். Perineum. (எகூரு.) பெண்சனங்களிலே அபானத்துக்கும் யோனிக்கும், ஆண்சனங்களிலே அபானத்துக்கும் பீசப் பைக்கும் இடையே பரவியிருக்கும் இடம்.

விட்டம், Diameter. ஓர்பொருளின் குறுக்களவை. வட்டத்தின் மையத்தை உருவிச்செல்லுங் குறுக்கு வரியின் அளவை.

விந்து. Semen. (எளகூ.) சுக்கிலம். பெண்களிலுள்ள சினையை அருட்டிக் கருவாக்கும் ஆண்வித்து நீர்.

விபரீதபிரசவம், Anomalous labor. (விபரீதம் வேறுபாடு. பிரசவம் காண.) இரத்தப்பெருக்கு, வலி, பலபிள்ளை, நாபிக்கொடிமுன்னிறங்கல், கருப்பை அல்லது யோனிகிழிதல் ஆகிய இவைகளுள் ஒன்றுடன் அல்லது பலவற்றுடன் நிகழும் பிரசவம்.

விப்புருதி, Abcess. சீழ்க்கட்டு. தாபிதத்தைப்பற்றி உடம்பிலுள்ள அந்தந்தப் பதுதியில் சீழ் ஏராளமாய் உண்டுபட்டுக் கூடுதல். (தாபிதம் காண.)

Digitized by Google

விரணம், Ulcer. சிலந்தி. புண்.
விருத்தம், Circumference. (அoo.) வட்டத்தின் சுற்றுவரி. வட்டிப்பான பொருளின் சுற்றெல்லை.
விரூபம், Monster. (எஅக.) இயல்பிலே இருக்கவேண்டியதற்கு மாறான விபரீத வடிவமுள்ளது.
வியாபதாபிதம், Diffuse inflammation. (வியாபக பரம்பிய. தாபிதம் காண.) தொடங்கின பகுதியிலே மாத்திரம்நின்று விடாமல் அயற் பகுதிகளிலுந் தாவிப் பரம்புந் தாபிதம்.
வியூகனம், Anatomy. Structure. (அஉக.) கவது. இந்திரவஸ்துக்களாகிய பிராணி தாவரங்களினதும் அவற்றின் உறுப்புகளினதும் உதிகளையும் அவ்வுதிவகைகள் சேர்ந்தடுத்திருக்கும் விதங்களையும் பற்றிய வித்தை. உவது. பகுதிகள் உறுப்புக்கள் முதலியன ஒன்றேடு ஒன்று இசைக்கப்பட்டிருக்குங் கட்டுப்பாடு. (இந்திரம், உதி காண.)
விலம், Cell. (இ. ச. எஅஉ.) சிற்றறை. உடம்பிலுள்ள அந்தந்த பதார்த்தங்களை அடக்கியிருக்குஞ் சிறுச்சிறுப் பை.
விலேசம், Cellule. (விலம் ஈசம் காண.) மகாநுண்ணிய விலம். சின்னஞ்சிறிதான பையுறை.
விவாரம், Varix. (எஅரு. விரிவு.) நாளக் குழல்கள் வியாதியாய் விரிந்து வீங்கிப் பருத்திருப்பது. (நாளம் காண.)
வெங்கஷாயம், Hot infusion. கொதி வெந்நீரிலே இலை பட்டை வேர் முதலிய சிற்சில பதார்த்தங்கள் இட்டு மூடி ஆறவிட்டுத் தெளித்தெடுக்கும் மருந்துநீர். (பாசனம் காண.)
வெண்காரம், Borax. சோடவென்னுஞ்சருச்சியிலே பக்குவம்பண்ணும் ஓர்வகை உப்பு. (சருச்சி சோட காண.)
வெளிப்பரிப்பீள், Chorion. (பரி சூழ. பீள் சிசு.) கருப்பையிலே சிசுவைச் சூழ்ந்திருக்கும் நாலு சவ்வுகளுள் உட்பரிப்பீளை அடுத்துச் சூழ்ந்திருக்குஞ் சவ்வு. (உட்பரிப்பீள் காண.)
வேலிதம், Bandage. (இ. ச.) உடம்பிலுள்ள பகுதிகளிற் சுற்றும்படிக்கான நாடாப் போன்ற நெடுஞ்சீலைத் துண்டு.
றூவாப், Rhubarb. (தமிழிற் பெயர்த்த இங்கிலிஷ்சொல்.) வரியாத்து. ஓர்மருந்துப்பூண்டு. மஞ்சணிறமான இதின் கிழங்கை வைத்தியத்தில் ஓர் சுகபேதியாக வழங்குவார்.

Digitized by Google


# பின் சேர்த்த படங்கள்.

**No. 1.**



No. 1. அ-ம் பக்கத்தில் பார்.—ஸ்திரி கூபகத்தின் பாவனை. இது ஆள் நிமிர்ந்துநிற்கும் வெளியில் கூபகம் தோற்றும் நிலையைக் காட்டுவது.

**No. 2.**




No. 2. க0-ம் பக்கத்தில் பார்.—இது கூபகத்தின் கீழ்ப் பந்தையின் எல்லைகளையும் விசாலத்தையும் காண்பிக்கிறது.

**No. 3.**



No. 3. கக-ம் பக்கத்தில் பார்.-சரிநடுவே வலமிடமாய்ப்பிளந்த கூபகத்தின் இடப்பாதியின் பாவனை. இதில் கூபகவறையின் சாயலும் விஸ்தாரமும், சிசு பிரசவத்தில் இறங்கும் வழியும் விளங்கும்.

இதிற் காணும் வரிகள் கூபகவறையின் முற்பக்கத்துக்கும் பிற்பக்கத்துக்குமுள்ள அளவை அளக்கும் நேர் இன்னதென்று விளக்கும்.

Digitized by Google


# பின் சேர்த்த படங்கள்.

## No. 4.



No. 4. ௧௨-ம் பக்கத்தில் பார்.—இது புருட கூபகத்தின் விதத்தைக் காட்டுவது. இதை ௮-ம் பக்கத்திற்குரிய படத்துடன் ஒத்துப் பார்த்தால் ஸ்திரி புருட கூபகங்களுக்குள்ள பேதம் விளங்கும்.

## No. 5





No. 5. ௧௮-ம் பக்கத்தில் பார்.—இதில் சிசுத் தலையிலுள்ள அளவை விட்டங்கள் செல்லும் விதம் விளங்கும்.

Digitized by Google

# பின் சேர்த்த படங்கள்.

## No. 6.




No. 6. ௩௦-ம் பக்கத்தில் பார்.—கருப்பையின் பேசியிழைகளும், சினைப்பைகளும், சினைப்பாதைகளும், கொடிவிசிகளும் இதில் காணப்படும்.

## No. 7.





No. 7. ௩௧-ம் பக்கத்தில் காணவும். — கருப்பையில் பேசியிழைகள் ஓடியிருக்கும் விதம். *a a* அலைவகள் சினைப்பாதையின் வாயை வளையம் வளையமாக சுற்றும் மாதிரி.

Digitized by Google


# பின் சேர்த்த படங்கள்.

## No. 8.



No. 8. ௧௧௨-ம் பக்கத்தில் காணவும்.-ஸ்திரி உடலின் வலப்பாதியில் ஓர் பகுதி. சிசு பிறப்பதற்கு விக்கினமாய் யோனிக்கும் மலக் குடலுக்கும் இடையில் கிடக்கும் கழலை இதில் விளங்கும்.

## No. 9.



No. 9. ௧௧௨-ம் பக்கத்தில் காணவும்.—சிசு வெளிப்படுவதற்குத் தடையாகக் கருப்பை வாயிலிருந்து தொங்கி, யோனியுள் கிடக்கும் கழலையை இப்படத்தில் பார்க்கலாம்.

Digitized by Google


# பின் சேர்த்த படங்கள்.

## No. 10.



No. 10. ககஉ-ம் பக்கத்தில் காணவும்.—சிசுவின் தலை நீர்பொருமியிருக்கும் பாவனை. இது பிரசவம் முடிவதற்குச் சிலவேளை மகா தடையாகும்.

## No. 11.




No. 11. கஉ௬-ம் பக்கத்தில் காணவும்.—இது இருவகையான சாவணங்களைக் காட்டும். ஒவ்வொரு விதத்திலும் சாவணத்தின் இரண்டு அலகுகளும் இணைந்திருப்பதையும், ஒரு அலகு தனித்து அதிலுள்ள பூட்டும் பிடியின் உட்பக்கமும் விளங்கத்தக்கதாய் திருப்பப்பட்டதாயிருப்பதையும் இப்படத்தில் காணலாம்.

Digitized by Google


# பின் சேர்த்த படங்கள்.

## No. 12.




No. 12. ௧௨௬-ம் பக்கத்தில் காணவும்.—இது உற்கருசி என்னும் கருவியின் பாவனையை விளக்கும்.

## No. 13.




No. 13. ௧௨௭-ம் பக்கத்தில் காணவும்.—இப்படம் சித்திரி என்னும் கருவியின் பாவனையைக் காட்டும்.

## No. 14.



No. 14. ௧௨௭-ம் பக்கத்தில் காணவும். அங்கூசம் என்னும் கருவியின் பாவனையை இப்படத்தில் பார்க்கவும்.

## No. 15.



No. 15. ௧௨௮-ம் பக்கத்தில் சேர்க்கவும்.—இது கஷ்ட பிரசவத்தில் சிசுவின் தலையைத் துளைத்த வேளையில் மண்டை எலும்பை உடைத்துத் துண்டுதுண்டாய்க் கவ்விப் பிடித்து இழுத்தெடுக்கும் படிக்கான குறட்டின் மாதிரியைக் காட்டும் படம்.

Digitized by Google

# இந்நூலிலுள்ள இடுகுறிப்பெயர்.

| | | | |
|---|---|---|---|
| அமில்தன், | Hamilton. | நாகீல், | Nagele. |
| அமெரிக்கா, | America. | நூயாக், | New York. |
| அயிற்றன், | Haighton. | பாய்வின், | Boivin. |
| அன்றர், | Hunter. | பாரிசு, | Paris. |
| ஆசுபாண், | Osborn. | பிலதெல்விய, | Philadelphia. |
| இங்கிலாந்து, | England. | பிளந்தல், | Blundell. |
| இபாக்கிரத, | Hippocrates. | பிளாண்டு, | Bland. |
| கயில், | Keil. | பிறஷே, | Breschet. |
| கிப்சன், | Gibson. | பிருஞ்சு, | France. |
| கில்மன், | Gilman. | பிறீன், | Breen. |
| கிளாக்கு, | Clarke. | பெல், | Bell. |
| குசாக்கு, | Cusack. | மங்கமாரி, | Montgomery. |
| கூச்சு, | Gooch. | மாதனைத்தே, | Maternité. |
| கொவ்மன், | Hoffman. | மான்சேல், | Maunsel. |
| கோம், | Home. | மிகாலிசு, | Michaelis. |
| சிதங்கம், | Sydenham. | மெச்சு, | Meigs. |
| சிம்மன்சு, | Simmons. | மெரிமன், | Merriman. |
| சீகோ, | Sigault. | யோர்க், | Jorg. |
| சேமனி, | Germany. | ரஞ்சுபோதம், | Ramsbotham. |
| தபிளின், | Dublin. | லேய், | Ley. |
| திரேசி, | Tracy. | வெல்போ, | Velpeau. |
| திவீஸ், | Dewees. | வெல்லெசிலி, | Wellesley. |
| துபாயி, | Dubois. | வேண்ஸ், | Burns. |
| தெலவீல், | Delafield. | வோமன், | Fohmann. |
| தென்மன், | Denman. | றன்ருல்வு, | Randolph. |
| தேவிசு, | Davis. | றுவிஷ், | Ruysch. |

Digitized by Google

# அட்டவணை.


அகராதி, ௨௨௧
அகல், ௨௭
அங்குசம், ௧௨௭
அடக்கம், ௭
அவையஉதயம், ௧௫௫
அவையபரிகரிப்பு, ௧0௨
அவையமறிப்பு, ௧௯0
அவையம், ௫௧
அவையம்எடுத்தல், ௧௯௨
அவையம் விழுதல், ௮௭
அவையராவம், ௯௪
அதக்காய உதயம், ௨௪
அந்திரசுரம், ௧௯௭
அரிசம், ௭௪
அல்குல், ௨௬
அல்குற்கவை, ௨௮
அல்குற்றினவு, ௭௭
அவிழ்தங்கள், ௨௧௪
ஈடுகுறிப்பெயர், ௨௫௧
இரட்டைப்பிள்ளை, ௧௭௨
இரத்தப்பெருக்கு, ௧௪௫
இரத்தப்பெருக்கு, அவையம் விழுந்தபின், ௧௯௨
இரத்தப்பெருக்கு, இடையூறன, ௧௫௩
இரத்தப்பெருக்கு, பிரசவத்தின் பின், ௧௫௮
இரத்தப்பெருக்கு, விலக்கேலாது, ௧௫௫
இருதுவாதல், ௩௯
உசும்புதல், ௯௩
உச்சிஉதயம், ௧0௫
உடை, ௮0
உடை, பிரசவத்தில், ௯0
உடுக்குச்சுருக்கம், ௧௯௧
உதயக்குறிகள், ௯௪
உதயம், ௨0
உதரகவளிகை, ௧0௬
உதிரசவல, ௧௪௫
உற்கருசி, ௧௨௯
உற்காய உதயம், ௨௫
ஏர்கற்று, ௧௧௩
ஓங்காளம், ௭0
கருக்கமலம், ௫௯
கருத்தரிப்பு, ௩௯
கருப்பை, ௨௯
கருப்பை கிழிதல், ௧௭௯
கருப்பைக்கழுத்தில் வேறுபாடு, ௯௭
கருப்பைக்கழுத்து, ௨௯
கருப்பைக்காண்டம், ௩0
கருப்பைசுருங்கல்முறை, ௮௮
கருப்பைச்சரிவு, ௧௧௫
கருப்பைச்சிறை, ௩௧
கருப்பைமாந்தியம், ௧௧௨
கருப்பைமேரு, ௪௧
கருப்பையடி, ௨௯
கருப்பையறை, ௩0
கருப்பையிலமர்த்துதல், ௧00
கருப்பையினிழைகள், ௩௧
கருப்பையினுள்ளுடன், ௪௩
கருப்பையுள் இரத்தம்பெருகல், ௧௯௩
கருப்பைவளம்மாறல், ௧௯௪
கருப்பைவாய், ௩0
கருப்பைவாய் வேறுபாடுகள், ௯௩


Digitized by Google

கருப்பைபெவெட்டித்திறத்தல், க௩0
கருவழிவு, கசகூ
கர்ப்பதாடனம், சுஅ
கர்ப்பிணிக்கணக்கு, சுகூ
கர்ப்பிணியாயிருக்குங் காலவரை, சுகூ
கர்ப்பிணியின்வியாதி, எ0
கஷ்டபிரசவத்தில்அபின், கச0
கஷ்டபிரசவம், க0அ
காதாற்கேட்டாராய்வுபண்ணல், சுசு
காயாசுவாதம், கஅஅ
காலுங்குண்டியும் உதயம், உச
கிரமப்பிரசவம், அக
கிரமப்பிரசவவிகற்பம், க0ரு
கிரமாதீதபிரசவம், கசுரு
கிலோமலம்பி, ருசு
குசமக்குழல், ருரு
குண்டியுதயம், உச
குண்டிவெளிப்படல், க௩எ
குருசுரம், உ0க
குலோறுவாம், அகூ
குறிகாணுதல், அச
குறைமாசப்பிரசவம், கசஉ
கூபகஅளவை, க0, கக
கூபகஅறை, கக
கூபகஇசைவீனம், ககக
கூபகக்கீழ்ப்பந்தை, க0
கூபகசந்திகள், கூ
கூபகநெளிவு, க௩
கூபகமாணி, கச
கூபகமேரு, கஉ
கூபகமேற்பந்தை, க0
கூபகம், அ
கூபகம், புருடஸ்திரிபேதம், கஉ
கையுதயம், உரு
சராயு, உகூ
சராயுகம்வெளிப்படல், அஎ
சரீரஅப்பியாசம், அ0
சலசீடச்சிசு, ககஉ
சலப்பைவெடித்தல், கஎஅ
சலமறிப்பு, கஅரு
சலமுண்டாகாமை, கஉ௩
சலம் ஒழுகல், கஅகூ
சலம்கருவியால்இறக்கல், கூரு
சலவாக், உஎ
சனனஉறுப்பின்தொழில், ௩ரு
சனனஉறுப்புகள், உள், உஅ
சனனஉறுப்புகள், வெளி, உஎ
சாதாரணசுரம், உ00
சாபிள்வள, கரு௩
சாவணம்பிரயோகிக்கும் முறை, கஉ௩
சாவணம்பிரயோகிப்பதற்கான தருணம், ககஅ
சிசு, சஎ
சிசுஇதயஓசை, சுரு
சிசுச்சிரசின் அளவுகள், கஅ
சிசுச்சிரசின் இயக்கம், ககூ
சிசுச்சிரசு, கஎ
சிசுச்சிரசுக் கரேகை, கஎ
சிசுவைத்திருப்பல், கச0
சிசுநிலயம், கசு
சிசுமரணித்தற்குஅறிகுறி, சஉ0
சிசுவியட்டிருபமாதல், சகூ
சிசுவின்இரத்தஓட்டம், சஅ
சிசுவின் உடல்மடிவு, கசச
சிசுவின்குண்டியந்தம், உ0
சிசுவின்சுவாசவின்மை, க00
சிசுவின்தோள்கள், உ0
சிசுவின்நிறையளவு, சகூ
சிசுவைச்சூழுஞ்சவ்வுகள், ச௩
சித்திரிக்கருவி, கஉஎ
சிரசின் அளவை, கஅ
சிரசின் அளவைவேற்றுமையாதல், ககூ
சிரசுதொளைத்தல், கஉஎ
சிரசும்அஸ்தமும் உதயம், க0சு
சிரசுவெளிப்படல், உக
சிராவணி, கூரு, கூசு
சிராவணிவிடுதல், கூரு




Digitized by Google

சிற்றிதழ், உஎ
சிவனை, ௯௯
சிவனைப்பாதை, ௯௨
சிவனைப்பாதைக்குஞ்சம், ௯௯
சிவனைப்பை, ௯௯
சுமரி, உஎ
சுரம், அழற்சி, க௬எ
சுரம், குரு, உ0க
சுரம், சாதாரண, உ00
சுரம், பாற், உ0உ
சுரம், பிரசவ, கஅஅ
சுவாசம்அருட்டல், க00
சூலுடைமை, ருஎ
சூலுடைமைக்காலஅளவு,௬௬
சூலுடைமைக்கு அறிகுறி, ருஅ
சூலுடைமையால் விளையும் வேறுபாடு, எச
சூலுடைமையில்வியாதி, எ0
சூலுடைமையிற்பத்தியம், எ௬
சூற்கருப்பை, ச0
தசைப்பாட்டில்வரும்வீக்கம், வியாதி, ககக
தசைப்பாட்டுமுரணிப்பு, க0அ
தீட்டினளவு, ௯ரு
தீட்டு, ௯ரு
துவாலை, கஅக
நவ்வுபரிகை, உஅ
நாதம், ௯௯
நாபிக்கிலோமேசம், ருரு
நாபிக்கொடி, ரு0
நாபிக்கொடிக்குறுக்கம், ககரு
நாபிக்கொடிமுன் வெளிப்படல், கஎரு
நாபிக்கொடியுதயம், கஎரு
நாபிக்கொடியைக்கட்டிக் கத்தரித்தல், க00
நாபிமதியாந்திர தசிரம், ரு0
நிசாமனியைப்பிரயோகித்தல், ௬௬
நித்திரையின்மை, எரு
நிலயம், உ0
நோக்காடு, பின், கஅஉ
நோக்காடு, பொய், எஎ
நோக்காடு, மெய், அஉ
பதோதயம், உச
பரிசோதனை, ௬உ
பரிசோதனைசெய்முறை, ௬க
பரிநாதம், ௯௯
பரிப்பீள், உள், ச௬
பரிப்பீள், வெளி, ச௬
பலபிள்ளை, கஎஉ
பலாயிதம், ச௯
பற்கோதி, எரு
பன்னீர், ச௬
பன்னீர்க்குடம், சஎ
பன்னீர்க்குடம் முந்த உடைதல், க0எ
பால், கஅஉ
பாற்சுரம், உ0உ
பிரசவஅறிகுறி, அஉ
பிரசவகாலதைப்பு, உ0ச
பிரசவகூட்டம், ஒழுங்கு, ௬0
பிரசவசுரத்தில் அபின், கக0, க௬ச, க௬௬, க௬ச
பிரசவசுரம், கஅஅ
பிரசவஸ்திரியைப் பரிகரித்தல், கஎ௬
பிரசவத்தில் அவக்கோலம், க௬எ
பிரசவத்தில் கருவிப்பிரயோகம், கஉ௯
பிரசவத்தில் ஸ்திரிபடுக்கவேண்டியமுறை, ௬க
பிரசவத்தின்மூன்றுபாதம்,அச
பிரசவநயம்பயம், ௬௯
பிரசவபைத்தியம், உ0அ
பிரசவமுறை, உக
பிரசவலக்கணமும்பகுப்பும், அஉ
பிரசவித்தவுடனே ஸ்திரிசாதல், க௯0

Digitized by Google

பிரசவவேளையில் இரத்தம்வாங்கல், கஉo
பிறை, உஅ
பிறைசேடம், உஅ
பீதகம், சாச
பெருங்கூபகம், கச
பேரிதழ்கள், உஎ
பேரிதழ்கள் கன்றல், கஅரு
மருத்துவர்கடன், அகூ
முகம்மேகனத்தை அணைந்துவரல், உச
முகவுதயம், கoகூ
முகவுரை, ரு, சா
முலைகொடுத்தற்குத்தடை, கஅசா
முலைக்காம்புக்குறுக்கம், கஅசா
முலைக்காம்புபுண்படல், கஅசா
மூளைதாபிதங்கொள்ளல், உகசா
மேகனுனுசங்கி, கூ
மேகனுனுசங்கி வெட்டிப் பிரித்தல், கசாo
மேற்கூபகம், கூ
யோனி, உஅ
யோனி அடைப்பஞ்செய்தல், கருo
யோனித்தாபிதம், கஎச
வலி, கசாசா
வலியில் அபின், கசாகூ
வழும்பு, சகூ
விடபங்கிழிதல், கஅச
விடபந்தாங்கல், கூஎ
விடபம், உஅ
விபரீதபிரசவம், கசரு

# INDEX.


Abortion, 146
——— voluntary, 148
Accoucheur, duties of, 89
Allantois, 56
Amnion, 46
Anomalous labor, 145
Auscultation, rules for, 66
Ballottement, 68
Binder, 101
Bladder, rupture of, 178
Bleeding in labor, 110
Brain, inflammation of, 213
Breech transmission of, 137
Caruncula myrtiformes, 29
Catheter use of, 95
Cesarean section, 130
Chloroform, 89
Chorion, 46
Clitoris, 27
Conception, 36
Contents, 7
Convulsions, 166
Cord, umbilical, 50
———shortness of, 115
———tying and division of, 100
Corpus luteum, 34
Crotchet, 127
Death of child, signs of, 120
———sudden after labor, 170
Decidua, 43
Diet, 79
Dress, 80
——— during labor, 90
Embryo, 43
Ephemera, 200
Ergot, 113
Examination, 92
——— manner of, 91
Exercise, 80
Fallopian tubes, 32
——— fimbriæ, 33
Fever intestinal, 197
——— miliary, 201
——— milk, 202
——— ordinary, 200
——— puerperal, 188
Fœtal heart, sounds of, 65
Fœtus, 47
——— circulation of, 48
——— development of, 49
——— head of, 17
——— pelvic extremity of, 20
——— position of, 16
——— shoulders of, 20
——— weight of, 49
Fontanelles, 17
Forceps, mode of using, 123
——— circumstances proper for, 118
Formulæ, 214
Fossa navicularis, 28
Fourchette, 28
Generative organs, external, 27
——— function, 35
——— internal, 28
Glossary, 221
Gravidity, effects of, 74
Head, deviations fr. standard, 19
——— hydrocephalic, 112
——— measurements of, 18
——— movements of, 19
——— perforation of, 127
——— reasons for, 120
——— sutures of, 17
——— transmission of, 21
Hemorrhage, 145
——— accidental, 153
——— after birth of child, 158
——— placenta, 162
——— internal, 163
——— unavoidable, 155
Hour-glass contraction, 161
Hymen, 28
Instruments use of, 123
Labia, 27
——— ecchymosis of, 185
Labor, anomalous, 145
——— classification of, 82
——— dangerous symptoms in, 117
——— difficult, 108
——— duties of physicians in, 89


Digitized by Google

Labor, mechanism of, 21
—— natural, 81
———— varieties of, 105
—— premature induction of, 132
—— preternatural, 135
—— signs of, 82
—— stages of, 84
Liquor amnii, 47
Lochia, 181
Lying in room arrangement, 90
Mania puerperal, 208
———— treatment, 210
Membranes the, 43
———— early rupture of, 107
Menses quantity of, 35
Menstruation, 35
Milk, 182
Miscarriage, 146
Mons veneris, 27
Nausea of pregnant women, 70
Navel string, 50
Nipples, sore, 186
Nursing, obstacles to, 186
Nymphæ, 27
Obliquity of the uterus, 115
Obstetric operations, 123
Omphalo-mensenteric vessels, 50
Opium in convulsions, 169
———— difficult labor, 110
———— hemorrhage, 164
———— puerperal fever, 194
Ovaries, 33
Ovum, 33
Pains, after, 182
—— false, 77
—— true, 82
Pelvimeters, 14
Pelvis, articulations of, 9
—— axis of, 12
—— bearing of, 12
—— brim of, 10
—— cavity of, 11
—— deformities of, 13
—— description of, 8
—— disproportion of, 111
—— male and female difference, 12
—— measurements of, 10, 11
—— outlet of, 10
—— overlarge, 14
Perforator, 127
Perineum, 28
——— lacerations of, 184
——— support of, 97
Phlegmasia dolens, 204
Phrenitis, 213
Piles, 74
Placenta, 51
——— expulsion of, 87
——— extraction of, 162
——— management of, 102
——— presentation of, 155
——— retention of, 160
Placental soufflet, 64
Plurality of children, 172
Position, definition of, 20
——— obstetric, 91
Preface, 5,6
Pregnancy, 57
——— disease of, 70
——— duration of, 69
——— signs of, 58
Presentation, arm or shoulder, 25
———— breech or feet, 24
———— definition of, 20
———— fontanelle, 105
———— head with hand, 106
———— marks of, 94
———— of cord, 175
———— of face, 106
———— to pubis, 24
Prognosis in labor, 93
Proper names, 251
Pruritus, 77
Puberty, 36
Puerperal state management, 179
Quickening, 63
Reckoning, 69
Rupture of blood vessels, 178
Sleeplessness, 75
Show, 84
Soft parts, rigidity of, 108
——— tumors and diseases of, 111
Symphysis Pubis, 9
———— division of, 130
Still born children reviving, 100
Tamil index, 252
Turning, 140
——— spontaneous, 144
Tooth-ache, 75

Digitized by Google

Twins, 172
Umbilical vesicle, 55
Urachus, 56
Urethra, 27
Urine, incontinence of, 186
——— retention of, 185
——— suppression of, 123
Uterus axis of, 41
——— base of, 29
——— body of, 30
——— broad ligaments of, 31
——— cavity of, 30
——— contents of, 43
——— description of, 29
——— gravid, 40
——— inactivity of, 112
——— inversion of, 164
——— mouth of, 30
Uterus mouth of changes in, 93
——— muscular fibers of, 31
——— neck of, 29
——————— changes in, 67
——— pressure on, 100
——— rupture of, 176
——— shrinking of gradual, 88
Vagina, 28
——— inflammation of, 184
——— plugging of, 150
Vectis, 126
Vernix caseosa, 49
Vesiculæ graafianæ, 33
Vitelline pedicle, 55
Vulva, 27
Water, cold, use of in after pains, 183
——————in hemorrhage, 159
Waters the, 47

Digitized by Google